2836

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: V. NO 5 & 6

April 10th 1987
April 11th

74/86

வெளியீடு 27-12-1985 Issued 27—12—198

2836

24 ... 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 10, 1985 - தொகுதி V எண் 5

Wednesday the 10th April 1985 - Volume V No. 5

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்   Price Rs. 3-50 paise.

136434

D
V211,31 N85
N85.5-546

## உள்ளடக்கம்

10—4—1985


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 587—623 |
| 2. | அம்பாசங்கர் குழு அறிக்கை—நிதி அமைச்சர் விளக்கம் .. .. .. .. | 623—629 |
| 3. | அறிவிப்புகள்— | |
| | (அ) அண்ணாமலை பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை—உறுப்பினர் தேர்தல் .. | 630 |
| | (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம் .. .. .. | 630 |
| | (இ) அரசு உறுதிமொழிக் குழு—உறுப்பினர்கள் நியமனம் .. .. .. .. | 631 |
| | (ஈ) பேரவை விதிகள் குழு உறுப்பினர்கள் நியமனம் .. .. .. .. | 631—632 |
| 4. | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) பத்தாம் வகுப்பு இறுதியாண்டுத் தேர்வுக்கான வினாத்தாள்கள் குறித்து .. .. | 632—636 |
| | (ஆ) 'அகில இந்திய ஹான்ட்லூம் ஹவுஸ்' கைத்தறி ஏற்றுமதி ரகங்களைத் தனியார்களிடமிருந்து வாங்குவது .. .. | 636—639 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிவு— | |
| | வரி விதிப்புத் திருத்த (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு, 1985 .. | 639—645 |


டி 2 A 62—1

பக்கங்கள்

6. வரவு-செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு: கோரிக்கை எண் 17—கல்வி (தொடர்ச்சி). 645—715

திரு. ப. தீர்த்தராமன் .. .. 645—649

டாக்டர் கே. பி. இராமலிங்கம் .. 649—654

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் .. 656—666

திரு. செ. செம்மலை.. .. .. 666—670

திரு. கு. சுப்பராயன்.. .. .. 671—677

திரு. பாப்பா சுப்பிரமணியன் .. .. 677—680

திரு. டி. ஆர். வேங்கடரமணன் .. 680—685

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. 686—692

திரு. க. அன்பழகன் .. .. 692—714

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 715

2836

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985 ஏப்ரல் 10, புதன்கிழமை.

பங்குனி 28, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு, 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''.

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும். அதுபோல மக்களுக்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### அரசுப் பணியாளர் ஊதியக்குழு.

59—(*வினா எண் 71) **திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கு. சுப்பராயன் மற்றும் திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பணியாளர்களின் ஊதியத்தை நிர்ணயிப்பதற்கான ஊதியக் குழு எப்போது நியமிக்கப்பட்டது?

(ஆ) அக்குழு இடைக்கால அறிக்கை எதனையும் அரசுக்குக் கொடுத்துள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) நிதித் துறையில் 11—6—84 ஆம் நாளிட்ட 391 ஆம் எண் அரசாணையில் அண்மைய சம்பளக் குழு நியமனம் (ஜுன் 84-ல்) செய்யப்பட்டது.

(ஆ) இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் பஞ்சப்படி உயர்வும் கொடுப்பதற்கு 8-வது நிதிக் கமிஷனிடம் அரசு ஏதேனும் நிதி உதவி கேட்டதா? அப்படி என்றால் எவ்வளவு கேட்கப்பட்டது? எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது? அந்தப் பின்னணியில் மாதம் 300 ரூபாய் இடைக்கால நிவாரணம் கேட்டிருக்கிற பணியாளர்களுக்கு மொத்தமாக 300 ரூபாய் கொடுத்துவிட்டு, அதில் பாதியை பிடித்தம் செய்கின்ற நிலைமையை மாற்றி, அவர்களுக்கு மாதாமாதம் 300 ரூபாய் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 8-வது சம்பளக் குழுவிடம் பல்வேறு எதிர்காலச் செலவினங்கள் பற்றி குறிப்புகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திட்ட வட்டமாக அது பற்றி இப்போது சொல்வதற்கில்லை; அந்த விபரம் தற்போது என்னிடம் இல்லை. சென்ற 3-வது சம்பளக் குழு நியமிக்கப்பட்டபோது எந்த முறையிலே நடைமுறைகள் கையாளப்பட்டனவோ அதே நடைமுறைகளைக் கையாண்டு, அப்போதும், அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஒரு குறிப் பிட்டத் தொகையை மொத்தமாக வழங்கினோம். அந்த அடிப் படையிலேதான் இப்போதும் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தந்திருக்கிறோமே தவிர மாதாமாதம் உயர்த்திக் கொண்டே வந்தோம் என்றால் பிறகு சம்பளக் கமிஷன் நிர்ணயிக்கிற விகி தத்தை நாம் ஒப்புக் கொள்கிறபோது அவ்வளவையும் சேர்த்துப் பிடிக்க வேண்டியிருக்கும். ஆகையால்தான் ஏற்கெனவே கொடுக் கப்பட்ட தொகையிலேகூட பாதியை திருப்பி வசூல் செய்வது என்றும் பாதியை மானியமாகத் தந்துவிடுவது என்றும் முடிவு எடுத்து, அந்த முறையிலே ஒட்டு மொத்தமாக அனைவருக்கும் தரப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசு பிடித்தம் செய்வது என்ற அந்த நிலையை கைவிட்டு, மேலும் அரசு ஊழியர் களுக்கு போனஸ் கொடுப்பதற்கும் ப்ரொபஷனல் டாக்ஸை ரத்து செய்வதற்கும் ஏதேனும் பரிந்துரையை ஊதியக் குழுவிடம் அரசு கேட்டிருக்கிறதா? அவர்களுடைய பரிந்துரை எப்போது கிடைக் கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, எந்தத் தேதியிலிருந்து அமுல் படுத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாநிலத்திலுள்ள தற்போதைய விகிதத்தில் அகவிலைப்படி பெற்று வருகின்ற அரசு ஊழியர்கள், உள்ளாட்சி மன்றங்களில் பணி யாற்றுகின்றவர்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத இதரப் பணியா ளர்கள் ஆகியோர் இந்த இடைக்கால நிவாரணத் தொகையை பெற தகுதி உடையவர்கள். அவர்களுடைய சம்பளத்தை சீர் திருத்தி அமைக்க இந்த ஊதியக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அரசு இன்ன வகையிலே நிர்ணயிக்கவேண்டுமென்று ஊதியக் குழு விற்குச் சொல்லவில்லை. பல்வேறு துறையினரும் தங்கள்தங்கள் கோரிக்கைகளை குழுவிடம் தெரிவித்திருக்கிறார்கள். குழு அதை ஆராய்ந்து பார்த்து என்ன சிபாரிசு செய்கிறதோ அந்த அடிப் படையில் அரசு மறுபடியும் ஆராய்ந்து பார்த்து தக்க முடிவினை எடுக்கும். அவர்கள் இந்த மாதம் 13-ந் தேதிக்குள் அறிக்கை தந்து விடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்று அல் லது நாளைக்குள் தந்து விடுவோம் என்று சொல்கிறார்கள். எப்படியும் 13-ந் தேதிக்கு மேல் போகாமல் அறிக்கை வந்துவிடும்





என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதன் பிறகு அரசு ஆராய்ந்து முடிவு செய்த பிறகு நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்,

**திரு. கு. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவது ஊதியக் குழுவின் சிபாரிசின் மீது நடவடிக்கை எடுப் பதற்கு முன்பாக, அனைத்து அரசு அலுவலர்கள் சங்கப் பிரதி நிதிகளைச் சந்தித்து, கருத்துக்களைக் கேட்டறிந்து, அதற்குப் பிறகு, முடிவு எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அப்படிக் கேட்டுத் தீரவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், ஏற்கெனவே அந்தக் குழு வின் முன்பாக எல்லாக் கருத்துக்களையும் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, அறிக்கை கிடைத்த வுடன் அதைப் பற்றி அரசு ஆராயும். ஏதேனும் ஐயப்பாடு ஏற்பட்டால், அதாவது அவர்களை மறுபடியும் கலக்க வேண்டும் என்ற அவசியம் இருக்கிறது என்று அரசு நினைத் தால் அரசு செய்யும். ஆனால் அவசியமாகக் கலந்து செய்து தீர வேண்டும் என்ற அவசியம் இல்லை.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வெளிவந்த தினமணி பத்திரிகையில், அரசு ஊழியர்களின் நான்காவது ஊதியக் குழு தன்னுடைய அறிக்கையை இன்று முதலமைச்சரிடம் அளிக்க இருப்பதாக செய்திகள் வந்துள்ளன. அந்த அடிப்படையில் இந்த ஊதியக் குழுவின் சிபாரிசின் முடிவுகள் அரசுக்கு வந்தவுடன் அது எந்த தேதியில் இருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படும். அப்படி அமுலுக்குக் கொண்டு வரும்போது, இதனால் எத்தனை லட்சம் தொழிலாளர்கள் இதன் மூலமாக பயன் அடைவார்கள்? இந்த பாதி மானியம், பாதி அவர்கள் பொறுப்பு என்பதை முழுமை யாக அரசே ஏற்றுக் கொள்ள பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மூன்றாவது ஊதியக் குழு என்ன நடைமுறைகளைக் கையாண்டார்களோ, அதே நடைமுறை களைத் தான் இப்போது கையாள்கிறார்கள். அதிலே எள்ளளவும் மாறுதல் இல்லை. அந்த அடிப்படையில் ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு முன்பணமாக அளித்துவிட்டு, அதிலே பாதியை அரசு கொடுப்பது என்றும், பாதியை அவர்களுக்கு கொடுக் கின்ற தொகையில் வசூலிப்பது என்றும் இப்போது கையாளப் படுகிறது. ஆகவே அவர்கள் அறிக்கையை 13 ஆம் தேதிக்குள் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றும் கொடுக்கலாம் அல்லது நாளைக்கும் கொடுக்கலாம். அது பற்றி விவரக்குறிப்பு என்னிடம் இல்லை. 13 ஆம் தேதிக்குள் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அறிக்கை அளித்ததற்குப் பிறகு அதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு மாதத்

திற்கு மேலாக கால அளவு பிடிக்கும் என்று கருதுகிறேன். திட்டவட்டமாக எந்தத் தேதி என்று சொல்ல முடியாது. ஆகவே ஊதியக் குழுவில் அறிக்கையின்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். அதிலே அரசு மாற்றம் செய்ய விரும்புகிறதா, அதிலே திருத்தம் செய்ய விரும்புகிறதா என்பதை எல்லாம் ஆராய்ந்த பிறகு தான் சொல்ல முடியும்.

திரு எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் எத்தனை தடவை ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. எந்த அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, 1978ஆம் ஆண்டு மூன்றாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டு, அதனுடைய சிபாரிசின் அடிப்படையில் அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. பிறகு, நான்காவது ஊதியக் குழு இப்போது அமைக்கப்பட்டு இருக்கிறது.

கொல்லிமலையை தாலுக்காவாக உயர்த்தல்

60—(*வினா எண் 231) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொல்லிமலை எப்பொழுது தனி தாலூகாவாக செயலுக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதைக்கு இல்லை..

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சென்ற முறை வருவாய் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் செயல்படாத காரணத்தால், அந்தப் பகுதியில் இருக்கிற மலைவாழ் மக்கள் பெரும் கஷ்டப்படவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் விரைவாக அந்தப் பணியைத் துவக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த நாமக்கல் வட்டம், ராசிபுரம் வட்டம், ஆகியவற்றை மேலும் 2 வட்டங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு, அது அரசால் ஆராயப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த இரண்டு வட்டங்களையும், நாமக்கல் வட்டம், ராசிபுரம் வட்டம், பரமத்திவேலூர் வட்டம், கொல்லிமலை வட்டம் என்று பிரிக்க வேண்டும் என்ற செயற்குறிப்பின் மீது ஆராயப்பட்டு வருகிறது. அப்படி ஆராய்கிறபோது, இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களில் அந்த வட்டங்களில் பிரித்துத் தர வேண்டும்.



அப்படி பிரித்துத் தருகிறபோது, இருக்கின்ற ஒன்றியங்களை பிளவுபடுத்தாமல், ஒரே ஒன்றியமாக ஒவ்வொரு வட்டத்திலும் அமைகின்ற அளவிற்கு அமையவேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. ஆகவே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்களில் சில பல கிராமங்களை எடுத்துச் சேர்த்து புதிய வட்டங்களோடு சேர்க்க வேண்டும் என்னும்போது, சில இடர்ப்பாடுகள் ஏற்படும் நிலைமை இருக்கிறது. அவைகளை எல்லாம் அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. கொல்லிமலையை ஒரு வட்டமாக ஆக்க வேண்டும் என்றால், கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம் ஒன்று தான் இருக்கும். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்காக ஒரு தனி வட்டம் அமைக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படுகிறது. அந்த நிலைமைகளை எல்லாம் அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது. இதில் திட்டவட்டமாக முடிவு எடுக்கவில்லை.

இரசாயனத் தொழிற்சாலைகளின் பாதுகாப்பு முறைகள்.

61—(*வினா எண் 32) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போபால் மரணத்திற்குக் காரணமான விஷவாயு தமிழக ரசாயனத் தொழிற்சாலைகளில் தயாராகிறதா?

(ஆ) போபால் சம்பவத்தின் பின் தமிழக ரசாயன தொழிற்சாலைகளில் உள்ள பாதுகாப்பு முறைகள் முழுமையாக பரிசீலிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் இரண்டாவது விடையாக அமைச்சர் அவர்கள், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை விவரமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக போபால் நகரத்தில் இது போன்ற ஒரு விஷ வாயுப் பிரச்சினை எழுந்தவுடன் மத்திய அரசின் தொழிலாளர் நலத்துறை மிகுந்த அக்கறையோடு மற்ற மாநிலங்களிலும் இதுபோன்ற பிரச்னைகள் நிகழக் கூடாது என்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ள எல்லா மாநில அரசுகளுடைய தொழிலாளர் நலத்துறையோடு தொடர்பு கொண்டது. அந்த வகையில் அதன் அடிப்படையில் 17-12-1984 அன்று புது டெல்லியில் தொழிலாளர் துறை செயலாளர்கள் ஒரு கூட்டத்தை

கூட்டி, அந்தக் கூட்டத்தில் அண்மையில் போபாலில் நடந்த விஷ வாயு கசிவு விபத்து காரணமாக இரசாயனப் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில்கள் பற்றி ஒரு விவாதம் மேற்கொள்ளப்பட்டது.

அதில் இது போன்ற தொழில் சார்ந்த சுகாதார இடையூறுகள் பற்றியும் ஆபத்தான செயல்முறைகள் மற்றும் அதிக அளவில் நச்சு கலந்த பொருள்களை தயாரிக்கும் இரசாயனத் தொழிற் சாலைகளில் பாதுகாப்பு விதிகளைச் செயல்படுத்துவது பற்றியும் நாளது வரை உள்ள தகவல்களைச் சேகரிக்க மாநில அரசுகள் ஒரு குழுவை நியமிக்குமாறு யோசனை கூறப்பட்டது. அந்த யோசனையின் அடிப்படையில் தமிழக அரசு 28-3-85-ல் ஒரு குழு அமைத்திருக்கிறது. அந்தக் குழுவில் 7 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்தக் குழுவின் தலைவராக சென்னை பல் கலைக் கழகத்தினுடைய முன்னாள் துணை வேந்தர் டாக்டர் சாந்தப்பா அவர்கள் இருக்கிறார்கள். மற்ற 6 உறுப்பினர் களும் ஒவ்வொரு துறை சம்பந்தமானவர்களாக இருக்கிறார்கள். ஆக 7 பேர் கொண்ட அந்தக் குழு இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அந்தக் குழு 3 மாதத்திற்குள் இந்தத் தமிழகத்தில் இருக்கிற மணலி, மேட்டூர், தூத்துக்குடி போன்ற பகுதியிலே இருக்கிற இராசயனத் தொழிச்சாலைகளில் இப்படிப் பட்ட விஷ வாய்வு கசிவு ஏற்படாமல் இருக்க என்னென்ன வழி களை மேற்கொள்ளலாம் என்பதை ஆராய்ந்து, நேரிடையாகச் சென்று கண்டறிந்து, தமிழக அரசுக்கு ஒரு அறிக்கையை 3 மாதத்திற்குள்ளாக சமர்ப்பிக்க இருக்கிறது. அதற்குப் பிறகு, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்தபடியாக மணலி : மேட்டூர், தூத்துக்குடி போன்ற அதிக அளவுக்கு இராசயன தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதி யளில் கண்காணிப்புக் குழு, மானிடரி செல் என்ற வகையில் ஒரு குழுவை அமைத்து அவ்வப்போது ஏற்படுகிற சில பிரச்சினை களுக்கு தீர்வு காண அரசு முயன்று கொண்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழு அமைக்கப்பட்டு இந்த இராசா யனத் தொழிற்சாலைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக, இரசாயனத் தொழிற்சாலைகளில் அதிலும் குறிப்பாக பூச்சி மருந்துகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துக்கள், அதன் காரணமாக ஏற்படுகிற உயிர் சேதங்கள் அதிக அளவில் இருப்பதால் இவைகளை ஏற்படாமல் தடுக்க, இந்த பொல்யூஷன் கன்ட்ரோல் என்று சொல்லப்படுகிற சுற்றுப்புற சுகாதார கேடுகளை மனத்திலே கொண்டு சென்னை அட்டாமிக் சென்டர் என்று சொல்லப்படுகிற அந்த மின் அணு நிலையத்



சுற்றுப்புற சுகாதார முறைகளை திலே இருக்கக் கூடிய அந்த தொழிற்சாலைகளில் பின் நமது அரசு கையாண்டு, அவைகளை நடவடிக்கை எடுக்கப்படுமா பற்ற வேண்டும் என்ற முறையில் செயற்குறிப்பு திட்டம் இருக்கிறதா அல்லது அதற்கு ஏதாவது விரும்புகிறேன். என்பதை அறிய

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் பொல்யூஷன் கண்ட்ரோல் போர்டு ஒன்று இருக்கிறது. அது இதுபோன்ற காரியங்களை மேற்கொள்ளுகிறது.

திரு. கே. அப்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் தொழிற்சாலைகளுக்கு சேப்டி சர்டிபி கேட் தரும் மின் ஆய்வுத் துறை 1971க்குப் பிறகு விரிவுபடுத்தாத தாலும், வேலைப் பளுவுக்கு தகுந்த அளவில் போதிய பணியாளர் கள் நியமிக்கப்படாத காரணத்தாலும், அத்தோடு குறிப்பிட்ட இலக்கிற்கு ஏற்ப சர்டிபிகேட் கொடுக்க வேண்டும் என்று அரசு வரையறை செய்து உள்ளதன் காரணமாகவும் மின் ஆய்வுத் துறை அவசரகோலமாக சர்டிபிகேட் கொடுப்பதால் பாது காப்பு முறையில் சரியான கவனம் செலுத்தப்பட முடியாமல் ஆபத்து ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறதே. இது போன்ற குறைகளை நிவர்த்தி செய்வதற்கு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் அரசுக்கும் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஆவன செய்யப்படும்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அமிலத் தொழிற்சாலைகள், சூப்பர் பாஸ்பேட் போன்ற உரத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கேயிருக்கிற அமிலக் காற்றால் அல்லது இரசாயன மாற்றத் தால் பல தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் பாதிக்கப் படுகிறார்கள்; அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் பாதிக்கப் படுகிறார்கள்; வேளாண்மையும் பாதிக்கப்படுகிறது. இது குறித்து மனு கொடுத்தால், நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு வருடத்திற்கு மேல் ஆகும் என்று கூறுகிறார்கள். நேற்று கூட ஒரு மனு கொடுத்தபோது அந்தத் துறையின் செயலாளர், பொல்யூஷன் கண்ட்ரோல் துறை மூலமாக, வாட்டர் பொல்யூஷன், ஏர் பொல்யூஷன் போன்றவைகளைச் செய்வதற்கு 1 வருட காலம் வேண்டும் என்று கேட்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? ஏன் இவ்வளவு கால தாமதம் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இதுவரையில் தகவல் அரசுக்கு எதுவும் வரவில்லை. உறுப்பினருடைய அந்த உணர்வுகளுக்கு ஏற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிச்சி பஞ்சாயத்திலுள்ள பவானி மில்ஸ்.

62—(*வினா எண்- 487) திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் குறிச்சி பேரூராட்சி பகுதியிலுள்ள பவானி மில் மூடப்பட்டுள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பஞ்சாலையை திறக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) பவானி மில்ஸ் நிர்வாகம் தொழிலாளர்களுக்கு 1984ம் ஆண்டு ஆகஸ்ட் ஊதியம் தராததால் தொழிலாளர்கள் 7-9-84 முதல் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தை அடுத்து நிறுவனம் செயல்படாமலிருந்தது. தொழிலாளர் துறை ஆணையர் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் விளைவாக 8-3-85-ல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி 20-3-85 அன்று ஆலை திறக்கப்பட்டு வேலை சுமுகமாக நடைபெற்று வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து தொழிலாளர்களுக்கு சம்பளம் கிடைக்காமல் தகராறு ஏற்படுகிறது. இப்படி சின்ன சின்ன 5,6 மில்கள் மூடிக்கிடக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதனால் தொழிலாளர்களுக்கு சட்டப்படி கொடுக்க வேண்டிய சம்பளமே கொடுக்க முடியாத நிலை வரும்போது, அரசு உடனே தலையிட்டு அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு கடன் உதவி கொடுத்து அவற்றை அவர்கள் தவறான முறையில் செலவு செய்யாமல் இருப்பதற்காக சர்க்கார் ஆட்களைப் போட்டு நிர்வாகத்தை நடத்துவதோ அல்லது மில்களுடைய நிர்வாகத்தை சர்க்காரே எடுத்து நடத்துவதற்கோ முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. இருஷ்ணசாமி : தலைவர் அவர்களே. உறுப்பினர் திரு. ரமணி அவர்களும், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் சங்கத் தலைவர்களும் மூடப்பட்ட ஆலைகளை எப்படி நடத்துவது, எப்படி எதிர்காலத்தில் நிர்வகிப்பது என்பது பற்றி பல தகவல்கள் சொல்லியிருக்கிறார்கள். அதில் இந்தத் தகவலும் இருக்கிறது. பல தகவல்களோடு இதுவும் சேர்ந்து ஆலோசிக்கப்படும்.



திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, பவானி மில்லைத் திறப்பதற்கு போடப்பட்ட ஒப்பந்தத்தில தொழிலாளர்களுக்கு மூடப்பட்ட காலத்திற்கான சம்பளம் வழங்கப்பட்டதா ? வேறு நிவாரணம் அவர்களுக்கு வழங்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தத்தில் இந்த சம்பளப் பிரச்சினை பற்றிய விவரம் என்னவென்றால் ஒவ்வொரு மாத சம்பளத்தை இப்படி வருங்காலத்தில் குறிப்பிட்ட தேதியில் தருவது முதல் அம்சம். இரண்டாவது அம்சம் மீதியுள்ள போனஸ் முதலியன 4 தவணைகளில் என்று இரண்டு தரப்பாருக்கும் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர் துறை ஆணையரின் அறிவுரைப்படி தொழிலாளர்களுக்கு தலா ரூ. 600 வழங்கப்பட்டது. அதையொட்டி இன்றைக்கு ஆலையில் சகஜ நிலை நிலவுகிறது.

கூட்டுறவு பால் வழங்கு சங்கம், மன்னார்குடி.

63—(*வினா எண். 1284) திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளப்பாரா—

(அ) மன்னார்குடியில் தற்போது இயங்கி வரும் T 848 கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் எந்த அடிப்படையில் இயங்கி வருகிறது?

(ஆ) தற்போதுள்ள புதிய அமைப்பின் கீழ் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் தொடங்கப்படுவதன் மூலம் இந்த சங்கத்திற்கு பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மன்னார்குடி கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் 22-8-1938-ல் பதிவு செய்யப்பட்டு, 22-1-1939 முதல் செயல்படத் துவங்கியது. இச்சங்கம் மரபுவழிச்சங்கமாக (Traditional Milk Supply Society) தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) இல்லை.

திரு. சா. ஞானசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தில் 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், கூட்டுறவு பால் ஒன்றியம் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்துவதன் மூலம் இந்தச் சங்கமானது கலைக்கப்பட்டு அவர்கள் வேலை இழக்கக் கூடிய ஒரு ஐயப்பாடு தொழிலாளர்களிடத்தில் இருக்கிறது. அதைப் போக்க அரசு முன்வருமா?

[1985 ஏப்ரல் 10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தில் 200 பேர்கள்தான் நிரந்தர பணியாளர் களாக இருக்கிறார்கள். 40 பேர்கள் தினக்கூலி செய்கிறார்கள். இந்த கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம், 'ஆனந்த்' பாணியில் மாற்றப்படும்போது நிச்சயமாக இந்தத் தொழிலாளர்கள் வேலையை இழக்க மாட்டார்கள். அந்தத் தொழிலாளர்கள் புதியதாக உருவாக்கியிருக்கின்ற 90 பால் உற்பத்தியாளர் கூட்டு றவுச் சங்கத்திலே பணிகளில் நிச்சயமாக அமர்த்தப்படுவார்கள்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இரண்டாம் பால் பெருக்கத் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்த்ததற்கு நான் தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு இரண்டாம் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுல்ள தொகை எவ்வளவு? அதன் செயல்பாட்டு முறைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கு செகண்ட் ப்ளட் ஆப்பரேஷனில் ரூ. 6,84,13,000 ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக 400 பால் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்க இருக்கின்றோம். அதனால் 75,000 பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் தஞ்சை மாவட் டத்தில் பயன்பெற இருக்கிறார்கள். இதனால் 50,000 லிட்டர் பால் தினசரி கொள்முதல் செய்ய இருக்கிறது. அது மட்டு மல்லாமல் தஞ்சை மாவட்டத்திலே கும்பகோணம் போன்ற பெரிய இடங்களிலே 50 ஆயிரம் லிட்டர் அளவுக்கு விநியோகம் செய்யவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. பட்டுக்கோட்டை, மாயவரம் ஆகிய இரண்டு பகுதிகளிலே 71 லட்ச ரூபாயில் குளிரூட்டும் நிலையங்கள் இரண்டு தொடங்க இருக்கிறோம். தஞ்சையிலே பால்பண்ணை 60 ஆயிரம் முதல் 1 லட்சம் லிட்டர் வரை உற்பத்தி செய்யக் கூடிய முறையிலே 2 கோடியே 30 லட்ச ரூபாய் செலவிலே தொடங்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. நரசிம்மபல்லவன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பால் சங்கத்திலும் வருடத்திற்கு ஒரு முறை பொது மகா சபையைக் கூட்டுகிறார்கள். ஆனால் உத்திரமேரூர் கூட்டுறவு பால்சங்கத்திலே பொது மகாசபை கூட்டப்படாமல் இருக்கிறதே? அதைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதோடு இன்றைய தினம் 85 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கையாடல் நடந்து இருக்கிறது, ஆகவே அதுகுறித்தும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.



1985 ஏப்ரல் 10]

எலக்ட்ரானிக்ஸ் தொழிலுக்கு ஊக்கம்.

64—(*வினா எண்[redacted]6) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்பு மிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் எலக்ட்ரானிக்ஸ் தொழிலை ஊக்குவிக்க அரசிடம் உள்ள திட்டங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ் நாட்டில் மின் அணு வியல் தொழில்களை ஊக்குவிக்கும்பொருட்டு கீழ்க்கண்ட திட்டங் களை நடப்பு ஆண்டில் அமுல்படுத்த அரசின் ஆய்வில் உள்ளது—

(1) மின் அணுவியல் பொருட்கள் மீது தற்போது விதிக்கப் படும் 12 விழுக்காடு விற்பனை வரி 10 விழுக்காடாக குறைக்கப் பட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(2) மின் அணுவியல் தொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 10 சதவீதம் அல்லது தொழிற்கூடத்தில் நிரந்தரமாக பணி புரியும் தொழிலாளர்கள் தலைக்கு ரூ. 20,000 வீதம் கணக்கிட்டு இவ்விரண்டில் எது குறைவான தொகையோ அதனை ஊக்குதவித் தொகையாக கொடுக்கப்படுகிறது.

(3) தொழில் வணிகத் துறையின் கீழ் செயல்படும் மின் மற்றும் மின் அணுவியல் தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங் களை அமைத்து அவைகளை தவணை முறையிலும் மற்றும் குறைந்த வாடகைக்கும் தொழில் செய்ய முனைவோருக்கு ஒதுக்க ப்படுகின்றன.

(4) தொழில் மற்றும் வணிகத் துறையில் இயங்கி வரும் மின் அணு சோதனை மற்றும் வளர்ச்சி மையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் அணு கருவிகளை குறைந்த கட்டணங்களுக்கு சோதனை செய்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

(5) மின் அணுவியல் தொழில்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களை வைப்பதற்கு வசதியாக சென்னை டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ரானிக்ஸ் எஸ்டேட்டில் ஒரு மூலப் பொருள் கிடங்கு ரூ. 12.79 இலட்சம் செலவில் நிறுவ திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்கான வேலை நடப்பு ஆண்டில் தொடங்கும். சிறு தொழில் நிறுவனங்கள் உறுப்பினர்களாக சேர்ந்து கொண்டு இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(6) மின்னணுவியல் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப் படும் பொருட்களை குறைந்த கட்டணத்தில் சோதனை செய்து கொள்ளும்பொருட்டு கோயம்புத்தூரில் உள்ள தொழிற்பேட் டையில் ரூ. 14.75 இலட்சம் செலவில் ஒரு பொது சோதனை நிலையம் நிறுவப்பட இருக்கிறது.

(7) மின்னணுவியல் தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு மின்னணுவியல் சாதனங்களின் உற்பத்தியில் நவீன உத்திகளை கையாளும் பொருட்டு பயிற்சி கொடுக்க மின்னணுவியல் பயிற்சி மையம் ஒன்று திருச்சியில் ரூ. 16.00 இலட்சம் செலவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(8) சென்னையில் உள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ரானிக்ஸ் தொழிற்பேட்டையில் இயங்கி வரும் மின்சார மற்றும் மின்னணுவியல் தொழிற்சாலைகளுக்கான தகவல் வங்கியை ரூ. 6.99 இலட்சம் செலவில் மேம்படுத்தவும், நவீனப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(9) சென்னை நந்தம்பாக்கத்தில் மகளிர்களுக்கென்று தனியாக ஒரு மின்னணுவியல் தொழிற்பேட்டை ரூ. 65.85 இலட்சம் செலவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

(10) சேலத்தில் மின்னணுவியல் தொழில்களுக்காக ஒரு தொழிற்பேட்டை ரூ. 10 இலட்சம் செலவில் நிறுவப்பட்டிருக் கிறது.

(11) மின் மற்றும் மின்னணுவியல் தொழில்களுக்காக ஐந்து கூட்டுறவு சங்கங்களை சுமார் ரூ. 2 இலட்சம் செலவில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(12) கக்கலூரில் இயங்கிவரும் சோதனைக் கூடத்தை ரூ. 5 இலட்சம் செலவில் மேலும் நவீனப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(13) மதுரை, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் தரக்கட்டுப்பாடு (Quality Control) நிலையங்களை ரூ. 27.35 இலட்சம் செலவில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே அமைச்சர்கள் பதில் சொல்கிற நேரத்திலே இப்படி ஒரு விளக்கமான பதிலை தொடர்ந்து சொன்னால் எப்படி அதை மனதிலே வைத்துக் கொண்டு துணைக் கேள்விகளை உறுப் பினர்கள் எழுப்புவது என்பது புரியவில்லை....

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, கேள்விக்கு விரிவான பதிலைக் கேட்கிறபோது அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 27-2-85 அன்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. நீண்ட பதிலாக வரும்போது அதை அறிக்கையாக அவையில் வைத்துவிட்டால் உறுப்பினர்கள் படித்துக் கொள்வார்கள்.



திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். தமிழகத்திலே எத்தனை மின்னணு தொழிற்சாலைகள் இருக் கின்றன? வெளி நாடுகளிலே இருந்து தொழில் நுட்பத் துறையிலே உதவி செய்யப்படுகிறதா? ஏற்றுமதி எதுவும் செய்யப்படு கிறதா? அப்படியானால் எவ்வளவு மதிப்புள்ள ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 7 இடங்களில் மின் அணுவியல் தொழில் பேட்டைகள் இருக்கின்றன. (1) சென்னையில் உள்ள டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ரானிக்ஸ் எஸ்டேட், (2) மின் அணுவியல் தொழிற்பேட்டை, சென்னை, (3) கட்டனூர், செங் கற்பட்டு மாவட்டம், (4) திருச்சி, (5) மதுரை (6) கோயம் புத்தூர், (7) ஒசூர், தர்மபுரி மாவட்டம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் பொதுவாக மானிய கோரிக்கைகள் மீது பேசுகின்றபோது விவரம் வேண்டுமானால், சட்ட மன்ற நூலகத்தில் உள்ள முன்னால் பேசியவர்களின் பேச்சுக்களின் விவரங்களை எடுத்துக் கொள் கிறார்கள். எனவே ஒரு முன்மாதிரியாக தமிழக சட்ட மன்ற நூலகத்திற்கு ஒரு கம்ப்யூட்டர் சிஸ்டம் வைத்தால், எந்த எந்த பொருட்களின் மீது பேசினார்களோ. அதற்கான விவரங்களை அதிலிருந்து பெற முடியும். அதற்கான செலவு அதிகமாக ஆகாது. இதை ஒரு முன்மாதிரியாக செய்வதற்கு நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சட்டமன்ற பேரவைத் தலைவரின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களிடம் சொன்னால் அவர்கள் கவனிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிய கட்டிடம் வரும்போது இதை எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்.

[1985 ஏப்ரல் 10

## கோட்டூர்—நந்தனம் பாலம்

65—(*வினா எண்: 306) திரு. சா. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர்-நந்தனம் இணைப்பு பாலப்பணி தாமதம் ஆனதற்குக் காரணம் என்ன ?

(ஆ) இப்பணி எப்பொழுது முடிக்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) அடையாறு ஆற்றில் நந்தனம் பக்கமுள்ள உயர்ந்த தரையை சமப்படுத்தலில் ஏற்பட்ட இடர்பாடுகள், அஸ்திவாரம் கிணறுகள் அமைப்பதில் ஏற்பட்ட இடையூறுகள். அஸ்திவாரம் கிணறுகளிலிருந்து விஷவாயு வெளிப்பட்டவை ஆகியவற்றாலும், பால வேலையில் தொடக்கத்தில் பெய்த இடைவிடா பெருமழை, ஆற்றில் வெள்ளப்போக்கு. சிமெண்ட் தட்டுப்பாடு, வேலைக்கான சுத்த நீர் பற்றாக்குறை ஆகிய காரணங்களும் கோட்டூர்புரம்-நந்தனம் இணைப்புப் பாலப் பணியின் துவக்கம் வெகுவாக பாதிக்கப்பட்டது.

தற்சமயம் லாஞ்சிங் கர்டர்கள் (Launching Girders) கிடைப்பதில் காலதாமதம் ஆனதால் முன் வலுவேற்றப்பட்ட கான்கிரிட் உத்திரங்களை நகர்த்திச் சென்று கண்களில் நிலைப்படுத்துவதில் மேலும் பணி தடைப்பட்டுள்ளது.

(ஆ) தற்சமயம் பால வேலையில் மொத்தப்பணி முடிப்புப் பொறுப்பும் (Turn Key) டர்ன் கீ முறையில் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 31-3-86ல் பாலம் முழுமையாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்ட மதிப்பீடு என்ன? கால தாமதம் ஆனதால் திருத்த மதிப்பீடு எவ்வளவு? ஆரம்பத்தில் இந்தத் திட்டம் தீட்டுகின்ற நேரத்தில் வரையறுக்கப்பட்ட கால அளவு என்ன? இன்றைக்கு இந்த வேலை தடைப்பட்டதால் நீட்டிக்கப்பட்ட கால அளவு என்ன? ஆகவே, இதனால் அரசுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறதா? அப்படி நஷ்டம் ஏற்பட்டு இருக்குமானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 74.3 லட்சத்துக்கு முதலில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டது. அப்போது 2 வழி பாதையாக அதை வைப்பதற்கு இருந்தார்கள். அதன் பிறகு 4 வழிப் பாதையாக மாற்ற வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்து 157 லட்சம் ரூபாயில் அந்தத் திட்டம் மாற்றி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் நமக்கு பண விரயம் என்பதை விட கால விரயம் தான் அதிகமாக இருக்கிறது. இதில் தனிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. காரணம் அப்போது



1985 ஏப்ரல் 10]

ஏற்பட்ட சிமெண்டு தட்டுப்பாடு மற்றும் ஏற்கெனவே நான்
சொன்ன காரணங்களால் தடை ஏற்பட்டு இருக்கிறது. எதிர்
காலத்தில் அந்தத் தடைகள் இல்லாமல் செய்து திட்டத்தை விரை
வாக செய்வதற்கு உண்டான முயற்சிகளை கட்டுமான கழகம்
எடுத்துக் கொண்டிருக்கிறது கட்டுமானக் கழகமும், நெடுஞ்
சாலைத்துறையும் ஒன்றாக இணைந்து விரைவாக முடிப்பதற்கு
முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

திரு. ச. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே. இந்தத் திட்டம் சென்னை மாநகரத்தில் செயல்
படுத்தியிருக்கிற மிக அற்புதமான திட்டம். எல்லோரும்
பயன் பெறுகிற வகையில் செயல்படுத்தியிருக்கிற திட்டம்.
இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு தொழிலாளர்
நலத்துறை அமைச்சர் அவர்கள் இதில் அக்கறை எடுத்து
கொண்டு முயற்சிகளை மேற்கொண்டார்கள். அப்படியிருந்தும்
இப்பணியை முடிக்க மக்களுடைய அத்தியாவசியப் பணியாகக்
கருதப்படுகிற இந்தப் பாலம் கட்டும் பணிக்கு சிமெண்ட் தட்டுப்
பாடு என்பது சரியானதொன்றாகும் இப்படிப்பட்ட மக்களுடைய
பணிகளுக்குத் தேவையான அவசியமான பணிகளுக்கு சிமெண்ட்
தட்டுப்பாடு காரணமாக வேலைகள் தடைபடுகிறநேரத்தில்
அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அதைத் தவிர்க்கும்
பொருட்டு இனிமேல் எல்லாத் திட்டங்களுக்கும் சிமெண்ட் வழங்
குகின்ற முறையில் முன் உரிமை வழங்கி இதுபோன்ற பொதுப்
பணிகளுக்கு பயன்படுத்திய பிறகுதான் மற்றப் பணிகளுக்கு
வழங்கப்படும் என்ற திட்டத்தை அரசு அறிவிக்குமா என
அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு
ஆண்டும் திட்டங்களை அதிகமாகப் போட்டுக் கொண்டு போகும்
போது அடுத்த ஆண்டு போதும் என்று நினைக்கிற சிமெண்ட்
பற்றாமல் போய்விடுகிறது. நாம் திட்டங்களை அதிகமாக
செயல்செய்ய இப்படிப்பட்ட பிரச்சனைகள் ஆங்காங்கே வரத்
தான் செய்யும். சிமெண்ட் தட்டுபாடு மட்டும் இதற்குக் காரணம்
அல்ல. அங்குள்ள சூழ்நிலைகள், பல்வேறு நிலைகள், மழை
காரணமாக வந்த வெள்ளப்பெருக்கு இவற்றையெல்லாம் தடுக்க

எந்த வாய்ப்பும் இல்லை. வருகிற ஆண்டு, கூடியவரையில் முடித்து விடலாம் என்ற நிலையில் அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், தொழி லாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் நானும் சேர்ந்து அந்த யிடத்தை பார்வையிட்டு வேகப்படுத்த நான் தயாராயிருக்கிறேன்.

திரு. பரிதி இளம்வழுதி : தலைவர் அவர்களே, இந்தப் பாலங்கள் கட்டாததால் இந்தக் குழாய்கள் மீது நடந்து சென்று தவறி விழுந்து செத்தவர்கள் எவ்வளவு பேர்கள்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட கணக்கு இங்கு ஒன்றும் வரவில்லை. மாண்புமிகு உறுப் பினர்களிடம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது,

திரு. கே. உக்கி : தலைவர் அவர்களே, கோட்டூர்-நந்தனம் பாலம் தாமதப்படுவது போல் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பல பாலங்கள் தாமதமாகக் கட்டப்படுகின்றன என்ற விவரம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால் அதன் விவரத்தைச் சொல்ல இயலுமா

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, மொத்தம் எவ்வளவு பாலங்கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. சிலவிடங்களில் அப்படிப்பட்ட தவறுகள் நடக் கிறது என்றால் அதை வேகப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங் கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

## சென்னை நெடுஞ்சாலைகளில் பாதுகாப்புத் தடுப்புகள்

66—(*வினா எண். 922) திரு சா. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணாசாலையில் சபையர் திரையரங்கம் அருகில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு தடுப்பு கம்பி அமைப்பு போன்று பாரிமுனை விமானதளம் வரையிலும், பூந்தமல்லி நெடுஞ் சாலையிலும் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா?

(ஆ) நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?





மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ மற்றும் ஆ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையிலும், எஸ்பிளேனட் சாலையிலும் வடக்கு கோட்டை பக்க சாலையிலும், கடந்த நிதியாண்டு மத்திய தடுப்பு சுவர்களை கட்டி அதன்மேல் இரும்பு வேலிகள் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் தொடங்கிவிட்டன.

பிரம்பு கடை சாலையிலும், குசிலி அங்காடி சாலையிலும் மாலை அங்காடி சாலையிலும் மத்திய தடுப்புச் சுவர்களை கட்டி அதன் மேல் இரும்பு வேலிகள் கட்ட இந்த நிதி ஆண்டில் திட்ட மிடப்பட்டுள்ளது.

அண்ணா சாலையில் பாட்டா கம்பெனி அருகிலிருந்து திரு. வி. க. சாலை வரையிலும். பீட்டர்ஸ் சாலையிலிருந்து அண்ணா மேம்பாலம் வரையிலும், ஆபட்ஸ்பரி மாளிகையிலிருந்து எல்டாம்ஸ் சாலை வரையிலும். ஆசிரியர் கல்லூரி சுரங்கப்பாதை அருகிலும். கிண்டி சுரங்கப்பாதை அருகிலும் பூங்கா ரயில் நிலைய சுரங்கப் பாதை அருகிலும், கீழ்ப்பாக்கம் மருமதுவச் கல்லூரி அரு கிலும், பாதுகாப்பு தடுப்புக் கம்பி அமைக்கும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பணி களுக்காக மொத்த மதிப்பீடு என்ன? இப்பணிகளை அரசாங்கம் செய்வதற்குப் பதிலாக தனியார் கம்பெனிகள் ஏராளமாக ஆங் காங்கே பூங்காக்களையெல்லாம் எடுத்து அழகுபடுத்திக்கொண்டு வருகிறார்கள். அதேபோல் இந்தப் பணியையும் கடற்கரைச் சாலையையும் பாரிமுனை—மீனம்பாக்கம் விமான நிலையம் வரை நீட்டிக்க அரசு முன் வருமா? இப்படிப்பட்ட தடுப்புக் சுவர் கம்பி அமைத்து அதன் ஓரங்களில் அழகான பூச்செடிகளை வைத்து அழகுபடுத்தினால் இன்னும் சிறப்பாகயிருக்கும். ஆகவே அதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதற் காக மட்டும் திட்ட மதிப்பீடு ரூ. 5·94 இலட்சம். இதை தனியார் துறைக்குக் கொடுப்பது என்பது கொஞ்சம் சிரமமாகயிருக்கும். பூங்காக்கள் என்று சொல்கிறபோது அவர்கள் அதைப் பராமரிக் கிறபோது விளம்பரம் செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆனால் இதில் இப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. அந்த பூங்காக்களைக் கூட இடையில் பலர் விட்டு விட்டு சென்றுவிடுகிறார்கள். இதில், ஓரங் களில் பூச்செடிகள் வைக்க வாய்ப்பில்லை. இந்தத் தடுப்புச்சுவர் கட்டி கம்பிகள் அமைப்பது அதற்கு இடையூறாக இருக்கிறது. இன்னும் பூச்செடிகள் வைத்தால் இரண்டு பக்கமும் ஒன்றரை அடி தேவையிருக்கும். இது மட்டுமல்ல, தனியாரைப் பொறுத்தவரை யில் விளம்பரம் வைக்கவேண்டும் என்ற நிலையில்தான் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். விளம்பரங்கள் வைத்தால் அது நன்றாக யிருக்காது. அதன் அழகு கெட்டுவிடுமோ என்ற எண்ணம் அர சுக்கு இருக்கிற காரணத்தால் அதைப்பற்றி முழுமையாகப் பரி சீலித்துத்தான் முடிவு எடுக்கும்.

[1985 ஏப்ரல் 10

### சத்துணவு மையங்களுக்கான கட்டடங்கள்

67—(*வினா எண். 916) திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துணவுத் திட்டத்திற்கு இதுவரை எத்தனை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன?

(ஆ) எவ்வளவு இடங்களில் வாடகை வீடுகளில் நடத்தப் படுகின்றன.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடையின் மூலம் 562 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 5,316 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) 6,456 மையங்கள் வாடகை வீடுகளில் நடத்தப்படுகின்றன. 26 மையங்கள் புயலுக்காகக் கட்டப்பட்ட புகலிடங்களில் நடத்தப்படுகின்றன.

திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியாகிய மைலாப்பூர் தொகுதியில் பாரதி நகர் பகுதியில் சத்துணவுச் கூடங்கள் கட்டப்பட்ட காலத்திலிருந்து 4 சத்துணவுக் கூடங்கள் செயலற்று போயிருக்கின்றன, இதைப்போல் பல்வேறு சத்துணவுக் கூடங்கள் அதிகக் குழந்தைகள் வராத காரணத்தினால், செயலற்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே, அந்தக்கூடங்களை அகற்றிவிட்டு, வேறு இடங்களுக்கு மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் அவசரமாக கட்டிடங்கள் கட்டுகின்ற வேலையில், அந்தந்த நகராட்சியில் இருந்த ஆணையாளர்கள், தனி அதிகாரிகள் பல இடங்களில் கட்டப்பட வேண்டிய மையங்களை ஒரே இடத்தில் கட்டிவிட்டார்கள். அப்படி கட்டிவிட்ட காரணத்தினால், நீண்ட தூரத்திலிருந்து தாய்மார்கள் குழந்தைகளை கொண்டு வர முடியாததினால் அந்த மையங்கள் செயலிழந்த நிலையில் இருந்ததை அரசு உணர்கிறது. அந்தந்த இடங்களிலேயே அந்த மையங்களை கொண்டு செல்வதற்கு அரசு இப்போது பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் சாப்பிடுகின்ற தட்டு, டம்ளர் ஆகியவற்றை அந்த குழந்தைகளே சுத்தம் செய்வதாக சொல்லப்படுகிறது. இது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அரசின் கவனத்திற்கு எந்த செய்தியும் வரவில்லை. குழந்தைகள் சாப்பிடுகிற தட்டு, டம்ளர்களை அங்கே இருக்கின்ற பணியாளர்கள் கழுவவேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஏதாவது மீறி நடைபெறுகிறது என்பதைத் தெரியப்படுத்தினால் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல இடங்களில் உபயோகமில்லாத கட்டிடங்களைக் கட்டிவிட்டு இப்போது அந்தக் கட்டிடங்கள் தேவையில்லாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்த கட்டிடங்களை பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் அவற்றைப் பாதுகாக்கும் திட்டம் அரசின் வசம் உள்ளதா அல்லது அவ்வாறுசெய்ய அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் அரசிடம் திட்டமில்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தர கட்டிடம் இல்லாத ஊராட்சி ஒன்றியங்களில் வாடகைக் கட்டிடங்களில் அந்த மையங்கள் நடந்து வருகின்றன. அந்த இடங்களில் வாடகைப் பணத்தை அந்தந்த அமைப்பாளர்களின் மாத சம்பளத்தில் 30 ரூபாய் வீதம் கொடுத்துவருவதாகத் தெரிகிறது. குறிப்பாக, என்னுடைய நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் 7 கூடங்களில் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படி கொடுக்கப்படும் அந்தப் பணத்தை அமைப்பாளர்களிடமே மீண்டும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை கட்டிடங்களுக்காக வருடத்திற்கு ரூ. 24.33 இலட்சம் அரசு அளித்து வருகிறது. மாத வாடகை ரூ. 25 லிருந்து ரூ. 100 வரை இதுவரை அரசு தந்து கொண்டிருக்கிறது. ஆகவே யாரும் தன் பணத்திலிருந்து தரவில்லை. அரசு தான் அந்த வாடகைப் பணத்தை தந்து கொண்டிருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக்கூடங்களில் வைக்கப்படுகின்ற பொருள்கள் திருடு போகாமல் பாதுகாப்பதற்கு நிரந்தரமான கட்டிட வசதி தேவைப்படுகிறது. இதற்காகவாவது புதிய கட்டிட வசதியை அரசு ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கட்டப்பட்ட கட்டிடங்கள் பாதுகாப்பான முறையில் கட்டப்படுகின்றன. அப்படி கட்டிடங்கள் இல்லாத இடங்களில் வாடகைக் கட்டிடங்களும்

பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தற்போது எங்காவது ஒன்றிரண்டு இடங்களில் திருடுகள் நடைபெற்றால் அந்த இடங்களில் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் வாடகைக் கட்டிங்கள் இல்லை. அந்த ஊர்க்காரர்களே இடம் கொடுக்கிறார்கள். அவர்கள் மாட்டுத் தொழுவம் அல்லது அசுத்தமான, மோசமான, இடங்களைக் கொடுத்து அந்த இடத்தில் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக வேறு இடத்தில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக்கு இடம் வேண்டுமென்று நாம் முயற்சி எடுக்கிறோம். சில கிராமங்களில் வாடகைக்கு வீடு கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் இனாமாகக் கொடுப்பதற்கு முன் வருகிறார்கள். அது அவர்களுக்கே இருக்கிற பண்பாடாகும். அப்படிப்பட்ட இடங்களைத் தந்தாலும், அந்த இடங்களைசுத்தப்படுத்தி அதன்பிறகு தான் அந்த சத்துணவுக் கூடங்களை நடத்தி வருகிறோம். அப்படிப்பட்ட இடங்களை மாற்றி புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

(முற்பகல் 9-40]

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்கள் அரசாங்கத்தால் சுகாதார முறையிலே சுத்தமாகக் சட்டப்பட்டு சிலயிடங்களில் நல்லமுறையில் இயங்கி வருகின்றன. ஆனால் பெரும்பாலான இடங்களில், தர்மபுரி மாவட்டத்தில் தென்னங்கீற்றுக் கொட்டகைகளில் இருக்கின்றன. அவைகள் பழுது அடைந்து, சுத்தமோ சுகாதாரமோ இல்லாத முறையில் அந்தச் சத்துணவுக் கூடங்கள் நடைபெறுகின்றன. நாம் அன்றாடம் பத்திரிகைகளில் பார்க்கிறோம். சத்துணவில் பல்லி விழுந்துவிட்டது. நாசக் கிருமிகள் கெடுத்து விடுகின்றன என்று, அந்தச் சத்துணவுச் சாப்பிடுகின்ற குழந்தைகள் பாதிக்சப்பட்டு, விஷ உணவாக மாற்றம் ஏற்பட்டு அந்தக் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட பகுதிகளில் வாடகைக் கட்டிடம் என்பதுகூட அல்ல, தற்காலிகக் கொட்டகைகளாக ஏற்பட்டிருக்கின்ற இடங்களில் முதன்மையாக முன்னுரிமை கொடுத்து சத்துணவுக் கூடங்களை அமைப்பதற்கு அரசு முன் வருமா? அடுத்து, சத்துணவுக் கூடங்களிலே சமைக்க கூடியவர்கள் பாத்திரம் துலக்குபவர்கள் என்று 30, 60 என்ற விகிதத்திலே இருக்கின்ற அந்த இரண்டு பேர்களும் ஒன்றாகத்தான் வேலை செய்கிறார்கள். இந்த நிலையிலே அவர்களுக்குள்ளேயே பாகுபாடு. ஒருவருக்கொருவர் யார் பெரியவர், யார் சின்னவர் என்று சமையல் செய்பவர்களுக்குள்ளேயே போட்டி ஏற்பட்டு பல





இடங்களில் குழப்பங்களும் சண்டைகளும் வந்து விடுகின்றன. இதற்கு ஆசிரியர்கள் தலையிட்டுத் தீர்வு காண வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தச் சத்துணவு அமைப்பாளர்கள் இருவருக்கும் சமாதானப்படுத்துவதே பெரிய காரியமாக இருக்கிறது. ஆகவே, இருவருக்கும் ஒருமித்தஅளவில் சம்பள வீதத்தை அளித்து அரசு ஒன்றுபடுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல எந்தெந்தப் பகுதிகளில் தேவையான அளவிற்கு வாடகைக் கட்டிடங்கள் கிடைக்காமல் தற்காலிகமாகக் கொட்டகைகளில் நடத்தப்படுகிறதோ அந்தச் சத்துணவுக் கூடங்களை கூடியவரையில் கட்டிடங்களில் மாற்றுவதற்கான வழிவகைகளை அரசு மேற்கொண்டு படிப்படியாகச் செய்து வருகிறது. சுகாதாரத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். கட்டிடங்கள் கட்டப்படும்போது நல்லமுறையில்தான் கட்டப்படுகின்றன. அதைச் சுகாதார முறையில் பேணிக் காப்பது என்பது அங்கே உள்ளபொது மக்களுடைய பொறுப்பாகும். ஆகவே நாம் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கும் போதும் அல்லது வாடகைக்கு எடுக்கும் பொழுதும் அங்கே சுற்றுப்புறத்தைக் சுகாதாரமாக வைத்துக் கொள்ள அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்கள் ஒத்துழைப்புத் தந்தால்தான் முறையாக செய்ய முடியும். அடுத்து அங்கே பணியாளர்களாக இருக்கின்றவர்கள் மனம் ஒத்துப் போகா நிலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதில் அவர்களே கொஞ்சம் கொஞ்சமாக மனம் ஒத்துப் போகின்ற நிலைமைக்கு வர வேண்டுமே தவிர, அதற்காக சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்பது நிச்சயமாக முடியாத காரியம். ஆகவே, அப்படி எங்கேயாவது நடக்கிறது என்றால், அவர்களைக் கூப்பிட்டு நாம் அவர்களுக்கு அறிவுரை கூறலாம்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சத்துணவு உயர் மட்டக் குழு உறுப்பினர் சிவந்தி ஆதித்தன் அவர்களும், தாங்களும் ஒரு இடத்தில் பார்வையிடுகின்ற நேரத்தில் அந்தச் சத்துணவு மையத்தில் அற்புதமான திருமண விருந்து சாப்பிட்டது போல, . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னை எதிலும் இழுக்கக் கூடாது.

திரு. சா. துரைசாமி: அந்தச் சத்துணவு மையத்தில் அற்புதமான விருந்து சாப்பிட்டதுபோல் இருந்ததாகப் பேசியிருக்கிறீர்கள். அதற்கால காரணத்தைக் கேட்டபொழுது, அந்த ஊரிலே உள்ள

வசதி படைத்தவர்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, 30 பேர் தினமும் ஒருவர் வீதம் அந்தப் பணியினை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. அது நல்ல பணி என்று எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே அதைப் போன்ற பணியினைத் தமிழகம் முழுவதும் உள்ள கிராமங்களில் இருக்கின்ற வசதி படைத்தவர்கள் செய்கின்ற வகையில், தமிழக அரசு இன்றைக்குத் தொலைகாட்சியின் மூலம் நடைபெறுகின்ற நாடகங்களின் வாயிலாகவும்' வாரந்தோறும் ரேடியோவில் நடைபெறுகின்ற அந்த நாடகங்களின் வாயிலாகவும், செய்திப் படங்களின் வாயிலாகவும் அரசு தயாரித்து வெளியிட்டால் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் திட்டத்திற்கு மேலும் வலிமை சேர்க்கின்ற வகையில் இருக்கும். ஆகவே, அந்த நடைமுறையை அரசு பின்பற்றுமா? மேலும், அந்தத் திரைப்படத்தில், சட்டம் அனுமதித்தால், மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சரவர்களே நடிக்கவும் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்று சொல்வார்கள். பொருள் ஈட்டுதல் என்பதில் எந்த அளவிற்கு நமக்கு உரிமை உள்ளதோ, அதைப்போல, ஈட்டிய பொருளை மற்றவர்களுக்கு வழங்குதல் என்பதும் நம்முடைய உள்ளத்திலே தானாக ஊற வேண்டியது என்பது ஒரு மிகப்பெரிய தத்துவமாகும் அந்தத் தத்துவத்தின் அடிப்படையில், யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று சொல்வதைப்போலே, யாம் பெற்ற செல்வம் பெறுக இவ்வையகம் என்ற முறையில் இன்றைக்கு அவர்கள் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வழங்குகின்ற உள்ளம் எல்லோருக்கும் ஏற்பட்டால், உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று அப்படிப்பட்ட உணவுக் கூடங்களுக்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். திரைப்படத்தின் மூலமாகவோ அல்லது தொலைக்காட்சியின் மூலமாகவோ இதை எடுத்து சொல்லி மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது இல்லை.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் ஆங்காங்கு பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்கிறபோது இதுபற்றிய கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவார்களேயானால், அதுவும் கூட எல்லோரையும் ஈர்ப்பதற்கு வாய்ப்பாக அமையும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னையும் ஈடுபடுத்திக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## வீட்டு வசதித் திட்டங்கள்

68 (* வினா எண் 1286—திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த ஊர் ளில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன ?

(ஆ) கிராமப்புறங்களில் இத்திட்டம் செயல்படுகின்றதா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) தஞ்சை மாவட்டத்தில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் தஞ்சாவூர், கொள்ளிடம், நாகப்பட்டினம், பூம்புகார், வானகிரி, மயிலாடுதுறை திருவாரூர், கும்பகோணம், மன்னார்குடி ஆகியஇடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இல்லை.

திரு. சா. ஞானசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியில் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் இன்னும் திறக்கப்பட முடியாத நிலையில் இருக்கின்றன. காரணம் மிகவும் பள்ளமான பகுதியில் அந்த வீடுகள் கட்டப்பட்டிருப்பதால் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி, அது வாசல் வரையில் வந்திருப்பதால் இன்னும் திறக்க முடியாத. நிலையில் அவை இருக்கின்றன எனவே அந்த வீடுகளைச் சீர்திருத்தி விரைவில் திறப்பதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைமனதில் கொண்டு விரைவில் திறக்க ஏற்பாடுகள் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

69—(*வினா எண் 1410)—திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு வீட் வசதி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பொன்னேரி, மீஞ்சூர் ஆகிய பகுதிகளில் வீட்டு வசதித் வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) செங்கை மாவட்டம் பொன்னேரியில் வீடுகள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. இருப்பினும் மீஞ்சூர் பகுதியில் வீடுகள் கட்டும் செயற்குறிப்பு உள்ளது.

(ஆ) மீஞ்சூர் பகுதியில் நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்ததும் வீடுகள் கட்டும் பணி துவங்கப்படும்.

திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக நன்றி. மீஞ்சூரில் வீடுகள் கட்டுவதற்காக எவ்வளவு நிலங்களை வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? அந்த மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 329 ஏக்கர் பரப்பளவு நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திட்டத்தின் மதிப்பீடு என்பது 5 கோடி ரூபாய் அளவில் முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது.

70—(* வினா எண் 1499)—திரு. எஸ். பி. துரைராசு: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி கழனிவாசல் பகுதியில் அரசு அலுவலர்களுக்காக வாடகை அடிப்படையிலான வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதனை மேலும் விரிவு படுத்தி இரண்டாவது கட்டமாக வீடுகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு என். நல்லுசாமி: (அ) ஆம்: 36 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

(ஆ) இரண்டாவது கட்டமாக விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

## காரைக்குடி நகரில் குடிசை மாற்றும் பணிகள்

71—(* வினா எண் 1500)—திரு. எஸ். பி. துரைராசு: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி நகரில் குடிசைமாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) ஆம்.

(ஆ) காரைக்குடி நகரில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகளை மேற்கொள்ள உரிய அறிவிக்கை வெளியிடுவது குறித்து செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.



அறிவிக்கை வெளியிட்ட பிறகு இத்திட்டம் குறித்த செயற்குறிப்பு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடமிருந்து பெறப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். பி. துரைராசு: பேரவைத்தலைவர் அவர்களே, காரைக்குடி நகரில் வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் சுண்ணாம்பால் கட்டப்படுகின்றன. இதை அரசு கவனித்து அந்தக் கட்டடங்கள் நீண்டகாலம் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் சிமெண்டால் கட்ட ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வீடுகள் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளன. இனி வருகிற காலங்களில் வீடுகள் கட்டுகின்ற புதிய திட்டத்தில் நல்ல கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் இதுபோன்ற வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா? மணப்பாறை, குளித்தலை போன்ற பகுதிகளில் கட்டித் தருவதாக அரசு அறிவித்திருந்தது. அது இப்போது நடைமுறைக்கு வருவதைப்பொறுத்தவரையில் அந்த உத்தேசம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திருச்சி, கரூர் போன்ற பகுதிகளில் திட்டங்கள் இருக்கின்றன. மற்ற ஊர்களைப் பொறுத்தவரையில் நிதிநிலையை அனுசரித்து திட்டங்கள் விரிவுபடுத்தப்படும்.

## கலிங்கப்பட்டி ஆதிதிராவிடர்கள் குடியிருப்பு.

72—(*வினா எண் 762)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி வத்திராயிருப்பு ஒன்றியம் கலிங்கப்பட்டி கிராமம் ஆதி திராவிட குடியிருப்புக்கு பாதையமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில், வத்திராயிருப்பு ஒன்றியத்திலுள்ள கலிங்கப்பட்டி கிராம ஆதிதிராவிட குடியிருப்புக்கு, பாதையமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 9-50)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு ஒன்றியத்திலுள்ள, கலிங்கப்பட்டி கிராம ஆதி திராவிட குடியிருப்புக்குப் பாதையமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்கிற கேள்வியை வைத்து அங்குள்ள பொதுமக்கள் கொடுத்த பெட்டிஷனை வைத்து, இது ஒரு கோரிக்கை என்று வைத்துக்கொண்டு, அங்கே பாதை அமைக்க இரண்டு பக்கமும் விவசாய நிலங்கள் இருக்கின்றன, வரப்பு மேட்டில் கூட அங்கே உள்ளே அரிசனங்களை நடக்கவிட மாட்டோம் என்று சொல்கிறார்கள், ஆகவே, பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டிலே அரசு அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## திருவில்லிப்புத்தூர் தொகுதியில் தீண்டாமை ஒழிப்பு

73—(* வினா எண். 855)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் பிற ஜாதியினர் வசிக்கும் இடங்களில் குறிப்பாக நத்தம்பட்டி, கான்சாபுரம், நாச்சியார் பட்டி, இராஜகோபாலபுரம், இராமலிங்காபுரம், பாப்பை நாயக்கன்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள உணவு விடுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு காப்பி குடிப்பதற்கு தனி ‘டம்ளர்’ போட்டு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதை தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) வினாவில் குறிப்பிட்டுள்ள கிராமங்களில் உள்ள உணவு விடுதி களில் காப்பி/டீ தனி டம்ளரில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனினும் இவ்வாறு தீண்டாமை கடைப்பிடிப்பது குறித்து கண்காணிக்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.





திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினன் என்ற முறையில் நீண்டகாலமாகப் பொதுமக்கள் இவ்வாறு இழி நிலை இருக்கிறது, காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப் போனால், கொடுத்துவிட்டு வந்துவிட்டால், நாங்கள் அங்கே குடியிருக்கமுடியாது, எங்களை அடித்து விடுவார்கள் என்றெல்லாம் அவர்கள் பயந்துகொண்டு என்னிடம் குறிப்பிட்டார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆய்வுக்குப்போனால், உயர்ந்த ஜாதி நபர்களைப் பார்த்துவிட்டு, தீண்டாமை கடைப்பிடிக்கப்படவில்லை யென்று அரசுக்குத் தவறான தகவல் அனுப்புகிறார்கள். ஆகவே, எம். எல். ஏ.க்கள் கொண்ட குழுவை அங்கே அனுப்பி தீண்டாமையை ஆய்வு செய்ய அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் எல்லாம் சலவைத் தொழிலாளர்கள், முடி வெட்டுவோர்கள் அரிசனங்களாக இருந்தால், அவர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்களுக்கு முடிவெட்டக்கூடாது என்று சொல்லும் நிலை இன்னும் கிராமப்புறங்களில் இருக்கிறது. கிராமப்புறங்களில் அந்த தீண்டாமை இன்னும் இருக்கத்தான் செய்கிறது. மயிலே மயிலே இறகு போடு என்றால் இறகு போடாது. ஆகவே, தந்தை பெரியார் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் அண்ணல் காந்தி அவர்கள் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார்கள். ஆகவே, கடுமையான சட்டத்தின் மூலம் தீண்டாமையைப் போக்க முடியும். ஆகவே, தீண்டாமையைப் போக்க விசேஷமான சட்டம் இயற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை சம்பந்தமாக ஏற்கனவே அன்டச்சபிலிட்டி சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தின் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சம்பந்தப்பட்ட நபர்கள்மீது ரிப்போர்ட் கொடுப்பாரானால் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பெரியார் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு நில ஒதுக்கீடு.

74—(*வினா எண். 1047)—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்காக நிலங்கள் எந்த எந்த பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) எத்தனை பேருக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ மற்றும் ஆ) நெரிசல் மற்றும் சுகாதாரமற்ற சூழ்நிலையில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு 1949 முதல் 1985 மார்ச் வரை 7774 வீட்டு மனைப் பட்டாக்கள் பெரியார் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் குடியிருப்பிற்கு மாநில அளவில் எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளார்கள்? குறிப்பாக, பெரியார் மாவட்டத்திலே அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக ஆண்டுதோறும் மாநில அளவிலே ரூ. 1.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பெரியார் மாவட்டத்தில் ரூ. 28.78 இலட்சம் 1949 முதல் மார்ச் மாதம் 1985 முடிய செலவிடப்பட்டுள்ளது, வீட்டு மனை பட்டாவுக்காக.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, சில பகுதிகளில் ஆதி திராவிடர்கள் குடியிருக்கிற இடங்கள் வயல் வெளிகளாக இருப்பதால் அவற்றை ஆர்ஜிதம் செய்வதில் அரசு தயக்கம் காட்டுவதாக தெரிகிறது. அதனால் அந்தப் பகுதியில் இருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு இடநெருக்கடி இருப்பதால், வயல் வெளியாக இருந்தாலும் அதனையும் எடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, நஞ்சை நிலத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அவர்களுக்கும் சென்று அவர்கள் கையெழுத்திட்ட பிறகு தான் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஒரு முறை இருக்கிறது. ஆகவே அதன்படி தான் முடிவு எடுக்கப்படும்.





### திருச்சி மாவட்டத்தில் ஆதிதிராவிட மாணவர் விடுதிகள்

75—(*வினா எண். 1287A)—திரு. க. சோலைராசு, திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டும் செயல்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : திருச்சி மாவட்டத்தில், திருவெறும்பூரில், 165 ஆதிதிராவிட மாணவர்கள் தங்குவதற்கான விடுதி கட்டுவதற்கு ரு. 16.55 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசு ஏற்பளித்துள்ளது.

திரு. க. சோலைராசு : தலைவர் அவர்களே, மணப்பாறை, குளித்தலை, தரகம்பட்டி போன்ற பகுதிகளில் ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்டுகிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா ? மணப்பாறை தாலுக்கா பாம்பாட்டிப்பட்டி உயர்நிலைப் பள்ளி ஆதிதிராவிட மாணவர்களுக்கு அரசு விடுதி கட்டுகிற திட்டம் செயற்குறிப்பிலே இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்தில் மணப்பாறை வட்டத்திலுள்ள அரசு மாணவர் விடுதி, குளித்தலை வட்டம் தரகம்பட்டியிலுள்ள மாணவர் விடுதி, மீன்சுருட்டியிலுள்ள மாணவர் மற்றும் உடையார்பாளையம் விடுதி ஆகியவற்றிற்கு அரசு விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக நிலம் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. தேவையான நிதிநிலையை உத்தேசித்து வரும் ஆண்டுகளில் இந்த கட்டிடங்கள் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. இரத்தினவேலு : தலைவர் அவர்களே, முசிறி தொகுதியில் கொட்டாத்தூர், மண்ணச்சநல்லூர் ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுகிற திட்டம் அரசிடம் உள்ளதா ? ஆமெனில், இன்னும் எத்தனை இடங்களில் மேலும் அந்தக் கட்டிடங்களை அரசு கட்டவுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## அண்ணா நீச்சல் குளம், சென்னை.

76.—(* வினா எண். 40)—திரு. டி. ஆர். வேங்கடரமணன், திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா நீச்சல் குளத்தில் ஏற்படும் நீர்மரணங்களை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : சென்னை அண்ணா நீச்சல் குளத்தில் ஏற்படும் நீர்மரணங்களைத் தடுக்க அண்ணா நீச்சல் குளத்தின் கொள்ளளவினை (Capacity) நிர்ணயித்து நீந்த வருபவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துதல், பணியிலிருக்கும் எல்லா உயிர் காப்பாளர்களுக்கும் (Life Guards) முதலுதவி பயிற்சி அளித்தல், கடைசி நீச்சல் பழகுபவர் நீச்சல் குளத்தை விட்டு வெளியேறும் வரை கண்காணிப்பு பணி செய்தல், உயிர் காப்பாளர் எவருமில்லாத காலத்தில் நீச்சல் பயில யாரையும் அனுமதியாமை, நீச்சல் பயில்வோரை எப்போதும் கவனித்துக் கொள்ளவும், அபாயத்தில் உள்ளோரை உடனடியாக காப்பாற்றவும் ஏதுவாக உயிர்காப்பாளர்கள் உட்கார்ந்து கவனிக்க உயரமான இருக்கை கொண்ட மேடைகள் குளத்தின் நான்கு கரைகளிலும் அமைத்தல், நீச்சல் குள நீரை ஒவ்வொரு மாதமும் கிண்டி நீர் பரிசோதனை நிலைய மூலம் பரிசோதனை செய்தல், நீந்தும் அனைவருக்கும் மிதவைகள் (Life buoys) அளித்தல், நீச்சல் குளத்தின் ஆழமான இடங்களுக்கு அருகில் கரையில் அபாய அறிவிப்பு பலகைகள் இன்னும் பெரிதாக வைத்தல், அதிக ஒளி தரும் மின் விளக்குகளை பொருத்துதல் போன்றவற்றை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உடனடியாக தேவையுள்ள பராமரிப்பு வேலைகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே, அண்ணா நீச்சல் குளம் மிகச்சிறப்பான முறையில் கட்டப்பட்டிருந்தாலும் கூட சரியான பராமரிப்பு இல்லாத காரணத்தால் பாசி பிடித்து இருக்கிறது. தண்ணீரின் ஆழத்தின் அளவு அங்கே குளிக்கிற இளம் சிறார்களுக்கு தெரியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் குளத்தில் இருக்கும் பாசியை அகற்றி ஸ்பிக் அண்ட் ஸ்பேனாக அதனை மிகச் சிறப்பாக பராமரிப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.





திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மேலும் இந்த உயிர்காப்பாளர் என்று சொல்லப்படுகிற பணியாளர்களின் எண்ணிக்கை போதுமான அளவுக்கு இல்லை என்று புகார் வருகிறது. அதனால் உடனடியாக அதிகமான உயிர்காப்பாளர் பணியாளர்களை அமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, நீச்சல் குளம் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை என்பது அவ்வளவு சரியான ஒரு தகவல் அல்ல. என்றாலும் சாதாரண நாட்களில் ஒரு நாளில் 500 பேர்களும், விடுமுறை நாட்களில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களும் அந்த நீச்சல் குளத்தை பயன்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அந்த தண்ணீர் தெளிவு இல்லாமல் போகிறதே தவிர அங்கே உள்ள தண்ணீர் அவ்வளவு பாது சுத்தப்படுத்தப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கு இடமில்லை. மேலும் அந்த நீச்சல் குளத்தில் இருக்கக்கூடிய உயிர்காப்பாளர்கள் தேவையான அளவிற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும், இப்படிப்பட்ட உயிர் காப்பாளர்கள் இல்லாத நேரத்தில்தான் அந்த நீச்சல் குளத்தில் விபத்து ஏற்படுகிறது. உயிர்காப்பாளர் இருக்க தேவையில்லை என்றும் தாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்றும் காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் 7 மணி வரையிலும் எங்களுக்கு நீச்சல் குளத்தைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும் விளையாட்டுப் பயிற்சிக்காக விளையாட்டுத் துறையினரின் வேண்டுகோளின் அடிப்படையில் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த கால கட்டத்தில்தான் இப்படிப்பட்ட விபத்து நடக்கிறது.

திருமதி பா. வளர்மதி : தலைவரவர்களே, நீச்சல் குளத்திலுள்ள நீரை சுத்தப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? நீச்சல் குளத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு விளையாட்டுத் துறையிடம் இருக்கிறதா அல்லது பொதுப்பணித்துறையிடம் இருக்கிறதா? ஆண்களும் பெண்களும் நீச்சல் பயிற்சிக்கு அங்கே வருவதால், அவர்களைக் கண்காணிக்க ஆண் பயிற்சியாளர்களும் பெண் பயிற்சியாளர்களும் போதுமான அளவுக்கு நியமிக்கப்படும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, இப்போது இருக்கக்கூடிய நீச்சல் குளத்தில் இருக்கிற தண்ணீரை சரியான அளவு சுத்தமாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பி, கிண்டி கிங் நிறுவனத்தில் பரிசோதனை செய்து பார்க்கப்படுகிறது. அந்த வகையில் நீரின் சுத்த தன்மையைப் பாதுகாக்கவும் நீச்சல் பயிற்சிக்கு வரக்கூடியவர்களை சரியான முறையில் கண்காணிக்க உயிர் காப்பாளர்கள் உயரமான இடத்தில் இருந்து கவனிக்கக் கூடிய அளவுக்கு இருக்கை

வசதிகள் செய்து கொடுத்து தகுந்த பாதுகாப்பு அளிப்பது போன்றவைமீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இருந்தாலும் ஆண்களுக்குத் தனியாகவும் பெண்களுக்குத் தனியாகவும் பயிற்சியாளர்கள் நியமிக்கப்படுவார் களா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார் கள். இந்தப் பிரச்சனையைப் பொறுத்தவரையில் இதை கவனிக்க வேண்டியது விளையாட்டுத் துறையே தவிர பொதுப் பணித் துறை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொன். முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, நகரங்கள் வளர்ந்து வருகின்ற காரணத்தால் மாவட்ட தலைமையிடங்களி லும் இப்படிப்பட்ட நீச்சல் தொட்டிகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, தனிக்கேள்வி போட்டால் பதில் தர முடியும்.

திரு. ச.ா துரைசாமி: தலைவரவர்களே, மெரீனாவிலுள்ள நீச்சல் குளத்தில் கட்டணம் வசூல் செய்வதில் பல்வேறு முறை கேடுகள் நடைபெறுகின்றன என்று செய்தி சொல்லப்படுகிறது. அதை அரசு அறியுமா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஜ. பாலன் : தலைவரவர்களே, அண்ணா நீச்சல் குளம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 48 பேர்கள் இறந்திருக்கி றார்கள். உயிர்காப்பாளர் இல்லாத நேரத்தில் தான் இந்த விபத்து நடக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறாகள். ஆகவே இறந்துபோன அந்த 48 பேர்களுடைய குடும்பங்களுக் கும் அரசு ஏதாவது நிதி உதவி அளித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, இந்த நீச்சல் குளம் 1973-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கட்டப்பட்டு, நடைமுறையில் இருந்து வருகிறது. அன்று முதல் இன்று வரை 24 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். ஒரே காலத்தில் 48 பேர் இறந்துவிட்டதாகவும் நீச்சல் குளமா கொலை குளமா என்று பத்திரிகையில் செய்தி வருவதும் சரியா னது அல்ல. நீச்சல் குளம் மரணத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற விவரம் சரியானது அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா நீச்சல் குளத்தில் உயிர்காப்பாளர்களாக மீனவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி மீன் பிடிக்க கடலுக்கு சென்று விடுகிறார்கள். எனவே அதற்குப் பதிலாக சிறப்புப் பயிற்சி பெற்ற இளைஞர்களை அதற்கு நியமிப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே. உயிர்க்காப்பாளர்கள், இந்த பொதுப் பணித் துறை யில் பொறுப்பில் இருக்கின்ற அந்தக் காலக் கட்டங்களில் எல்லா நேரத்திலும் காணப்படுகிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற தகவல் சரியானது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம்

77—(*வினா எண். 1488) திரு. அ. பாலுசாமி; மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுமலை நீர்த்தேக்கம் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) & (ஆ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்தத் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது போன்று, பல தடவைகள் இந்தத் திட்டம் பரிசிலனையில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டும் இந்தத் திட்டம் அறிவிக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர் கள் கனிவோடு அந்தப் பகுதி மக்களின் குறைகளைப் போக்குவ தற்கு இந்தச் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டத்தை இந்த நிதி யாண்டில் ஆரம்பிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நீண்டகாலத்திற்கு முன்பாக பரிசீலிக் கப்பட்டு, 1976-ஆம் ஆண்டு, பயன்—செலவு விகிதம் திருப்திகர மாக இல்லாத காரணத்தால் இது அரசால் அப்போது கைவிடப் பட்டது. மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக் கையை ஏற்று, 1982-ஆம் ஆண்டு, இந்தத் திட்டத்தை மறுபடியும் ஆய்வு செய்ய உத்திரவிடப்பட்டது. அந்த அடிப்படையில் புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இந்த அறிக்கை அரசுக்கு அனுப் பப்படக்கூடிய நிலையில் இருக்கிறது. ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அரசுக்கு தகுந்த அறிக்கையை

அனுப்பியிருக்கிறார்கள். அந்த அ[illegible] யாளர் மூலமாக அனுப்பவேண்டும் [illegible] றிக்கை நில நிர்வாக ஆணை இருக்கிறது. [illegible] என்று அறிவுரை கூறப்பட்டு

திரு. அ. பாலுசாமி: பேர[illegible]வைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கான ஆய்வுகள் [illegible] நடத்தப்பட்டு, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலமாக [illegible] நமது அரசுக்கு வந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவி[illegible]த்தார்கள். இந்தத்திட்டத்தில் தொகை எவ்வளவு? மேலும் இந்த[illegible] திட்டத்தை இந்த நிதி ஆண்டிலே எடுத்துக் கொள்வதற்கு அ[illegible]மைச்சர் அவர்கள் சம்மதிப்பார்களா என்பதை அறிய விரும்புகி[illegible]றன்.

மாண்புமிகு திரு. ய[illegible] சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, ஒரு திட்டத்தை மே[illegible]ாள்ளவேண்டும் என்றால், அதற்கு பல வழிமுறைகளை மே[illegible]ற்கொ[illegible]ள்ள வேண்டியிருக்கிறது. இத்திட்டம் பற்றி அரசு [illegible]ற்கொ[illegible] ஆய்வின் [illegible]க்கு மு[illegible]ழுமையான விவரம் வரவில்லை. இந்த திட்[illegible] விவரங்க[illegible]ளின் அடிப்படையில் அரசு தால், நா[illegible]ட்டத்தை ஆராயும்போது, இந்த திட்டத் இந்தத் [illegible]டுக்கு நன்மை கிடைக்குமா என்பதை ஆராய்ந்துதான் முடியு[illegible] [illegible]ட்டத்தை மேற்கொள்ள முடியும் என்ற முடிவுக்கு வர சுமா[illegible] இ[illegible]ம். அடுத்து, இந்[illegible]த் திட்டத்தைப் பொறுத்த வரையில் [illegible]ர் 1,605 லட்சம் இந்தத் திட்டத்திற்கு செலவாகும் என்றும் [illegible]ந்த விலை விகிதம் 1984-85 ஆம் ஆண்டின் அடிப்படையில தரப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கு காங்கிரஸ் ஆட்சியின் போது 23 லட்சத்தில் எஸ்டிமேட் போட்டார்கள். பிறகு காங்கிரஸ் வெளியே வந்தபிறகு இந்தத் திட்டம் 'அன்-எக்கனாமிக் கல்' என்று சொல்லி, அரசால் கைவிடப்பட்டது. இதனுடைய முக்கியத்துவத்தை நான் சொல்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் சிறு மலைப் பகுதியில் மழை பெய்கிறபோது, பள்ளப்பட்டு ரயில்வே நிலையத்திற்கும், கோடை ரோடு ரயில்வே நிலையத்திற்கும் இடையில் ரயில் விபத்துக்கள் ஏற்பட்டு, பல ஆயிரக்கணக்கான உயிர்ச்சேதம் அடைந்திருக்கின்ற காரணத்தால்தான் இந்த திட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று சென்ற ஆண்டும் நான் சொல்லியிருக்கிறேன். எனவே இது 'அன்-எக்கனாமிக்கல்' என்று சொல்லி தள்ளிவிடாமல், தயவு செய்து, உயிர்ப் பலி அங்கே அடிக்கடி நடைபெறுகிறது என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த திட்டத்தை தயவு செய்து அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, உடனடியாக இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ள வழிவகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஆய்வு செய்யக்கூடிய நேரத்தில், நிலத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை குறைவாக



இருந்தது. ஆகவே அந்த அடிப்படையில் உரிய திட்டங்கள் தீட்டுகின்ற நேரத்தில், குறைந்த கொள் அளவு கொண்ட நீர்ப் பாசனத் திட்டமாக அமைத்தால் போதுமானது என்று இருந்தது. ஆனால் காலப்போக்கில் நிலத்தைப் பயன்படுத்துவோர்களின் எண்ணிக்கை அதிகமாகி, அவர்கள் சிறு விவசாயிகளாக இருக்கின்ற காரணத்தால் நிலத்திற்குத் தேவையான தண்ணீரின் பாசன அளவு அதிகமாக இருப்பதால், இந்த மாதிரியான திட்டத்தைத் துவக்குகின்ற நேரத்திலே, மிகப் பெரிய அளவிலே கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆகவே 25 லட்சத்திற்குப் போடப்பட்ட திட்டம், இப்போது பல கோடிக்கணக்கான ரூபாய்களை விழுங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. என்றாலும் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை ஆராய்ந்துதான் இப்போது ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இது 1976-லே கைவிடப்பட்ட திட்டம் என்பதை நான் தெரிவித்திருக்கிறேன்.

திரு. டகூலூர் இ. வி. வேலு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் நீர்த் தேக்கத்திற்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமான அளவிலே வந்து போகிறார்கள். அங்கே பூசப்பட்ட வண்ணங்கள் எல்லாம் தற்போது மங்கி விட்டன. எனவே அந்த அணைக்கு புதிய வண்ணங்கள் பூசப்படுமா, அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, தற்போது அதுபற்றி விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## காமலாபுரம் சம்பூதிரி அம்மன் ஊற்று

78—(*வினா எண். 1490) திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் காமலாபுரம் ஊர்ப்பக்கத்தில் உள்ள சம்பூதிரி அம்மன் ஊற்றை தேக்கமாக கட்டி, நீர்ப்பாசனத்திற்குத் தகுந்தவாறு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 10-10)

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்திட்டத்திற்கு கேள்விக்கு இடமில்லை என்று சொன்னார்கள். அந்த சம்பூதிரி அம்மன் ஊற்று அந்தப் பகுதியில் உள்ள பல விவசாயப் பெரு மக்கள், விவசாயத்திற்கே பாசனததிற்கு பயன்படுத்தி வருவதால், அது ஒரு மினி பாசனத் திட்டமாகத்தான் இருக்கிறது. ஆகவே அந்த திட்டத்திற்கு என்று கொஞ்சம் பணத்தை ஒதுக்கி, அதை ஒரு தேக்கமாகக் கூட அமைக்கச செய்து, அந்தப் பகுதி மக்களின் குறைகளை போக்குவதற்கு இந்த திட்டத்தை மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் காமலாபுரம் ஊர்ப்பக்கத்தில் உள்ள சம்பூதிரி அம்மன் பகுதயில் தேக்கமாகக் கட்டி, நீர்ப்பாசனத்திற்கு தகுந்தவாறு அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் இல்லை என்பதைத்தான் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி இந்தத் திட்டம் மிகச் சிறிய அளவிலே மேற்கொள்ளப்பட்ட போதிலும் தகுந்த பயன் கிடைக்கும் என்ற வகையில் சொல்லுகிறார்கள். அந்த அடிப்படையில் உரிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உடனடியாக உத்தரவுகள் இடப்படும் என்பதையும், ஆய்வு அறிக்கை சாதகமாக இருக்குமேயானால், அத் திட்டத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கு இதற்கு முன்னதாக அறிவிப்பில் இல்லாவிட்டாலும், இப்போது அமைச்சர் அவர்களிடம் நான் அதை வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். இந்த திட்டத்தில் உடனடியாக ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும், அதன் நிலைமையை ஒட்டி அந்த திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே மேற்கொள்ளும் வகையிலும் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னது போல இந்தத் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். சிறிய திட்டம் என்றால் உடனடியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும், அந்த அடிப்படையில் ஆய்வு அறிக்கையும் சீக்கிரமாக வந்துவிடும். வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஆய்வறிக்கை இல்லாமல் எதுவும் செய்ய முடியாத சூழ்நிலையில் இந்த அரசு இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சம்பூதிரி அம்மன் ஊற்று என்பது என்னுடைய சொந்தக் கிராமத்தில் இருக்கிறது. என்னுடைய நிலங்கள் எல்லாம் அங்கேதான் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே இத் திட்டத்திற்கு ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு, சாங்ஷன் செய்யப்பட்டு, அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டபோது ஒரு தனிப்பட்ட நகர், புறம்போக்கு நிலத்தை அப்ரோச் செய்திருப்பவர், ஒரு ஆசாரியார், அந்த இடத்தை விட்டுக் கொடுக்காத காரணத்தினாலே தான் அது கைவிடப்பட்டிருக்கிறது. மழைக் காலங்களில் வெள்ளம் அதிகமாக வந்து, ஓடைகளில் பெருக்கெடுத்து ஓடி, கிணறுகளைக் கூட மூடி விடக் கூடிய நிலைமை இருக்கிறது, ஆகையினால் இத்தகைய சின்னச்சின்ன திட்டங்களுக்கு முன் உரிமை கொடுத்து பெர்குலேஷன் வாட்டர் என்ற வகையில் அந்த மக்களுக்கு கொடுக்க வழி வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உறுப்பினர் பாலுசாமி அவர்கள் அதைப்பற்றி ஏற்கெனவே தெளிவாக என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதை கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். எனினும் இங்கே எனக்கு தரப்பட்டிருக்கிற விவரங்கள் அடிப்படையில் அத்தகைய விவரங்கள் இல்லை. என்றாலும் அத்தகைய குற்றச்சாட்டுகள் அங்கே இருக்குமேயானால் அதன் காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டிருக்குமேயானால், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த நிலத்தை கையகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அம்பாசங்கர் குழு அறிக்கை—நிதி அமைச்சர் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர், நேற்று அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையைப் பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்களே, அது பற்றி நிதியமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்க வேண்டுமானால் விளக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அம்பாசங்கர் குழுவினுடைய அறிக்கையைப் பற்றிய நிலைமையை இந்த அவைக்கு தெரிவிப்பது நலம் பயக்கும் என்று கருதி அது பற்றிய விளக்கத்தைப் பற்றி மட்டும் இந்த அவைக்குத்

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1985 ஏப்ரல் 10

தெரிவிக்க விரும்புகிறேன். அம்பா சங்கர் குழு பிற்பட்டோர்
பட்டியல் பற்றியும், ஒதுக்கீடு செய்துள்ள இடங்கள் பற்றியும்,
நியாயமான நிலைமையைப் பற்றியும் ஆய்வு செய்து அரசுக்கு
அறிக்கை அளிக்குமாறு அரசு நேர்முக ஆணைகள் மூலம் கேட்டுக்
கொள்ளப்பட்டது. குழு அமைக்க வேண்டிய அவசியம் ஏன்
ஏற்பட்டது என்றால், உச்ச நீதி மன்றத்திற்கு நிலைமையைத்
தெளிவுபடுத்தவும், இப்போது செய்துள்ள ஒதுக்கீட்டின் நியா
யங்கள் பற்றியும் எடுத்துச் சொல்வதற்கு அவசியம் ஏற்பட்டது.
அதன் காரணமாக, மாநிலத்தைப் பொறுத்தவரையிலும், நீண்ட
நெடுங்காலமாக இதன் ஒதுக்கீடு முறைகளில் ஒரு சமூக நியதியை
அடிப்படையாகக் கொண்டு, தமிழகத்தைப் பொறுத்த வரை
யிலும் நாம் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டு வருகிறோம்.
அந்த வகையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முதலிலே, 16
இடங்கள் ஒதுக்கீடு செய்யவேண்டும், பிற்பட்டோருக்கு 25
இடங்கள் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற முறை இருந்தது.
அதற்குப் பிறகு நாட்டு மக்களுடைய எண்ணங்கள், உணர்வுகள்
அகியவற்றின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு
இருந்தபோது இந்த 16% என்பது 18% ஆக மாற்றப்பட்டது.
25% என்பது 31% ஆக மாற்றப்பட்டு இருந்தது. அதற்குப்
பிறகு 1980 ஆண்டிற்கு முன்னால், மாண்புமிகு இன்றைய
முதல்வர் இருந்தபோது 31% பிற்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு
செய்தது 50% ஆக உயர்த்தப்பட்டது. 18% தாழ்த்தப்பட்டவர்
களுக்கும், பழங்குடி மக்களுக்கும், 50% பிற்படுத்தப்பட்ட மக்க
ளுக்கும் என்ற முறையிலே 1980 லிருந்து தொடர்ந்து இதுவரை
யில் அந்த முறையில் எல்லா இடங்களிலும்—தொழில் கல்லூரிகளி
லும் சரி, அல்லது தேர்வாணைக் குழுவின் மூலமாக முக்கியமான
இடங்கள் தேர்ந்தெடுக்கும்போதும் சரி இட ஒதுக்கீடு செய்ய
வேண்டிய அவசியம் ஏற்படும் இடங்களில் இது திட்டவட்டமாக
தெளிவாக கடைபிடிக்கப்பட்டு வந்தது.

ஆனால் இந்த ஒதுக்கீடு தவறு என்ற முறையில், உச்ச
நீதி மன்றத்திலே சிலர் வழக்கு தொடுத்தார்கள். அதனு
டைய சாராம்சம் என்னவென்றால், பொதுவாகச் சொல்ல
வேண்டுமென்றால், அவர்கள் எடுத்துச் சொன்னது, சட்ட
நாதன் குழுவினர், பிற்பட்டவர்களுடைய பட்டியலில் உள்ள
சிலபலவற்றை நீக்க வேண்டும். அப்படி நீக்கினால்
உண்மையான பிற்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு போய்ச்
சேரும் என்றும், அதுமட்டுமல்லாமல் 31% 50% ஆக உயர்த்தி
யது முறையாகாது என்றும், சட்டநாதன் குழுவிலே சொல்ப
பட்ட அந்த யோசனைப்படி நடைமுறைப்படுத்தவில்லை என்றும்
ஆகவே, 50% ஆக உயர்த்தியதை 31% ஆக ஆக்க வேண்டும்
என்றும் சிலர் உச்சநீதி மன்றத்திலே வழக்கு தொடுத்தார்
கள். வழக்கினை ஆராய்ந்த நீதிபதி அவர்கள் அதுபற்றி
எடுத்துச் சொல்கின்றபோது, அச்சமயத்தில் கர்நாடகத்தினு
டைய ஒரு வழக்கு உச்சநீதி மன்றத்திற்கு வந்துசேர்ந்தது.



1985 ஏப்ரல் 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

உச்ச நீதி மன்றம் கேட்கும் போது, எந்த
அந்த வகையில் உச்ச நீதி மன்றம் கேட்கும் போது, உயர்த்தினீர்கள்,
அடிப்படையில் 31% என்பதை 50% ஆக விலக்காமல் இருத்ததற்கு
சட்டநாதன் செய்த பரிந்துரைப்படி அடிப்படையில் பிற்
காரணம் என்ன, எந்த புள்ளிவிவரங்கள் இருக்கின்றன,
டட்டவர்களுக்கு இந்த இடங்கள் ஒதுக்கப்பட்டு கொள்கை
பிற்படுத்தப்பட்டவர்கள் நிர்ணயிப்பதற்கு என்ன என்றெல்லாம் உச்ச
முறைகளை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்கள் புள்ளி விவரங்கள்
நீதி மன்றம் கேட்டபோது, தமிழக அரசு முடியாத நிலையில்
மற்றவைகளை உடனடியாகத் தெரிவிக்க குழு அமைத்து
எடுத்துச் சொன்னது, இதற்கென்று தனியாக பெறப்பட்டு அதன்
அந்தக் குழுவின் மூலமாக பரிந்துரைகள் மன்றத்திற்கு அறிவிக்
கீது அரசு முடிவு எடுத்து உச்ச நீதி அளவுக்கு அவகாசம்
கத் தயாராக இருக்கிறது. போதுமான மன்றம் கேட்டுக்
அளிக்க தமிழக அரசு சார்பாக உச்ச நீதி குழு ஆராய்ந்து
கொள்ளப்பட்டது. உச்ச நீதி மன்றம், அரசு ஆராய்ந்து
அறிவிப்பதற்கு ஓராண்டு காலம் என்றும், தெரிவிப்பதற்கு
முடிவு எடுத்து உச்சநீதி மன்றத்திற்குத் ஆண்டுச் காலம்
ஓராண்டுக் காலம் என்னும் இரண்டு அளித்தார்கள். அந்த
தமிழக அரசுக்கு கால நீட்டிப்பு கீழே இந்தக்குழு
அடிப்படையில் அம்பா சங்கர் தலைமையின் பிற்படுத்தப்பட்ட
அமைக்கப்பட்டது. அம்பா சங்கர் அவர்கள் அதுமட்டுமல்லா
வகுப்பைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினாலும் இருந்து
மல் அவர் தேர்வாணைக் குழுவின் தலைவராக என்பதாலும்
எல்லோருடைய நன்மதிப்பைப் பெற்றவர் அமைக்கப்பட்டது.
அவருடைய தலைமையில் இந்த குழு ஓராண்டு
இதில் 20 உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தார்கள். கொண்
காலத்திற்குள் அறிக்கை அளிக்கும்படி குழுவைச் கேட்டுக் காலத்
டோம். ஆய்வு நடத்தியதின் விளைவாக 2 ஆண்டு மன்றம்
திற்கு மேலாகும் என்ற நிலை ஏற்பட்டதால் உச்ச நீதி சென்ற
கொடுத்த காலக்கெடு போதாது என்று சொல்லி, இது வேண்டியது.
ஆண்டு டிசம்பர் மாதம் 31ந் தேதியோடு முடிய

(முற்பகல் 10-20)

தரவேண்டுமென்று இந்த
மேற்கொண்டு கால அவகாசத்தைத் 31-5-85 வரையிலும்
அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க குழு குறிப்பிட்ட
அவர்கள் கெடு தந்தார்கள். அம்பாசங்கர் ஆய்வு செய்வதற்கு நேரம்
காலத்தில் கொடுத்து அதை நாம் அவர்கள் அறிக்
இல்லாத வகையிலே சென்ற திங்களிலேதான் தலைவர் திரு அம்பா
கையை அளித்தார்கள். குழுவினுடைய மாறுபட்ட வேறுபட்ட
சங்கர் அவர்களுடைய கருத்துக்களுக்கு தங்களுடைய
கருத்துக்களோடு அதிலே இருக்கிற உறுப்பினர்களும் வேறுபட்ட
கருத்துக்களை அளித்திருக்கிறார்கள். மாறுபட்ட அறிக்கையினுடைய
கருத்துக்களோடு அம்பாசங்கர் குழு தந்த அதோடு
தன்மைகளையெல்லாம் இப்போது சட்டத் துறையும் கொண்டு
தொடர்புடைய துறையினரும் தீவிரமாக ஆராய்ந்து

இருக்கிறார்கள், ஆனால் 31-5-85க்குள் அந்தப் பணிகளையெல்லாம் செம்மையாக முடித்து திட்டவட்டமாக தெளிவாக ஒரு முடிவுக்கு நாம் வர முடியுமா என்ற ஐயப்பாடு இருப்பதன் காரணமாக உச்ச நீதிமன்றத்திலே காலக்கெடு இன்னும் கொஞ்சம் நீட்டித்துத் தர வேண்டுமென்று இந்த அரசு சார்பாக நாம் கேட்க இருக்கிறோம். ஆனால் அம்பா சங்கர் குழு தந்த அறிக்கை மாறுபட்ட கருத்துக்களுடைய அறிக்கை—அரசு ஏற்கெனவே உச்சநீதிமன்றத்திலே எடுத்துக்கொண்டிருக்கிற நிலைமைகளை வாதாடுவதற்கு உதவி செய்கிற நிலையில் அவர்கள் என்ன என்ன விளக்கம் கேட்டார்களோ அந்த விளக்கங்களைத் தெளிவாகக் கொடுக்கின்ற நோக்கத்தோடு அந்த அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். ஒன்றை மட்டும் நான் இந்த அவைக்கும் இந்த அவையின் மூலமாக நாட்டிற்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அம்பா சங்கர் குழுவினுடைய கருத்துக்களை அல்லது வேறுபட்ட மாறுபட்ட கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற நிபந்தனை எதுவும் இல்லை. ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. சட்டநாதன் குழுவினர் தந்த கருத்துக்களிலே அவ்வளவையும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அரசுக்கு எது சரியென்று படுகிறதோ, நாட்டு மக்களுடைய உணர்வுகளுக்கேற்றபடி எதைஎதைச் செய்யமுடியும் என்று அரசு கருதுகிறதோ அதைமட்டும்தான் ஏற்றுச் செய்ததே தவிர பல பரிந்துரைகளை சட்டநாதன் குழுவினர் கூறியதைக்கூட விட்டிருக்கிறது. இன்றைக்கு நான் நாட்டிற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்பா சங்கர் குழு அறிக்கையிலே தெரிவிக்கப்பட்ட காரணத்தினாலேயே மற்றவர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துவிட்ட காரணத்தினாலேயே அது முடிந்த முடிவு அல்ல, அதையெல்லாம் ஆராய்ந்தறிந்து பிறகு அரசு எடுக்கிற முடிவுதான் முடிந்த முடிவு, அதற்குப் பிறகு உச்ச நீதி மன்றம் எடுக்கிற முடிவுதான் முடிந்த முடிவு. அதற்குப் பிறகு நடவடிக்கைகள் எடுக்கிற நிலமை அமைந்திருக்கிறது. ஆனால் வெளியிலே வந்திருக்கிற செய்திகளை வைத்து யாரும் பீதியடைய வேண்டியதில்லை. இந்த அரசைப் பொறுத்தவரையிலும் ஏற்கெனவே 31 என்று இருந்ததை 50 ஆக மாற்றியது நியாயம் என்று கருதுகிறேன். அந்த நியாயத்தை நிலைப்படுத்துகின்ற எண்ணத்திலே தான் இந்த அரசு இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே அந்த நியாயத்தை நிலைநாட்டுவதற்கு என்ன என்ன முயற்சிகளை எடுக்க வேண்டுமோ அதைத் தொடர்ந்து எடுக்கும். அந்த வகையிலே நாம் ஆராய்ந்து பார்க்க இருக்கிறோம். குழுவினுடைய அறிக்கை என்ற தன்மையிலேயே வருகிறபோது—அவர்கள் அறிக்கையைத் தந்து இருக்கிறார்கள், மற்றவர்கள் வேறுபட்ட கருத்தைத் தந்திருக்கிறார்கள்—



அந்த அறிக்கை ரகசியக் குறிப்பாக காப்பாற்றப்படவேண்டிய ஒன்றா இல்லையா என்ற பிரச்லை வந்தபோது அது ரகசியக் குறிப்பாகக் காப்பாற்றப்படவேண்டிய ஒன்றுதான். அரசு அதை ஆராய்ந்தறிந்து ஒரு முடிவு எடுக்கிற வரையில் ரகசியக் குறிப்பாக அது காப்பாற்றப்படவேண்டும். அதிலே இருக்கிற ஒரு பகுதியையோ அல்லது மற்றவைகளையோ 'வெளியிட்டிருந்தாலும் அல்லது அதற்கு உடந்தையாக இருந்தாலும் ரகசியக் குறிப்பு வெளியிடப்பட்ட குற்றச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அவர்கள் ஆளாக வேண்டியவர்கள்தான். சிலபல ஏடுகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போன்று வந்திருக்கிற கருத்துக்களிலே அறிக்கையிலே இருந்து எடுக்கப்பட்ட கருத்துக்கள் தானா அல்லது ஹேஷ்யத்தின் அடிப்படையிலே எடுத்துச் சொல்லப்பட்டதா என்பதையும் அதனுடைய ஒரு பகுதியை அல்லது முக்கியமான பகுதியை வெளியிட்டிருக்கிறார்களா என்பதையும் கண்டு புலன்விசாரணை செய்வதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது, அந்தப் புலன் விசாரணை அடிப்படையில் சட்டத்திற்கு முரணாக வெளியே எடுத்துச் சொல்கின்ற அளவிலோ அல்லது அதற்கு உடந்தையாக இருந்தாலும் அந்தப் புலன் விசாரணை மூலம் தெரிந்தால் அபிஷியல் சிக்ரட் ஆக்ட் பிரிவு 5(1), 5(2) இன் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றாம். புலன் விசாரணை மூலம் இன்னார் வெளியிட்டார்கள்—உள்ளபடியே அதிலே இருக்கிற உறுப்பினர்களும் வெளியிடக் கூடாது தான்—அதிலே சில கருத்துக்கள் வெளியிடப்பட்டதா அல்லது ஹேஷ்யத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டதா என்றும் யார் யார் வெளியிட்டார்கள், யார் யார் அதற்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதையும் புலன் விசாரணை மூலம் அறிந்ததற்குப் பிறகு சட்டப்படி அதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் உச்ச நீதி மன்றத்தினுடைய கால கெடுவை கொஞ்சம் நீட்டித்துத் தருவார்களானால் இருக்கிற சூழ்நிலைகளை அத்தனையையும் ஆராய்ந்து அறிந்து உச்ச நீதி மன்றத்திற்கு இதை எடுத்து தெரிவிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அரசு ஒரு முடிவு எடுத்து அம்பாசங்கர் குழுவினுடைய அறிக்கையை உச்ச நீதி மன்றத்திற்கு அந்த அடிப்படையில் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. அரசு தனக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டது. அரசு தன்னுடைய கருத்தாக உச்ச நீதி மன்றத்தில் எடுத்து வைக்கும். பிறகு உச்ச நீதி மன்றம் தன்னுடைய கருத்தை எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆக அந்த நிலை ஏற்படுகின்ற வரையில் அரசு ஒரு திட்டவட்டமான, தெளிவான முடிவை எடுக்கிற வரையில் இதில் வந்து நலன்கள் பாதிக்கப்பட்டு விட்டதோ என்று அதிக பீதி அடைய வேண்டிய அவசியம் தமிழக மக்களுக்கு இல்லை என்பதையும் அப்படி அரசு எடுக்கின்ற முடிவான முடிவு

ஏற்படுகின்ற தன்மைகள் வருகின்றபோது வேண்டுமானால் அத
னுடைய கருத்துக்களையும் மாற்றத்தை எடுத்துச் சொல்வதற்கு
வாய்ப்பு இருக்கிறது என்ற நிலைமையை மட்டும் இப்போது நான்
இந்த அவைக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த அறிக்கையினுடைய கருத்துக்களை அரசாங்கத்தி
னுடைய முடிவாக மக்கள் கருத தேவையில்லை, பீதி அடைய
தேவையில்லை, கவலை அடையத் தேவையில்லை, எந்த விதத்
திலும் அது அவர்களுடைய உரிமையை பாதிக்காது என்ற இவ்
வளவு உறுதி மொழிகளை தருகிற முன்னவர் அவர்கள் இந்த
அறிக்கை அரசின் ரகசியம் என்று சொல்லுகிறபோது ஊர் அறிய
விசாரித்து 4 பேர் இதை விவாதித்து பல்வேறு கருத்துக்கள் பேசப்
பட்டு, ஒவ்வொரு கட்டத்திலும் அந்தப் பிரச்சினைகள் பேசப்
பட்டுள்ளது. நாட்டுக்குத் தெரியக்கூடிய நிலைமையில் அந்தக்
கருத்துக்கள் இருக்கிறபோது இது அரசாங்கத்தினுடைய தனிப்
பட்ட உரிமையை பாதிக்கின்ற அறிக்கை என்ற கருத்தில் ரகசிய
மான அறிக்கை என்று சொல்வது அந்த அறிக்கையினுடைய
இயற்கை இயல்புக்கு பொருத்தமாக இல்லையே, அது நியாயம்
தானா? என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நியாயம் இல்லை தான். அது
ரகசியக் குறிப்பு தான். ஆனால் நம்முடைய நாட்டில் திருடுகிற
வர்கள் இருக்கிறார்களே. ஆக வெளியே எடுத்துச் சொல்லுகிறவர்
கள் இருக்கிறார்களே. கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர்கள் இருக்
கிறார்களே. இது ரகசிய குறிப்பு என்று சொன்னபிறகு அதற்கு
கட்டுப்பட வேண்டும். அதை மீறியவர்கள் மீதுதான் நாம்
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னோம். புலன்
விசாரித்து வருகிறார்கள். அந்த அளவுக்கு யார் மீறினார்கள்
யார் உடந்தையாக இருந்தார்கள் என்று தெரிந்த பிறகு அவர்கள்
மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆகவே, வெளியே
வந்தது முழுவதும் உண்மையா? இல்லையா என்பதை புலன்
விசாரணை செய்த பிறகு தான் வரும். அறிக்கையில் இது முழு
வதும் சொல்லப்பட்டு இருக்கிறதா? ஏசியத்தின் அடிப்படையில்
வெளியே சொல்லப்பட்டு இருக்கிறதா? என்பதும் இந்த அவை
யினருக்கும் தெரியாது. எனக்கும் இப்போது தெரியாது.
ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படி அது வருமானால்
நாம் தண்டிக்கத்தான் முடியும். ஆக நடவடிக்கைகள் எடுக்கத்
தான் முடியும். ஆகவே இதை வைத்துக் கொண்டு மேலும் விவா
திக்க வேண்டாம் என்ற முறையில் தான் நான் சொன்னேன்.
உரிமைகள் காப்பாற்றப்படுவதும் பிற்பட்ட மக்களுக்கு இருக்கிற
தன்மைகள் ஏற்கனவே எடுத்த அந்த முடிவுகள் அதற்கு ஆதார
மாக இருக்கத்தக்க வகையில் இந்த அரசு தன்னுடைய முயற்சி
களைச்செய்து வரும். இதைப்பற்றி யாரும் சர்ச்சைகள் செய்ய



வேண்டிய அவசியம் இல்லை என்றும், வீண் பீதி அடைய வேண்
டிய அவசியம் இல்லை என்பதும், அந்தக் கருத்துக்களை வைத்துக்
கொண்டு அதன்மேல் விவாதங்களை நடத்தி வீண் குழப்பத்தை
ஏற்படுத்த வேண்டாம் என்பதற்காக அரசின் சார்பாக இதை
எடுத்து தெரிவிக்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்ன அந்த முடிவான
கருத்துக்களில் எனக்கு வேறுபாடு கிடையாது. ஆனால் இந்த
அறிக்கை ரகசியமானது. ரகசியமானது என்று சொல்கிறபோது
அரசாங்கம் சில அறிக்கைகளை தான் ரகசியமாக கருதுவது எந்த
அரசாங்கத்திற்கும் இயற்கை. இது பொது மக்கள் சம்பந்தப்பட்ட
எல்லா தரப்பாரும் சம்பந்தப்பட்ட, எல்லோரையும் விசாரித்து
எடுக்கப்பட்ட முழுமையான வடிவு கொண்டது ஆகும். அரசாங்
கத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத, ஏற்றுக்கொள்ளப்படுவதாக
இருந்தாலும் பரிசீலிக்கப்படக்கூடிய மறு பரிசீலனை செய்யக்கூடிய
அந்த நிலையில் இருக்கிற கருத்தை ரகசியம் என்று கருதுவது
அதன் பேரில் நடவடிக்கை என்பது. இந்த அரசு காப்பாற்றவே
வேண்டிய ரகசியத்தில் இது எப்படி சாரும் என்ற தெரியாத
காரணத்தால் அவ்வளவு சிரமங்கள் இந்த அரசுக்குத் தேவையில்லை
என்பதற்காக தான் நான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசியர் அவர்களுக்கு ஏற்
பட்ட ஐயம் எனக்கும் ஏற்பட்டு இதை சட்ட துறைக்கு அனுப்பி
இதுபற்றி நான் கேட்கின்றபோது 'Whether it is a confidential
document? என்று நான் கேட்டேன். அதற்கு சட்டத்துறையி
லிருந்து எனக்கு வந்து இருக்கிற பதில் 'எஸ்' ஆமாம் என்று
சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சட்டப்படி இது ரகசியமாக
வைக்கப்படவேண்டிய ஒன்று. இதை மீறப்படுகிற சூழ்நிலை ஏற்
படுகிறபோது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று சொல்ல
விரும்புகிறேன். ஆகவே இந்த கருத்துக்கள் முழுமையும் ஏற்றுக்
கொள்கின்ற நிலை இல்லை. காரணங்களை ஆராய்ந்து அறிந்து
நாம் பாரம்பரியமாக ஒரு கொள்கையை கொண்டு இருக்கிறோம்.
அதிலே இந்த அவையில் இருக்கின்ற யாருக்கும் கருத்து வேறுபாடு
கிடையாது. ஆனால் பிற்பட்டவர்கள் நலன்கள் காப்பாற்றப்
பட வேண்டும் என்பதில் அக்கறையோடு இருக்கிறோம். அதை
தான் நாம் கடைசிவரை வாதாடுவோம். அந்த வகையில்தான்
நாம் முடிவு எடுப்போம் என்பதை மட்டும் இந்த அவைக்குத் தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

## 3. அறிவிப்புகள்

### (அ) அண்ணாமலை பல்கலைக் கழக ஆட்சிப் பேரவை — உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (Annamalai University Senate) திரு. பி. என். இராமச்சந்திரன் பெயர் முறையாக முன்மொழியப் பெற்றுள்ளது.

முறைப்படி முன்மொழியப்பெற்ற வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் திரு. பி. என். இராமச்சந்திரன் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிப் பேரவைக்கு (Senate) முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக் குழுக்கள் பற்றிய அறிவிப்பு.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் 265 (1)-வது விதியின் கீழ் பின்வரும் உறுப்பினர்களை 1985-86-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு (Committe on Delegated Legislation) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர்.
2. திரு. மு. சின்னக் குழந்தை
3. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
4. திரு. பு. கோ. நாராயணன்
5. திரு. எஸ். என். இராஜேந்திரன்
6. திரு. கே. குப்புசாமி
7. திரு. ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி
8. திரு. க. பாரமலை
9. திரு. ஏ. எஸ். ரவீந்திரன்
10. திரு. பொன் முத்துராமலிங்கம்
11. திரு. வை. பாலசந்திரன்
12. திரு. ஜெ. ஹேமச்சந்திரன்

பேரவையின் 266-வது விதியின்கீழ் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.



### (இ) அரசு உறுதிமொழிக் குழு — உறுப்பினர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் 274 (1)-வது விதியின் கீழ் பின்வரும் உறுப்பினர்களை 1985-86-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (Committee on Government Assurances) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. திரு. க. நரசிம்மபல்லவன்
2. திரு. என். சண்முகம்
3. திரு. எச். ஜி. ஆறுமுகம்
4. திரு. கே. ஆர். கணபதி
5. திரு. பி. என். பரமசிவ கவுண்டர்
6. திரு. வி. பாலகிருஷ்ணன்
7. திருமதி இரா. சரோஜா
8. திரு. டி. என். முருகானந்தம்
9. திரு. ச. கோவிந்தசாமி
10. திரு. கா. சொர்ணலிங்கம்
11. திரு. சு. பாலன்
12. திரு. கு. தமிழரசன்

பேரவையின் 275 (1)-வது விதியின்கீழ் திரு. சு. பாலன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன்.

### (ஈ) பேரவை விதிகள் குழு — உறுப்பினர்கள் நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 282-வது விதியின் கீழ் 1985-86-ஆம் ஆண்டிற்கு பின் வரும் உறுப்பினர்களை பேரவை விதிகள் குழுவின் (Rules Committee) உறுப்பினர்களாக நான் நியமிக்கின்றேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
4. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்
5. மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு திரு. உ. சுப்பிரமணியன், எதிர்க்கட்சித் தலைவர்

7. திரு. துரை கோவிந்தராசன், அரசு தலைமைக் கொறடா

8. திரு. த. மாரிமுத்து

9. திரு. தி. நா. கோ. அ. மனோகரன்

10. திரு. ஈ. வெ. கி. ச. இளங்கோவன்

11. திரு. மா. சுந்தரதாஸ்

12. திரு. எ. தெய்வநாயகம்

13. திரு. க. அன்பழகன்

14. திரு. மு. இராமநாதன்

15. திரு. கு. ரமணி

16. திரு. பொ. உத்திராபதி

பேரவையின் 282-வது விதியின் கீழ், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

## 4. கவன ஈர்ப்புகள்

### (அ) பத்தாம் வகுப்பு இறுதியாண்டுத் தேர்வுக்கான வினாத் தாள்கள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், மா. மணிமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அண்மையில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் பல்வேறு வினாக்கள் அவர்களுக்குப் போதிக்கப்படாத பகுதிகளிலிருந்து கேட்கப்பட்டது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மார்ச் 1985-ல் நடைபெற்ற 10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் கேட்கப்பட்ட வினாக்களில் அவர்களுக்கு போதிக்கப்படாத பகுதிகளிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டதால் மாணவர்கள் இன்னல்களுக்கு உள்ளானார்கள் என்ற கருத்தை பள்ளி கல்வி





இயக்குநர் மறுத்துள்ளார். இக்கேள்வித் தாள்கள் நிபுணத்துவம்
வாய்ந்த சிறந்த பேராசியர்களால் கவனமாக மறுபரிசீலனை செய்
யப்பட்ட பிறகு அச்சிட அனுப்பப்படுகின்றன. சம்பந்தப்பட்ட
பேராசிரியர்கள் போதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்துதான் வினாக்
கள் எடுக்கப்பட்டுள்ளன என்று சான்றிதழும் அளிக்கின்றனர்.
இந்த மார்ச் தேர்விற்குக் கேள்வித் தாள்களை தயாரிப்பதில்
சம்பந்தப்பட்டிருந்த முன்னால் அரசுத் தேர்வுகள் இயக்குநர் என்ற
முறையில் தற்போதைய பள்ளிக் கல்வி இயக்குநர் இதைக் கூறு
கிறார்.

2. எனினும் இது சம்பந்தமாக கொடுக்கப்பட்ட மனுக்களை
அரசு பள்ளிக் கல்வி இயக்குநருடன் கலந்து ஆய்வு செய்து இதில்
கூறப்பட்டுள்ள விஷயங்களுக்கு ஆதாரங்கள் இருந்தால், மைய
மதிப்பீடு மையங்களில் சம்பந்தப்பட்ட தேர்வாளர்களுக்கு மாண
வர்களின் நலனை கருத்தில்கொண்டு தாராள மனதுடன் விடைத்
தாள்களை மதிப்பீடு செய்யுமாறு அறிவுரைகள் வழங்கப்படும்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவரவர்களே,
அனைத்துக் கேள்வித் தாள்கள் என்றுக்கூட எடுத்துக் கொள்ள
வேண்டாம், குறிப்பாக, ஒன்லி மேத்தமேட்டிக்ஸ் -- கணக்கு கேள்வி
தாளைப் பொறுத்த வரையில், கணக்குப் பாடத்தில் வராதகேள்வி
என்பதைவிட, அந்தக் கேள்வி கேட்கப்பட்ட முறையைப் பார்த்
தால், டைரக்டாக கேட்கப்படவில்லை, இன்டைரக்டாகக் கேட்
டிருக்கிறார்கள். அப்படி இன்டைரக்டாகக் கேட்கப்பட்ட கார
ணத்தினால், வினாத்தாளைப் பார்த்த மாணவ மாணவியர்கள்
என்ன நிலைமைக்கு ஆளாகிவிட்டார்கள் என்றால் அவர்கள்
மயக்கம் அடித்து விழுந்திருக்கிறார்கள், டீச்சிங் ஸ்டாப்கூட காப்பி
வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல.

"Within one hour after the commencement of the Examination

மாணவர்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடக்
கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமை
தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணத்தால்
கிட்டத்தட்ட 3½ இலட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்
கள். அமைச்சர் அவர்கள் தனது பதிலில் இறுதியாகச் சொல்
கிறபோது உரியத்தக்க நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று
சொல்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் இன்று
தவறு நடந்துவிட்டதன் காரணத்தால் அனைத்து மாணவர்களும்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் ........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

[1985 ஏப்ரல் 10

திரு. ப. பொன்னுரங்கம் : கணக்குப் பாடத்தைப் பொறுத்த வரையில் கிராஃப் என்று ஒன்று இருக்கிறது. கணக்குப் பரீட்சையில் அந்த கிராஃப் பேப்பர் ஒரு ஷிட் தான் கொடுக்கப்படும் அந்த. ஒரு ஷீட்டிலேயே மாணவர்கள் அட்டெண்ட் பண்ணிவிடுவார்கள். ஆனால் ஒரு மணி நேரம் கழித்து அந்தக் கொஸ்டினைத் திருப்பியும் தந்திருக்கிறார்கள். அந்த கிராஃப் பேப்பரை திரும்பவும் தந்து இருக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டதால் இன்னொரு கோடு அதிலே போடமுடியாது.ஏனென்றால் நான் படிக்கும்போது பார்த்திருக்கிறேன். இதனால் மாணவர்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது.

தேர்தல்களைப் பொறுத்தவரையில் மிக நல்ல முறையில் கையாளப்படுகின்றது கர்நாடக மாநிலத்தில். கர்நாடகாவில் கல்வி அமைச்சர் திரு. ரகுபதி அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாக ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். ஜெனரல் சயின்ஸில் பார்ஷியலாக லீக்கேஜ் ஆகிவிட்டதன் காரணத்தால்

> The Education Board Director and the Secretary have been suspended. Re-Examination date wil be announced with one or two days.

அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இவ்வாறு திரு. ரகுபதி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த மாதிரி நம்முடைய சர்க்காரும் தக்க நடவடிக்கையை யார் தவறு செய்திருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்குமா? ஆல் இண்டியா போஸ்ட் கிராஜுவேட் டீச்சர்ஸ் அசோசியேஷன் இதற்கு டைரக்டர்தான் பொறுப்பு, அவருடைய கவனக்குறைவால்தான் இது நடந்திருக்கிறது என்று குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறது என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. எனவே அரசு உரிய நடவடிக்கை எடுப்பதோடு, மாணவர்களுக்கு ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வி கேட்பதுதான் நல்லது. தொடர்ந்து கேள்விகளை கேட்டுக் கொண்டிருந்தால் பதில் சொல்வது கடினம். எனவே ஒரு கேள்விக்கு மேல் கேட்க வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் ரொம்ப விரிவாகவும், விளக்கமாகவும் எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே கவனிக்க வேண்டியது ஒன்றாகும். அவர் கேட்டிருப்பது வினாத்தாள் சம்பந்தப்பட்டது. அந்த வினாத்தாளைத் தயாரித்தவர்கள் அதை ரகசியமாக வைத்திருந்து தேர்வு அன்று அது மாணவர்களுக்குத் தரப்பட்டு அவர்கள் விடை எழுதவேண்டும் என்பதுதான் முக்கியமான ஒன்றாகும். அதற்கு மாறாக அது வெளியிடப்படுமேயானால் அது லீக்கேஜ் என்று சொல்லப்படும். அதுதான் கர்நாடகத்தில் நடந்தது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே செய்தியாகச் சொல்கிறார்கள். ஆனால் இங்கே





நடைபெற்றிருப்பது அப்படிப்பட்டதல்ல. வினாத்தாளிலே கடினமான கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதைச் சில மாணவர்கள் எழுத முடியாமல் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கடினமாக கேள்வி கேட்பது பற்றி ஒரு சிலர் பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள். இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது போன்ற நிலைமைகள் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் நாம் திருத்துகின்ற தேர்வாளர்களைக் கொஞ்சம் தாராள மனதுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்வது வழக்கம். அந்த அடிப்படையில் சென்ரல் வேலுயேஷன் நடக்கின்றபோது அந்த வகையில் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்வார்கள். இதற்கு மேல் நாம் எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை. வேண்டுமானால் அந்த வினாத்தாளைத் தயாரித்தவர்களை இனிமேல் வினாத்தாள் தயாரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளலாமே தவிர நடவடிக்கை எடுக்கின்ற அளவுக்கு ஒன்றும் இல்லை. இதற்கு வேறு யாரையும் பொறுப்பு என்றும் சொல்ல முடியாது. காரணம் இந்த வினாத்தாளை ஏற்கெனவே பார்த்திருக்கவேண்டும் என்றும் எதிர் பார்க்க முடியாது. இயக்குநர் அவர்களும் மற்றவர்களும் பார்த்து அதைத் திருத்துகின்ற அளவுக்குக் கவனத்தைச் செலுத்தி இருக்க வேண்டும் என்று நாம் எதிர் பார்க்கக்கூடாது. ஆகவே அவர்கள் கொடுத்ததை அச்சடித்து மாணவர்களுக்குத் தருகின்ற அளவுக்கு ரகசியத்தைக் காப்பாற்றவேண்டும் என்பதுதான் மிக முக்கியமான ஒன்றாகும்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே பி.ஏ. இங்கிலீஸ் லிட்ரேச்சர் ஆன்சிலரி பேப்பரில் இதேபோன்று கடினமாக கோஸ்டின் கேட்டதால் அனைத்து கல்லூரிகளிலும் அதாவது குயின் மேரிஸ் கல்லூரி பிரிசிடென்சி கல்லூரி ஆகிய அனைத்துக் கல்லூரிகளிலும் தேர்வுத்தாள் திருத்துபவர்களிடம் அட்வைஸ் செய்யப்பட்டதன் காரணத்தால் எலிஜிபிள் கேண்டிடேட்ஸ் நிறையபேர் பாஸ் பண்ணியிருக்கிறார்கள். அதே மாதிரி பாஸ் பண்ண வைக்க முயற்சி செய்யவேண்டும். இது ஒன்று.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்விதான். இருமுறை வாய்ப்பு கொடுத்தாயிற்று. சட்டசபையிலே, பாஸ் பண்ண வைக்கக்கூடிய அளவுக்குக்கூட நாம் பேச வேண்டுமா ? நன்கு படித்தவர்கள் பாஸ் பண்ணுவார்கள், அதையெல்லாம் திருத்துபவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : கிராஜுவேட்ஸ்—போஸ்ட கிராஜுவேட்ஸ் தலைவர்கூட என்ன சொல்லியிருக்கிறார் ? 15% அதிகமாகப் போடலாம் என்று சொல்லியிருக்கிறார். முழுக்க எழுதினால்தான் 15% நியாயம். அவன்தான் மயக்கம் அடைந்து

விழுந்து விட்டானே, வீட்டுக்குப் போய் விட்டானே, வீட்டுக்குப் போய் விட்டாரே, எப்படி எழுதுவார்கள்? முடியாத நிலைமை இருந்திருக்கிறது. ஆகவே, பொறுத்தவரையில், அனைத்து மாணவர்களும் பாஸ் கள் என்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்; நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மாணவி எழுதுவே கணக்கைப் ஆனார்

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மயக்கம் அடைந்தார் என்பது எங்காவது ஓரிரு இடங்களில் நடைபெற்றிருக்கக்கூடும். அது வழக்கமாக எல்லா தேர்வுகளிலும் நடைபெறக்கூடிய ஒன்று. இப்பொழுது இருக்கிற நிலைமையிலே குறிப்பிட்ட கேள்விகளைப் படித்துக் கொண்டு வருவது, அவை வந்தால் பாஸ் செய்து கொள்ளலாம் என்கிற முடிவுக்கு வந்து குறைந்தபட்சமாகப் படித்துக் கொண்டு வருகிற மாணவர்கள். தாங்கள் படித்த கேள்விகள் வரவில்லையென்றால், மழக்கம் போடுவது அவ்வப்போது நடைபெறக்கூடிய ஒன்றுதான். ஆகவே, நாம் அதை வைத்துக் கொண்டு இதைப் பார்ப்பது என்பது அவ்வளவு சரியல்ல. ஆனால், பொதுவான முறையில் நாம், மாணவர்கள் படித்து நல்லமுறையில் பரீட்சை எழுத வேண்டு மென்ற அடிப்படையிலே நோக்க வேண்டுமே தவிர, படிக்காத மாணவர்களுக்கு அனுகூலமாகப் பேசுவதைப் போல இது வந்து விடக்கூடாது. அந்த அடிப்படையிலே படித்திருக்கின்ற மாண வர்கள் எதையாவது எழுதியிருப்பார்கள். அதை வைத்துக் கொண்டு தேர்வாளர்கள் அவர்களுடைய அந்தத் திறமைக்கேற்பக் கொஞ்சம் தாராளமான மனதுடன் அந்த மார்க்குகளைப் போடு வார்கள். அப்படியில்லையென்றால், மேற்கொண்டு அதற்கு நாம் என்ன செய்யவேண்டுமோ அதை இந்த அரசு செய்யும்.

**(ஆ) 'அகில இந்திய ஹாண்லூம் ஹவுஸ் கைத்தறி ஏற்றுமதி ரகங்களை தனியார்களிடமிருந்து வாங்குவது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரா. தாமரைக் கனி, ச. துரைசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்பு மிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆல் இந்தியா ஹாண்ட்லூம் ஹவுஸ் என்ற மத்திய அரசு நிறுவனம் 40/40 சர்டிங் ஏற்றுமதி ரகத்தை தமிழ் நாட் டில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஆர்டர் கொடுக் காமல் தனியாருக்கு ஆர்டர் கொடுப்பதால் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக உள்ளவர்கள் வேலை இல்லாமல் தனியாரிடம் நெய் வதற்குச் செல்வதால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்



படாமல் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆல் இந்தியா ஹேண்ட்லூம் ஹவுஸ்" மத்திய அரசினது அமைப்பாகும். பொதுவாக ஹேண்ட்லூம் மற்றும் ஹேண்டி கிராப்ட்ஸ் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரிடை யாக ஏற்றுமதி ஆர்டர்கள் கொடுப்பது இல்லை. இந்த நிறு வனத்தின், ஏற்றுமதக்கான துணித் தேவைகளைப் பெரும்பாலும் தனியார் துறையைச் சார்ந்தவர்களிடமிருந்து பெறப்படுகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஏற்றுமதி இரக உற்பத்திக்கு, கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மேலும், ஏற்றுபதிக்கான கைத்தறி துண உற்பத்த ஆர்டர்களை மத்திய அரசு நிறுவனங்களை ஹேண்டி கிராப்ட்ஸ் மற்றும் ஹேண்டலூம் ஏற்றுமதி நிறுவனங்கள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத் தின் மூலம் செய்யுமாறு மத்திய அமைச்சரிடம் கேட்டுக் கொள் ளப்பட்டுள்ளது. அவரிடமிருந்து சாதகமான பதில் எதிர் பார்க் கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆல் இந்தியா ஹேண்ட்லூம் ஹவுஸ் என்பது மத்திய அரசு நிறு வனம். ஆனால், அவர்கள் தனியாருக்கு ஏன் கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. கைத்தறி துணிதான் வேண்டுமென்று வெளிநாட்டுக்காரர்கள் கேட்கிறார்கள். ஆனால், சென்னையிலே உள்ள ஆல் இந்தியா ஹேண்ட்லூம் ஹவுஸைச் சேர்ந்தவர்கள், தனியார்களிடம் அந்த இரகத்தை நெய்வதற்குக் கொடுத்து, கைத்தறி என்று விசைத்தறியில் நெய்து கொடுக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, டெல்லியிலே உள்ள டெக்ஸ்டைல்ஸ் கமிட்டி யிடம் போலிச் சான்றிதழ்—விசைத் தறியைக் கைத்தறி என்று போலிச் சான்றிதழ் வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வ தோடு மட்டுமில்லாமல், நாங்கள் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்திருக்கிறோம் என்று சொல்லி அவர்கள் மானியமும் வாங்கு கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் போக்குகிற அளவில், இந்தியா விலிருந்து ரூ. 450 கோடிக்குத் துணி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி ஆகிறது. இந்த ஆர்டர்கள் எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருகிற அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அமைச் சருக்குத் கடிதம் எழுதுவதோடு மட்டுமல்லாமல், நம்முடைய பாரதப் பிரதமர் இராஜிவ் காந்தி அவர்களிடம் மேற்படி இலாகா தவறு செய்வதைப் புகார் கூறுவதோடு, நமது தமிழ்நாட்டிலுள்ள அதிகாரிகள் நேரடியாக மத்திய கைத்தறித் துறை அமைச்சரோடு பேசுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, 1983-84-ல் அனைத்திந்திய அளவில் ஏற்றுமதியான கைத்தறியின் அளவு ஏறக்குறைய ரூபாய் 350 கோடியாகும். அதிலே தமிழ் நாட்டிலிருந்து ஏறக்குறைய 120 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்று மதியாகி இருக்கிறது. இந்த ஆண்டு அனைத்திந்திய அளவில் டார்கெட் 1985-86-ம் ஆண்டிற்கு 400 கோடி ரூபாய். அதில் தமிழ்நாட்டிலிருந்து சுமார் 150 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்று மதியாகும் என்று கருதப்படுகிறது. ஹாண்ட்லூம் ஹவுஸ் அதைப் போல ஹாண்டி கிராப்ட் எக்ஸ்போர்ட் கார்ப்ரேஷன் இவைகள் எல்லாம் மத்திய அரசின் நிறுவனங்கள் ஆகும். இவைகள் தமிழ் நாட்டிலிருந்து தனியார் நெசவாளர்கள் சங்கங்களிலிருந்து அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகளைப்பெற்று பல்வேறு நாடுகளுக்கும் அவர்களிடத்தில் இருக்கிற அமைப்புகளின் மூலமாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். கோவாப்டெக்ஸ் இண்டர் நேஷனல் என்ற அமைப்பு 1975-ஆம் ஆண்டில் துவங்கி சிங்கப்பூரில் அதனுடைய பிரான்ச் இருக்கிறது. அங்கேயிருந்து அது ஆர்டரை அனுப்பிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஒரு கோடி ரூபாய் அளவில் ஏற்றுமதி செய்திருக்கிறது. இந்த ஆண்டு 1½ கோடி ரூபாய் அளவில் ஏற்றுமதி செய்யவிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் ஏற்றுமதிக்கு உற்பத்தி செய்கிற துணிகளை வாங்கி கோவாப்டெக்ஸ் நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது. தனியார் சங்கங்களிலிருந்து மத்திய அரசு நிறுவனங்கள் வாங்கி ஏற்றுமதி செய்கிறது. மத்திய அரசினுடைய நிறுவனம் கோவாப் டெக்ஸ் மூலமாக நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெற்றும் அனுப்ப வேண்டுமென்பது தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையாகும். அதை வலியுறுத்தித்தான் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். நம்முடைய கூட்டுறவுக் சங்கங்களிலிருந்து உற்பத்தியாகிற துணிகளை கோவாப்டெக்ஸ் பெற்று கோவாப்டெக்சிலிருந்து மத்திய அரசு நிறுவனம் பெற்று அவர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள் கேட்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நம்முடைய அமைச்சர் அவர்களும் அங்கே சென்று வலியுறுத்தலாம். அது நல்ல யோசனை தான். ஏற்கனவே கடிதம் எழுதப்பட்டு பதிலும் எதிர்பார்க்கப்படுகிறது. கைத் தறிக்குப் பதிலாக விசைத்தறி பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச் சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதுகுறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

திரு.சா.துரைசாமி: தலைவர் அவர்களே, தனியார்கள் ஏற்றுமதி செய்வது அதிக அளவில இருப்பதால் கூட்டுறவுத் துறையில் உற் பத்தியாகிற லுங்கிகளை ஒரு 50 சதவீதம் ஏற்றுமதி செய்தால் தான் அவர்களுக்கு உரிமை வழங்கலாம் என்ற முறையைக் கொண்டு வந்தால் கைத்தறித் துணிகள் எல்லாம் தேங்காமல் இருக்கும். என்வே தனியார்கள் ஏற்றுமதி செய்கிற அந்தத் திட்



டத்திலே கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகிற துணிகளை ஓரளவிற்கு ஏதாவது ஒரு சதவீதம் நிர்ணயம் செய்து ஏற்றுமதி செய்ய அரசு வகை செய்யுமா? அதே நேரத்தில் பிளீடிங் மெட்ராஸ் என்ற வண்ணம் மாறும் துணி அமைப்பை தனியார்களுக்கு வழங்கி யிருக்கிறார்கள். அதை கோவாப்டெக்ஸ் சொசைடிக்கு வழங்கி அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ்.திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி ஒன்றும் கேட்கவில்லை. இருந்தாலும் அந்நிய செலாவணியை மனதிலே கொண்டு இந்தியா வில் உற்பத்தியாகிற பல்வெறு பொருள்கள் எப்படி வெளிநாடு களுக்கு ஏற்றுமதியாகிறதோ அதைப்போலத்தான் கைத்தறியும். கைத்தறியைப் பொறுத்த வரையில் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக அதேபோல தமிழ்நாடு அரசு நிறுவனமான கோவாப்டெக்ஸ் இண்டர் நேஷனல் மூலமாக, அதேபோல மத்திய அரசு நிறுவன மான ஹாண்ட்லூம் ஹவுஸ் மூலமாக இப்படி பல்வேறு அமைப்பு கள் மூலமாக அந்நிய செலாவணியைப் பெறுவதற்காக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. அதை வரையறைப்படுத்துவது என்பது அது மத்திய அரசின் சட்டத்திற்கு உட்பட்டு வருகிற ஒன்றாகும். அதை நாம் ஒன்றும் கட்டாயப்படுத்த முடியாது.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

வரி விதிப்புத் திருத்த (காலவரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்.

"1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி விதிப்புத் திருத்த (கால வரையறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இந்தத் திருத் தத்தை அமைச்சர் அவர்கள் எதற்காக கொண்டு வருகிறார் என்றால் வரி விதிப்புச் சட்டத்தில் பலர் தவறுகள் செய்தாலும் அந்தத் தவறுகளை கண்டுபிடித்து, குற்றவாளிகளை பிடித்து தண்டனை வழங்கவும் அல்லது வரிவிதிப்புச் சட்டத்தின் கீழே வரிகளை மேலும் வசூலிக்கவும் இந்த லிமிடேஷன் அதாவது கால வரையறை கொடுத்திருப்பதால் இயலவில்லை. எனவே எல்லா சட்டங்களிலும், அதேபோல் கிரிமினல் புரோசிஜர் கோட் சட்டத் திலே செய்யப்படுகிற குற்றங்களுக்கு இந்தக் காலவரையரைக் குள்ளே நீதி விசாரணை முடிய வேண்டும். அல்லது விசாரணை முடிய வேண்டும் என்று டைம் லிமிடேஷன் இருந்தாலும் கூட இது போன்ற சட்டங்களில், உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் குதிரைப் பந்தய வரி, கேளிக்கை வரி, பொது விற்பனை வரி

அதாவது சேல்ஸ்-டேக்ஸ், ஓட்டல் விடுதிகளில் தங்குகிறவர் களுடைய ஆடம்பரத்திற்கு லக்சூரியசிற்கு போடப்படுகிற வரி களில் அவர்கள் தருகிற வரிகளை வசூலிப்பதில் டைம் லிமிடேஷன் இருப்பதால் அவர்கள் தப்பித்து விடுகிறார்கள். அதனால்

(பிற்பகல் 10-50)

லிமிடேஷன் இதற்குப் பொருந்தாது என்று சொல்லி இந்தத் திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வருவ தாகச் சொல்லியிருக்கிறார்கள். மேல் போக்காகப் பார்த்தால் இது நியாயமானது, தேவையானது என்று தோன்றும். வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு, வரவேண்டிய வரியைப் பெறுவதற்கு இது தேவை என்று தோன்றக் கூடும். ஆனால் இதிலே ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். இந்தச் சட்டம் அவசியமற்றது என்பதை நான் சில ஆதாரங்களோடு தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே கிரிமினல் ப்ரொசிஜர் கொடு-செக்ஷன் 473 தெளிவாகச் சொல் கிறது.

"....any C urt may tak: c gniz ince of an offence after the expity of th: period of limitation if it is satisfied on the facts and in the circumtances (f the case, the delay of the case has been properly explained or tha it i, nec.ssary so to do in the interests of justice".

சில வழக்குகளில் இந்தமாதிரி காலதாமதம் ஆனாலும், சிரமம் ஏற்பட்டாலும் கூட இருக்கின்ற சூழ்நிலைகளை எடுத்துச் சொல்லி, இருக்கின்ற தன்மைகளை எடுத்துச் சொல்லி நீதியின் அடிப்படையில் லிமிட்டேஷன் என்ற பிரச்னையை இதிலே மையமாக வைக்கக்கூடாது. காலம் கடந்து விட்டாலும் கூட இந்த வழக்கு நடத்தப்பட வேண்டும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோர்ட்டுக்குத் தெரிவித்து, உரிய நடவடிக்கை எடுக்க செக்ஷன் 473-ல் வழிவகை இருக் கிறது. எனவே இந்த மாதிரி வரி விதிப்புச் சட்டங்களுக்கு லிமிட்டேஷன் இருக்கக்கூடாது, எப்போது வேண்டுமானாலும் விசாரிக்கலாம், எப்போது வேண்டுமானாலும் சோதனை போடலாம், எப்போது வேண்டுமானாலும் கைது செய்யலாம், எப்போது வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம் என்ற நிலைமைக்குப் போனால் குதிரைப்பந்தயம் நடத்துகிறவர்களை பார்த்து 'நீ கொடுக்க வேண்டியதை முறையாக கொடுக்கவில்லை என்றால் இந்தச் சட்டம் பாயும்' என்று மிரட்டலாம். ஓட்டல் முதலாளியைப் பார்த்து, தேவையானதைக் கொடுக்க மறுத்தால் அவர் மீதும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் (குறுக்கீடு). ஏற்கெனவே சேல்ஸ்டாக்ஸ் இருக்கிறது. விற்பனை வரி சட்டத் திலேகூட பெரிய அபாயம் இருக்கிறது. அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள். அதற்கு மேலும் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து யார் மீதும் எந்த நேரத்திலும் நட வடிக்கை எடுக்கலாம் என்ற ஒரு அபாயகரமான கத்தி தலைக்கு மேலே தொங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தக்கூடாது. இந்தச்



சட்டத்தினால் லிமிட்டேஷன் தேவையில்லை, எந்த நேரத்திலும் எப்போது வேண்டுமானாலும் வழக்குப் போடலாம் என்ற அபாயம் ஏற்படுகிறது.

தலைவரவர்களே, நீங்கள் கிரிமினல் வழக்கிலே சிறந்தவர் என்பதை நான் அறிவேன். இந்தச் சட்டச் சிக்கலை மாற்ற வேண்டும் என்பதற்காக லா கமிஷன் ஜாயிண்ட் கமிட்டி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. வழக்குகளை விசாரிக்கும்பொழுது அபராதம் விதிப்பது போன்று ஓராண்டுக்குள் முடியக்கூடிய தன்மையிலான வழக்குகளாக இருந்தால் ஓராண்டுக்குள் முடிக்க வேண்டும். இரண்டு ஆண்டுக்குள் முடிக்கப்பட வேண்டிய வழக்கு களாக இருந்தால் அந்த வழக்குகளை இரண்டாண்டுக்குள் முடிக்க வேண்டும். மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டிய வழக்கு களாக இருந்தால் மூன்று ஆண்டுக்களுக்குள்முடிக்க வேண்டும் என்று கிரிமினல் ப்ரொசிஜர் கோடு டைம் லிமிட்டேஷன் சொல்லியிருக் கிறது. அதிலே கருத்து சொல்லும்போது லா கமிஷன் ஜாயிண்ட் கமிட்டி சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. லிமிட்டேஷன் இருந்தால்தான் சீக்கிரம் விசாரணை முடித்து, கேஸ் முடிவடையும் புலன் விசாரணை துரிதமாக நடைபெற்று, கேஸ் செட்டில் ஆகும். லிமிட்டேஷன் இருந்தால்தான் சாட்சிகளை முறையாக விசாரிக்க முடியும். காலம் கடந்தால் சாட்சியம் கிடைக்காமல் போய்விடும் என்று சொல்லிவிட்டு, கடைசியில் ஒன்றைச் சொல்கிறார்கள்.

....'Offenders should not be kept under apprehension'

குற்றம் இழைத்து விட்டோமோ என்ற அச்சத்தில் குற்றக் சாட்டுக்கு உள்ளாக்கப்படுகிற ஒருவர் நீண்டகாலமாக எண்ணி எண்ணி வேதனைப்படுவார். எந்த நேரத்திலும் நம்மீது வழக்கு போட்டுவிடுவார்களோ, போலீசார் கைது செய்வார்களோ, ரெய்டு நடக்குமோ என்ற அச்சத்திலே வேதனைப்படுவார். அவருக்கு ஒரு மெண்டல் அகனி ஏற்படுகிறது. ஆகவே தான் லிமிட்டேஷன் அவசியம் இருக்க வேண்டும் என்று சொல்லி ஜாயிண்ட் கமிட்டி கொடுத்திருக்கிறது. தயவுசெய்து நேரத்தை எடுத்துக் கொள்வதாகக் கருதக்கூடாது. இது ஒரு முக்கியமான சட்டம் என்பதால் ஒரு நிமிஷத்திலே முடித்துவிடுகிறேன். இன் னொன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஜெயப்பிரகாஷ் கொலை வழக்கு கூட டைம் லிமிட்டேஷனிலே இருக்கின்ற காரணத்தால, விரைவாக விசாரித்து தீர்ப்பு வழங்கப்பட்டு இருக் கிறது. அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம என்றால் சீக்கிரம் முடிந்து இருக்காது. அதைப்போல, இதுமாதிரி வரிச் சட்டத்திலே குற்றங்கள் செய்யக்கூடியவர்களை காலாகாலத்திலே விசாரித்து காலாகாலத்திலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற காரியத்தை நீங்கள் செய்ய வேண்டும். இல்லையென்றால், அதிகார துஷ்பிரயோகத்திற்கு இது வழி வகுக்கும்.

தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய காரணம் ஒரு முக்கியமான காரணம், வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக என்பது. நான் கடுமையாக குற்றம் சுமத்த விரும்புகிறேன். இந்த டைம் லிமிட்டேஷனை எடுத்து விட்டு, எப்போது வேண்டுமானாலும் நீங்கள் வழக்குப் போடலாம் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால், இது அதிகார துஷ்பிரயோகத்திற்கு பயன்படும். எதிர்க் கட்சிக்காரர்களை மிரட்டுவதற்கு பயன்படும். ஆளும் கட்சிக் காரர்கள் சலுகைகள் பெறுவதற்கு பயன்படும். அதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறாது. உதாரணமாக என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் இதிலே கட்டுப்படுத்தப்படுகிறது. அதற்கு டைம் லிமிட்டேஷன் கிடையாது. என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் எப்போது வேண்டுமானாலும் அவர்கள் பெறுவதற்காக வழக்கு போடலாம். ஆனால் இதிலே அதிகார துஷ்பிரயோகம் நடைபெறுவதற்கு உதாரணம் என்ன சொல்லவிரும்புகிறேன் என்றால், காதல் ஓவியம் என்று ஒரு படம், பாரதிராஜா எடுத்தப் படம். இது தேசிய ஒருமைப்பாட்டையும், மதுவிலக்கு போன்ற கொள்கைகளையும் வலியுறுத்துகின்ற படம் என்று சொல்லி, அதற்கு சிறப்புப் பரிசு கொடுத்தார்கள். ஆனால் அது பொயிலர் ஆன படம். அதிலே கருத்தே கிடையாது. ஒரு சாதாரண காதல் கதை. இன்னும் சொல்லப்போனால், 1 லட்சம் ரூபாய் அதற்கு அரசாங்கம் பரிசாகக் கொடுத்து இருக்கிறது. உங்களுக்குத் தெரியும். இன்னொரு படம். மூன்று முகங்கள். சத்யா மூவிஸ் படம் சத்யா மூவிஸ் படம் என்பதற்காகவே, அதற்கு 20 ஆயிரம் ரூபாய் சிறப்புப் பரிசு கொடுத்தார்கள். இதை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் இதுபோல திருவை அண்ணாமலை அவர்கள், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர். அவர்கள் எடுத்த படத்திற்கு டாக்ஸ் கன்சசன். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டுவிடக் கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித்தான் சட்ட முன்வடிவை அறிமுகப் படுத்தும்போது, வாதங்கள் செய்ய வேண்டுமா என்று தங்களிடம் இருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன். தேவையில்லாத விவாதங்களைக் கொண்டு வந்து, பேசுவது நல்லதல்ல. சாதாரணமாக சட்டத்தை அறிமுகம் செய்கிறபோது, கான்ஸ்டிடியூசனலாகத்தான், அதிலே ஏதாவது லீகல் பிராம்ளம்ஸ் இருந்தால், பேசலாமே தவிர, பல சம்பவங்களை எல்லாம் எடுத்து, இதை முழு விவாதமாக ஆக்குகிறாரே என்பது நியாயந்தானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக்கு வரும்போது விரிவாகப் பேசலாம்.





திரு. அ. ரகுமான்கான்: இந்தச் சட்டம் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கூட சட்டப் பிரச்சினையைச் சொல்லி, இதை ஏன் எதிர்க்கிறோம் என்ற காரணத்தைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். ஏற்கெனவே கிரிமினல் புரசீஜர் கோடிலே இப்படிப்பட்ட வழக்குகள் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிரிமினல் புரசீஜர் கோடில் காலதாமதத்திற்கான காரணத்தை நிரூபிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை அவர்கள் படிக்கிறபோது கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அதை மட்டும் பேசட்டும். எங்கேயோ படம் எடுத்தது, பணம் கொடுத்தது, அதை எல்லாம் பேசுவது எப்படி நியாயம்? H.w are they relev nt? ஒரு அனுபவம் உள்ள உறுப்பினர். குறைந்த பட்சம் சட்டமுன்வடிவில் எது ரெலவன்ட், எது தேவையானது என்பதைக்கூட தெரிந்துகொள்ளாமல் இருக்கிறாரே என்பதைத் தான் நான் கேட்கிறேன்.

MR SPEAKER: Let it not be a general discu sion. Hon. Member should confine his speech to this Bill.

திரு. அ. ரகுமான்கான் : சட்டப் பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது என்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்வது வரவேற்கக் கூடியதுதான். ஆனால் நான் உங்கள் மூலமாக கேட்க விரும்புகிறேன். நான் படித்து விட்டு முறையாகத் தான் இந்த விவாதத்தை கிளப்புகிறேன். டைம் லிமிட்டேஷன் என்று சொல்வது, அட்ஜூடிகேசனாக இருந்தாலும், ஜட்ஜ் மென்டாக இருந்தாலும், கேஸ் அப்பீலாக இருந்தாலும், பைல் பண்ணுவதாக இருந்தாலும், இன்வெஸ்டிகேசனாக இருந்தாலும், அதற்கு ஒரு லிமிட்டேசன் இருக்கிறது. லிமிட்டேசன் ஆக்ட் என்றும் இருக்கிறது. கிரிமினல் புரசிஜர் கோடிலே, லிமிட்டேசன் இருக்கிறது. ஆனால் இந்த வரிகள் சம்பந்தமாக சில குற்றங்கள் நிகழ்கிறபோது, அவைகளுக்கு இந்த லிமிட்டேசன் தேவையில்லை என்று சொல்கிறார்கள். மத்திய சர்க்காரும் இதைப்போலவே சேல்ஸ் டாக்ஸுக்கு இது தேவையில்லை என்று போட்டு இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றி செய்வதாக சொல்லப்படுகிறது. மத்திய அரசாங்கம் செய்கிற எல்லாக் காரியத்தையும் இங்கே செய்வதில்லை. இங்கே இந்த லிமிட்டேசன் என்று சொல்வதிலே அபாயம் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர, மற்றபடி லிமிட்டேசன் ஒவ்வொன்றுக்கும் இருப்பதுதான் முறை. அப்போது தான் விரைவாக இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும். வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு உங்கள் நிர்வாக இயந்திரத்தை

முடுக்கி விடுங்கள். அதற்குப் பதிலாக லிமிட்டேசன் என்ற வாசகத்தை பெற்றுக்கொண்டு, எதிர்க்கட்சிகாரர்கள் மீதும், மற்ற வர்கள் மீதும், அதிகார துஷ்பிரயோகம் இருக்கக் கூடாது என்ப தற்காக, லிமிட்டேசன் கூடாது என்று கொண்டு வருகிற இந்த திருத்தத்தை எதிர்த்து,

purely on technical grounds and as per law, I oppose the introduc-tion of this Bill.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னதுபோல் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வந்து, சட்டம் இயற்றி, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிக் காரர்கள் மீதோ அல்லது மற்றவர்கள் மீதோ அதிகார துஷ்பிரயோகம் செய்வதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப் படவில்லை என்பதை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 11–00)

இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம், அரசு வரி வசூல் செய்வதற்கு செல்லுகிற நேரத்தில், பல வியாபாரிகள் பல குற்றங்களை புரிகிறார்கள் என்கிற நிலலையைக் கண்டுபிடித்து, ஆய்வு செய்து பிறகு முறையாக நீதிமன்றம் செல்லுகிற நேரத்தில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் அவர்கள் அந்தச் சட்டத் திலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்ற அடிப்படையின் காரணமாக, முறையாக, நியாயமாக இந்த அரசுக்கு வரவேண்டிய வருவாய் வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்ட முன் வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அந்த வகையிலே இங்கே 468 என்ற பிரிவைச் சொல்லுகிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் பிரிவு 473க்கு சென்று, ஏன் அவர்களுக்கு அந்தக் கால நீட்டிப்பைத் தரக்கூடாது என்று கேட் டார்கள். அது மேலும் காலதாமதத்தை ஏற்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே கூறி, இந்தச் சட்ட முன்வடிவினை நாம் மட்டும் கொண்டு வந்து விடவில்லை, மத்திய அரசு 1974ஆம் ஆண்டே கொண்டு வந்திருக்கிறது. நமக்கு முன்னோடியாக மகாராஷ்டிர அரசும் இந்தச் சட்டத்தை 1976ஆம் ஆண்டில் கொண்டு வந்தி ருக்கிறது. நாம் கூட இந்த சட்ட முன்வடிவை கடந்த 7வது சட்ட மன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வந்து, 1984லே விவாதித்து மேலவைக்கு அனுப்பினோம். அங்கிருந்து அது திரும்பி வராத நிலையிலேயே சட்ட மன்றம் கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு அது காலாவதியாகி இப்போது மீண்டும் கொண்டு வந்திருக் கிறோம், என்றும் இது மிக மிக நல்ல நோக்கத்திற்காக கொண்டு வரப்பட்ட சட்டம். என்றும் கூறிக்கொள்கிறேன்.





இன்னொரு தகவலை வேண்டுமானால் சொல்லுகிறேன். இப்போது நடைமுறையில் இருக்கிற சட்டத்தின் காரணமாக இங்கே கடந்த 5 ஆண்டுகளில், வணிக வரி குற்றவியல் நீதிமன்றங் களில் தொடரப்பட்ட வழக்குகளில் 370 தான் வெற்றி பெற்றி ருக்கின்றன. ஆனால் வணிக வரி குற்றவியல் நீதிமன்றங்களில் காலதாமதத்தின் காரணமாக, வழக்கு தொடர முடியாமல் போய் விட்ட வழக்குகள் 5,318. அவைகளில் நாம் ஒன்றும் செய்ய முடிய வில்லை. அதற்காகத்தான, நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை அவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி: ''1985ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி விதிப்புத் திருத்தச் (காலவரை யறை பொருந்தாது என்பது) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி :** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 6. வரவு–செலவுத் திட்டம் 1985-86 வாக்கெடுப்பு

### கோரிக்கை எண். 17—கல்வி (தொடர்ச்சி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 11 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எதிர்க் கட்சி தலைவரையும் தங்களையும் சேர்த்து 13 நபர்கள் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு நேரம் தேவைப்படும்?

**மாண்புகு திரு. செ. அரங்கநாயகம் :** ½ மணி நேரம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியானால், ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடத்திலிருந்து 10 நிமிடங்களுக்குள் முடித்துக் கொண்டால்தான் நேரம் சரியாக வரும். அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. தீர்த்தராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்தி ருக்கிற கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பை அளித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்விக்கு கண் கொடுத்த பெரும் தலைவர் காமராசர் போட்ட திட்டங்களின் மூலம் பட்டி தொட்டிகளில் எல்லாம் கல்விக் கூடங்களை திறந்து வைத்து, இந்திய அளவிலே தமிழகம் இரண்டாவது இடத்தை பெறுகின்ற சிறப்பில் இருத்தி கல்வியை மேம்படுத்தியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. அந்த வழியிலே இந்த ஆண்டு கல்விக்காக ஏறத்தாழ 468 கோடி ரூபாயை ஒதுக்கி ஒரு சிறப்பு கொடுத்தமைக்கு முதலிலே பாராட்டு தலை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நமது பாரதப் பிரதமர் இளம் சிங்கம் ராஜீவ் காந்தி அவர்கள் பதவிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே கல்விக்கு முதலிடம் கொடுத்து, இந்தக் கல்வியை சீரமைக்கிற வகையில், கல்வித் திட்டத்தை மாற்றி அமைப்போம் என்கிற ஒரு உறுதியைக் கொடுத்து, அதிலும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு பெரிதும் பெருமிதம் அடைகிறேன். அந்த திட்டத்திற்கு அவர்களுடைய ஆக்கத்திற்கும், ஊக்கத்திற்கும் நமது தமிழக அரசு உறுதுணையாக நின்று கல்வியை மேம்படுத்த முன் வரவேண்டும் என்று இந்தச் சந்தர்பத்திலே நான் எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

நமது மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் சென்னையிலே கடைசியாக கடற்கரை கூட்டத்தில் பேசுகிற நேரத்தில், எந்த நல்ல ஆட்சி வந்தாலும் எந்த நல்ல திட்டங்களைப் போட்டாலும் அவைகள் மக்களுக்கு சரியாகப் போய் சேருவதில்லை. காரணம் மக்களிடம் விழிப்புணர்ச்சி கிடையாது என்று எடுத்துரைத்தார்கள். அந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கல்வி ஓரளவு உதவி செய்யும் என்பதை உணர்ந்து கல்வியை மேம்படுத்த வேண்டும் என்று இந்த நேரத் திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில் இங்கே இருக்கின்ற சில குறைபாடுகளையும் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்றுள்ள கல்வி அமைப்பு என்பது வசதி படைத்தவர்களுக்கு என்று இருந்து கொண்டிருக் கிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது. இன்று உயர்தர கல்விகள், டான்போஸ்கோ, சர்ச்பார்க் போன்றவற்றில் வசதி படைத்தவர்கள் தான் படித்து வருகின்றார்கள். வசதி படைத்த மாணவர்களுக்குத்தான் உயர்தர கல்வி கிடைக்கிறதே தவிர சாதாரண கிராமப் பகுதிகளில் உள்ள பிள்ளைகளுக்கு அந்தக் கல்விகள் கிடைப்பதற்கு வாய்ப்புகள் நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. அங்கீகாரம் அளிக்கும் முறையிலே ஒரு வியா பாரத்தை ஆரம்பித்து இருக்கிறீர்கள். தனியார் கல்லூரிகளுக்கு அங் கீகாரம் கொடுத்ததன் காரணமாக இன்று கல்விக் கூடங்கள் வியா





பார ஸ்தலமாக மாறிக்கொண்டு வருவது அனைவரும் அறிந்ததே. அரசாங்கத்தால் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் தனியாருக்கு தரப் படுகிறது. ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் அரசினுடைய விதி முறைப்படி தேர்வு செய்ய வேண்டும் என்று இருந்தும் அந்த முறை கையாளப்படுவதில்லை என்பது அனைவரும் அறிந்ததே. அங்கே வியாபாரம் பேசிக்கொண்டே சீட்டுகள் விற்பனை ஆகும் நிலை இருக்கிறது. பாலிடெக்னிக்கிலும், மற்ற என்ஜினியரிங் கல்லூரி யிலும் இந்தநிலை இருந்து கொண்டிருக்கிறது. நாவலர் அவர்கள் பட்ஜெட் விவாதத்தின்மீது உரையாற்றுகின்ற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே தொழில் துவங்குவதற்கு எவ் வளவு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற குறிப்பைப் படித்தார். எத்தனை தொழில்கள் துவங்கப்பட்டு இருக்கின்றன என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை. அதைப் போலவே இங்கு எவ்வளவு கல்விச் சாலைகளை திறந்திருக்கிறோம் எவ்வளவு பேர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் எவ்வளவு பேர்கள் உயர்தர கல்வி படிக்க மனு செய்திருக்கிறார்கள் என்ற கணக்கை அரசு ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுத் திருந்தால் இன்று அந்தச் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. தனியார் துறையிலே அந்த கல்வி படிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தியுள்ள நேரத்திலே, அரசு தானே முன்வந்து அந்தக் கல்விச் சாலைகளை உருவாக்கியிருக்கக் கூடாதா என்று கேடக விரும்புகிறேன். அப்படி கொடுக்கப்பட்ட தனியார்கல்விச் சாலைகள் எந்தமுறையில் செயல் படுகின்றன என்று பார்க்கவேண்டும். அவர்கள் அங்கீகாரம் பெறுவதற்கு அலைந்து திரிந்து அவற்றை பெறுகிறார்கள். அங் கீகாரம் பெற்றதற்கு பின்னர் அந்தக் கல்விச் சாலைகள் எந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும். ஈரோடு, சேலம் போன்ற நகரங்களில் ஒரு நகரத்தில் 7, 8 கல்லூரிகள் என்றளவுக்கு இருந்து கொண்டிருக் கிறது; தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு அரசினர் கல்லூரிகள் இருக்கின்றன. ஒரு பாலிடெக்னிக் இருக்கிறது. ஒரு ஐ. ஐ. டி. இருக்கிறது. மாவட்டம் முழுவதும் உள்ள அரசுத் துறையைச் சார்ந்த அந்த கல்வி நிறுவனங்களில் மதிப்பு எண்கள் விகிதாச் சாரப்படி தேர்வு செய்கின்ற நேரத்தில் அங்கு படிக்கின்ற பிள்ளை களுக்கு இடம் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விடு கிறது. ஒன்றிரண்டு பேர்கள் பணம் கொடுத்து அந்த இடத்தை தனியார் துறையாக இருந்தால் பெறமுடிகிறது இல்லையென்றால் பெறமுடியாது. இப்படி நாளுக்கு நாள் பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்று மாவட்ட வளர்ச்சிக் கழகம் எல்லாம் வைத்து பல திட்டங்களைச் செயல்படுத்தி சாலைகள், பாலங்கள் போன்ற சிறு சிறு வேலைகள்தான் செய்யப் படுகின்றன. அவை மாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்வதாக இல்லை. கல்வியைப் பொறுத்த வரையில், பொருளா தாரமும் கல்வியும் ஒன்றோடொன்று பின்னி பிணைக்கப்பட்டு

இருக்கின்றன. பொருளாதாரத்தை மேம்படுத்தினால், கல்வி மேம்பாடு அடையும். உயர்தர கல்வி படித்தவர்கள், தொழில் துறை போன்றவற்றில் மேம்பாடு அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்புகளை மாணவர்கள் இழக்கின்ற காரணத்தினால், மாவட்டத்திலே தவறான சூழ்நிலை உருவாக்கப்பட்டு அவர்கள் வேறு திசைகளில் சென்று கொண்டுள்ள நிலைகள் எல்லாம் இருக்கிறது. அந்த நிலைகள் மாறவேண்டும். பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் மாவட்ட வாரியாக உயர் கல்விக்கு ஒதுக்கீடுகள் இருந்ததைப்போல் மீண்டும் அந்த நிலையை நீங்கள் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கொண்டுவர இயலவில்லை என்றாலும்கூட, அந்த மாவட்டத்திலிருந்து பாடம் படிக்க வருகின்ற மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட மதிப்பு எண்களைக் கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும். சத்துணவுக்கூடங்களை எடுத்துக்கொண்டால் அவை கல்விக்கூடங்களோடு இணைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கும், சத்துணவு அமைப்பாளர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் ஆய்வு செய்ய வருகின்ற அதிகாரிகள், பள்ளி துணை ஆய்வாளர்கள், ஏ.இ.ஓ. போன்றவர்கள் அங்கு சென்ற உடனே சத்துணவுக்கூடங்களுக்குத்தான் முதலில் செல்கிறார்களே. தவிர, ஆசிரியர்களையோ, கல்வியின் தரத்தையோ கவனிப்பதற்கு செல்வதில்லை. அங்கே நடக்கின்ற பல தவறுகளுக்கு அவர்கள் உடந்தையாக இருந்து அந்தத் தவறுகளுக்கு அவர்களும் காரணமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். நாளுக்கு நாள் கல்வியின் தரம் கீழ்நோக்கிப் போகின்ற நிலை இருக்கிறது. எனவே சத்துணவுத் திட்டத்தை கண்காணிப்பதற்காக தனி அமைப்புகளை நிறுவவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–10)

கல்வியைப் பொறுத்தவரையில் கலாசாரம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. மேலை நாடுகளைப் பொறுத்த வரையில் அவர்களுடைய கலாச்சாரம் வேறு, அங்கே கணவன் மனைவி இடையே நிரந்தரமான உறவு கிடையாது, தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே நிரந்தரமான உறவு கிடையாது, ஆனால் இந்தியாவிலே தமிழ்நாட்டிலே சிறந்த கலாச்சாரம் இருக்கிறது. இங்கே அமைதியும் பண்பாடும் அதனால் தான் இருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய கலாச்சாரம்தான், ஆகவே கல்வியில் கலாச்சாரத்தைப் பயிற்றுவிக்கின்ற முறையிலே நம்முடைய கலாச்சாரத்தை இளம் வயதிலேயே பிள்ளைகள் கற்றுக் கொள்ளுகிற முறையிலே கல்வி முறை இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்கள் பல இடங்களிலே குறைவாக இருக்கிற நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே பாலக்கோட்டிலே துவக்கப்பள்ளி மாணவர்கள்



15,580 பேர்கள் இருக்கிறார்கள், இருக்கிற பள்ளிகளின் எண்ணிக்கை 148, ஆசிரியர்கள் 393 என்ற அளவுக்குத்தான் இருக்கிறார்கள். அரசு ஆணைப்படி தேவையான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருக்கவேண்டுமென்றால் இன்னும் 250 ஆசிரியர்கள் வேண்டும். ஆகவே அந்த அளவுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே உயர்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்கள் இல்லாத அளவுக்கு மாணவர்கள் வெளியேறுகிற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்காக ஆசிரியர்கள் இன்னும் அதிகமாகத் தேவை என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே ஒரு குறைபாட்டைக் கூறி இருக்கிறார்கள். அங்கே பொறியியலில் சேர்ந்து படிக்கின்ற மாணவர்களுக்கு வருகைப் பதிவேடு சரியாகப் படியாத காரணத்தினால் அவர்களுக்கு தேர்வு எழுத முடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இது போன்ற தன்னாட்சி பெற்ற நிறுவனங்களிலே அரசு தலையிட்டு அதுபோன்ற குறைகளைக் களைய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் படித்த பட்டதாரி ஆசிரியர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். 4, 5 ஆண்டுகளாக அவர்கள் பணியாற்றியும் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை. ஆகவே நிரந்தரமாக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையோடு அவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். வருவாய்த் துறையிலே பல ஆண்டுகள் பணியாற்றியவர்கள் நிரந்தரமாக்கப்படாத சூழ்நிலையில் தேர்வாணைக் கழகம் மூலமாக அவர்களை நிரந்தரப்படுத்த சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. கல்வித் துறையிலே அதுபோன்று ஆசிரியர்களை நிரந்தரப்படுத்துவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே அவர்கள் பணிகளை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985–86 ஆம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திற்கு சென்னை மாகாணம் என்று வழங்கி வந்த பெயரை தமிழ்நாடு என்று மாற்றிய அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் அவர்களுடைய கருத்துக்களைச் செயல்படுத்துகின்ற முறையிலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் என்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தி அதிலே முழுகவனம் செலுத்தி அது முழு வளர்ச்சி பெறுகின்ற அளவிற்கு வித்திட்டிருக்கிறார்கள். அதற்கு உறுதுணையாக இருக்கிற விதத்திலே சான்றாக இலக்கியச் சான்றோர்களுக்கு அவர்கள் வாழ்ந்த

வர்களிலே நினைவுத் தூண்களையும், நினைவு ஆலயங்களையும்
நிறுவுகின்ற திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
களும் கல்வி அமைச்சர் அவர்களும் அறிவித்து இருக்கிறார்கள்.
தமிழ்ச் சான்றோர்களான பாரதிதாசன், திரு. வி. க.,
திருவள்ளுவர் போன்றவர்களின் விருதுகள் என்றும்
அண்ணா விருது என்றும் வழங்குகிற திட்டம் வரவேற்கத்தக்க
திட்டமாகும். பாவாணர் அகர முதலி என்பது புதைக்கப்பட்ட
நிலையில் இருந்ததைப்போன்று இருந்ததை மாற்றி அதைக்
கொண்டுவருவதற்காக இந்த ஆண்டு முயற்சியை எடுத்திருப்பது
வரவேற்கத் தக்கது. வெறும் சட்டமாக, காட்சிப்பொருளாக
மட்டும் இருந்த வள்ளுவர் கோட்டத்திலே வாரந்தோறும் திருக்
குறள் வகுப்புகள் நடத்துகின்ற முயற்சி வரவேற்கத் தக்கதாகும்.
கல்வி வளர்ச்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் அதிகமான
நிதியை ஒதுக்கினால் இன்னும் நன்றாக இருக்கும் என்பதை
நான் தெரிவித்து கொள்கிறேன். அதே நேரத்தில் ஒரு மிகப்
பெரிய பிரச்சினைக்கு நான் வரவேண்டிய கட்டாயத்தில் இருக்
கிறேன். தமிழகத்துனுடைய முந்தைய காலங்களில் இந்திய
துணைக்கண்டத்தில் கல்வித் துறை மாநிலப் பட்டியலில் இருந்
தது. 3 ஆண்டுகளுக்கு முன்னால் அதை பொதுப் பட்டியலுக்கு
மத்திய அரசு கொண்டு போய்ச் சேர்த்து இருக்கிறார்கள். மாநில
பட்டியலில் கல்வித் துறை இருந்த காலத்தில் இருந்த வளர்ச்
சிக்கும் இன்றைக்கு பொதுப் பட்டியலில் கொண்டு போய்
சேர்த்து மத்திய அரசு தன்னுடைய எஜமானத்தனத்தோடு
கல்வித் துறையில் தன்னுடைய கட்டுப்பாடு இருக்க வேண்டும்
என்ற உணர்வோடு இதையும் கொண்டு போய் பொதுப் பட்டி
யலில், கன்கரண்டுலிஸ்ட்டில் சேர்த்து இருக்கிறார்கள். கன்கரண்டு
லிஸ்ட்டில் கொண்டு போய்ச் சேர்த்ததால் எனக்கு இருக்கிற
பயம் எல்லாம் அச்சமெல்லாம் மேலும் இன்னும் கொஞ்சம்
காலம் கழித்து இதைக் கொண்டுபோய் மத்திய பட்டியலில்
சேர்த்து விடுவார்களோ என்ற பயம் ஏற்பட்டு இருக்கிறது.
அதன் அடிப்படையாக கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னால்
இந்திய துணைக் கண்டத்திலே கல்வி வளர்ச்சியில் மறுமலர்ச்சி
ஏற்படுத்தியாக வேண்டும், புதிய முறை கொண்டுவரப்பட
வேண்டும், புதிய முறை கொண்டு வரப்படும் என்று மத்திய
அரசு அறிவித்து இருக்கிறது. அப்படி புதிய முறை என்ன என்
பதை மத்திய அரசு மிகத் தெளிவாகவும், அதில் எப்படிப்பட்ட
சிலபஸ் வைத்து அந்த முறை கொண்டுவரப்படும் என்பதையும்
அறிவித்து முதலில் மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டைக்
கூட்டி அங்கே அதுபற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்
பட்டு, அந்த மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டில்
சொல்லப்படுகிற கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து
அதற்குப் பின்னால்தான் மத்திய அரசு ஒரு முடிவு எடுக்க
வேண்டும். அப்படி எடுக்கப்படுகிற முடிவுகளையும் எல்லா மாநில
முதலமைச்சர்களின் ஒப்புதலோடு எடுத்தாக வேண்டும். எந்த
மாநில முதலமைச்சராவது அதை வேண்டாம், திருத்த





வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக மத்திய அரசு
அதற்கு செவிசாய்த்து ஆக வேண்டும். ஆகவே, வேறு பல
விஷயங்களில் மத்திய அரசு எப்படி இருந்தாலும் கல்வித்
துறையைப் பொறுத்த வரையில் இந்திய துணைக் கண்டம்
காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை உள்ள மாநிலங்கள்
பல்வேறு தரப்பட்ட பண்பாடுகளையும், பல்வேறு தரப்பட்ட
கலாச்சாரங்களையும், பலவேறு தரப்பட்ட மொழிகளையும்
உடைய மாநிலங்களாக இருக்கின்றன. இந்த நாட்டில் உள்ள
பல்வேறு பண்பாடுகளையும், பல்வேறு கலாச்சாரங்களையும்
பல்வேறு மொழிகளையும் கொண்டு தான் இந்த நாடு பெருமைப்
படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதை அவர்கள்
புரிந்து கொண்டு எந்த மாநில முதலமைச்சராவது இதை
வேண்டாம் மாற்ற வேண்டும் என்று சொன்னால் அந்தலே
வாக்கு எடுக்கும் முறை என்று கொண்டு வந்து ஏமாற்றாமல்
ஒரு மாநில முதலமைச்சர் அதை வேண்டாம் என்று சொன்னால்
அந்த மாநிலத்தில் அதைப்புகுத்தக் கூடாது என்ற உறுதியை
மத்திய அரசை இன்றைக்கு வலியுறுத்தி மாநில அரசு பெற
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.
இன்னும சொல்லப்போனால் இதை பொதுப் பட்டியலுக்கு
கொண்டுவந்த காலக் கட்டத்திலேயே தமிழக முதலமைச்சர்
அவர்களும், தமிழக கல்வி அமைச்சர் அவர்களும் இதை
எதிர்த்தார்கள். ஆனாலும் விடாப்பிடியாக இதை கொண்டு
போய் பொதுப்பட்டியலில மத்திய அரசு சேர்த்து விட்டது.
எந்த ஒரு கட்சியின் சார்பிலும் நான் சொல்லவில்லை; ஒட்டு
மொத்தமாக தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து
சட்ட மன்ற உறுப்பினர்களின் உரிமையும் பாதிக்கப்படுகிறது.
காரணம் தமிழ்நாட்டின் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக தள்
ளிக்கொண்டே போகும்போது இன்னும் ஒரு கால கட்டத்தில்
இதைக் கொண்டுபோய் தமிழகம் முழுவதும் இந்தியத் துணைக்
கண்டம்முழுவதும் ஒரு மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க
வேண்டும் என்று சட்டம் இயற்றினாலும் கூட நாம் கேட்கிற
நிலை இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டு
இருக்கிறது. ரஷிய துணைக் கண்டத்தில் ரஷியாவில் இருக்கிற
பல்வேறு மாநிலங்களில் பலவேறு மொழிகள் பேசப்படுகின்றது.
அந்த அந்த மாநில மொழிகள் அந்த அந்த மாநிலத்தில் ஆட்சி
மொழியாக பயிற்சி மொழியாக இணைப்பு மொழியாக இருந்து
வருகின்றன. அங்கே பெடரல் செட் அப் இல்லாமல்
போய் விட்டதா? அங்கே கூட்டாட்சி இல்லால் போய்
விட்டதா? ஆனால் இந்தியத்துணைக் கண்டத்திலே ஒரு மொழி
ஆள வேண்டும். அந்த மொழியைக் கொண்டுவருவதற்காக
இதைக் கொண்டு போய் பொதுப்பட்டியலில் சேர்த்து அதற்கு
பிறகு அதை மத்திய பட்டியலில் கொண்டுபோய்ச் சேர்த்து விடு
வார்களோ என்ற அச்சம் ஏற்பட்டு இருக்கிறது. இன்றைக்கு
அவர்கள் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதிகக்கவனம்

செலுத்தாமல் அஸ்லாம், பஞ்சாப் பிரச்சினைகளில் அவர்கள் ஈடுபட்டு அதைச் செய்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். காரணம், கல்வித் துறையைப் பொறுத்த வரை மாநில அரசுக்கு முழு அதிகாரம் வழங்கியாக வேண்டும் என்று இந்த மாமன்றமும், இந்த அரசும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். பொதுப் பட்டியலில் கொண்டுபோய்ச் சேர்த்ததையே வித்டிரா செய்ய வேண்டும். அதைப் பின்நோக்கித் தள்ளி மீண்டும் தமிழக மாநிலப் பட்டியலில் அதை திருப்பித் தந்து ஆக வேண்டும் என்று மாநில அரசு இந்த மாமன்றத்தின் மூலம் வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அப்படி இருந்தால் தான் தமிழகத்தில் இன்றைக்கு புதிய மறுமலர்ச்சியைக் கொண்டு வரமுடியும். இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தில் தான் வாழ்க்கைக் கல்வியையும் தொழில் கல்வியையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த கல்வி முறை இந்திய துணைக் கண்டத்திலே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. பள்ளிகளில் இளம் கிறார்கள் சேரவில்லை என்பதற்காக அவர்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்ற உணர்வில் உண்ண உணவும், உடுக்க உடையும், படிக்க பாடப் புத்தகங்களும் கொடுத்து அவர்கள் பள்ளிகளில் வந்து சேர்ந்து படிக்க வேண்டும் என்ற முயற்சியில் நாம் முழு மூச்சாக இருக்கிறோம். ஆக இந்த மாநிலம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு எடுத்துக் காட்டாக இல்லையா? ஏன இதைக் கொண்டுபோய் பொதுப் பட்டியலிலே சேர்க்க வேண்டும். மாநில சர்க்கார் திறமையான சர்க்காராக இருக்குமேயானால் திறமையான முதலமைச்சரின் தலைமையிலே இருந்து கொண்டிருக்கிற சர்க்காராக இருக்குமேயானால், அந்த மாநில நிர்வாகத்தைக் கொண்டு மாநிலத்தில் செம்மையாகச் செயலாற்ற முடியும் என்பதற்கு தமிழகமே எடுத்துக் காட்டாக விளங்குகிறது. ஆகவே, இது பொதுப் பட்டியலிலே இருக்கக் கூடாது. மாநிலப் பட்டியலிலேதான் வந்தாக வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-20)

சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில் இங்கே நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலே உறுப்பினராக மதிப்புக்குரிய உறுப்பினர் சின்னராசு அவர்கள் இருந்தார்கள். அவர் மீண்டும் இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டாலும் கூட, அவர் பழைய மன்றத்திலேயிருந்து அந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அந்தப் பல்கலைக் கழகத்திலே உறுப்பினராகச் செயலாற்றினார். ஆனால் இப்போது அதிலே செயலாற்றுவதற்கு வழி இல்லை.



அதைப்போலத்தான் ஜே. சி. டி. பிரபாகரன் அவர்களும் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திலே உறுப்பினராகப் பணியாற்றினார். அவர் இந்த முறை இந்த மன்றத்திற்குதேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் அவர் அங்கே மீண்டும் பணியாற்ற முடியவில்லை.

ஆனால் அதே நேரத்தில் 1983ஆம் ஆண்டு இந்த மன்றத்தின் வாயிலாக பல்கலைக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், நானும் அவரோடு சேர்ந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். நான், ஏ. சி. சண்முகம், ஜகத்ரட்சகன், அவர் ஆக 4 பேர்கள் இங்கேயிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோம். அப்பொழுது, செனட் உறுப்பினர்கள் சார்பில் சிண்டிகேட் தேர்தலுக்கு நிற்கலாம் என்ற ஒரு அனுமதி இருந்தது. அதிலே அவர் நிற்கிறார். இங்கேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் அங்கேபோய் சிண்டிகேட்டிற்கு நிற்கிறார். ஆனால் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு கழித்து செனட் உறுப்பினராக இருப்பதற்கே அவர் தகுதியை இழக்கிறார். சட்டமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தால். சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் செனட் உறுப்பினராக இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. அதற்கு விதிகளும் வகை செய்யவில்லை. ஆனால் சிண்டிகேட் உறுப்பினராகத் தொடர்கிறார். அந்தத் தொடர்ச்சி வாபஸ் பெறப்பட்டாக வேண்டும். அது இல்லாமல் செய்தாக வேண்டும். இதுகூட அவர் ஏதோ சட்டத்தின் கைப்பிடியிலே போய் நின்று கொண்டு, வழக்குமன்றத்திற்குப் போய், தன்னுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இதிலேயும் ஒரு குறைபாடு இருக்கிறது. எந்த வழக்கறிஞர் அவருக்காக வாதாடினாரோ, எந்த வழக்கறிஞர் அவர் சார்பில் பல்கலைக் கழகத்தை எதிர்த்து வழக்குமன்றத்திலே வாதாடினாரோ அவரே இன்றைக்கு பல்கலைக் கழகத்தினுடைய வழக்கறிஞராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதை அரசு கண்டிக்க வேண்டும், உடனடியாக அரசு இதை வித்ட்ரா செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதைக் கூட ஏற்றுக் கொள்ளலாம். ** **

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு உறுப்பினராக ஏற்கனவே இருந்தவரைப் பற்றி, ஏற்கென( வ இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினராக இருந்தவர்—இன்றைக்கு இல்லாதவர்—அவரைப்பற்றித் தொடர்ந்து மேலும் மேலும் பேசிக்கொண்டு போவது பல்கலைக்கழகத்தில் அவர் இருக்கலாமா, கூடாதா என்பது கொள்கைக்கருத்து. அதை அவர் தெரிவிக்கலாம்.

* * * * * *

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

என்பது இந்தச் சட்டமன்றத்தில் இதுவரையில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற முறைப்படி, இந்த அவையில் இப்பொழுது இல்லாத ஒருவரை—இன்றைக்கு இல்லாதவர் அல்ல—இந்தத் தடவை இல்லாத ஒருவரைப்பற்றி அப்படிப்பேசுவது முறையல்ல. இதை நீங்கள் அனுமதித்தால் அதைப் போல பேசவேண்டிய நிலைமை மற்றவர்களுக்கும் ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசியதில் அந்தக் கடைசிப் பகுதியை மட்டும் நீக்கிவிடுகிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** நியாயத்திற்குப்புறம்பாக நடந்தவைகளைப் பற்றி மட்டும் இங்கே நான் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன். காரணம், இங்கே, சென்னையிலேயே தங்கிக் கொண்டு, ஊரிலேயிருந்து வருவதாகச் சொல்லி சிண்டிகேட் மெம்பர் டி. ஏ. வாங்குகின்ற நிகழ்ச்சி . . . (குறுக்கீடு) நான் யார் பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினராக இருப்பவர் . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடிக்கடி அவரது பேச்சில் குறுக்கிடுவதை நான் அனுமதிப்பதற்கில்லை. உறுப்பினர் பேசி முடித்தவுடன் வேண்டுமானால் இதுகுறித்து விளக்கம் கேட்கலாம். (கூச்சல்-குழப்பம்)

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, அந்த பாயிண்டுக்கு நான் வரவில்லை. சிண்டிகேட்டின்
உறுப்பினராக இருப்பவர்கள் சென்னையிலே தங்கியிருந்தால்
அவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்துனுடைய ஃபைல்களைக்
கோப்புகளை சுற்று மூலம் அனுப்பலாம். நான் செனட் மெம்
பராக இருந்த காரணத்தால் சில பல விளக்கங்களைத் தரவிரும்
புகிறேன். சென்னைப் பல்கலைக்கழகத்திலே சிண்டிகேட் உறுப்
பினராக இருப்பவர்கள் சென்னையிலே தங்கியிருப்பார்களானால்
அவ்வாறு தங்கியிருக்கின்ற உறுப்பினர்களுக்கு பல்கலைக் கழகத்
தினுடைய கோப்புகளை சுற்றுக்கு அனுப்பலாம் என்றிருக்கிறது.
ஒரு உறுப்பினர் அந்தச் சலுகையைப் பெறுகிறார் சென்னை
யிலே தங்கி இருப்பதாகச் சொல்லி. தனக்கு கோப்புகள் அனுப்பப்
பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார். கோப்புகளும் அனுப்பப்
படுகின்றன. ஆனால் அதே நேரத்தில் அந்த உறுப்பினர் வேறு ஒரு
ஊரில் இருந்து பயணம் செய்வதாக, தன்னுடைய குடியிருப்பு
அங்கே இருப்பதாகச் சொல்லிப் பயணப் படி வாங்குகிறார்.
அவர்கள் யார் யார், எந்தெந்த உறுப்பினர்கள் என்று . . .
(குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** அவர் பொதுவாகத் தான் சொல்கிறார்.

**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மறைமுகமாகப் பேசுவது என்றால் என்னால் ஏராளமாகப் பேச முடியும். முதலில் பேசிய கருத்தோடு பின்னால் பேசிய கருத்து தொடர்புடையதாக ஆகின்ற காரணத்தால் அவர் யாரைச் சொல்கிறார், எப்படிச் சொல்கிறார் என்று தெரிகிறது. அதற்காக நடவடிக்கை எடுப்பதாக இருந்தால், அதாவது இந்த அரசாங்கமோ அல்லது பல்கலைக்கழகமோ, முறைதவறி நடந்திருந்தால் நடவடிக்கை எடுக்கட்டும். அது வேறு. ஆனால் அவர், முன்னால் யாரைப் பற்றி பேசினாரோ அதையே இங்கே தொடர்ந்துபேசக்கூடாது என்று சொல்லப்பட்டதோ அதே கருத்தைத்தான் இப்போதும் பேசியிருக்கின்ற காரணத்தால் இப்போது பேசிய அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். இல்லை என்றால் சட்டமன்ற முறைகளை தவறான முறையில் பயன்படுத்த தாங்கள் எங்களையும் அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே அவர் பேசியது நீக்கப்பட்டுவிட்டது. இப்போது அவர் பேசுவது ஒட்டு மொத்தமாகப் பல்கலைக் கழகத்தில் செனட் மெம்பர்கள் அப்படி பயன்படுத்துகிறார்கள் என்று சொல்வது தவறு என்றால் பிறகு இந்த, இந்த துறைகளில் இன்ன, இன்ன தவறுகள் நடக்கின்றன, ஹவுஸிங் போர்டிலே வீடுகளை அவ்வாறு ஒதுக்கிவிட்டார்கள் என்றெல்லாம் கூட பேச முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடும்.

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தைக் குற்றம் சாட்டுவதற்காகப் பயன்படுத்தக் கூடாது என்பது என்னுடைய வாதம அல்ல. முன்னால் தாங்களே ஒருதீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள், இந்தச் சட்டமன்றத்தில் இப்போது இல்லாத ஒருவர் தனக்காக வாதாட முடியாத அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கும்போது அவரைப் பற்றிப் பேசக்கூடாது என்று. அப்படி ஒருவரைப்பற்றி பேச ஆரம்பித்து அந்தப் பேச்சு பாதியில் நிறுத்தப்பட்டு பின்னர் அந்தக் கருத்தோடு தொடர்பாக வருகிற கருத்தை, அவரையே குறிப்பிடுகிற நிலையிலே எல்லோரும் கொள்ளத்தக்க வகையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏற்கெனவே உறுப்பினராக இருந்த ஒருவரைப்பற்றி மறைமுகமாகக் குற்றம் சாட்டுவதாகும். தாங்கள் அவ்வாறு மறைமுகமாகக் குற்றம் சாட்டுவதை வரவேற்பதாகச் சொன்னால் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலே அவ்வாறு உறுப்பினர் அவர்கள் சொன்னது அனைத்தும் நீக்கப்பட்டு விட்டது. இப்போது பல்கலைக்கழகத்திலே நடக்கின்ற தவறு

களைப் பற்றிச் சொல்கிறார்கள். எனவே பொதுவான நடை
முறையைப் பற்றிச் சொல்வதன் காரணத்தால் பொதுவாக
எல்லா உறுப்பினர்களுக்கும் அது பொருந்தும்.

திரு க. அன்பழகன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, ஆளும் கட்சியிலிருந்து உறுப்பினர் பேசுகின்ற காரணத்
தால் சொல்கிறேன். ஆளும் கட்சியிலே இருக்கின்ற அமைச்சரே
பல்கலைக் கழகத்தினுடைய அன்றாட நடைமுறையில் நடைபெறு
கின்ற காரியங்களைப் பொறுத்தவரையில் அது ஒரு அட்டா
னமஸ் யூனிட் என்ற காரணத்தால் அவர்களே பார்த்துக்கொள்
வார்கள் என்று கல்வி அமைச்சர் அவர்கள் பலமுறை பதில்
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சட்டமன்றக் குறிப்பேட்டிலே
அதை ஏற்றுவதினுடைய நோக்கம் எனக்கு மிக நன்றாகத்
தெரியும். ஆகவே அப்படி ஏற்றுகின்ற அந்த நோக்கத்திற்கு
நாங்கள் பதில் சொல்கிறபோது தாங்களும், தங்களைப்போல
இந்த அவையினுடைய தலைவராக இருப்பவரும் குறுக்கிடாமல்
இருக்கவேண்டும் என்று இப்போதே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் ஆளும் கட்சி
யிலே இருந்தாலும் கூட துறையில் நடக்கின்ற குறைகளை
அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். அந்த அடிப்படையில்
தான் கொண்டு வருகிறார்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்த வரையில் அந்தப் பல்
கலைக் கழகத்திலே நடத்தப்படுகின்ற அக்கிரமங்களை அரசாங்
கம் விசாரிக்க வேண்டும். அதற்கென்று தனியாக ஒரு
விசாரணைக் குழு அமைக்க வேண்டும். காரணம் ஒரு சிண்டி
கேட்டிலே, நிர்வாகக் குழுவிலே உள்ள உறுப்பினர்கள் இது
போன்ற தவறுகளைச் செய்தால் அது இந்த நாட்டுக்கு
தவறான எடுத்துக்காட்டாக அமைந்துவிடும். அந்த வகையில்
அமைந்துவிடக் கூடாது என்று அரசாங்கத்தை நான் வேண்டிக்
கேட்டுக்கொள்கிறேன். ஒரு சிண்டிகேட் உறுப்பினர் தன்னை
யும் தாழ்த்திக்கொண்டு, அந்தப் பல்கலைக் கழகத்தையும்
தாழ்த்துகிற நிலைமைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்
கிறார் என்பதைத்தான் என்னுடைய ஆதங்கமாக இந்த மன்றத்
தில் நான் வைக்கிறேன். அதற்கு ஒரு நல்ல முடிவு தேவை.
அதனால் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளை மிக விரைவாக
வெளிப்படுத்துவதற்கு உரிய முறையில் முயற்சிகளை
மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும்
என்று கேட்டு . . . . (மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 11-30)

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: துணைத் தலைவர் அவர்களே,
இந்த ஆண்டு கல்வி மானியத்திற்காக ஏறத்தாழ ரூ. 468 கோடி
ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர பல்வேறு துறைகளிலிருந்து
கல்வி நலனுக்காகச் செலவிடப்படக்கூடிய தொகையையும் நாம்



கணக்கில் எடுத்துக்கொள்வோமானால் அது ரூ. 580 கோடியாகப்
பெருகக் கூடும் என்பதையும் நான் அறிய வருகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டினுடைய மொத்தம் வரவு-செலவுத்
திட்டத்தில் ஐந்தில் ஒரு பகுதி இதற்காக ஒதுக்கப்படுகின்றது
என்ற பெருமிதத்தை நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில்
அது இன்னும் அதிகரிக்குமானால் நானும் பெருமிதம் கொள்
வதற்கு ஏது உண்டு. ஏனென்றால் அடுத்து உள்ள கேரளா
விலே மொத்த வரவு-செலவுத் திட்டத்தில் மூன்றில் ஒரு
பகுதியை கல்வி நலனுக்காக அந்த மாநிலத்திலே செலவழிக்
கிறார்கள். நம்முடைய நாட்டிலே எத்தனையோ தொழில்களிலே
நாம் முதலீடு செய்கிறோம். கோடிக்கணக்கான ரூபாய்கள்
அதற்காக ஒதுக்கப்படுகின்றன. ஆனால் செய்யப்படக்கூடிய முதலீ
டுகளில் எல்லாம் இந்தக் கல்வித் துறையிலே நாம செலவழிக்
கக்கூடிய இந்தப் பணம்தான் நமக்கு மாத்திரம் அல்லாமல்
வழிவழியாக நமக்கு வரக்கூடிய நம்முடைய வருங்காலச் சந்ததி
களுக்கும் நல்ல நன்மையை ஈட்டித் தரக்கூடிய முதலீடாக
அமையும் என்ற காரணத்தால் இதை நான் வரவேற்கிறேன்.

ஒரு கருத்து, நம்முடைய மாநகராட்சி மன்றங்கள் கல்விப்
பொறுப்பிலே ஓரளவு பங்கேற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு
காலத்திலே மாநகராட்சிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்
கொள்வது பொருத்தமானதாக இருந்திருக்கலாம். ஆனால்,
அதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று நான் மாண்பு
மிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொகிள்றேன், ஏனென்
றால், மாநகராட்சி மன்றங்கள் அந்த மாநகரங்களிலே வசிக்
கக்கூடிய மக்களுடைய அடிப்படை சுதாதார தேவைகளை
'பேசிக் சிவிக் அமெனிட்டிஸை' கண்காணிப்பதற்குப் போதுமான
அவகாசமும் இல்லை. போதுமான நிதி வருவாயும் இல்லை.
பல மாநகரங்களிலே அரசு நடத்தக்கூடிய பள்ளிக்
கூடங்களும் கல்லூரிகளும்கூட இடம் பெற்றிருக்கின்றன.
ஆகவே, முழுக்க முழுக்க அரசாங்கமே மாநகராட்சிகளுடைய
பொறுப்பிலே இருக்கக் கூடிய பள்ளிக்கூடங்களையும் தன்னு
டைய பொறுப்பிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

விளையாட்டுப் பயிற்சிக்காக இந்த அரசு ரூ. 2 கோடி
ஒதுக்கி, அதற்காக திரு. சிவந்தி ஆதித்தனார் அவர்களு
டைய தலைமையிலேயே தனி நிறுவனமும் அமைத்து ஊக்கு
விக்கக்கூடிய அந்தச் செயலை நான் மனமார வரவேற்கிறேன்.
ஆனால், அந்தத் துறையிலே சில குறைபாடுகள் இருப்பதையும்
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் சொல்ல விரும்புவது
விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய 'அத்தலெட்டிக்
கோச்' கள் சுமார் 9 பேர்களுக்கு அவர்கள் ஏற்கனவே வருங்க

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1985 ஏப்ரல் 10

வந்த ஊதியத்தைக் குறைத்து ஒரு அநியாயம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் எந்தக் காரணத்தினாலோ, எங்கோ நிர்வா கத்திலே ஏற்பட்டுவிட்ட கோளாறு காரணமாக, கடத்த 4 மாதங்களாக அவர்களுக்குரிய குறைந்த சம்பளம்கூட பெற முடியாமல் அவர்கள் பசியும் பட்டினியுமாக வாடிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் கோவை வேளாண்மைக் கல்லூரியிலே கூட இந்த அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது, அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மேலும் விவரம் கேட்பார்களானால் அதை நான் தருவதற்கு ஆயத்தமாக இருக்கிறேன்.

சென்ற ஆண்டு தற்சார்புத் தொழில் கல்வி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை நான் மனமார வரவேற்கிறேன். அரசே தன்னுடைய பணத்தைச் செலவிட்டு புதிதாக பொறியியல் கல்லூரிகளை, பாலிடெக்னிக்குகளைப் பல்வேறு பகுதிகளிலே ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு இணங்கமுடியாமல் நிதிநிலை குறுக்கிடுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்ததை மாற்றி அமைக்கக்கூடிய ஒரு நல்ல திட்டமாக இந்தத் திட்டம் அமைந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

கடந்த ஆண்டு மாத்திரம் 53 பாலிடெக்னிக்குகளும் 17 பொறியியல் கல்லூரிகளும் ஆரம்பிக்கப்படுவதற்கு அனுமதி தரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலேயிருந்து நமக்குத்தெரிய வருகிறது. ஆனால், கடந்த ஓராண்டு காலத்திலே செயல்பட்ட முறைபற்றி பல விவரங்கள் இந்த அவையிலே எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே பெரும்பாலானவற்றிலே உண்மை இல்லாமலும் இருக்கலாம், உண்மை இருக்கவும் கூடும். இவை பற்றி முறையாக ஆராயப்படுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் கல்வியாளர்களையும் கொண்ட ஒரு குழு நியமித்து அதை ஆராய்ந்து எதிர்காலத்திலே அப்படிப்பட்ட தற்சார்பு தொழில் கல்வி மையங்கள் செயலபடுவதற்கு நாம் அனுமதிப்பதுபற்றி யோசிப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு துணையாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

இதைப்போன்றே எதிர்காலத்தில் தற்சாப்பு மருத்துவக் கல்லூரி துவங்கவும் இந்த அரசு முன்வருமானால் அது எவ்வளவோ நம் நாட்டு மாணவர்களுக்கு பயன் தரும் என்று நான் நம்புகிறேன். அவ்வாறு இந்த அரசு துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய மருத்துவர்களில் பலபேர் ஒன்றுசேர்ந்து ஒரு கல்லூரி ஆரம்பிக்க வைத்த கோரிக்கையை குறித்து இந்த அரசை அனுதாபத்தோடு கேட்டுக்கொள்வது, மருத்துவர்கள் மாத்திரமல்லாமல் மன முவந்து நிதி வழங்கக்கூடிய பெருந்தனக்காரர்களும், தொழிலதிபர்களும் இந்தத் துறையில் முன்வருவார்களானால் அப்படிப்பட்ட மருத்துவக் கல்லூரியை துவங்குவதற்கு அரசு அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1985 ஏப்ரல் 10] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

இப்போது ஒரு பிரச்னை எழுந்து வருகிறது. என்னைப் பொறுத்தவரையில் எரிமலையின் மேலே புகை கக்கத் தொடங்கி இருக்கிறதோ என்ற அச்ச உணர்வுதான் எனக்கு ஏற்படுகிறது. இன்றைக்கு மாண்புமிகு முன்னவர் அவர்கள் அம்பாசங்கர் அறிக்கை வெளிவந்தது பற்றி தெரிவித்தார்கள். அந்த அறிக்கையிலே சில வேறுபாடுகள், மாறுபாடுகளை உறுப்பினர்கள் தெரிவித்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள் அது வேறுபாடாகவும், மாறுபாடாகவும் தெரியவில்லை. வந்திருக்கக்கூடிய செய்தியைப்பார்த்தால் முற்றிலும் முரண்பாடாகத்தான் இருக்கிறது. ஒரு கமிஷனை நியமித்து உறுப்பினர்கள் அவர்களோடு சேர்ந்து செயல்பட நாம் அனுமதித்து இருக்கிறோம் என்று சொன்னால் ஏதோ ஓரிரு உறுப்பினர்கள் ஒரு கருத்திலே மாறுபடுவது இயற்கை. ஆனால் தலைவராக நியமிக்கப்பட்ட அம்பாசங்கரைத்தவிர அதிலே இடம் பெற்றிருந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் 15 பேர்களும் அந்தக் கருத்திற்கு மாறுபட்டிருக்கிறார்கள் என்றால் அது மாறுபாடும் இல்லை, வேறுபாடும் இல்லை, முரண்பாடாகத்தான் தெரிகிறது. அப்படிப்பட்ட விவாதத்தை இன்றைக்கு வளர்த்திருக்கக்கூடிய அந்த அறிக்கை அரசுக்கு அளிக்கப்பட்டிருந்தும், அது பத்திரிகையில வெளியாகி, பல வட்டாரங்களில் பரபரப்பையும், பதட்ட நிலையையும் தோற்றுவித்திருக்கிற இந்த நேரத்தில் இன்னும் அரசு தன்னுடைய பொறுப்பில் மாத்திரம் அதை வைத்துக் கொண்டிராமல், இந்தப் பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு பிரதியாவது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அது திருடு போயிருக்குமோ என்ற சந்தேகத்தை முன்னவர் அவர்கள் தெரிவித்தார்கள். திருட்டுப் பொருளை வைத்திருந்தால் அதுவும் குற்றமாகிவிடுமோ என்ற அச்ச உணர்வு எனக்கு ஏற்படுகிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு முறையாக எவ்வளவு விரைவாக வழங்க முடியுமோ, அப்படி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பிற்பட்டோருக்கு 50 சதவீதம் ஒதுக்கப்பட்டது என்பது தமிழ் நாட்டில் நிலவி வந்த நிலைமைகளை கருத்திலே கொண்டு பாதிக்கப்பட்ட சமுதாயங்களுடைய சார்பாக வைக்கப்பட்ட கோரிக்கையை கருத்திலே எடுத்துக்கொண்டு செய்யப்பட்ட ஒரு முடிவு என்பதை, அது திடீரென்று செய்யப்பட்ட முடிவில்லை என்பதை மறந்து விட முடியாது, நாம் பெரியாரை நினைக்கிறோம். அண்ணா அவர்களைப் பாராட்டுகிறோம். அவரை நினைவிலே வைத்து நம்முடைய அரசை நடத்துகிறோம் என்று சொல்லும்போது இவர்கள் வாழ்க்கையெல்லாம் இந்தப் பிற்பட்ட வகுப்பினருடைய கல்வி முன்னேற்றத்திற்காகவும், அவர்கள் அரசுத் துறைகளில் முன்னேறி வருவதற்காகவும், செலவிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கை அதற்கு அடிப்படையாக இருந்திருக்கிறது. அவர்களுடைய வரலாறு

அதோடு தொடர்பு பெற்றிருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. இப்போதுதான் பிற்பட்ட சமுதாயத்தில் ஒரு சாரார் எழுந்து நிற்க தலைப்பட்டிருக்கிறார்கள். நாம் எடுக்கக்கூடிய முடிவு அந்தச் சமுதாயங்களை மீண்டும் முடமாக்கி விடக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கூட கோவையில் பேசும்போது ஒரு புதிய வகுப்பு தோன்றியிருக்கிறது என்று சொன்னார்கள். அதை உண்மையிலேயே நான் கூட ஓரளவிற்கு ஒப்புக்கொள்ள தயாராக இருக்கிறேன். மேலுக்கு வந்தவர்கள் இன்னும் கீழே இருப்பவர்கள் மேலுக்கு வரமுடியாமல் அமுக்கக் கூடிய ஒரு நிலை. எந்த வட்டாரத்திலிருந்து, எந்தப் பிரிவிலிருந்து வந்தாலும் அவர்கள் அமுக்கப்பட வேண்டும் அவர்கள் தடுத்து திருத்தப்பட வேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. ஆனால் இந்த ஒரு நிலை இந்த நாட்டிலே வந்திருக்கிறது. ஏற்கனவே பொருளாதாரத்தில் நலிந்தவர்களுக்கு இந்த அரசு ஏதோ சலுகைதர முன் வருகிறபோது. பிற்பட்ட சமுதாய மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு பொருளாதாரத்தில் நலிந்தவர்கள் முன்னுக்கு வரவிடாமல் தடுப்பதற்காக ஆர்த்தெழுந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களை எல்லாம் ஒருமுனைப்படுத்துகிறார்கள் என்ற கருத்தை சிலர் வெளியிடுகிறார்கள். அந்தக் கருத்து மிகவும் ஆபத்தான கருத்து. ஒரு ஆபத்தான நிலையை தமிழகத்தில் தோற்றுவிக்கக்கூடும். நான் அறிந்த வரையில், நானும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்ற முறையில் சொல்வேன். அவர்கள் எந்தக்காலத்திலும் பொருளாதாரத்தில் நலிந்தவர்கள். அவர்கள் எந்த ஜாதியினராக இருந்தாலும், அல்லது எந்த மதத்தினராக இருந்தாலும் அவர்களுக்கு இந்த அரசு அள்ளித் தந்து அவர்களைத் தூக்கிவிடுவதிலே நாங்கள் குறுக்கே நிற்கப் போவதில்லை. ஆகவே சிலபேர் இதில் நலிந்த பிரிவினருக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய போராட்டம் என்று கூறுகின்றார்கள். அரசு இதிலே ஒருமுனையாகப் பாடுபட வேண்டுமென்று ஊக்குவிக்கின்ற முறையில் சிலர் இப்படி பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். அரசு அதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லுகின்ற அந்த அறிவுரையை ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சமத் அவர்கள் பேசும்போது நலிந்த பிரிவினரையும் இதிலே சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு சலுகை தர வேண்டும் என்பதிலே எனக்கு ஒன்றும் அபிப்பிராய பேதம் இல்லை என்று சொன்னார்கள். அந்த இடத்திலே எங்களுக்கு அபிப்பிராய பேதம் இருக்கிறது. ஜாதி அடிப்படையில் நலிந்த பிரிவின





ருக்கு சலுகை தரவேண்டுமென்று சொல்லுகிறோமே தவிர ஜாதி அடிப்படையில் இல்லாமல் நலிந்த பிரிவு என்று எடுத்துக் கொண்டால், இப்போது 9 ஜாதிக்காரர்கள் 90 இடங்களைப் பங்குபோட்டுக் கொள்கிறார்கள் என்றால், உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த நலிந்த பிரிவினர் ஒருவரை அதிலே விட்டால் இந்த 90 இடங்களையும் அந்த ஜாதியைச சேர்ந்தவர்களே பெற்றுக் கொள்ளும் ஒரு பேராபத்து இருக்கிறது என்பதை நாங்கள் மனப் பூர்வமாக உணருகிறோம். ஆகவே, கீழ்மட்டத்தில் இருக்கிற எளிய மக்களுக்கு இந்த பயன் போய்ச் சேரவேண்டும் என்று பேசும்போது நாம் ஏமாந்து, இருக்கிற பலன்களை இழந்துவிடக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்; ஏற்கெனவே ஜாதி என்று ஒதுக் கப்பட்டு, நிதியிலே, பொருளாதாரத்திலே நலிந்த பிரிவினர்களாக அவர்களை ஆக்கி, அவர்கள் இந்த நாட்டின் அரசுப் பொறுப் பிலே பெறவேண்டிய நியாயமான விகிதாச்சாரத்தைப்பெற முடியா மல் ஆக்கப்பட்டதால் தான் இந்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. என்ற வரலாற்று உண்மையை அரசு கவனத்தில் கொண்டு நலிந்த வர்களுக்குச் செய்ய வேண்டிய சலுகையை செய்ய வேண்டிய முறைப்படி செய்ய வேண்டுமென்றுநான் கேட்டுக்கொள்கிறேன்.

120 ஜாதிகளுக்கு ஒதுக்கப்பட்டதை சில பேர்களே, 9 ஜாதியினரே பங்குபோட்டுக் கொள்கிறார்கள் என்றால் அப்படி பங்கு போடுகின்ற சூழ்நிலை எப்படி நிகழ்கிறது, யாரால் எங்கே நடக் கிறது என்பதை அரசு தனக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன் படுத்தி, அதைத் தடுத்து நிறுத்த எந்த விதமான நடவடிக்கை எடுத்தாலும் அதற்கு நாங்கள் ஒத்துழைப்புத் தர தயாராக இருக் கிறோம்.

அதைப்போன்று முஸ்லீம் சமுதாயத்தைப் பொறுத்த வரையில் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலே இடம் பெற்றிருந்தாலும் கூட நாளுக்குநாள் இந்தப் பட்டியல் நீண்டு கொண்டு வருவதால் அவர் களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான உரிமை கிடைக்காமல் போகிறது என்ற அச்சம் இன்றைக்கு முஸ்லீம் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டு காலத்திலே மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிபோன்ற கல்லூரிகளில் அந்த மாண வர்கள் சேர்க்கப்பட்டிருக்கிற எண்ணிக்கையை எடுத்துக் கொண் டால் பரிதாபகரமாக ஆண்டுக்காண்டு குறைந்து வந்திருக்கக் கூடிய ஒரு வேதனைதரக்கூடிய விஷயத்தை அரசு உணரும். தகுந்த வாய்ப்பை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன்.

இந்த நேரத்தில் நான் அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். முஸ்லீம்கள் மதவழி சிறுபான்மை பிற்பட்ட வகுப் பினராகக் கருதப்பட்டு, அவர்களுடைய மக்கள் தொகை விகிதா

சாரத்திற்கு ஏற்ப இடஒதுக்கீடு செய்தால் அவர்கள் பொருளதாரத் துறையிலும் நீதித் துறையிலும் மேலே வர வாய்ப்பு ஏற்படும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைனாரிட்டி பள்ளிகளுக்கு இந்த அரசு சில சலுகைகளை அளித்திருக்கிறது. இந்தப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிப்பதற்கு முன்னால் அங்கீகாரம் பெறாமல் ஆரம்பித்து, பிறகு ஓராண்டு காலத்தில் அங்கீகாரத்தைப் பெறலாம் என்று கருதி ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள் தக்க நேரத்தில் உரிய அந்தஸ்து அளித்து அதற்கு அனுமதி தராமல், மைனாரிட்டி பள்ளிகளுக்கு அங்கீகாரம் தராமல் தேவையற்ற காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். அதனால் பள்ளியை ஆரம்பித்தவர்கள் தங்களுடைய சொந்தப்பணத்தை செலவிட்டு, இறுதியில் நடத்த முடியாமல் கைவிடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. பள்ளியைத தொடங்கி 2 ஆண்டு 3 ஆண்டு தங்களுடைய சொந்தப் பணத்தை ஆசிரியர்களுக்கு சம்பளமாகக் கொடுத்துவிட்டு, சிரமப்படுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் மதுரை மாவட்டத்தில் கம்பம் இலாக் ஆரம்பப் பள்ளிக்கு 3 ஆண்டுகளான பின்னாலும் அங்கீகாரம் அளிக்கவில்லை. அந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பட்ட குறைபாடுகளை எல்லாம் விரைவாகத் தீர்த்து வைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன், பாடப்புத்தகங்களை தயாரிப்பதிலே மெத்தக் கவனம் செலுத்த வேண்டும். இன்றைக்கு சமுதாயத்திலே ஆங்காங்கே மாச்சரியம் ஏற்படுகிறது. கலகம் ஏற்படுகிறது. இதற்கு எல்லாம் காரணம், இளைஞர்களுக்கு அவர்களுடைய இளம் உள்ளங்களில் விதைக்கப்படுகின்ற விஷமங்கள்தான்.

வள்ளுவர் கூட "கற்றதனால் ஆயபயன்என்கொல் வால்அறிவன் நற்றாள் தொழா அர் எனின்? என்று வாழ்வதற்கு உண்டான கருத்தைச் சொன்னார். நாள் வள்ளுவரிடத்திலே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அதையே இன்னொரு முறையிலே சொல்லவேண்டுமானால், "கற்றதனால் ஆய பயன் என்கொல், சுற்றி வாழும் சமூகத்தோடு சுமுகமாக வாழவில்லையெனில்" என்று சொல்ல முடியும். இப்படி சுமுகமாக வாழத்தக்க, பார்க்கக்கூடிய சமுதாய மக்கள் எல்லாம் ஒரு குடும்பம் என்று உணர்வு ஏற்படத்தக்க வகையில் நம்முடைய கருத்துக்களை பாடப்புத்தகங்களில் எல்லாம் அதிகமாகச் சேர்க்க வேண்டும். ஒரு சமுதாயத்தைச் சேர்ந்த மத போதகர்களைப் பற்றி, குறையாக, மிகக் கேவலமான மொழியிலே எழுதக்கூடிய ஒரு மரபு அண்மைக்காலமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதை நாங்கள் அடிக்கடி சுட்டிக்காட்டியிருக்கிறோம் அவர்களும் அவ்வப்போது திருத்துகிறார்கள். ஆனால் திருத்





தப்படாத புஸ்தகங்கள் மாணவர்கள் மத்தியிலே லட்சக்கணக்கான அளவில் ஏற்கெனவே வழங்கப்பட்டு, ஒரு விஷவித்து வளர்வதற்கு ஏதுஏதுவாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட புத்தகக் குழுவிலே சிறுபான்மை மக்களுக்கும் இடம் கொடுத்தால் அது முளைக்கும் இடத்திலே கிள்ளி எறிவதற்கு வாய்ப்பாக இருக்கும். அப்படித் தயாரிக்கக்கூடிய புஸ்தகங்களை பார்த்துக் கொடுப்பதற்கு இந்த அரசுக்கு எங்களுடைய ஒத்துழைப்பைத்தர தயாராக இருக்கிறோம்.

மற்றொன்று, உருதுப் பள்ளிகளுடைய பிரச்சனைகள், இந்த நாட்டில் உருதுப் பள்ளிக்கான பாடப் புத்தகங்கள் உரிய காலத்தில் கிடைப்பதும் இல்லை. தேவையான புத்தகங்கள் அரசால் அச்சடித்துத் தரப்படுவதும் இல்லை. எனவே இந்த நிலையை விரைவாகத் தீர்ப்பதற்கு அரசு முனைப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, உருது ஆசிரியர்கள் ஓய்வு பெற்றால், அந்த இடத்தில் இன்னொரு உருது ஆசிரியரை நியமிப்பதில் மிகச் சிரமங்கள் ஏற்படுகின்றன. போதுமான ஆசிரியர்கள் இல்லாத குறை இருக்கிறது. ஆகவே உருது ஆசிரியர்கள் பயிற்சி கல்லூரி ஒன்றைத் தொடங்கினால் இந்தக் குறைபாடுகளை நீக்க முடியும் என்று நான் நம்புகிறேன். எனவே அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் கிடைக்காத இடங்களில் ஏற்கனவே ஓய்வு பெற்ற உருது ஆசிரியர்கள் நல்ல உடல் வலிவோடும் நினைவாற்றலோடும் இருப்பார்களானால் அவர்கள் 1, 2 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து பணியாற்றுகின்ற வகையில் இருக்கக்கூடிய விதிகளைத் தளர்த்தியாவது அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

இந்த நாட்டில் வாழக்கூடிய எல்லா சிறுபான்மைமொழி பேசக்கூடிய மக்களுக்கும் கல்வி நலம் பெறுவதற்கு இந்த அரசு தொடர்ந்து வசதி வாய்ப்புகளை தேடித் தருகிறது என்பதிலே நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நாட்டிலே உருது பேசக்கூடிய மக்கள் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர் வாழ்கிறார்கள். ஆகவே மக்கள் தங்களுடைய மொழி வளர்வதற்காக உருது அக்கடமி ஒன்றை தோற்றுவிக்கவேண்டும் என்ற கோரிக்கையை சுமார் 7 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இடத்திலே வைத்திருக்கிறார்கள், ஆனால் இடைக்காலத்தில் அந்தக் கோரிக்கை மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படாத காரணத்தால் அது அமைச்சர் அவர்களால் கவனிக்கப்படாமல் இருக்கின்றது. எனவே அதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

பாடப் புத்தகங்களும், சீருடைகளும் வரக்கூடிய ஆண்டில் ஏறக்குறைய 25 கோடி ரூபாய் செலவில் நம்முடைய பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்க இருப்பதை நான் மனதார வரவேற்கிறே

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1985 ஏப்ரல் 10

ஆனால் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிற வார்த்தை, தகுதி
பெற்ற மாணவர்களுக்கு இது வழங்கப்படும் என்று சொல்லியிருப்
பது எனக்கு கொஞ்சம் அச்ச உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.
அந்தத்தகுதியை கணக்கிடுபவர்கள் யார். இந்தத் தகுதியைப்
பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை நீங்கள்
யாரிடத்திலே வழங்கப் போகிறீர்கள். ஆகவே நான் உங்களிடத்
திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தகுதி என்ற வார்த்தைதான்
தமிழகத்திலே பல விஷயங்களுக்குக் காரணமாக இருந்திருக்கிறது
இந்தத் தகுதி பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற பொறுப்
பை நீங்கள் ஆசிரியர்களிடம் வழங்கினால், அந்த மிகுதி பெற்ற
மாணவர்கள் இந்த ஆசிரியர்கள் மீது பொல்லாத கோபம்
அடையக்கூடும்.

அதைப்போலவே சில பேர்கள் தங்களுடைய காழ்ப்புணர்ச்சியின்
சார்ணமாக சில தகுதி பெற்ற மாணவர்களை தேர்ந்தெடுக்கா
மல் விட்டு விட்டால், அதனால் ஆசிரியர்களுக்கும் சிலபல நிலைகள்
ஏற்படும். ஆகவே மாணவர்களுக்கு சீருடையும், புத்தகமும் வழங்
குவது என்ற முடிவு எடுத்துவிட்ட பிறகு, அதற்கு இன்னும் 2½
கோடி ரூபாய் அதிகமானாலும் கூட, வகுப்பிலே படிக்கின்ற எல்லா
மாணவர்களுக்கும், சீருடையும், பாடப் புத்தகங்களும் வழங்கப்
படும் என்று சொல்லிவிட்டால், ஆசிரியர்களால் மாணவர்களுக்கு
ஏற்படும் தொல்லையும் குறையும், அதனால் ஆசிரியர்களுக்கு ஏற்
படக்கூடிய தொல்லையும் குறையும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து தொலை தூரத்தில் இருக்கின்ற பிஜித் தீவுக்கு பாடப்
புத்தகங்களை அனுப்புவதற்காக எடுத்து இருக்கக்கூடிய முடிவை
நான் மனதாரப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட நீண்ட
தொலை தூரங்களில் நம்மைவிட்டு பல தலைமுறைகளாக பிரிந்து
வாழக்கூடிய மக்கள் நமமுடைய தமிழ் நூல்களை கற்க வேண்டும்
என்பதிலே எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதைப்பார்க்கும்
போது, அப்படிப்பட்ட மக்களுக்காக நாம் எவ்வளவு செய்தாலும்
தகும், அது நமது கடமை என்பதை நான் சொல்லவிரும்புகிறேன்.

அதேபோல் தொலை தூரத்தில் இருக்கக்கூடிய மற்றொரு
நாடான மொரிஷியஸ் நாட்டிலே வாழும் மக்களுக்கு பாடப் புத்த
கங்கள் அனுப்புவது பற்றி நம்முடைய அரசு யோசிக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு முறை நான் சிங்கைக்குச்
சென்றிருந்தபோது, அந்த நாட்டினுடைய அதிபர் தமிழகத்தில்
பிரசுரிக்கக்கூடிய எல்லா த்மிழ் நூல்களும் ஒரு நகலை சிங்கையில்
இருக்கக்கூடிய நூலகத்திற்கு வழங்குமாறு தமிழக அரசு ஏற்பாடு
செய்யுமானால், அங்குள்ள தமிழர்களுக்கு மெத்த பயன் கிடைக்
கும் என்று என்னிடத்திலே கேட்டுக்கொண்டார்கள்.



1985 ஏப்ரல் 10] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

(முற்பகல் 11-50)

அந்தக் கோரிக்கையை, எனக்கு கிடைத்திருக்கக் கூடிய வாய்ப்
பைப் பயன்படுத்தி அமைச்சர் அவர்களிடத்திலே நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரம் அல்லாமல் ஆங்காங்கு
இருக்கக் கூடியவர்கள் தமிழ் கற்க வேண்டும் என்று விரும்புகிறார்
கள் ஆனாலும் அங்குள்ள பல தமிழ் குடும்பங்களிலே ஏற்கென
வே ஆங்கிலத்தையே தங்களுடைய வீட்டு மொழியாக மாற்றிக்
கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அன்னிய நாடுகளுக்கு 2
ஆசிரியர் தம்பதிகளை அனுப்ப வேண்டும் என்று அரசு செய்திருக்
கிற ஒரு ஏற்பாடு வரவேற்கத் தக்க ஒன்றாகும். அப்படி அனுப்பப்
படக்கூடிய ஆசிரியர்கள், வெறும் தமிழை மாத்திரம் தெரிந்தவர்
களாக இருந்தால் எதிர்பார்க்கக் கூடிய பயன் இருக்காது. அவர்
கள் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றவர்களாக அங்கே சென்று பணி
யாற்றக்கூடிய நேரத்தில், அங்குள்ள மக்களோடு பழகி அவர்
களுச்கு ஆங்கில மொழியிலேயே தமிழைச் சொல்லிக் கொடுக்கக்
கூடிய அளவுக்கு ஆற்றல் பெற்ற தம்பதிகளாக பார்த்து அனுப்பு
வதே நல்ல பயக்கக்கூடியது என்பதைதெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு நம்முடைய நாட்டிலே உள்ள பிரிட்டிஷ் கவுன்சில்
பிரெஞ்சு நாட்டு நிறுவனம் ஆங்கிலோ பிரான்சைஸ் எனப்படும்
ஜெர்மன் நாட்டு நிறுவனம் மேக்ஸ்மல்லர் என்று சொல்லக்கூடிய
ஆகிய அமைப்புகள் எப்படி அந்தந்த மொழிகளையெல்லாம்பயிற்று
விக்க பல இடங்களிலும் அதன் கிளை அமைப்புகளை நிறுவி
பயிற்றுவித்து வருகிறார்களோ அதுபோல் எங்கெல்லாம் தமிழர்கள்
குடியிருக்கிறார்களோ, எங்கெல்லாம் தாய்தமிழகத்தோடு தொடர்பு
இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்களோ, அங்கேயெல்லாம் தமிழர்
பண்பாட்டு மன்றங்கள் என்ற நிறுவனத்தை நிறுவி, அதன் மூலம்
அங்குள்ள தமிழர்கள், தாங்கள் பாரம்பரியமாகக் கொண்டிருக்கக்
கூடிய அந்த பண்பாட்டு பெருமையோடு, தொலை தூரத்திலே
வாழ்கின்ற அந்த மக்கள், நம்மோடு இணைக்கப்பட்டவர்களாக
வாழவும் உலகம் எல்லாம் பரவியிருக்கக் கூடிய தமிழ் ஆக்கத்திற்கு
ஒரு தொன்மையான மொழி, ஒரு தொன்மையான நாடு, அதைப்
பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று பல இடங்களிலிருந்தும்
ஏற்பட்டிருக்கக் கூடிய விழிப்புணர்ச்சிக்கு தீனிப் போடக்கூடிய
முறையில், இந்த மன்றங்களை செயல்படுத்துவதற்கும் இந்த அரசு
வாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று 460 கோடி ரூபாயை இதற்காக கேட்டிருக்கிறார்கள்.
கிட்டத்தட்ட 1954-ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய மொத்த
வரவு-செலவு திட்டமே 100 கோடிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இன்று
அதிலே 5 பகுதிக்கும் அதிகமாக கல்விக்காக கொடுக்கப்பட்டிருக்கக்
கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலே அது குறைக்கப்
படாமல், நீங்களே இன்னும் ஆயிரம் கோடி ரூபாய்க்கு, கல்வி
மானியத்திற்கு தொகையை ஒதுக்குங்கள் என்று கேட்கக் கூடிய

நேரத்தை எதிர் பார்த்து, அதற்கு எப்போது வாக்களிக்க நான் சித்தமாக இருக்கிறேன் என்று சொல்லி வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த கல்வி வளர்ச்சி பற்றிய கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துகள் சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன். கல்வித் துறையைப் பொறுத்தவரையில் எல்லா துறைகளுக்கும் ஒரு தாய் துறை என்ற அடிப்படையில், இந்த ஆண்டு ஒதுக்கப் பட்ட மொத்தச் செலவில் கிட்டத்தட்ட கால் பங்கு அளவுக்கு இன்றைக்கு நிதி ஒதுக்கம் இதற்குச் செய்யப்பட்டிருப்பது வரவேற் கக் கூடிய ஒன்றாகும் சென்ற ஆண்டு 402 கோடி என்ற அளவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு 468 கோடி என்ற அளவுக்கு அது ஒதுக்கப்பட்டிருக்கிறது இன்னும் கூட கூடுதலாக ஒதுக்கலாம் என்ற நல்ல கருத்தை எனக்கு முன்னாலே பேசிய மரியாதைக் குரிய முஸ்லீம் லீக் கட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். சட்டியிலிருந்தால்தான் அகப்பையில் வரும் என்ற கருத்திற்கு ஏற்ப, இங்கே உள்ள நிலைமைகளுக்கேற்ப இன்றைக்கு கால் பங்கு அளவிற்கு, கூடுதலாகவே நிதியை ஒதுக்கியிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, கல்வி வளர்ச்சிக்காக அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. என்பதை இந்த மானியக் கோரிக்கை நமக்கு நினைவு படுத்திக் கொண்டிருக் கிறது என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அரசாங்கத்தினாலேயே மக்களுடைய கல்வித் தேவையை முழுவதுமாக நிவர்த்தி செய்துவிட முடியாது என்ற கார ணத்தினால்தான் தனியார் துறையில் யாராவது முன் வருவார்களே யானால், கல்வி பணிக்கு தொண்டாற்ற விரும்புவார்களேயானால், அவர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே அப்படிப்பட்ட தனியார் களுக்கும் அந்தக் கல்வி நிறுவனங்களை ஏற்று நடத்துவதற்கு அர சாங்கம் இன்றைக்கு அனுமதியை வழங்கிக் கொண்டு வருகிறது. மேற்கு வங்காளத்திலே ஆண்டுக் கொண்டிருக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட தனியார் துறையை ஊக்கு விக்கக் கூடாது என்று சொல்லும் நிலைமையிலே இருந்தாலும், மக்களுடைய தேவைகளைக் கருதி, சில குறிப்பிட்ட துறைகளை தனியார்களுக்கு ஒப்படைக்கக் கூடிய சூழ்நிலையை நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால் ஏதோ புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியிலேதான் தனியார் பாலிடெக்னிக்குகளையும், தனியார் பொறியியல் கல்லூரிகளையும் ஏற்படுத்தும் நிலைமை இருப்பது



போல நேற்றுக்கூட திராவிட முன்னேற்றக் கழகத்தைசார்ந்த உறுப் பினர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். என்னைப் பொ றுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் இந்த தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 19 பாலிடெக்னிம்களுக்கு, 3, 4 பொறியியல் கல்லூரிகளும் தனியாரி டம் விடப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும் புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தை கொண்டு வந்தால் மட்டும், அது புரட்சித் தலைவர் திட்டம் அல்ல, அது பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய திட்டத்தின் விரி வாக்கம் என்று சொல்கின்ற நண்பர்கள் இதை மட்டும் புரட்சித் தலைவர் கொண்டு வருகின்ற 'செல்ப்-பைனான்சிங் இன்ஸ்டிடியூஷன்' ஏற்கனவே நடத்திய அரசுகளுடைய செயல் களுடைய விரிவாக்கம் என்று ஏன் சொல்லக்கூடாது என்பதை கேள்வியாக வைக்க விரும்புகிறேன். இன்று அரசாங்கம் நடத்தும் கல்விக் கூடங்களில் இடம் கிடைக்காமல் மாணவர்களும் மாணவி யர்களும் கர்நாடகம்மற்றும் வேறு மாநிலத்திற்கும் செல்கின்ற சூழ் நிலையில் 1 லட்சம் $1\frac{1}{3}$ லட்சம் என்று பணம் கொடுத்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதை கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்கு கல்வி நிறுவனங்களில் அக்கறை கொண்டு தனியார்கள் முன்வருகின்றபோது இப்படிப்பட்ட கல்வி நிறுவனங்களை நாம் ஊக்குவிக்கின்றோம். இதே நிலைமை திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு மது விலக்கை ஒத்தி வைக்கின்றபோது ஏற்பட்டது. மது விலக் கை தீவிரமாக அமுல்படுத்தியபோது இந்த தமிழகத்தில் குடிக்கு ஆளாகியிருக்கின்றவர்கள் பக்கத்திலே உள்ள பாண்டிச்சேரிக்கும், கர்நாடகத்திற்கும் சென்று பணத்தை கொடுத்து குடிக்கிறார்கள் என்றுசொல்லித்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். 'எரிகின்ற நெருப்பு வளையத்துற்குள் தமிழகம் எத்தனை நாளைக்குத்தான் தத்தளித்து கொண்டு இருக்கும்' என்ற கருத்தைச் சொல்லி அதை நியாயப் படுத்தி அன்றைக்கு மதுவிலக்கை ஒத்தி வைத்தார்கள். நான் இன் றைக்கு கேட்க விரும்புவது, திராவிட முன்னேற்றக்கழகம் அதை ஒத்தி வைக்கின்றபோது அந்த வாதம் சரியாக இருக்கின்றபோது இன்றைக்கு கல்வித் தேவையினுடைய அவசரத்தைக் கருதி மக் களுக்கு அரசாங்கமே முழுமையாக செய்ய முடியாத ஒரு சூழ்நிலை யில் தனியாருக்கு வாய்ப்பு அளிக்கின்ற இந்தக் கருத்தை அவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்று எனக்கு புரியவில்லை. ஒரு கருத்தை சொல்லியிருக்கிறார்கள் பணத்தை வாங்குகிறார்கள். விலை பேசு கிறார்கள். கமர்சியல் இன்ஸ்டிடியூஷன் ஆக மாறிக் கொண்டிருக் கிறது என்று சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் கல்வியை விலைக்கு விற்கின்ற பொருள்களாக தயவு செய்து மன்ற உறுப்பினர்கள் மாற்றி விடக்கூடாது என்று தெளிவாகச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு வசதி உள்ளவர்கள் ரயிலிலே ஏ. சி. யிலே பிரயாணம் செய்கிறார்ள். வசதி இல்லாதவர்கள் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்கிறார்கள். ஆனால் ரெயில் போய் சேருகின்ற இடம் ஒன்றுதான். வசதி இல்லாதவர்கள் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்கின்ற அந்தக் காரியத்தை யாரும் குறையாக சொல்வதில்லை. புத்தகம் படிக்கும் ஆர்வம் உள்ளவர்கள், வசதி படைத்தவர்கள் விலை கொடுத்து வாங்கி படிக்கிறார்கள் வசதி இல்லாதவர்கள் நூல் நிலையத்திற்குச் சென்று படிக்கிறார்கள் இந்நிலையைக் கருத்தில் கொண்டு பார்க்கின்றபோது தனியார் கல்லூரிகள் ஆரம்பிக்கின்றபோது அதிகமான ஏழை மாணவர்களுக்கு இடங்களை பகிர்ந்து கொடுக்கின்ற ஒரு ஏற்பாட்டை செய்திருக்கிறோம். அரசாங்கத்தி மூலமாக ஏற்படுத்தப்பட்டுள்ள கல்விக் கூடங்களில் 1,200 இடங்கள் இருக்கின்றன என்றால், அந்த இடங்கள் தேர்வு அடிப்படையில், தகுதிகள் அடிப்படையில் தேர்ந்தெடுத்து, பிறகு தனியார் கல்லூரிகளில் 1000 இடங்கள் இருக்குமானால், 500 இடங்கள் மெரிட் பேசிஸ், தகுதி அடிப்படையில் கொடுக்கிறோம். எனவே அரசாங்கக் கல்விக்கூடங்களில் வாய்ப்பு இல்லாத ஏழை மாணவர்களுக்கு தகுதி அடிப்படையில் 50 சதவீதம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி மீறி பணம் கொடுத்து படிக்கிறார்கள் என்று வாதத்திற்கு வைத்துக்கொண்டாலும், அப்படி படித்துவிட்டு, வெளியே வருகின்ற வசதி படைத்தவர்கள் வேலைவாய்ப்பிலே ஏழை மாணவர்களோடு போட்டி போடுவது கிடையாது. தாங்கள் பெற்ற கல்வி அறிவை வைத்து, தாங்களாகவே சுயமாக சம்பாதிக்கின்ற, தொழில் ஆரம்பிக்கின்ற சூழ்நிலையை உருவாக்குகிறார்களே தவிர, வேறு அல்ல.

அதுமட்டுமல்ல, தனியார் ஆரம்பிக்கின்ற கல்வி நிலையங்கள் இன்றைக்கு பல்கலைக் கழகங்களின் கட்டுப்பாட்டிற்குள் தான் இருக்கின்றன. இன்றைக்கு டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜூகேஷன் பொறுப்பு ஏற்றிருக்கும் சீனிவாசன் அவர்கள் முறைப்படி தேர்வு எழுதுவதாக இருந்தாலும் சரி, அல்லது தேர்வு முடிவுகளை வெளியிடுகின்ற காரியமாக இருந்தாலும் சரி; புதியதாக அனுமதி வழங்குகின்ற காரியமாக இருந்தாலும் சரி, அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாட்டிற்குள்தான் சட்ட திட்டத்திற்குள்தான் அவர்களை அனுமதிக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு முழுக்க முழுக்க தனியார் நிறுவனங்கள் அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் உள்ள கல்வி நிலையங்களாக மாறி கல்வித் துறைக்கு பணியாற்றக்கூடிய காரியத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் வரவேற்க வேண்டும்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் நேரத்தை நீட்டித்துக்கொடுக்க வேண்டும், சீக்கிரமாக சுருக்கமாக முடித்து விடுகிறேன். இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து. மற்ற மாநிலங்களில்





சென்ட்ரல் ஸ்கூல் ஆரம்பிப்பதாக ஒரு அபாய அறிவிப்பு வந்
திருக்கிறது. எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை.
கல்வியை கன்கரன்ட் லிஸ்டில் சேர்க்காமல், ஸ்டேட் லிஸ்டிற்கு
கொண்டு வரவேண்டும் என்று போராடிக் கொண்டுள்ள
நேரத்தில் நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்வியைஅமல்படுத்த
வேண்டும் என்ற அந்த போர்வையில் இப்படி சென்ட்ரல் ஸ்கூல்
ஆரம்பிப்பதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.

(நண்பகல் 12-00)

இதை மாநில அரசு மிக உன்னிப்பாக கவனிக்கவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். அடுத்து பெண்களுக்கு என்று தனியாகக்
கல்வி நிலையங்களையும் சென்ட்ரல் ஸ்கூல் என்ற முறையிலே மத்திய
அரசு ஆரம்பிக்கின்ற கல்வி நிலையங்களையும் ஆரம்பிக்கின்றபோது
அவைகளிலே இந்தத் தணிப்பு மறைமுகமாக இருக்குமோ என்ற
அச்சம் ஏற்படுகிறது. பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள்
கொடுத்த உறுதிமொழி மீறப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகி
றது. ஆகவே மாநிலங்களிலே ஒரே விதமான கல்வி என்ற முறையிலே
கொள்கையை உருவாக்குவது சரியாக இருக்காது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்
னார்கள். பூனையும் அதன் குட்டியும் போவதற்கு ஒரே வழி
இருந்தால் போதுமானது, அவைகளுக்கு தனித் தனி வழிகள்
தேவைஇல்லை என்று சொன்னார்கள். அதைப்போலவே
இந்திய அரசின் கல்விக் கொள்கையின் மூலமாக மாநில அரசுகளும்
மக்களும் பாதிக்கப்படலாம். இருமொழிக் கொள்கைக்கும்பாதிப்பு
ஏற்படலாம் என்பதால் மாநில அரசு இதிலே உன்னிப்பாக இருக்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அவருக்கு
இருக்கிற அச்சத்தை தெரிவிக்கிறார். அவரவர்கள் கட்சி சார்பில்
பேசுகிறபோது தங்கள் தங்கள் கருத்துக்களைக் கேட்கலாம். இப்
போது குறுக்கிடவேண்டாம்.

திரு. செ. செம்மலை: காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு ஒரு மகிழ்ச்சி
யான செய்தியை நான் சொல்லவிரும்புகிறேன். பாரதப்பிரதமர்
திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பெண்கள் கல்வி வளர்ச்சிக்காக 400
கோடி ரூபாய் அளவிலே ஒரு தனித் திட்டத்தை அறிவித்து அதற்கு
பாடுபடுவதாக அறிவித்திருக்கிறார்கள். அதைநான் வரவேற்கிறேன்.
ஆனால் அப்படிச் சொல்கிறபோது தனிப் பள்ளிகளாக அவர்கள்
ஆரம்பிக்காமல் மாநில அரசுகளுக்கே அந்தத் தொகையைக்
கொடுத்து கல்வியை வளர்ப்பார்களேயானால் வசதியாக இருக்
கும். அவர்கள் இப்போது தான் பிளஸ் 2 அறிவித்திருக்கிறார்கள்.
ஆனால் நம்முடைய சர்க்கார் ஏற்கனவே அதை அறிவித்து நடை
முறைப்படுத்திக் கொண்டுவருகிறது. இப்படிப்பட்ட நம்முடைய

நல்ல கல்வித் திட்டங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கிற வகையிலே மத்திய சர்க்கார் முன்வரவேண்டுமென்று. நான் கேட்டு கொள்கிறேன்.

அடுத்து முறைசாரா கல்வியைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலம் முதன்மையாக இருக்கிறது. வரவேற்கத்தக்கதாக இருக் கிறது. 30.5 சதவீதம் என்ரோல்மெண்ட் சாதனையை எட்டி யிருக்கிறோம். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற பல்கலைக் கழகத்துடன் இணைக்கும் முறையிலே இது இருக்கிறது. நான் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். குறைந்த செலவிலே நிறைவான கல்வியைப் பெறுகிற வாய்ப்பு அதிலே இருக்கிற காரணத்தினாலே மற்றப் பல்கலைக் கழகத்தோடு அதை தொடர்புபடுத்தாமல் அதற்காக என்றே ஓப்பன் யுனிவர்சிடி என்று சொல்லப்படுகிற வகையிலே ஒரு தனிப் பல்கலைகழகத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்

ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும், தரம் குறைந்து கொண்டே வருகிறது, அது மிகவும் துர்பாக்கியமான நிலைமையாகும். அது மாணவர்களுடைய குறைபாடா ஆசிரியர்களுடைய குறைபாடா அல்லது பெற்றோர்களின் அக் கறையின்மையா என்று ஆராயப்பட வேண்டும். ஆரம்பக் கல்வி தான் அஸ்திவாரம் போன்றது. அஸ்திவாரமே ஆட்டம் கண்டு விடுமானால் மேலே இருப்பதும் பாதிக்கப்படும். ஆகவே ஆரம் பக்கல்வி பாதிக்கப்படுகிற நிலைமையைப் போக்குவதற்காக, அமைச்சர் அவர்கள் அதுகுறித்துப் பரிசீலிக்க ஒரு வல்லுநர் குழுவை நியமித்து ஆரம்பக் கல்வியின் தரத்தை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதி சம்பந்தமான இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ள விரும்புகிறேன். தாரமங்கலம் தொகுதியிலே அமரக்குறிச்சியிலே ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தரவேண்டும். தாரமங்கலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். குள்ளமடையானூர் உயர்நிலைப் பள்ளிக் கூடத்திலே வகுப்பறை கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். அதேபோன்று குள்ச்சம்பட்டி, சின்னப்பம்பட்டி ஆகிய ஊர் களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் கூடங்கள் அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டு இந்த [அளவோடு விடை பெறு கிறேன். நன்றி வணக்கம்.





*திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூ னிஸ்ட் கட்சியின் சார்பாக பல்வேறு விவரங்களை விரிவாக சொல்ல வேண்டிய அவசியம் இருந்தபோதிலும், கால வாய்ப்பு மறுக்கப்பட்டு இருக்கிற காரணத்தினால், சுருக்கமாக ஒருசில விஷயங்களை சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது. இங்கே கல்வி மானியத்திற்காக 468 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பது குறித்து, இது ஒரு பெரிய தொகை என்ற முறையிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டு பேசியிருக்கி றார்கள். ஆனால் 468 கோடி ரூபாய் என்பது பொதுவாக பார்க்கிறபோது ஒரு பெரிய தொகையாக தெரிந்தாலும் கூட, பண வீக்கத்தின் காரணமாக அது 19 பைசா என்று நடை முறையில் குறைந்து போய்விட்டிருக்கிறது என்கின்ற உண்மையை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே அதிகமான நிதி ஒதுக்கப் பட்டு விடுவதாலேயே அதிகமான வேலைகள் நடைபெற்றுவிடும் என்று நம்புவது ஒரு கடினமயான விஷயமாக தெரிகிறது.

குறிப்பாக நான் வலியுறுத்தி சொல்ல விரும்புவது, நம்முடைய மாநில அரசு தமிழை நேசிக்கின்ற அரசு என்ற முறையிலும், தமிழ் வளர்ச்சியில் அக்கறைகொண்ட அரசு என்று சொல்லப் படுகின்ற காரணங்களாலும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில வருடங்களாகவே தமிழ்நாட்டில் நர்சரி பள்ளிகள் மிக அதிகமாகி விட்டன. அந்த நர்சரி பள்ளிகளில் எதிர்காலத் தமிழகத்தை உருவாக்குகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு விட்டது. அந்த நர்சரி பள்ளியில் பயிலுகின்ற குழந்தைகள் வீட்டுக்கு வந்த உடன் தன்னுடைய தாயை அம்மா என்று கூப்பிடாமல் 'மம்மி' என்று கூப்பிடுகிற ஒரு விபத்து ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொடர்ந்து அனுமதிக்கப்படுமானால் மெல்ல மெல்லத் தமிழ் நாட்டில் தமிழ் வழக்கிலிருந்து ஒழிக்கப்பட்டுவிடுமோ என்று நான் பயப்படுகிறேன். முதலில் இந்த நர்சரி பள்ளிகளை கட்டுப் படுத்தப்பட வேண்டும். நாம் உலக தமிழ் மாநாடு நடத்து வதாலோ, உலக தமிழ் சங்கத்தை நிறுவிவிட்டதாலோ அல்லது தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒரு துறை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தாலோ தமிழ் வளர்ந்து விடாது. தமிழ் அழிந்து கொண்டிருக்கும் இத்தகைய போக்கு தவிர்க்ப்படவேண்டும் என்று சுருக்கமாக குறிப்பிட விரும்புகிறேன். ஏன் இத்தகைய விபத்து ஏற்படுகிறது? எல் லோரும் ஏன் ஆங்கில மோகத்திற்கு ஆட்பட்டுக் கிடக்கிறார்கள். தமிழ் கற்றுக்கொள்ளுவதில் நாம் ஊக்குவித்தாலும் அதில் அவர்கள் அக்கறை செலுத்தவில்லை. அதற்கு காரணம் என்ன? வேலைவாய்ப்பு கிடைக்காது என்பதால்தான். என் கைவசம் தமிழில் பட்டம் பெற்றவர்களின் பல மனுக்கள் இருக்கின்றன. தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு இன்றளவில் தமிழ்நாட்டில் வேலை கிடைக்கவில்லை. தமிழ் நாட்டில் ஆங்கிலத்தில் பட்டம்

பெற்றவர்களுக்குதான் வேலை கிடைக்குமா? தாய் மொழி தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை கிடைக்காதா? கிடைக்காது என்பது ஒரு நல்ல முன் உதாரணம் அல்ல என்பதை மாநில அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். எனவே தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முதலிடம் என்பதை கறாராக அறிவிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து, குறிப்பாக ஆசிரியர்களின் தொடர்ச்சியான போராட்டம். நான் அதைப்பற்றி நிறைய சொல்ல வேண்டியிருக்கிறது. கோரிக்கைகளை விளக்க வேண்டியிருக்கிறது. அனேகமாக எதிர்க்கட்சியின் தரப்பிலிருந்து தான் அவற்றை சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எந்த ஆசிரியர்களும் தமிழ் நாட்டில் போராடாத நாள் இல்லை. கடந்த எட்டாம் தேதியிலிருந்து கூட சென்னையில் மறியல் நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக போராடுகிற இந்த கருத்துக்கள் அரசாங்கத்தால் கவனிக்கப்படுகிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஜனநாயக அமைப்பு வழங்கியிருக்கிற அந்த கட்டமைப்புக்குள் நின்று போராடுகிற ஆசிரியர்களின் கோரிக்கை காலத்தில் தீர்க்கப்படவில்லைஎன்றால் அவர்கள் என்ன செய்வார்கள். வேறு வழியை நாடுவார்கள். வன்முறைக்கு யார் காரணமாவார்கள். ஜனநாயக கட்டமைப்புக்குள் கருத்துக்களை தெரிவிக்கின்ற ஆசிரியர்களின் கோரிக்கைகளை காலத்தில் தீர்க்கவில்லையென்றால் அவர்கள் ஜனநாயக ரீதியில் நீங்கள் போராடினால் தீராது என்று அரசு மறைமுகமாக நிர்பந்திப்பது போல் ஆகாதா? எனவே அந்தக் கருத்துக்களையும் கோரிக்கைகளையும் காலத்தில் தீர்க்கப்பட வேண்டும். அந்தக் கோரிக்கைகளைப் பற்றி சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. அனைத்து ஆசிரியர்களும் கோரிக்கை வைத்துள்ளார்கள். தமிழ் ஆசிரியர்களின் கோரிக்கைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்பதையும் நான் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஏன் இதை வலியுறுத்த வேண்டியிருக்கிறது என்றால் குருவை தெய்வமாகத்தான் தமிழ்நாட்டில் வணங்குகிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள்கூட அவர்கள் பிள்ளைப் பருவப் பிஞ்சு கரங்களுக்கு எழுதக் கற்றுக் கொடுத்தவர்களே துவக்கப்பள்ளி ஆசிரியர்கள்தான். ஆனால் தங்களுக்கு ஆரம்ப அட்சரத்தை எழுதக் கற்றுக் கொடுத்ததே அந்த துவக்கப் பள்ளி ஆசிரியர்கள்தான். அவர்கள்துயர் நீங்குவதற்கு உங்கள் கரத்தால் உத்திரவு போடக்கூடாத? துவக்கப்பள்ளி ஆசிரியர்களின் குறை தீர்க்கப் படாதநிலை எவ்வளவு வேதனையாக இருக்கிறது தெரியுமா: அவற்றை மிகுந்த பரிவு உணர்ச்சியோடு பரிசிலித்து தீர்க்கப்பட வேண்டும், கவனிக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





(பிற்பகல் 12-10)

தனியார் பள்ளிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தனியார் பள்ளிகள் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டு இருக்கின்றன. எனக்குப் படுகின்ற கருத்து புள்ளி மான்களை வேட்டை ஆடுவதற்காகப் புலிகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதைப்போல, தமிழ்நாட்டில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அவற்றிற்கு நியாயம் கற்பிக்கிறார்கள். ஏன் அது திராவிட முன்னேற்ற கழகத்தின் காலத்தில் இல்லையா, அதற்கு முன் இல்லையா, அதுபோலத்தான் நாங்கள் தொடர்ந்து செய்கிறோம் என்று கூறுகிறார்கள். பாட்டன் உப்புத் தண்ணீர் குடித்தால் நாமும் உப்புத் தண்ணீர்தான் குடிக்க வேண்டுமா? முன்னர் ஒரு தவறே நடந்ததாக வைத்துக் கொள்வோம். அவற்றை ஏன் நாம் தொடர வேண்டும்? தொடர்தல் தகாது அல்லவா? எனவே அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும். தனியார் கல்வி நிறுவனங்கள் அனுமதிக்கப்படக் கூடாது. கல்வித் துறை வியாபாரச் சரக்கு அல்ல; கல்வித் துறையை வியாபாரச் சரக்காக அனுமதிப்பதன் மூலம், பல மோசமான விளைவுகள் சமுதாயத்தில் தோன்றுகின்றன. அந்த விஷப் பூண்டுகளைத் தோற்றுவிக்கக் கூடிய ஆரம்ப இடமாக அவை அமைந்து விடுகின்றன. அவற்றின்படிதானே நிற்கப் போகிறார்கள். இலஞ்சத்தையே கொடுத்துக் கற்றால் அவன் எப்படி வளருவான்? இலஞ்சம் வாங்கித்தானே வளருவான்? ஆகவே கற்கின்றபொழுதே கசடறக் கற்றுக் கொடுக்க வேண்டுமல்லவா? இங்கே என்ன நடக்கிறது தனியார் கல்லூரிகளில்? நன்கொடை என்ற பெயராலே ஒரு வழிப்பறி நடக்க அனுமதிக்கப்பட்டு விட்டதோ என்றே நான் அச்சப்படுகிறேன். தனியார் கல்லூரிகளில் நடக்கின்ற கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி என்று இருக்கிறது. அந்தக் கல்லூரியிலே சமீபத்திலே ஒரு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. ஆசிரியைகள் யாரும் பணிக் காலத்தில் பிரசவப்பேற்றுக்கு ஆளாகக் கூடாது என்று. என்ன சொல்கிறது அந்தத் தாக்கீது? ஆசிரியைகள் தங்கள் கணவரோடு உறவு கொள்ளவே கூடாது என்று சொல்ல ஒரு தாக்கீதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் குற்றச்சாட்டு சொல்வதை பற்றி நான் குறுக்கிடவிரும்பவில்லை. ஆனால் ஒரு நிறுவனத்தைப் பற்றி சொல்கின்றபொழுது, ஆதாரம் இருந்து, அவர்கள் தெரிந்து சொல்வார்களேயானால் அது எங்களுக்கும் பயன் தரக் கூடியதாக இருக்கும். இப்பொழுது அந்த அவினாசிலிங்கம் கல்லூரி மாண்புமிகு உறுப்பினர் ரமணி தொகுதியில் இருக்கிறது. நானும் கோவை

நகரத்தைச் சார்ந்தவன்தான். இந்தக் கல்லூரி விவகாரமாகக்
கடந்த இரண்டாண்டுகளாக ஆசிரியைகளையும் சந்தித்துக் கொண்டு
இருக்கிறேன்; அதை நடத்துகின்றவர்களையும் சந்தித்துக் கொண்டு
தான் இருக்கிறேன். நான் விசாரித்த அளவில், அப்படி எந்தத்
தாக்கீதும் தரப்படவில்லை என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள்.
அப்படி ஒரு தாக்கீது அனுப்பியிருப்பார்களேயானால் அதற்கு உரிய
நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். அதுமட்டுமல்ல, இந்த
அரசு வந்ததற்குப் பிறகுதான் இந்தப் பிரசவ கால விடு
முறையைத் தந்திருக்கிறோம். அத்தகைய வாய்ப்புகளை நாமே
தந்துவிட்டு, அதை மறுக்கின்ற அளவுக்கு இருக்கின்ற நிர்வாகத்
திற்கு நிச்சயமாக இந்த அரசு துணை போகாது. மாண்புமிகு
உறுப்பினரவர்கள் சொல்வது—இபபொழுது தாக்கீது வந்திருப்
பதாகச் சொல்கிறார்கள்—அது அப்படி அல்ல. இந்தக் குற்றச்
சாட்டு இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே அந்த நிர்வா
கத்தின்மீது சொல்லப்பட்டது. நான் விசாரித்த அளவிற்கு
எதுவும் வரவில்லை. அதுமட்டுமல்ல, நானே மாதம் இரண்டு
முறை கோவைக்குப் போய்கொண்டு இருக்கிறேன். என்னிடத்திலே
வந்து யாரும் இப்படி நடந்ததாகச் சொல்லவில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள்
இப்படித் தாக்கீது கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள்.
அங்கே லீவ் எடுத்துக் கொண்ட ஆசிரியைகள் விஷயத்தில் அங்கே
யிருக்கின்ற அந்தக் கல்லூரியினுடைய அதிகாரிகளுக்கும், அந்த
ஆசிரியைகளுக்கும் தகராறு ஏற்பட்டு, உங்களுக்குப் பிரசவ காலம்
என்பது இந்த மாதிரி லீவ் எடுத்துப் பயன்படுத்தக்கூடிய நிலைமை
இல்லாமல் லீவ் காலத்தில் வரவேண்டுமென்ற பேச்சு நடந்திருக்
கிறது. அதைப்பற்றி அவர்கள் வெளியே இயக்கத்தின் மூலமாகத்
தெரிவித்திருக்கிறார்கள். குழந்தை பெறக்கூடாது என்று எழுத்து
மூலமாக எந்தக் காலத்தில் எழுதிக் கொடுத்தார்கள் என்றுகொடுக்
கின்ற ஆதாரம் என் கையில் இல்லை. ஆனால், இப்படிப்பட்ட
பேச்சு நடந்திருக்கிறது. அவர்கள் அதை எதிர்த்திருக்கிறார்கள்.
இதை அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, இதைவிட மோசமாக சொல்லப்பட்ட ஒரு குற்றச்
சாட்டு, கருவடைந்த ஒரு ஆசிரியையை அந்த விளையாட்டுத்
திடலிலே ஓடச் சொல்லி, கருவைச் சிதைத்ததாகக் கூட
வெளியே பேசினார்கள். ஆனால் நான் விசாரித்த அளவில் அவ்
வளவு கொடுமைகள் அல்ல—ஆனால் கொஞ்சம் கண்டிப்பாக
இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டதே தவிர, இப்படியெல்லாம்
அநாகரீகமாக நடக்கவில்லை. இதை ஆரம்பித்தவர் முன்னாள்
கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள். அவர்கள்
இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அவருடைய, தலை
மையில்தான் நடைபெறுகிறது. அப்படியிருந்தால் ஆசிரியைகள்



வந்து என்னிடத்திலேகூடச் சொல்லியிருக்கலாம். ஆனால் அப்படிப்
பட்ட பெரிய குற்றச்சாட்டைச் சொல்லவில்லை. ஆனால், அவர்
களுக்கும் நிர்வாகத்திற்கும் சில முரண்பாடுகள் இருக்கின்றன;
அவைகளை நாம் இரண்டாண்டுக் காலத்திலே தீர்த்ததினுடைய
விளைவுதான் இப்பொழுது கல்லூரி அமைதியாக நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற
நிகழ்ச்சியைத்தான் குறிப்பிட்டேன். ஆசிரியர்கள் மாநாடு நடத்தி
இது குறித்துத் தீர்மானத்தை நிறைவேற்றி உரிய அதிகாரிகளுக்கு
அனுப்பியிருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை இல்லை. அத்
தகைய நிர்ப்பந்தங்கள் நிலவிய அன்றைய நிலையில் பலருக்கும்
பரவலாக இந்த விஷயம் சொல்லப்பட்டு ஆர்ப்பாட்டம் நடை
பெற்றது.

பொதுவாகத் தமிழ் நாட்டில் செய்யப்படவேண்டிய பகுத்
தறிவு மற்றும் விஞ்ஞானக் கருத்துக்கள் உள்ளடங்கிய பிரசா
ரத்தைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட இயக்
கத்தின் பாரம்பரியத்தின் பகுத்தறிவுக் கருத்துக்களை இன்னும்
கைவிட்டு விடாது இருக்கின்ற ஒருசில அமைச்சர்களில் கல்வி
அமைச்சரும் ஒருவர் என்று நான் நம்புகிறேன். அவரின் கீழ்
இத்தகைய பிரச்சாரம் நடைபெறும் என்ற உறுதியான நம்பிக்கை
யோடு நான் இதை முன் வைக்க விரும்புகிறேன். ஏனென்றால்
தமிழ் நாட்டில் கடந்த சில மாதங்களாக வருகின்ற, கேள்விப்படு
கின்ற செய்திகள் ஆரோக்கியமானதாக இல்லை. வேப்பமரத்தில்
இருந்து பால் வடியுமானால் அது பால்மாரியம்மன் என்று சொல்லி
கோயில் கட்டிக் கொள்கின்ற அளவுக்கு மூடக் கருத்துக்கள்
மேலோங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு பப்பாளிப்பழம் வித்தியாச
மாகத் தெரியுமானால் அதில் ஆண்டவருடைய ரூபம் தெரிகின்றது
என்று பார்க்கிற அளவுக்குத் தங்களுடைய அறிவை
வசமிழந்த நிலையில் விட்டுக் கொண்டிருக்கிற நிலைமையை
மாற்றுவதற்குரிய முறையில் மூடக் கருத்துக்களுக்கு எதிரான பிரச்
சாரத்தை, இன்றைய விஞ்ஞான வளர்ச்சிகளை, பகுத்தறிவு கருத்
துக்களைப் பிரச்சாரம் செய்கின்ற முறையில் செய்திப் படங்களை
அரசு தயாரித்து வெளியிட வேண்டும் என்பதை நான் குறிப்
பிட்டுச் சொல்லிக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில், வருகிற ஏப்ரல் 16,17,18
தேதிகளில் ஒரு நுழைவுத் தேர்வு, நேர்முகத் தேர்வு எம். பி. ஏ.
கோர்ஸ்-க்காக நடைபெற இருக்கிறது. கடந்த 1979-ஆம் ஆண்
டிலே நடைபெற்ற அந்த நுழைவுத் தேர்வுகளில் தங்களுக்கு
வேண்டிய மாணவர்களுக்கு மார்க்கை உயர்த்தித் திருத்திக்கொள்

கிற ஒரு ஊழல் நடைபெற்றது என்று ரிக்கார்டு பூர்வமான ரிப்போர்ட் ஆளுநர் உட்பட பலருக்கும் செய்யப்பட்டிருக்கிறது.

** ** **

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாற்றுத் தலைவர் அவர்களே,

* * *

இங்கே இல்லை, எனவே அவரைப் பற்றி இங்கே குற்றச்சாட்டுகள் சொல்வதைத் தாங்கள் அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): அவையில் இல்லாதவர்களைப்பற்றிய குற்றச்சாட்டுகள் கூறக்கூடாது. எனவே அப்படிக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. வி. பி. சிந்தன் : மாற்றுத் தலைவர் அவர்களே, சில குறிப்பிட்ட பிரச்சினைகளைப்பற்றிப் பேசும்போது சில நபர்களுடைய பெயர்கள் வரத்தான் செய்யும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : இங்கே அவர்கள் உறுப்பினராக இல்லை என்பதால் அவர்களால் இங்கே வந்து பதில் சொல்ல இயலாது. ஆனால் இவ்வாறு குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் ஏதேனும் சொல்வதாக இருந்தால் அவைத் தலைவரிடம் முன் அனுமதி பெற்றுப் பேசவேண்டும்.

திரு. கு. சுப்பராயன் : மாற்றுத் தலைவர் அவர்களே, ரிக்கார்ட்பூர்வமான புகார் இருக்கிறது ஆளுநருக்கு அதுபற்றி அனுப்பப்பட்டாதக ரிக்கார்ட் இருக்கிறது. அப்படி ஆளுநரே விசாரணைக்காக அவற்றை அனுப்பியும்கூட சிண்டிகேட்டின் முன்னால் அன்றைய வைஸ் சான்சலர் அவற்றை வைக்கவில்லை என்று சொல்வதில் என்ன தவறு ? ஆகவே அது உள்நோக்கத் தோடு சொல்லப்படுவதல்ல. கடந்த காலத்தில் அப்படி வைக்கப் பட்ட குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்ப தைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அந்த வகையில் அன்றைக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் என்ன காரணம் ?

** ** **

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : சீக்கிரம் முடித்து விடுங்கள். நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு. கு. சுப்பராயன் : பாரதியார் பெயர் தாங்கியிருக்கிற பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறை இல்லை. பாரதியார் பெயர் தாங்கியிருக்கிற பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்த் துறை வேண்டு மென்று நான் வலியுறுத்துகிறேன்.

(பிற்பகல் 12-20)

அதே போல் அதனுடைய வைஸ் சான்சலராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய திரு. சுப்பையன் அவர்கள் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே காலியாகிற இடங்களுக்கு ஆட் களை எடுப்பதற்கு எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சிலிருந்து சால் ஃபார் பண்ணுவதில்லை. அவர்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்களைப் போடுகிறார்கள்.

அதோடு இலட்சக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள நூல கத்தை உருவாக்குவதற்கு அங்கே எந்த முறை அமுலாக்கப்படு கிறது ? தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய புத்தக நிறுவனங்களை எல்லாம் அணுகுவதில்லை, பெங்களூரிலே இருக் கக்கூடிய ஒரு புத்தக நிறுவனம் மட்டும் அழைக்கப்படுகிறது. மற்றவர்கள் ஏன் அழைக்கப்படவில்லை ? அதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் குறிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணாவினுடைய அன்புத் தம்பிகளாக இருந்து கலைஞர் அவர்களுடைய காலத்திலே நாங்கள் எல்லாம் கடைக் கோடிக்குத் தள்ளப்பட்டு, அப்படிப்பட்ட அண்ணாவினுடைய அன்புத் தம்பிகளை எல்லாம் இந்த உலகத்திற்கு அறிமுகம் காட்டி, இந்தச் சபைக்கும் எங்களை எல்லாம் அறிமுகம் காட்டிய தோடு மட்டுமல்லாமல், என்னுடைய சொந்த வாழ்க்கையிலும், அரசியல் வாழ்க்கையிலும் என்னை உருவாக்கிய என்னுடை இதய தெய்வம் புரட்சித் தலைவருக்கு என்னுடைய நன்றி கலந்த வணக் கத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, புரட்சித் தலைவர் மீண்டும் தமிழகத்தினுடைய மூன்றாவது முறையாக முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதற்காக, எனக்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்த குத்தாலம் வாக்காளப் பெரு மக்களுக்கும், கழகத்தினருக்கும் அதே போல என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத் தோழர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

அதோடு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் மீண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆக வேண்டும், அவர் இந்த நாட்டில் உயிர் பெற்று மூன்றாவது பிறவி எடுக்க வேண்டுமென்பதற்காக 25-க்கு மேற்பட்டவர்கள் ஆண்

டவனே, இறைவனே எங்களுடைய உயிரை எடுத்துக் கொள், எங்களைக் காத்துக்கொண்டிருக்கிற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவரை வாழ வை என்று தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்ட அந்தத் தியாக மறவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய கண்ணீரை காணிக்கை ஆக்குகிறேன்.

அதே போல் இன்னும் பல பேர்கள் ஆண்டவனுடைய சன்னிதானங்களுக்குச் சென்று, தங்களுடைய கண்ணீரைச் செலுத்தி, சில பேர் தங்களுடைய இரத்தத்திலே ஆண்டவனை அபிஷேகம் செய்வதை ஆண்டவனே பார்க்கிறான். இனியும், தமிழகத்தை சோதித்தால் தமிழகத்திலே இருக்கும் கோவில்கள் தரைமட்டமாக்கப்படும் ஆஸ்திகம்-அழிந்து போகும் என்பதை அறிந்த ஆண்டவன் தான் இருக்கிறேன் என்பதை நிரூபிக்க தன்னைத்தானே காத்துக் கொள்ள ஆண்டவன் புரட்சித்தலைவரை காத்திருக்கிறார். இதுதான் வரலாறு. அந்த ஆண்டவனுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு உலக வரலாற்றிலேயே மருத்துவத்திலே ஒரு மாபெரும் சாதனையைப் புரிந்த அந்த மருத்துவ வல்லுநர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் புரட்சித் தலைவர் கொண்டு வந்திருக்கிற இந்த பட்ஜெட்டைப் பார்த்து செய்து காட்ட முடியாதவர்கள். சுயதிறனற்றவர்கள் உப்பில்லை, சப்பில்லை என்றெல்லாம் பல்வேறு வகையில் பேசினார்கள். இப்பொழுது கொண்டு வந்திருக்கிற இந்த பட்ஜெட்டிலே மாடமாளிகையிலே, கூட கோபுரங்களிலே, அரண்மனை போன்ற வீடும், அம்பாஸிடர் காரும், டன்லப், ஸ்பென்சர் மெத்தை போன்ற ஆடம்பர சுகங்களோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு உப்பும் இருக்காது, சப்பும் இருக்காது. ஆனால், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி. படுக்க பாயற்று, பஞ்சையாய், பராரியாய், வக்கற்று, வாழ வழியற்று திக்கற்று நிற்கின்ற தென்திசை தமிழருக்குதான் இந்த பட்ஜெட் கொண்டு வரப்பட்டதே தவிர, இந்த பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட ரூ. 468 கோடியைக் கல்விக்காக ஒதுக்கி, அதிலே வாழையடி வாழையாக ஏழையாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறதே பாட்டாளி வர்க்கம், அந்தப் பாட்டாளி வர்க்கத்தினுடைய கல்வி முன்னேற்றத்திற்காக புரட்சித் தலைவர் அரசு மாபெரும் சீர்திருத்தத்தைச் செய்திருக்கிறது. அது மட்டுமல்ல புரட்சித் தலைவருடைய இந்தக் கல்வித் திட்டத்திலே வாழ்க்கையோடு கூடிய ஒரு கல்வி முறையையும் இப்பொழுது அரசு முதல் முறையாக அறிவித்து இருக்கிறது. பெரியவர்கள் சொல்வார்கள். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது', 'பள்ளி படிப்பு புள்ளிக்கு உதாவது' என்று சொல்வார்கள். அதேபோல ஒரு காலத்திலிருந்து தொன்றுதொட்டு வந்து விட்ட வழக்கமான கல்விமுறையை மாற்றி ஒவ்வொருவரும் படிக்கிற நிலையில் ஏதாவது



ஒரு பகுதியாக ஒரு தொழிலை கற்று அதன் மூலமாக தங்களுடைய வாழ்க்கையை தக்க வைத்துக்கொள்ள வேண்டும், தங்களுடைய வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவருடைய அரசு அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தை ஏழைகளின் சார்ப்பாகவும், தமிழக மக்களின் சார்ப்பாகவும் வருக, வருக என்று வரவேற்கிறேன்.

புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் கல்வி கற்றுக் கொடுக்கிற ஆசான்கள் எல்லோரும் அடிமை விலங்கில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு காலத்திலே பள்ளி ஆசிரியர்கள் எல்லாம், குறிப்பாக ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள் எல்லாம், அந்த ஊராட்சி மன்றத்தின் பெருந்தலைவருக்கும், ஊராட்சி மன்றத்தின் தலைவருக்கும் கொத்தடிமைகளாக இருந்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் வருகிற போது ஆசிரியர் ஒருவர் சைக்கிளில் வருகிறார் என்றால், சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு அந்தத் தலைவரை கையெடுத்து கும்பிட்டு விட்டு தான் அந்த இடத்தை விட்டு போக முடியும் என்ற நிலை இருந்தது. அந்த அளவிற்கு ஆசிரியர்கள் அவர்களிடத்தில் கொத்தடிமைகளாக நடத்தப்பட்டார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களை எல்லாம் இன்றைக்கு விடுவித்து, அவர்கள் சுதந்திரப் பறவைகளாக இந்த நாட்டில் வாழ வேண்டுமென்ற உத்தரவைத் தந்த ஒரே தலைவர் புரட்சித்தலைவர் அவர்கள் தான் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டார்கள். தனியார் பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்களுக்கு எல்லாம் புரட்சித் தலைவர் அரசு தான் சம்பளம் கொடுக்கிறது. ஆனாலும் அந்த தனியார் துவக்கப்பள்ளிகளில் இருக்கிற ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர்களாக, மாற்றான் தாய் பிள்ளைகளாக நடத்தப்படுகிற கொடுமை இருக்கிறது. எனவே புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஆசிரியர்களை தத்து எடுத்துக் கொண்டு, அந்தத் தனியார் [துவக்கப்பள்ளி] எலிமெண்டரி பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஏழை, எளிய பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் அத்தனைப்பேரும் படிக்க வேண்டும் என்பதற்காகத் தான் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சத்துணவுத் திட்டத்தை தட்டு தூக்குகிற திட்டமென்று செய்து காட்ட முடியாதவர்கள், தெம்பற்றவர்கள், திறனற்றவர்கள் கேலியாக பேசினார்கள். சத்துணவுத் திட்டம் என்பது சமுதாயத்தை மாற்றக் கூடிய, புதிய வரலாற்றை படைக்

கக்கூடிய திட்டமாகும். அந்தத் திட்டத்தின் வாயிலாக முன்பு இருந் தைவிட அதிக அளவில் மாணவர்கள் கல்விக்கூடங்களில் பயின்று தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஏழை எளிய மாணவர்களுக்கெல்லாம் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையில் சீருடை தந்திருக்கிறார்கள். அதேபோல இலவச புத்தகங்களை யும் வழங்கி இந்த அரசு புதிய சமுதாயத்தை உருவாக்கி இருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியை குறித்த ஒருசில கோரிக்கை களை எடுத்துச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இஞ்சியும் மஞ்சளும் கொஞ்சி விளையாடும் எங்கள் தஞ்சை தரணியில் புதி யதாக ஒரு விவசாய கல்லூரியை உருவாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், அதேபோல தஞ்சை மாவட்டத்தில் புதியதாக ஒரு என்ஜினியரிங் கல்லூரியை உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய குத்தாலம் தொகுதியில் ஒரு பாலிடெக்னிக்கும் பெண்களுக்கென்று ஒரு உயர்நிலைப் பள்ளியும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். அதே போல கொடவாசல் பகுதியில் ஐ.டி.ஐ. ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, கொடுத்த வாய்ப்பிற்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே,

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர்எனின்"

என்ற வள்ளுவன் வார்த்தைகளை இங்கே நினைவுகூர்ந்து என் னுடைய கருத்துக்களை வைக்க விரும்புகிறேன்.

நேற்றைக்கு நடந்த ஒரு தனியார் விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்திய தேசியத்தில் ஒற்றுமையையும், ஐக்கி யத்தையும் வளர்ப்பதில் கல்வியின் பங்கைப் பற்றி சிறப்பாகப் பேசியதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து, அதைச் செயல்படுத்துவதற்கான மாபெரும் பொறுப்பு உங்களிடத் தில்தான் இருக்கிறது என்று கூறி, நீங்கள் சொல்லிய கருத் துக்களை செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



(பிற்பகல் 12-30)

இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சென்ட்ரல் ஸ்கூல் வருவது பெரிய அபாயம் என்று குறிப்பிட்டார். அதிலே அபாயம் ஒன்றும் இல்லை. அது அபாயம் என்று அவர்கள் கருதினால் அவர்களுடைய தொகுதியில் வைக்கப்பட இருக்கிற சென்ட்ரல் ஸ்கூலை என்னுடைய தென்காசித் தொகு திக்கு மாற்றித் தரும்படி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டததிற்கு தரப்பட்டிருக்கிற சென்ட்ரல் ஸ்கூலை தென்காசி தொகுதியில் குற்றாலம் நகரில் வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர். கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசப்பட்ட ஒரு கருத்தின் அடிப்படையில் தன்னுடைய எண்ணத்தைச் சொல்கிறார்கள். சென்ட்ரல் ஸ்கூல் வருவதிலே அபாயம் இருக்கிறது என்ற கருத்து வருவதற்குக் காரணம் அது கல்வி வளர்ச்சிக்காக அல்ல, இந்தி வளர்ச்சிக்காக என்ற அடிப்படையில் செய்கிறார்கள். அப்படி வைக்கப்படுகிற பள்ளிகளில் இந்திக்கு முக்கியத்துவம் இல்லாமல் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் என்று இருந்தால் அதிலே பிரச்சினை ஒன்றும் இருக்காது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுபற்றிய விளக்கத்தை மத்திய கல்வி அமைச்சரிடம் கலந்து தெரிந்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்து, என் னுடைய உரையைத் தொடருகிறேன்.

இந்த கல்வி மானியத்திற்கு அதிகமான பணம் செலவிடு வதாக கூறப்பட்டிருக்கிறது.

Quantitative expenditure in education will not ensure a quali- tative return on education என்பதைக் குறிப்பிட்டு, இங்கே சொல்லப்பட்டிருக்கிற செலவினங்களை இந்த மானியக் கோரிக் கையில் பார்க்கும்போது கல்விக்காகச் செலவிடும் பணத்தில் பெரும்பகுதி நிர்வாகச் செலவுக்குப போய்விடுகிறது. "சுண் டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்" என்பதைப் போல் இருக்கிறது. ஆகவே, இந்தச் செலவினத்தில் நிர்வாகத் திற்காகச் செலவிடுவதைக் குறைத்து, கல்வி வளர்ச்சிக்கு அதிக மாகச் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1985 ஏப்ரல் 10

அடுத்தபடியாக இன்றைக்கு நம்முடைய கல்வி மேலாண்மையில் தனித் தனி அமைப்புகள் வைத்திருக்கிறோம். டைரக்டரேட் ஆஃப் ஸ்கூல் எஜுகேஷன், டைரக்டரேட் ஆப் காலேஜியேட் எஜுகேஷன் என்று இப்படி தனித்தனியாக இருந்தாலும் அங்கே இருக்கிற பெரிய அதிகாரிகள் கல்வி வளர்ச்சியில் நல்ல ஆர்வம் உள்ளவர்களாக இருந்தாலும் கூட, இடைநிலையில் இருக்கக்கூடிய பணியாளர்கள் அந்த எண்ணத்தில் செயல்படவில்லை. அந்த இடைநிலைப் பணியாளர்களிடம் ஆசிரியர்கள் படுகின்ற அல்லல்கள் கொஞ்சமல்ல. அல்லல்கள், இன்னல்களுக்கு ஆட்பட்டு கஷ்டப்படுகிறபோது ஆசிரியர்களை இடைநிலைப் பணியாளர்களாக இருக்கின்ற சூப்பரின்ட்டென்டென்ட், கிளார்க்குகளிடமிருந்து காப்பாற்றி அவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எவ்வளவோ திட்டங்கள் இருக்கின்றன. ஆசிரியர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று வருவதற்கும், பிற மாநிலங்களுக்குச் சென்று கல்வி பயிற்சி பெறுவதற்கும் இப்படி பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அந்தக் காரியங்களுக்காக ஆசிரியர்கள் 'த்ரு ப்ராப்பர் சானல்' முறைப்படி மனு போடுகிறார்கள். டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன், டைரக்டர் ஆப் காலேஜியேட் எஜுகேஷன் போன்றவர்களுக்கு மனு அனுப்பினால் இடையிலே இருக்கிற அலுவலர்கள் ஏதோ வெளிநாடுகளுக்கு உல்லாசப் பயணம் போகிறார்கள், சுகம் அனுபவிக்கப் போகிறார்கள் என்ற குறுகிய மனப்பான்மையுடன் அந்த மனுக்களை பரிசீலனை செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. இல்லாத கேள்விகளை எல்லாம் கேட்டு மீண்டும் மீண்டும் மீண்டும் திருப்பி அனுப்பும் சூழ்நிலை இருக்கிறது. விதிகள் குறுக்கே நிற்கின்றன என்றால் அந்த விதிகளை மாற்ற வேண்டும், விதி மனிதனுக்காக ஏற்பட்டதே தவிர விதிக்காக மனிதன் ஏற்படவில்லை, எனவே கல்வி அமைச்சர் அவர்கள் இதிலே தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்தபடியாக ஆசிரியர்களுக்கு 'இன்சர்வீஸ் ட்ரெயினிங்' திட்டம் இருக்கிறது, இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. சென்ற ஆண்டை விட இந்த பட்ஜெட்டில் அந்தத் தொகை குறைக்கப்பட்டிருக்கிறது.

Continuing education கல்வி என்பது வளர்ந்து வரக்கூடிய ஒன்று, தொடர்ந்து வரக்கூடிய ஒன்று நேற்று இரண்டும் இரண்டும் நான்கு என்று படித்தாலும் அதிலே வருகிற புதுமையைக் கண்டு ஆசிரியர்கள் வளர்ந்து வருகிற சமுதாயத்தின் வளர்ச்சியின் தேவையைத் தெரிந்து இளைய தலைமுறைக்கு போதிக்க வேண்டு



1985 ஏப்ரல் 10] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

மென்றால் இந்த இன்சர்வீஸ்பயிற்சி மிக மிகத் தேவையான ஒன்று, மாறி வருகின்ற கல்வித்திட்டத்தை ஆசிரியர்கள் நன்கு தெரிந்து கொண்டால்தான் இளம் மாணவர்கள் பயன்பெற முடியும், ஆகவே, இந்தத் திட்டத்திற்கு நீங்கள் அதிகமாக பணம் ஒதுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று விளையாட்டுத் துறைக்கும் பணம் குறைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக குடியரசு தின விழா பரிசுகள், ஆண்டு விளையாட்டுகளுக்கான பரிசுகள் போன்றவற்றிற்கு பணம் குறைக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு இன்னும் கூடுதலாக பணம் ஒதுக்கி, விளையாட்டுத் துறையை நீங்கள் விரிவுபடுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்டந்தோறும் இரண்டாவது விளையாட்டுத் திடல் ஏற்படுத்தப்படுவது வரவேற்கக்கூடிய ஒன்று நல்ல திட்டம். அதே நேரத்தில் இப்போது அமைக்கவிருக்கிற இரண்டாவது விளையாட்டுத் திடலை ஏற்கெனவே இருக்கிற மாவட்ட தலைமையிடங்களில் இல்லாமல் அதற்கு அடுத்து இருக்கிற பெரிய நகரில் அமைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக கிராமச் சூழ்நிலையில் இருக்கக்கூடிய இடங்களை வைத்து, கிராமப்புறத்திலே இருக்கிற மக்கள் எல்லாம் விளையாட்டுத் துறையிலே ஈடுபட்டு சிறப்பான இடத்தைப் பெறத் தக்க அளவிற்கு, நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதைச் சுட்டிக்காட்டுகிறபோது, இன்றைக்கு சில கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இருக்கக்கூடிய கருவிகளும், ஆசிரியர்களும் பயன் இல்லாமல் இருக்கின்ற ஒரு நிலை இருப்பதை சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், என்னுடைய தொகுதியில் உள்ள பாலூர் சத்திரத்திலே மாணவர்கள் இல்லாத காரணத்தால் பொறியியல் துறையில் உள்ள கருவிகளும் ஆசிரியர்களும் இன்றைக்குப் பயன் இல்லாமல் இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் என்னுடைய தென்காசியில் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியிலே, பொறியியல் துறையிலே அதிகமான மாணவர்கள் இருக்கின்ற காரணத்தால், கருவிகளும் ஆசிரியர்களும் அதிகமாக இல்லாத காரணத்தால், இந்த பாலூர் சத்திரத்திலே உள்ள ஆசிரியர்களையும் கருவிகளையும் தென்காசியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றித்தர வேண்டும் என்றும், அதற்கு விரைவாக செயல்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த மானியத்திலே உள்ள சில செலவி னங்களைப் பார்க்கும்போது, சில செலவினங்கள், கல்விக்காக அதிகமாக பணம் செலவிட்டதாக இருந்தாலும் கூட, கல்வித்துறை சாராத சில செலவினங்கள் மானியத்திலே இடம் பெற்றிருக்கிறதோ என்று அச்சம் கல்வித்துறை ஏற்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், எனக்கு 195-வது பக்கத்திலே புதிய எரிசக்தி ஆதாரங்கள் என்ற செலவி னங்கள் எல்லாம், தொழில் சார்ந்த முறையிலோ, அல்லது தொழில் மூலதன செலவிலோ வந்திருந்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். அதுபோன்ற சத்துணவுத் திட்டம் வரவேற்கப் பட்டாலும் இந்த திட்டத்திற்காக செலவு செய்யக்கூடிய அளவிலே சுமார் 10,15 கோடி ரூபாய் இந்தக் கல்வி மானியத்திலே ருக்கிறது. இது உண்மையிலே சமுதாய நல மேம்பாட்டு திட்டம் வந்தி என்ற காரணத்தால் இது இருக்க வேண்டிய இடம், சமுதாய நல டிமாண்ட் என்று சொல்லக் கூடிய அந்த சமுதாய நலத்திட்டத் திலே இருந்திருக்க வேண்டும். ஆகவே இதுபோன்ற குறை களைக் களைந்து இனிமேல் வருகின்ற பட்ஜெட்டுகளிலே எந்தந்த செலவினங்கள் எந்தந்த இனத்திலே இருக்க வேண்டுமோ, அந்தந்த இனத்திலே அவற்றைச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள் பல்கலைக் கழகங்களில் செனட், அல்லது சிண்டிகேட் உறுப்பினர்கள் களாக இருப்பதற்காக சட்டங்களில் வகை செய்யப்பட்டு இருக் கிறது. ஆனால் சட்டசபை உறுப்பினராக இல்லாதவர்கள், இந்தச் சட்டத்தினுடைய துணையைக் கொண்டு, சட்டத்தினுடைய பலத் தைக் கொண்டு, இன்றைக்கு தங்களுடைய பதவி பறி போன தற்குப் பிறகும் கூட, மக்கள் மன்றத்திலே அவர்கள் தோற்றுப் போன பிறகும் கூட, சிண்டிகேட்டிலே, செனட்டுகளிலே, அவர்கள் தொடர்ந்து உறுப்பினர்களாக இருக்கக்கூடிய ஒரு துர்பாக்கி யமான நிலை இருக்கிறது. இதை நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனித்து, இதற்குத் தகுந்த சீர்திருத்தம் சட்டத்திலே கொண்டு வந்து. இந்த நிலையை மாற்றி உறுப்பினர்களுடைய உரிமை களைப் பாதுகாக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

அதுபோல் தனியார் கல்லூரிகளில் பணிபுரிகிற ஆசிரியர் களுக்கு சம்பளம் அரசிடம் இருந்து வழங்கப்பட்டாலும், அவர்கள் அரசு ஊழியர்களுக்கு உள்ள குடும்ப நல நிதி, மற்றும் வீடு கட்டு கின்ற கடன் வசதி போன்ற வசதிகள் இல்லாமல் அவதிப்படு கிறார்கள். அவர்களுக்கும் இந்த தனியார் பள்ளி ஆசிரியர் களுக்கும், பிற பணியாளர்களுக்கும், அரசு ஊழியர்களைப்போல சகல உரிமைகளையும் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்தபடியாக தமிழகத்தின் முழுமையான வரலாறுகள் இன்றைக்கு எழுதப்படாமல் இருக்கின்றன. வெள்ளைக்காரர்கள் எழுதிய டிஸ்ட்ரிக்ட் கெஜட் என்று சொல்வதில் தமிழகத்தின் வரலாறுகள் தவறாக எழுதப்பட்டு இருப்பதை அடிப்படையாக வைத்து, புதிய வரலாறுகளை சிறப்பாக எழுத வேண்டும். அதற்கு இந்தக் கல்வித்துறை ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டு கொள்கிறேன். ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அழகன்குளம் என்ற இடத்திலே ரோமாபுரி நாட்டினரோடு நமக்கு இருந்த தொடர்பு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் பற்ற நம்முடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையானது முழுமையான நடவடிக்கை எடுத்து, அதற்கு அகழ்வாராய்ச்சி செய்து, அதற்கு உரிய ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தின் பண்டைய பெருமைகளை நிலைநாட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, தமிழகத்தினுடைய வரலாற்றுக்கு ஆதாரமாக இருக்கின்ற கல்வெட்டுகள் இன்றைக்கு சிறப்பான முறையில் படி எடுக்கப்படவில்லை. உதாரணமாகச் சொல்லப்போனால், தென்காசியில் உள்ள காசிவிஸ்வநாதர் ஆலயத்தினுடைய கல்வெட்டுக்களை நீங்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று சொன்னால், மைசூரிலே உள்ள பல்கலைக் கழகத்திற்குச் சென்று தான் பார்க்க முடியும். ஆகவே தமிழகத்தினுடைய கலைச் செல்வங்கள் தமிழகத்தினுடைய கல்வெட்டுகளை படி எடுத்து, அவற்றை சீரமைத்து, அவற்றை ஆராய்ச்சி செய்கிற ஆசிரியர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அவற்றைப் புத்தகங்களாக வெளியிட்டு, தமிழ்நாட்டினுடைய, தமிழர்களுடைய பண்டைப் பெருமைகளை நிலை நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். 15-12-1965க்கு முன்னால் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுடைய சம்பளங்கள் மிகக் குறைவாக இருந்ததன் காரணமாக இன்றைக்கு அவர்களுக்கு வழங்கப்படுகிற ஓய்வு ஊதியங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. அந்த ஆசிரியர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதை கருத்தில் கொண்டு, இந்த கல்வித்துறையானது, ஆசிரியர்களுடைய ஓய்வு ஊதியத்தை குறைந்தபட்சம் 250 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

[1985 ஏப்ரல் 10

(பிற்பகல் 12-40)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையினுடைய 32-வது பாராவில் கல்வி மானியத்திற்காக செலவு உயர்ந்து கொண்டே வந்துள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நம் எஜுகேஷன் சம்பந்தமாக போட்டிருக்கக்கூடிய டோட்டல் எக்ஸ் பெண்டிசர் மற்றும்ரெவின்யூ அக்கவுண்டிலே உள்ள பெர்சென்டேஜ் களை பார்ப்போமேயானால் 1983-84-லே 21.5 சதவீதம் கொடுக் கப்பட்டிருந்தது. 1984-85-லே அது 21 சதவீதமாக குறைக்கப் பட்டது. 1985-86-க்கு வருகிற நேரத்தில் அது, 20 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மொத்தத்திலே பார்க்கக்கூடிய நேரத்தில் கல்வித் துறையினுடைய செலவின் அமௌண்ட் பெர் செண்டேஜ் கணக்கிலே குறைந்துகொண்டே வருகிறது. அது சரி யல்ல. மற்ற மாநிலங்களில் .0 சதவீதம் என்ற அளவுக்கு இன் றைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்காவது நீங்களும் இதைக் கொண்டு செல்ல வேண்டும்.

பல பள்ளிக் கூடங்களைப் பார்ப்போமேயானால் தேவையான பில்டிங்குகள் கூட கட்ட முடியாத அளவுக்கு நிதி பற்றாக்குறை இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் சிக்கலிலே உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுவதற்காக 71வது வருடத்திலேயே பணம் கட்டி முடித்து எல்லா ஏற்பாடுகளையும் செய்துக் கொடுத்தும், இன்னும் அங்கே போதுமான அளவுக்கு கட்டிடங்கள் கட்டப்படவில்லை. அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்குளம் ஒன்றியத்திலே உள்ள பள்ளியிலே போதுமான கட்டிடம் இன்னும் கட்டப்படவில்லை. அதுபோல பல பள்ளிக் கூடங்களில் போதுமான பர்னிச்சர் இல்லை, பலகை பெஞ்சுகள் இல்லை, பிளாக் போர்டுகள் இல்லை, கழிப்பறைகள் இல்லை என்று பலவித குறைபாடுகள் இருக்கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல பள்ளிகளில் கூரை ஓலைப் போட்டு மூடவைத்திருக்கும் நிலைமை இருக்கிறது. சில பள்ளிக் கூடங்களில் பிளாக் போர்டு கூட இல்லாத நிலைமை இருக்கிறது. இன்று பொதுவாகச் சொல்ல வேண்டுமானால் எஜுகேஷனுடைய ஸ்டேண்டர்ட் தரம் தாழ்ந்துக் கொண்டிருக்கிறது. நிதி வசதி உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளை நல்ல பள்ளிக் கூடங்களாக பார்த்து, செலவு மிகுந்தவையாக இருந்தாலும் பரவாயில்லை என்று சேர்த்துவிட்டு தங்களுடைய எஜுகேஷன் குவாலிட்டியை அவர்கள் காப்பாற்றிக் கொள்கிறார்களே தவிர, poor and even non-metropolitan rich people-க்கு பயன்படத்தக்க அளவுக்கு இல்லை.





ஆனால் பள்ளிக்கூடம் கூட செல்ல முடியாத அளவுக்கு சில பிள்ளைகள் இருக்கிறார்கள். நல்ல ஆசிரியர்களுடைய சேவையை பயன்படுத்திக் கொள்ளக்கூட முடியாத அளவுக்கு விஷயங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு இந்த அவையிலே ஒரு விஷயம் பேசப்பட்டது. கிண்டர் கார்டன் ஸ்கூல்களை அரசே ஏற்று நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று பேசப் பட்டது. ஆனால் இன்று வரை அதற்கான நடவடிக்கைகள் எடுக் கப்படவில்லை. இப்போது கிண்டர் கார்டன் ஸ்கூலிலிருந்து ஹையர் எஜுகேஷன் வரை உள்ள பள்ளிகள் அனைத்தையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய நேரத்தில், தனியார்களுக்கு பல கல்லூரிகளையும், பள்ளிக் கூடங்களையும் நடத்த அனுமதி கொடுப்பது சரியல்ல. தனியார் கல்லூரிகளோ, பள்ளிக் கூடங்களோ இருக்கக் கூடாது என்று சொல்லவில்லை, ஆனால் அவைகளையும் முழுக்க முழுக்க நேஷ னலைஸ் பண்ண வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்க விரும்புகிறேன்.

ஆனால் இன்று பிரைவேட் செக்டாரை அதிகமாக என்க்கரேஜ் பண்ணக்கூடிய ஒரு டிரெண்ட் இருக்கிறது. அது சரியல்ல என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த பிரைவேட் செக்டாரிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களைப் பொறுத்த அளவிலே அவர்கள் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். பல பள்ளிக் கூடங்களைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய தேவைக்காக அவர்கள் அதனை நடத்து கிறார்களே தவிர, சட்டங்களை மதிப்பது இல்லை, விதிமுறை களைக்கூட அமல் நடத்துவது இல்லை.

அடுத்து, திருவாரூர் தொகுதியிலே வடபாதி மங்கலத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அது ஒழுங்காக நடைபெறுவதே இல்லை. அரசு அதை ஏற்று நடத்த வேண்டும் என்று மக்கள் நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது போல இன்று எத்தனையோ இருக்கின்றன. பிரைவேட் செக் டார்கள் எப்படி இயங்குகின்றன என்றால், private schools are running a parallel system என்ற அளவுக்கு அவைகள் இன்றைக்கு சென்று கொண்டிருக்கின்றன. அதை மாற்றி We need a State Government system of Higher Education என்ற அளவுக்கு கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு டீச்சர்ஸ்ஸைப் பொறுத்த அளவில் they are in the hands of private managements என்ற நிலைதான் இருந்துக் கொண்டிருக்கின்றன. பல இடங்களிலே அவர்களுக்கு ஜாப் செக்யூரிட்டி கூட கிடையாது. அவர்களுக்குத் தயாரிக்கப்படும் சீனியாரிட்டி லிஸ்ட் கூட அரசினுடைய சட்ட விதிகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்படுவதில்லை. அத்தோடு பிரைவேட் கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு சம்பளம் வழங்கும்போது, நடுவில் ஒரு ஏஜென்சியாக மேனேஜ்மெண்ட்டை வைத்துக்கொள்ளாமல், நேரிடையாக வங்கிகள் மூலமோ அல்லது மணியார்டர் மூலமோ அரசு அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தினால்தான் அவர்களுடைய அந்தஸ்தை அவர்கள் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற அளவுக்கு விஷயங்கள் வந்திருக்கின்றன.

அதே போல அவர்களுக்கு பி.எஃப், கிராஜுவிட்டி போன்றவைகளுக்கும் சரியாக கணக்கு இருப்பது இல்லை என்ற நிலை இருக்கிறது. பிரைவேட் மேனேஜ்மென்ட் என்ற பெயரால் என்ன நடக்கிறது என்றால் கம்யூனல் அசோசியேஷன் நடக்கிறது. இதை நான் சொல்லவில்லை. நேற்று பாராளுமன்றத்திலே பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கே. கே. திவாரி அவர்கள் மத்திய பட்ஜெட் மீது பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். அவர் பேசும்போது என்ன சொன்னார் என்றால், பிரைவேட் செக்டார் என்ற பெயரைச் சொல்லி,"....communaol rganisations had taken control of many educational institutions and were setting up many more...... .." என்ற அளவுக்கு வந்திருக்கிறது என்கிறார். இன்று அப்படிப்பட்ட கல்லூரிகளுடைய பிரிமைசஸ், மற்றும் பண்டுகள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன என்றால் கம்யூனல் பிராப்பகேண்டாவிற்கும், டிரில்களை நடத்துவதற்கும், அதே போல கம்யூனல் ஹேட்டர்ட்ஸை தோற்றுவிப்பதற்கும் கூடிய அளவுக்கு விஷயங்கள் கொண்டு செல்வதற்கு உதவுகிறது என்பதை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அந்த அளவுக்கு பிரைவேட் செக்டாரை வளர வைக்கக்கூடாது. இன்னொரு விஷயம் என்னவென்றால் லெஸ்ஸர் ட்ராப்-அவுட்ஸ் என்ற முறையிலே விஷயத்தைக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வெக்கேஷனல் கோர்சஸ் பொறுத்த அளவிலே, இன்று அங்கு கிடைக்கக்கூடிய படிப்பு போதுமானதாக இல்லை. அவர்களுக்கு வெளியே வேலை கிடைக்க வேண்டுமென்றால், வேறே எங்காவது டிரைனிங் எடுத்துக்கொண்டால்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. வெக்கேஷனல் கோர்ஸ் படித்துவிட்டு வெளியே சென்றால், அவர்களுக்கு வெளியே உள்ள மெஷினரிகளோடு வேலை செய்ய முடியாத நிலை இருந்துக் கொண்டுருக்



இறது. அதனால் மார்டன் டெக்னிக்ஸ் பொறுத்த அளவிலே கொடுக்கக்கூடிய அந்த டீச்சிங் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு விஷயம் என்னவென்றால், தமிழ் மீடியம் எந்த அளவுக்கு புரொமோட் பண்ண முடியுமோ அந்த அளவுக்கு புரொமோட் பண்ண வேண்டும். ஐ. டி. ஐ. ஸ்டூடன்ட்ஸ் நேற்று ஒரு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். கோரிக்கை என்னவென்றால், தமிழில் கேள்வித் தாள்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் முக்கியமான கோரிக்கை, அவர்களுக்கு ஏற்கனவே கொடுத்திருந்த யூனிபார்ம் போன்றவைகள் மறுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய இன்னொரு கோரிக்கை என்னவென்றால், ஸ்டூடன்ட்ஸ் ஸ்டேட் கௌன்சில் பார்ம் பண்ண வேண்டும். மைனாரிட்டி லாங்குவேஜ்ஸ் பொறுத்தளவிலே எந்த அளவுக்குபாதுகாப்பு கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும.

ஆதிதிராவிடர் இலாக்காவைச் சேர்ந்த பள்ளிக்கூடங்கள் பொறுத்த அளவிலே, அதனுடைய தரம் இன்று மிக மோசமாக இருக்கிறது. அதனுடைய அட்மினிஸ்ட்ரேஷன் அந்த இலாக்காவில் இருந்தாலும் எஜுகேஷனல் ஏற்பாட்டை பொறுத்தளவிலே இன்று கல்வித்துறையைச் சார்ந்திருக்கிறது. எனவே இதில் கல்வித் துறை மேலும் அதிகமான சிரத்தை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது இந்த என்ஜினியரிங் காலேஜ் பொறுத்தளவில் 50% அட்மிஷன் இந்த நிர்வாகத்திற்கு கொடுக்கப்பட்டு இருப்பதால் பயங்கரமான ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் கேபிடேஷன் பீஸ் கலெக்ட் பண்ணக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கரப்ஷனுக்கு அஸ்திவாரமாக இருக்கிறது. எனவே அது நிச்சயமாக மாற்றப் பட வேண்டும். இந்த அரசு காலாகாலத்தில் பல விஷயங்களில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதன் காரணமாக கல்வித் தரம் குறைந்திருக்கிறது. உதாரணமாக அவினாசிலிங்கம் கல்லூரியிலே சில பிரிவுகள் மூடப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பி.எஸ்.ஜி. கல்லூரியில் ஆசிரியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அரசு அதிலே போதுமான அளவு நடவடிக்கை எடுக்கவில்லை.

இன்னொரு விஷயம். 1984 மே மாதம் சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் தேர்வு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. அப்போதைய முதல்வர் மீது அது தொடர்பாக குற்றச்சாட்டு சாட்டப்பட்டது. 23-7-84-ல் இதுசம்பந்தமாக கம்ப்ளைன்ட்

கொடுக்கப்பட்டது. 12-7-84 ல் சென்னை பல்கலை சிண்டிகேட்டில் இதுசம்பந்தமான சில முடிவுகள் எடுக்கப்பட்டன. அவர் மேலே நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அவருடைய விளக்கத்தை வாங்கியிருக்கிறார்கள். ஆக இப்போது நிலைமை என்ன என்றால் இந்த ஊழல் நடைபெற்ற கல்லூரி அரசினர் கல்லூரி ஆகும். இதில் சம்பந்தப்பட்ட முதல்வர் அரசு அதிகாரி. தேர்வு முறைகேடுகள் குறித்து பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. இது தொடர்பாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? இது சம்பந்தப்பட்ட முதல்வர் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினர் ஆவார். பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினர் ஒருவரின் ஊழல் பற்றி விசாரிக்க அந்த சிண்டிகேட் அமைப்பில் உறுப்பினராக உள்ளவர்களையே நியமிப்பதா? பல்கலைக் கழக சிண்டிகேட், தேர்வு நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி ஒரு சிண்டிகேட் உறுப்பினர் மேல் இப்படிப்பட்ட சார்ஜ் வந்ததற்கு பிறகு அதே சிண்டிகேட் உறுப்பினரையே, அந்த அமைப்பிலே வைத்துக்கொள்வதா?

இரானிய மாணவர்கள் தேர்வுத் தாள்கள் குறித்து, அவை சம்பந்தமாகத் தான் இந்த புகார்கள் வரப்பட்டன. என்ன கொடுக்கப்பட்டு இருக்கிறது என்றால் அவ்வாறு இரானிய மாணவர்களுக்கு மட்டும், அவர்களுடைய ரிசல்ட் மட்டும் ரிலீசாகி உள்ளது. இந்தியன் ஸ்டூடென்ட்ஸ் பொறுத்தளவில் ரிசல்ட் இன்றைக்கு வித்ஹெல்டாக இருக்கிறது. சிண்டிகேட் துறை குழுவில் உள்ள 3ல் ஒருவர் அரசு நியமனம் பெற்றவர். அந்தத் துணைக் குழு இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? தேர்வுகள் என்பது மாணவர்கள் எதிர்காலம் சம்பந்தப்பட்ட விஷயம். இது பத்திரிகைகளில் செய்தியாக வந்திருக்கிறது.

ஆகவே இந்தமாதிரி விஷயங்களில் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்காமல் ஏனோ தானோ என்ற முறையில் விஷயங்களை விட்டுவிட்டால், முதல்வர் அவர்களே இன்று மாணவர்கள் எல்லாமல் காப்பி பண்ணுவதற்கு வசதி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார், இன்றும் அவர் சிண்டிகேட் உறுப்பினராக இருந்துகொண்டிருக்கிறார் என்றால், இந்த நாட்டினுடைய கல்வித் தரத்தை எப்படிப் பாதுகாக்க முடியும்?

(பிற்பகல் 12.50)

அதேபோன்று இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டிலே இப்போது பல போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தமிழ் நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் இன்றைக்கு மறியல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது. 12 ஆயிரம் ஆசிரியர்களுக்கு அரசு



ஆசிரியர்களைப் போன்ற பெனிபிட் கொடுக்கப்படுகிறபோது அதே போன்ற பெனிபிட்டை இந்த 1,200 ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கொள்கை அளவிலே அரசு அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. பிறகு ஏன் அதைக் கொடுக்கவில்லை, அதைக் கொடுக்க வேண்டும். அதைப்போன்றே அவர்களுக்கு பணிப்பாதுகாப்பு வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. அரசு ஏற்றுக் கொண்டதுதான் இதுவும், "Conferment of Permenency Act," என்ற சட்டத்தை அரசு கொண்டுவந்திருக்கிறது. அவர்களுக்கு ஏன் அதைச் செய்யக்கூடாது? அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். தனியார் பள்ளிகளிலே நகராட்சிப் பள்ளிகளிலே மாநகராட்சிப் பள்ளிகளிலே உள்ள ஆசிரியர்கள் ஓய்வுபெற்றால் அவர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்.

இன்றைக்கு சட்டக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். முதல் இரண்டு வருட காலத்திலே போதிய அளவுக்கு அவர்களுக்கு தமிழ் டெக்ஸ்ட் புக்ஸ் கொடுக்கப்படவில்லை, போதிக்க முடியவில்லை என்ற காரணத்தை காட்டி அவர்கள் தேர்வைத் தள்ளிவைக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். 28-11-84 அன்று அளித்த தீர்ப்பின்படி கர்நாடக மாநிலத்திலே டிரெயினிங் பெற்றவர்களை எவால்வ்யுவேட் பண்ணி அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் டைரக்டர் ஆபீசில் அந்த சர்டிபிகேட்டை வாங்கி வைத்துக் கொண்டு எவால்யுவேட் பண்ணிக் கொடுக்கப்படாததால் அவர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதை அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலே எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலேயிருந்து அனுப்பப்பட்டு இண்டர்வியூ செய்தபிறகும்கூட இன்னும் நியமனம் செய்யப்படாமல் இருக்கிறது. இந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டும். ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்ட 29 பேர்களுக்கு ஒரு வருடம் ஆகியும்கூட இன்னும் ஊதியம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 11-4-84 இல் 'Joint Action Council of College Teachers எக்ஸாமினேஷனை பாய்காட் பண்ணப்போவதாகச் சொல்லப்பட்டது, அதுபற்றி 31-3-84 அன்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது கல்வியமைச்சர் அவர்களால் பல உறுதி மொழிகள் கொடுக்கப்பட்டன. அதிலே சில உறுதிமொழிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. இன்றைக்கு அவர்

களுக்கு பணி பாதுகாப்பும் இல்லை. உயிர்ப் பாதுகாப்பும் இல்லை என்ற நிலையிலே கல்லூரி ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பொன் முத்து ராமலிங்கம் மாவட்டத்திலே அப்துல் ஜப்பார் என்ற கல்லூரி ஆசிரியர் நிர்வாகத்தினுடைய ரௌடிகளால் தாக்கப்பட்டிருக்கிறார், போலீஸ் கம்ப்ளெய்ன்ட் கொடுத்தும், அரசிடம் கூறியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆரல்வாய்மொழியில் ஜெயப்பிரகாஷ் என்ற ஆசிரியர் தாக்கப்பட்டிருக்கிறார். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சேலம் சௌடேஸ்வரி கல்லூரியில் பிரின்சிபால் ரௌடிகளால் தாக்கப்பட்டு இருக்கிறார். அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, அவருக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை. நாகர்கோவில் பயோனியர் கல்லூரியிலே ஒரு ஊழியர் வேலைநீக்கம் செய்யப்பட்டு பிறகு அவரை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அரசாங்கம் சிபாரிசு செய்தும் கூட நிர்வாகம் எடுக்க மறுக்கிறது. இதைக் கவனிக்கவேண்டும். அடுத்து மாணவர்கள் ஒரு சில கோரிக்கைகளை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் எக்ஸாமினேஷன் பீஸை ஒருநாள் தள்ளிக் கட்டினால் கூட அவர்களிடமிருந்து 30 ரூபாய் பைன் என்று மெட்ராஸ் யூனிவர்சிடி வாங்குகிறது. மற்ற இடங்களிலே 1 ரூபாய்தான் அதற்காக வாங்கப்படுகிறது. மெட்ராஸ் யூனிவர்சிடி எந்த மாற்றத்தைக் கொண்டுவந்தாலும் அதுகுறித்து அங்கங்கே இருக்கிற புரபசர்களைக் கலந்து பேசி முடிவு செய்யவேண்டுமே தவிர துணை வேந்தரோ ரிஜிஸ்திராரோ தன்னிச்சையாக முடிவு எடுக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் வருகின்ற கல்வி மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லுகிற வாய்ப்பைப் பெற்று இருப்பதற்கு நன்றி செலுத்த விரும்புகிறேன். கடந்த ஆண்டு நான் சட்டமன்றத்தில் இல்லாத நிலைமை காரணமாக ஒரு தொடர்பு விட்டுபோய்விட்டது என்று சொன்னாலும்கூட கல்வி அமைச்சர் அவர்கள் எப்போது அந்தப் பொறுப்புக்கு வந்தார்களோ ஏறத்தாழ அந்தப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து நான் கல்வியைப் பற்றிப் பேசுகின்ற ஒரு தொடர்ச்சி உடையவனாக இருக்கிறேன். கல்வி வளர்கிறதோ இல்லையோ என்னுடைய பயிற்சி வளர்கிறது, என்று நான் நம்புகிறேன். தமிழ் நாட்டில் 468 கோடி ரூபாய் அளவுக்கு கல்விக்காக ஒதுக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டு இருப்பது தொலை நோக்கில் ஒரு வளர்ச்சியாக கண்ணுக்குத் தெரிந்தாலும் கூட தேவை என்ற நோக்கின் அடிப்படையில் வைத்துப் பார்க்கிற போது தேவையை நிறைவு செய்ய முடியவில்லை என்ற குறை ஏற்



பட்டு இருக்கிற காரணத்தால் நம்முடைய இலட்சிய குறிக்கோளை அடைவதற்கு இன்னும் நாம் பின் தங்கியிருக்கிறோம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். தொடக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கின்றன. உயர்நிலைப்பள்ளிகளில் எண்ணிக்கை அதிகமாகியிருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகள் இடம் பெற்று இருக்கின்றன. புகுமுக கல்வி நீக்கப்பட்டாலும் கூட கல்லூரிக் கல்வி இடம் பெற்றிருக்கிறது. பல்கலைக்கழகங்கள் அதிகமாகியிருக்கின்றன. பாடநூல் வெளியிடுகிற முறை வளர்ந்து கொண்டிருக்கின்றது. இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்குகிறீர்கள், ஆசிரியர்களுக்கு சிலபல நன்மைகள் செய்யப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும் கல்வியினுடைய தரம் உயரவில்லை.. கல்வியின் தரம் உயரவேண்டும் என்பதற்குச் செலுத்தப்படவேண்டிய கவனத்திற்கும் மக்களின் தேவையாக இருக்கிற கல்வியை பரவலாக அளிப்பது என்பதற்கு உரிய கடமை ஆகிய இரண்டுக்கும் இடையில் ஒரு பெரிய வேற்றுமை இருக்கத்தான் செய்கிறது. ஒன்று மக்களுடைய தேவையாதலின் கட்டாயமாக வழங்கித் தீரவேண்டும் என்ற காரணத்தால் வழங்கப்படுவது. மற்றொன்று மக்களுடைய முன்னேற்றத்திற்கான வளர்ச்சிக்கான ஒரு இன்றியமையாத ஒரு பொறுப்பு, பணி: அந்தப் பணி நிறைவேற்றப்படுவதில் மாணவர்கள் தகுதி, தரம் அல்லது அவர்களுடைய கல்வி ஆற்றல் அல்லது மொத்தமாக மாணவர்களுடைய கூர்த்த நுண்ணறிவை பயன்படுத்துகிற அந்த வாய்ப்பு அந்த அளவுக்கு வளர்ந்து இருக்குமானால் நாம் செலவிடுகிற தொகைக்கு ஏற்ற பலன் கிடைக்க முடியும். அந்தப் பலன் கிடைக்கவில்லை. அதற்கான குறைபாடு எங்கே இருக்கிறது என்று யாரையும் தனிப்பட்ட முறையில் நான் குறை சொல்ல விரும்பவில்லை. ஆசிரியர்களைப் பிரித்து குறை கூறிப் பேசலாம். மாணவர்களை சுட்டிக் காட்டலாம். அல்லது நிர்வாகம் சரியில்லை என்று சொல்லலாம். ஆனால் குறிப்பாக ஒன்றைச் சொல்வதாக இருந்தால் தரத்தை உயர்த்துவது பற்றி இந்தத் துறை தனியாக அக்கறை எடுத்துக்கொண்டு எந்த முயற்சியையும் செய்ய முன்வர வில்லை. அதற்கான தூண்டுகோல் இல்லை. வேண்டுமானால் கல்வியைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு அதனுடைய பல்வேறு விதமான பணிகளை அவ்வப்போது ஒப்பிட்டு காண்பதற்கான முயற்சியாக தனியாக ஒரு துறை இருந்தாலும் கூட பாட நூல் திட்டத்தை மாற்றி வைப்பதற்கான ஒரு துறை இருந்தாலும் கூட பாடத்தை நடத்துகிற முறைபற்றி ஓரளவுக்கு ஆராய்வதற்கு இடம் இருந்தாலும் கூட ஒரு ஊக்கத்தோடு செயல் ஆற்றுகின்ற அடிப்படையான தேவையை அந்த ஊக்கத்தோடு செயல் ஆற்றுகின்ற அந்த உணர்வை பெரும்பாலான ஆசிரியர்களிடத்தில் உருவாக்கக் கூடிய நிலைமையும் இல்லை. தவறு ஏற்படுகிறபோது எந்தக் கட்டத்தில் தவறு ஏற்படுகிறதோ அந்தக் கட்டத்தில் அதை திருத்தி அமைப்பதற்கான நிர்வாக மேற்பார்வை வாய்ப்பை இன்ஸ்பெக்ஷன் என்ற முறையில் செய்யக்கூடிய அந்த வாய்ப்பும் இல்லை.

[திரு க. அன்பழகன்] [1985 ஏப்ரல் 10

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் மேற்பார்வைக்குச் செல்லுகிற அதிகாரிகளைக்கூட ஆங்காங்கே இருக்கிற ஆசிரியர்களைப் பார்க்கிறபோது அதிகமான கேள்விகள் கேட்க முடியாமல் ஆசிரியர்கள் திருப்பிக் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் இன்ஸ்பெக்ஷன் செல்லுகிற அதிகாரிகள் திரும்பி வருவதாக இங்கே சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதை போல் ஒரு இக்கட்டான நிலைமை இருக்கிறது என்பதை தான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையில்தான் மத்திய அரசு அங்கே உள்ள கல்வி அமைச்சர் திரு கே. சி. பந்த் அவர்களும் அதேபோல பிரதமர் அவர்களும் கல்வி நாட்டிலே தகுந்த வகையில் பயன்படாத காரணத்தால் உரிய முறையிலே மக்களுடைய வாழ்வுக்கு துணை நில்லாத காரணத்தால் கல்வி முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்ற ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். இது புதியதாக பதவிக்கு வருகிறவர்கள் வழக்கமாக சொல்லுகிற ஒன்று. அந்த முறையில் பிரதமராக இருந்தாலும் சரி, மத்திய கல்வி அமைச்சராக இருந்தாலும் சரி இந்தப் பொறுப்புக்கு இப்போது முதன் முதலாக வந்தவர்கள் சொல்லுகிற ஒரு கருத்து அது. அதைப் போலஇந்தஅரசிலேயும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயராலே மக்களுடைய வாழ்க்கைக்கு பயன்படக்கூடிய கல்வியை நாங்கள் வழங்குவதற்குத் திட்டமிட்டு இருக்கிறோம் என்று தெரிவித்து இருக்கிறார்கள். வாழ்க்கைக்குப் பயன்படுகிற கல்வியை வழங்குவதை நான் வரவேற்கிறேன். ஆனால் அது என்ன என்று யாருக்குத் தெரியும் என்று நான் கேட்க விரும்புகிறேன். வாழ்க்கைக்கு பயன்படுகிற கல்வி என்று சொல்லுகிறபோது எனக்கு அதில் மகிழ்ச்சிதான். ஏன் என்றால் நான் படித்த கல்வி என் வாழ்க்கைக்குப் பயன்பட்டதா? என்பது நான் இன்னும் புரிந்துகொள்ளாத ஒன்று. எனவே வாழ்க்கைக்கு பயன்படுகிற கல்வி என்று எதைச் சொல்கிறார்கள்? ஏற்கனவே சொல்லாததைதான்எதைச் சொல்லுகிறார்கள். ஏற்கனவே தொழிற் கல்வி என்று சொல்லவில்லையா? ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதற்காக ஏதாவது ஒரு ஹாபி என்ற முறையில் தொழிற் கல்வி மாணவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று சொல்லவில்லையா? அப்படி தொழிற் கல்வியைத் தருவதற்காகத்தான் மேல்நிலைப்பள்ளி பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறி நூறுக்கு 75 பேரை ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடுத்த பயன்படவேண்டும் என்று மேல்நிலைக் கல்வியை கொண்டுவந்தபோது இங்கு சொல்லப்படவில்லையா?



1985 ஏப்ரல் 10] [திரு. க அன்பழகன்]

(பிற்பகல் 1 00)

மேல்நிலைக் கல்வியைக் கொண்டு வந்து, இரண்டு ஆண்டுகள் கழித்து, மூன்று ஆண்டுகள் கழித்து மேல்நிலைக் கல்வி பெறுகின்றவர்கள் 2,70,000 மாணவர்கள், பொதுக் கல்வி பெறுவார்களேயானால் அதிலே தொழிற்கல்வி பெறுவோர் 40,000 பேர், 30,000 பேர் என்றளவிலே ஒரு விகிதாசாரத்திற்கு உட்பட்டதாக அது ஆகிவிடவில்லையா?

மேல்நிலைப் பள்ளிகள் எல்லாவற்றிலும் போதுமான அளவிற்குத் தொழில் பயிற்சி வழங்குவதற்கான பயிற்சிக்கூடங்கள் அமைக்கப்பட முடியாத நிலைமை ஏற்படவில்லையா? எனவே, கல்வித் துறையிலே சீர்திருத்தம் என்பது, எருதுக்கு முன்னால் ஏரைப் பூட்டுவதைப் போல ஆகிவிடாமல், எருதுக்குப் பின்னாலே ஏரைப் பூட்டுகின்ற அந்த முறையில் அமையவேண்டுமானால், இருப்பதை ஒழுங்குபடுத்தி, செம்மைப்படுத்தித்தான் சீர்திருத்தம் செய்யமுடியுமே தவிர, இருப்பதை ஒழுங்குபடுத்தாமல் பழைய பாத்திரத்தைச் சுத்தமாகக் கழுவாமல், அதிலே பாலைக் காய்ச்ச ஆரம்பித்தால், அந்தப் பாலும் முறிந்துபோய் விட்ட கதையாகத்தான் ஆகும். எனவே, பேஸிக் நீட்ஸ்-அடிப்படையான தேவைகளைச் சீர்திருத்தி, ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்திக் கொண்டு, அதற்கு மேல் என்னென்ன வளர்ச்சி முறையிலே எந்த சீர்திருத்தத்தையும் நிறைவேற்றலாம்.

மேலும், எந்த வகையிலே அந்தக் கல்வியைப் பயனுடையதாக ஆக்கலாம் என்று அந்தந்த நிலைகளுக்குத் தகுந்தாற் போல சிந்திக்க வேண்டும். தொடக்கத்திலேயிருந்து முடிவு வரையில் கல்வி வாழ்க்கைகுப் பயன்படுகிற முறையான கல்வி என்று சொன்னால், அவரவர்களுக்கு எது பயன்படும் என்பதிலே கருத்து வேறுபாடு உண்டு. வெதர் இட் இஸ் சயன்ஸ் ஆப் ஆர்ட்ஸ், வெதர் இட் இஸ். இன்டஸ்டிரியல் டிரெயினிங் ஆர் சம் சார்ட் ஆப் லேபர் டிரெயினிங். என்று வேறுபாடு எழும். ஆகவே, எந்த வகையான பயிற்சி வாழ்க்கைக்குப் பயன்படும் என்பதைவிட, வாழ்க்கைக்கு ஒரு இளைஞனைத் தயாரிப்பதற்கு அவனுக்கு என்னென்ன தேவை என்பதிலே கருத்து வேறுபாடு உண்டு. கலைகளெல்லாம் வாழ்க்கைக்குப் பயன்படாது என்று அறிஞர்கள் யாரும் சொல்ல மாட்டார்கள். மனிதனுடைய மனதைப் பக்குவப்படுத்துவது, அறிவைப் பக்குவப்படுத்துவது, அப்படிப்பட்ட கலை உணர்வை அடிப்படையிலேயே வளர்க்கத்தக்க அந்தக் கல்வியும், அது சாதாரண எழுத்துக் கல்வியாக இருந்தாலும், ஏட்டுக் கல்வியாக இருந்தாலும் அதற்கும் முக்கியத்துவம் உண்டு. தொழில் கல்விக்கும் முக்கியத்துவம் உண்டு. நுண்பொறியியல்

கல்விக்கும் முக்கியத்துவம் உண்டு. ஆராய்ச்சி நிலைக் கல்விக்கும்
முக்கியத்துவம் உண்டு. எனவே, மாணவர்களின் வயது கட்டங்க
ளுக்கு ஏற்ப அவை அமைக்கப்படுகின்றனவே தவிர, ஏழு வயதுக்
குழந்தைக்குக் குதிரை ஏற்றத்திலே பயிற்றுவிக்க வேண்டுமென்று
நாம் முயற்சிக்கக் கூடாது ; அதேபோல், 20 வயதுஇளைஞனுக்கு
சாதாரண தண்டாள் போடுகின்ற அந்த அளவோடு நிறுத்தக்
கூடாது. எனவே, வயதுக்குத் தக்க கல்வி வெவ்வேறு வயதில்
மாறுவதே தவிர ஒரே வகையானதாக இருக்கமுடியாது.

இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும். கல்வி என்பது அந்
தந்த மாநிலங்களுக்கு உரியதாகத்தான் இருக்க முடியுமே தவிர
இந்தக் கல்வியை மத்திய அரசாங்கமே திட்டமிட்டு, அகில இந்
தியாவிலேயும் ஒரேமாதிரியாக நடத்துவது என்று எண்ணினால்,
முதலிலே நான் அகில இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொள்வது,
டெல்லி சர்க்காரைக் கேட்டுக்கொள்வது, எல்லோரும் இத்
தனை அடிதான் .வளர வேண்டும். இவன் இதை விட உயர
மாக வளரக் கூடாது, இவன் குறைச்சலாகவும் இருக்கக்
கூடாது, இவன் இத்தனை பவுண்டுக்கு மேலே கனமாக இருக்கக்
கூடாது என்று ஆணையிட முடியுமேயானால், அவர்கள் அதில்
அப்படியொரு கல்வியைக்கொண்டு வரலாம். ஏனென்றால், கல்வி
என்பது ஆங்காங்கே அந்தந்த மக்களுடைய நிலையிலே இருந்து
வளர்கின்ற அறிவின் அடிப்படையிலே உருவாவதே தவிர யாரோ
திணிக்கிறபடி வளரக்கூடியதல்ல.

வெள்ளைக்காரன் கொண்டு வந்த கல்வி, அவர்கள் கொண்டு
வந்த முறை என்பது நமக்கு ஏற்றதாக இல்லை என்று கருது
வதற்கு நமக்கு எவ்வளவு நியாயம் இருக்கிறதோ அவ்வளவு
நியாயம் இருக்கிறது டெல்லி சர்க்கார் சொல்கிறபடிதான் கல்வி
பயிற்சி என்பதில் அர்த்தமில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்கு,

இன்றைக்கு மத்திய அரசு அவர்கள் நிறைவேற்ற வேண்டிய
எல்லாக்கடமைகளையும் நிறைவேற்றிவிட்டதைப்போல,
கல்வி ஒன்றிலேதான் குறை வைத்திருப்பதைப்போல, ஏதோ
துறையிலே மத்திய அரசு இதற்கான திட்டத்தை எல்லா மாநிலங்
களிலேயும் நிறைவேற்றிவிடுமேயானால் நாடு முன்னேறிவிடும்
என்பதைப்போல கருதிக்கொண்டு பேசுவது முறையல்ல,

ஆளுங்கட்சியைச் சேர்ந்த இரண்டு மாண்புமிகு உறுப்பினர்
கள் திட்டவட்டமாகச் சொன்னதை நான் மகிழ்ச்சியோடு வர
வேற்கிறேன். தெளிவாகவே சொன்னார்கள் : மத்திய அரசு
கல்வியை கன்கரண்ட் லிஸ்ட்டிலே கொண்டுபோய் மத்திய அர
சுக்கும், மாநில அரசுக்கும் தொடர்பான இந்தப் பட்டியலிலே
கொண்டுபோய் வைத்த காரணத்தால் இந்த விபத்து வருகிறது
என்று சொன்னார்கள். அது உண்மை,



மத்திய அரசு கல்வியினைப்பற்றி ஆலோசனைதான்
வழங்கு
சொல்லலாம். மத்திய அரசுக்கு ஆலோசனை
கின்ற உரிமை இருக்கிறது என்று நான் சொல்வதற்குக்
காரணம், யுனெஸ்கோ என்ற அந்த அமைப்புக்குக்கூட
உதவி செய்தால் அந்த உரிமை இருக்கிறது. நமக்கு
உதவி செய்து நம்முடைய கல்வியை வளர்ப்பதிலே
யுனெஸ்கோ என்ற அந்த அமைப்புக்கு எப்படிப்பட்ட .உரிமை
இருக்கிறதோ அல்லதுஅதைநாம் எப்படி ஏற்றுக்கொள்கிறோமோ
அதைப்போல மத்திய அரசின் கல்வியிலே சிறந்தவர்கள் இருப்
பார்களேயானால், அவர்களுக்குக் கல்வி முறைகளில உண்மை
யிலேயேபயிற்சி இருக்குமானால், கல்வியை எப்படி நடத்தினால்
குழந்தைகள் எப்படி வளர்வார்கள் என்ற அனுபவம் உள்ளவர்கள்
இருப்பார்களேயானால், அவர்கள் ஆலோசனை சொல்வார்களே
யானால், அந்த ஆலோசனையைப் பரிசீலிக்க நாம் கடமைப்
பட்டிருக்கிறோம். ஆனால், கட்டளை இடுவார்களேயானால்,
அந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் எந்த
மாநில அரசாங்கத்திற்கும் இல்லை. அந்த முறையிலேதான்
அண்மைக் காலத்தில் மத்திய அரசாலே மிகப்பெரிய ஆபத்து
ஒன்று நம்மைச் சூழ இருக்கிறது என்று நானும் அஞ்சுகிறேன்.

அது எப்படிப்பட்ட ஆபத்து என்றால், கல்வியை மத்திய
அரசின் கையிலே மெள்ளக் கொண்டு போய், ஒவ்வொரு மா
நிலத்திலேயும் இருக்கின்ற ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அவர்
கள் தங்கள் மாடல் ஸ்கூல்களை ஏற்படுத்துவது என்ற அளவிற்கு
இடம் பெறவிருக்கிறது. அவர்கள் ஏற்படுத்துகிற
பள்ளிக்கூடம் மாடல் ஸ்கூல், நான் இன்றைக்குச் சொல்வேன்.
அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிக்கூடத்தைவிட, தனியார் சில
பேர் தமிழ்நாட்டிலே நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள் மாடல்
ஸ்கூல்களாக இருக்கும் நிலை எனக்குத் தெரியும்.

விருதுநகரில், சிவகாசியில், மைலாப்பூரில் சில பள்ளிக்கூடங்
கள் மாடல் ஸ்கூலாக நம்முடைய அரசாங்கப் பள்ளிகளை விட
பல மடங்கு உயர்வாக நடப்பது எனக்குத் தெரியும். அவை
எல்லாம் கான்வென்ட் முறையில் நடக்கின்ற பள்ளிகள் அல்ல,
ஆங்கில மீடியம் உள்ள பள்ளிக்கூடங்கள் அல்ல. அப்படி நடத்
தக்கூடியவர்களும் இருக்கிறார்கள், ஆனால், மத்திய அரசு
நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்களில் யாரோ சில பேர் ஆசிரிய
ராக இருந்து நடத்தினால் அது மாடல் ஸ்கூல் என்று சொன்னால்
அது தவறு. மத்திய அரசுக்கே மாடல் எஜுகேஷன் தமிழ்நாடு
தர முடியும். நம்முடைய கல்வித் துறையிலே இருக்கின்ற குறை
கள் நமக்குத் தெரியும். ஆனால், மத்திய அரசு நடத்துகின்ற
கல்வியைவிட நம்முடைய கல்வி தரம் குறைந்தது என்று கருத
முடியாது. பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் சில
முட்டுப்பாடுகள் இருக்கின்றனவே தவிர, கல்வியைப்

பற்றி நமக்குத் தெரியாதவற்றை அவாகள்
கண்டறிந்து சொல்கிறார்கள் என்று கருது
வதற்கு இடம் கிடையாது, ஆனால், மத்திய அரசு அப்படி
மாடல் ஸ்கூல் நடத்துவது என்று சொல்லி, மத்திய அரசு ஊழி
யர்களுக்காக என்று ஆரம்பித்த பள்ளிக்கூடங்களைப் போல் மற்ற
பள்ளிக்கூடங்களும் அதைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்று
ஆலோசனை சொல்லத் தொடங்கி அதனால் இந்திக்கு முக்கியத்
துவம் தந்து, அப்படி இந்திக்கு முக்கியத்துவம் தருகிற காற
ணத்தால், வேறு சில பாட முறைகளை ஊக்கப்படுத்துகின்ற
காரணத்தால் நம்முடைய கல்வியைவிட அவர்கள் நடத்துகின்ற
கல்வி உயர்ந்தது என்ற எண்ணத்தை ஏற்படுத்த முயற்சிக்கி
றார்கள். ஓராண்டுக்கு முன்னால் மத்திய அரசுக்கு மறைமுக
எசமானனாக இருக்கின்ற திட்டக் குழுவின் மூலம் இன்னும்
சொல்லப்போனால் மத்திய அரசு திட்டக்குழுவைப் பயன்படுத்தி
மாநில அரசுகளை எல்லாம் தாங்கள் இழுக்கிறபடி தங்கள்
முடிவுக்கு ஆட்பட வைக்கின்ற முயற்சியாக இந்தியைப் பரப்பு
கின்ற பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்என்று அத்திட்ட
குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அதன்படி திட்டக்
குழு தருகின்ற ஒரு ஆலோசனையாக இந்தியைப் பரப்புகின்ற
முயற்சியையும் மேற்கொள்ள இருக்கிறார்கள் என்று நான் திட்ட
வட்டமாக அறிகிறேன். திட்டக் குழு அதாவது ப்ளானிங்
கமிஷன் என்பது அரசியல் சட்டத்தில் இடம் பெற்றதல்ல.

It has no constitutional authority to hold its place

திட்டக் குழு அதாவது ப்ளானிங் கமிஷன் என்பது அரசியல்
சட்டத்தில் இடம் பெற்ற ஒன்றல்ல, ஃபைனான்ஸ் கமி
ஷனுக்கு உள்ள உரிமைகூட திட்டக் குழுவிற்குக் கிடையாது.
வேண்டுமானால் ஒரு கோ-ஆர்டினேடிங் ஏஜென்சியாக அது
பயன்படுகின்ற காரணத்தால் மாநில மத்திய அரசுகள் இரண்
டுக்கும் சம்பந்தப்பட்ட ஒரு அமைப்பாக அது தன்னைக் கருதிக்
கொள்ளலாம். ஆனால் அந்தத் திட்டக் குழு மத்திய அரசினு
டைய மொழிக் கொள்கையைத் திணிப்பதற்கு, நிறைவேற்று
வதற்கு திட்டம் வகுத்துத் தர வேண்டும்; அதற்காக ப்ளா
னிங் கமிஷன் நிதி ஒதுக்க வேண்டும்; அதன் மூலமாக இந்தி
பரப்பப்பட வேண்டும் இந்தி ஆதிக்கம் மேலும் ஊடுருவுவதற்கு
திட்டக்குழுவை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்று
கருதுவார்களானால் அப்படி ஒரு நிலைமை இருக்கின்றது என்று
நான் அறிகிற காரணத்தால் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பு
கிறேன், திட்டக் குழு அதனுடைய இன்றைய பணியைச் செய்
வதேகூட சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல. திட்டக் குழு
மத்திய அரசாங்கத்தின் கேபினட்டுக்கு மேற்பட்ட அதிகாரம்
உள்ள அமைப்பாக இருப்பது என்பதும் ஃபைனான்ஸ் கமிஷன்
கையாளுகின்ற மொத்த நிதியை விட இரண்டு மடங்கு நிதியை,
மூன்று மடங்கு நிதியைக் கையாளுகின்ற அல்லது ஒதுக்குகிற





அல்லது பங்கிடுகிற அந்த வாய்ப்பைப் பெற்றதாக திட்டக்
கமிஷன் இருக்கிறது என்றால் அதுவும் சட்டப்படி முறையல்ல.
மத்திய அரசால்ஒரு காலத்தில் அரசியல் சட்டத்தில் இடம்
பெறச் செய்யப்பட்ட இந்தி மொழியைப் பரப்புகின்ற பணியைத்
திட்ட குழுவினிடத்தில் கொடுத்து அது நிறைவேற்ற முற்படுமே
யானால் அது மாநிலங்களில் திணிக்கப்படுமேயானால் திட்டக்
குழுவை எதிர்க்க வேண்டிய கட்டாயம் எங்களைப் போன்றவர்
களுக்கும் ஏற்படும்; இந்தஅரசுக்கும்கூட ஏற்படும் என்று
நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். கல்வித் துறை
யை இந்தியைப் பரப்புவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்த
வேண்டும் என்று மத்திய அரசு கருதுவது முறைகேடு. கல்வி
மாநிலத்திற்குரியது. மாநிலத்திற்குரிய கல்வி மத்திய அரசுக்கும்
மாநில அரசுக்கும் தொடர்புடையதாக அண்மைக் காலத்தில்
ஆக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் மேலாண்மையாக, அடக்கி
ஆளுகின்ற முழு முதல் உரிமை மத்திய அரசுக்கு இருப்பது நியாய
மல்ல. அந்த முறையில் ஆளும் கட்சி உறுப்பினர் சொன்னது
போல் கல்வி மறுபடியும் மாநில அரசினுடைய அதிகார வரம்
புக்கு உட்பட்ட அந்தப் பட்டியலில்தான் அரசியல் சட்டத்தில்
இடம் பெறும்படியாகச் செய்ய வேண்டும். என்று வலியுறுத்த
வேண்டும்.

இவைகளைச் சொல்கிறபோது அரசியல் சட்டத்தில் இடம்
பெற்றிருக்கிற ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்பு
கிறேன். அது இந்த அவையிலே உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க
வேண்டிய ஒன்று. அந்தக் காலத்தில் அரசியல் சட்டத்தில் இந்தி
ஆட்சி மொழியாக இடம்பெற்றபோது அன்றைக்கு இந்தி
மொழியால் ஏற்படக்கூடிய ஆபத்தை தேசியத் தலைவர்கள்
எல்லோரும் உணராத நிலையில், கோவை டி. ஏ. இராம
லிங்கம் செட்டியாரும், கிருஷ்ணசாமி பாரதியும் அப்படி சில
பேர் மட்டும் உணர்ந்து எடுத்துச் சொல்லக்கூடிய அந்தக்
காலத்தில் இந்தி மொழி அரசியல் சட்டத்தில்இடம் பெறுகிற
போது பெற்ற வடிவம் இது.

The official l nguage of the Union shall be Hindi in Devanagiri
script என்றும் பின்னர் English as an associ te official langu ge......
என்று நேரு அவர்களால் கொண்டுவரப்பட்ட உறுதிமொழியின்
படி அன்றைய ஆட்சி மொழிச் சட்டத்திலே இடம் பெற்றிருக்
கிறது. நான் சுருக்கமாகச் சொல்வதற்குக் காரணம் நேரம்
இல்லை என்பதால்தான், அப்படி வந்த அந்த அரசியல் சட்டம்
எங்கே கொண்டுபோய் விடுகிறது என்றால் பண்டித நேரு அவர்

களுடைய உறுதிமொழியைக் காப்பாற்றுகிற இடத்தில் நம்மை

(பிற்பகல் 1-10)

விடவில்லை. அரசியல் சட்டத்தின் 351-ஆவது பிரிவிலே சொல்லப்பட்டிருப்பது இது இந்தி மொழியை அரசியல் சட்டத்திலே ஆட்சி மொழியாக நுழைப்பதற்கான இடம் கிடைத்த அந்த வாய்ப்பை வைத்து இது இயற்றப்பட்டுள்ளது. 15 ஆண்டுக்காலம் ஆங்கிலம் நீடிக்கலாம் என்று அதிலே இடம் பெற்றிருந்தாலுங்கூட அதற்குப் பின்னர் பண்டித நேரு அவர்கள் சொன்ன உறுதிமொழியின்படி இந்தி மொழி அசோசியேட்டட் அபிஷியல் லாங்குவேஜாகவும் ஆல்ட்டர்னேடிவ் அபிஷியல் லாங்குவேஜ் ஆன ஆங்கிலம் இந்தி மொழி பேசாத மக்கள் விரும்புகிறவரை இடம் பெறலாம் என்று சொல்லப்பட்டு அதற் கேற்ற அளவுக்கு ஆட்சி மொழிச் சட்டம் கொண்டுவரப்பட் டாலுங்கூட, ஓரளவு ஒப்புக் கொள்ளப்பட்டு வந்திருந்தாலும் கூட, அரசியல் சட்டத்திலே இருக்கிற இந்தப்பிரிவு காரணமாக திட்டக்குழு மூலமாக, இந்தியைத் திணிக்கிற மிகப் பெரிய ஆபத்து ஏற்படக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அந்தப் பிரிவு 351,

It shall be the duty of the Unicn tu promote the spread of tha Hindi language, to develop it so that it may serve as a medium of expression for all the elments of the composite culture of Indir and to secure its enrichment by assimilting without interfering with its genius, form<, styles and expressions used in Hindustani and in the other languages of indie specified in the VIII Schedule and by trying wherever necessary or desirable for its vocabulary primarily on Sanskrit and secondarily on other languages.

இந்த 351-ஆவது பிரிவு மத்திய சர்க்காருக்கு, 22 மாநிலங் களுக்குச் சொந்தமான மத்திய சர்க்காருக்கு, பெடரேஷன் அமைப்புக்கு ஆட்பட்ட மத்திய சர்க்கார் தன்னுடைய வசதிக் காக, ஆட்சி மொழியான இந்திக்கு இடம் தேடுவது என்ற முறையிலே, ஆட்சி மொழி என்ற பெயர் பெற்றது ஒரு கால கட்டத்திலே, அதனால் ஓரளவுக்கு இடம் பெற்றது என்ற நிலைமையிலேயிருந்து, இந்தி மொழியை வளர்ப்பதற்காக மத்திய சர்க்காரே பொறுப்பேற்று இந்தி மொழியிலே எந்த, எந்த மொழி சொற்களை, எந்த அளவு ஏற்றுக் கொள்ள லாம் என்று கூறி ஏற்றுக் கொள்வதற்கு வழி செய்வதன் மூல மாக, ஏதோ





Composite culture கலவைக் கலாச்சாரம் கொண்டதாக என்று குறிப்பிடுகின்றனர். There is no culture as composite culture. கலவைக் கலாச்சாரம் என்ற ஒன்று இருப்பதைப் போல அவர்களாகக் கற்பித்துக் கொண்டு, காம்போசிட் கல்ச்சர் என்ற அந்த கல்ச்சர் தனி கல்ச்சர் ஆகிவிட்டதற்குப் பின்னர் அதுவே ஒரு செப்பரேட் கல்ச்சர் ஆகிவிடுவதை மறந்து பேசுகின்றனர்.—காம்போசிட்டாக இரண்டு மூன்று மொழி கூடி ஒரு மொழி பிறக்குமானால், Thenit is another new language. என்று கூறுமாறு வடிவு கொள்ளும் ஆகவே, காம்போசிட் கல்ச்சர் என்ற பெயரை ஒப்புக்குச் சூட்டி, பிற மொழிகளிலிருந்து சில சொற்களை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, அப்படி எடுத்துக்கொள்வதிலேகூட இந்தி மொழி யினுடைய தனிப்பட்ட தன்மைகள் மறையாமல் எடுத்துக்கொள்ள லாம் என்று எடுத்துக் காட்டி, வார்த்தைகள் அதிகமாக வேண்டி யிருப்பதால் சான்ஸ்கிரிட்டிலேயிருந்து எடுக்கலாம் என்று சொல்லி இந்தியைப் பரப்ப வேண்டுமென்ற கருத்து அரசியல் சட்டத்தில் 351-ஆவது பிரிவில் இடம் பெற்றிருக்கிற காரணத் தால்தான் மத்திய அரசு ஓராண்டிற்கு ரூ. 100 கோடி, ரூ. 120 கோடி செலவிடுகிற ஒரு துர்பாக்கியமான, வருந்தத்தக்க, கண்டிக்கத்தக்க, அபாயகரமான, இந்தி மொழி பேசும் ஒரு இனத் திற்குச் சிறப்பான ஒரு இடம் தரக்கூடிய, ஒரு மொழிக்கு வாய்ப் பான ஒரு திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது எனவே, ஆட்சி மொழிச் சட்டம் என்று ஒரு சட்டம் இருந்தாலும்கூட அரசியல் சட்டத்தினுடைய முதல் பிரிவை, இந்தியை ஆட்சிமொழியாக்கு கிற பிரிவை, தேவநாகிரி ஸ்கிரிப்ட் என்று இருக்கிற அந்தப் பிரிவில், ஆங்கில மொழி எவ்வளவு காலமானாலும் நீடிக்க வேண்டுமென்பதைச் சேர்க்கக்கூடிய முறையில் சேர்த்து இந்தி மொழி பேசாத, பிற மொழி பேசுகிற மக்களுடைய தேசிய மொழிகள் எல்லாம் மத்திய ஆட்சி மொழிகள் ஆகிறவரையில் ஆங்கில மொழி நீடித்தே தீரவேண்டுமென்று அந்த பிரிவை மாற்றுவதற்கும் இந்த 351-வது பிரிவு, இந்தியாவிலே பெரிய தேசிய உணர்வு இருப்பதாகவும், இந்தியாவிலே கன்னியாகுமரி யில் வாழ்கிறவனுக்கும் காஷ்மீரிலே வாழ்கிறவனுக்கும் சேர்த்து டெல்லி சர்க்கார் பாதுகாப்பு தருவதாகவும் ஒரு உணர்ச்சி ஏற் படுத்திதப்படுகிறற காரணத்தால், அவ்வளவு மக்களுக்கும் பிரதி நிதியாக இருக்கிற மத்திய சர்க்கார் இந்தி மொழி வளர்ச்சிக்கு மட்டும் நிதி ஒதுக்கக்கூடிய முறையில் இந்த 351-வது பிரிவு இருப் பதை எடுத்துவிட்டு, 15 தேசிய மொழிகளுக்கு—எட்டாவது ஷெடியூலில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற தேசிய மொழிகள் அத்தனைக்கும் மாநில ஆட்சி மொழிகள் அத்தனைக்கும் மொத்தமாக மொழி வளர்ச்சிக்காக ஒதுக்க இருக்கிற நிதியைக் கணக்கிட்டு. அந்த அந்த மொழி பேசும் மக்கள் தொகை அடிப் படையில் அந்தநிதியைப் பங்கிட்டு வழங்குவதற்கு மத்திய சர்க்கார் முன்வந்தாக வேண்டும். இல்லையானால், 351-வது பிரிவு என்பது சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் எந்த அடிப்படையில் இந்தி பேசாத இந்த நாட்டு மக்கள்

இரண்டாந்தரக் குடிமக்களாக ஆடுக்கப்பவார்கள் என்று வருந்திச் சொன்னாரோ அந்த அடிப்படையில்' நம்முடைய மொழியும் மத்திய ஆட்சி மொழியாகாத வரையில் நம்முடைய மானம் காப்பாற்றப்படாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே அந்த அடிப்படையில், ஒரு இனம் இன்னொரு இனத்தை அழிக்க, மறைக்க, தாழ்த்த பயன்படக்கூடியது இந்தி ஆதிக்கம் என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்களே: அந்த அடிப்படையில், இந்தி நமக்குப் பொது மொழி அல்ல என்று ஆதாரத்தோடு மறைமலை அடிகள் சொன்னார்களே அந்த அடிப்படையில்—இன்னும் நூற்றுக்கணக்கான அடிப்படைகளை நான் சொல்ல முடியும்—இந்தி ஆதிக்க நிலை தவிர்க்கப்பட இந்த 351-ஆவது பிரிவு கைவிடப்பட்டால் தவிர, திட்டக் குழுவிலே இந்தி மொழி வளர்ச்சிக்கான பொறுப்பை ஒப்படைப்பது தடுத்து நிறுத்தப்பட்டால் தவிர, கல்வி என்பது மத்திய அரசாங்கத்திற்குத் தொடர்புடைய கன்கரன்ட் லிஸ்டிலேயிருந்து மறுபடியும் ஸ்டேட் லிஸ்டுக்கு மாற்றப்பட்டால் தவிர, பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே சட்டமன்றத்தில், அவர்கள் ஆட்சிக்கு வந்த 6-ஆவது மாதம் கொண்டுவந்து நிறைவேற்றிய இரு மொழித் திட்டம் என்ற அந்தக் கொள்கை எவ்வளவுதான் நம்மாலே மனமாறக் காப்பாற்ற முயற்சிக்கப்பட்டாலுங்கூட அந்தக் கொள்கையைக் காப்பாற்ற முடியாத அளவுக்கு இந்தி ஆதிக்கம் மத்திய அரசாங்கத்தாலே வரத்தான் செய்யும் என்ற அந்த அபாயத்தை நான் இந்தக் கல்வி மான்யத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னுமொன்று, தேசிய உணர்வு என்பது அவரவர்களுக்கு அவரவர்கள் மாநில அடிப்படையில் இருக்கிற உணர்வு தான் தேசிய உணர்வே தவிர, அதைத் தவிர இன்னொரு தேசிய உணர்வு இருப்பதாக நான் கருதவில்லை. நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்வதாக இருந்தால், கணவனுக்கு மனைவியினிடத்தில் அளவற்ற அன்பு இருக்குமானால், மனைவிக்கு கணவனிடத்தில் அளவற்ற அன்பு இருக்குமானால், அது பெற்றோர்களிடத்தில் இருக்கிற அன்பிற்கு விரோதமானதல்ல. எனவே பெற்றோர்களிடத்தில் அன்பு வைப்பதற்காக கணவனும், மனைவியும் கொஞ்சம் விலகித்தான் இருக்க வேண்டுமென்று உத்தரவு போட முடியாது. அதேபோல தாய் மொழிப் பற்று, தாய் நாட்டுப் பற்று என்ற அடிப்படையில் ஏற்படுகிற மாநிலப் பற்று இவைகள் தேசியத்திற்கு விரோதமானதல்ல. இவைகள் இல்லாமல் தேசியம் இருக்குமானால் அது தேசியமல்ல. அது சர்வாதிகாரம். மொழிக்கோ, மாநிலத்திற்கோ உரிய உணர்விற்கு இடமில்லாது ஒரு தேசியம் இருக்குமானால் அது தேசியம் இல்லை. அது பண்பாடு இல்லை. இன்னும் சொல்லப் போனால் நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காக ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். விவேகானந்தரை விட உலக மனிதர்களை எல்லாம் ஒன்றாகக் கருதிய ஒரு தத்துவ ஞானியை கடந்த நூற்றாண்டிலே பார்த்ததில்லை. மேல் நாடு தெரிந்த, வடநாடு





தெரிந்த ஒரு தத்துவ ஞானி. ஆகவே விவேகானந்தர் சொல்கிறபோது அகில இந்தியாவில் தென்னாட்டினுடைய பண்பாடு தான் சிறந்திருக்கிறது என்று சொன்னார். ஆதாரம் இருக்கிறது. தென்னாட்டினுடைய பண்பாடு சிறந்திருப்பதற்கு காரணம், வழிவழி வந்த குடிமக்கள் வாழ்கிற பகுதியாக, திராவிடர்கள் வாழ்கிற பகுதியாக தென்னாடு, மெட்ராஸ் ஸ்டேட் இருக்கிற காரணத்தாலே, "கல்ச்சுரலி தே ஆர் அட்வான்ஸ்ட்", அவர்கள் பண்பாட்டிலே வளர்ந்திருக்கிறார்கள் என்று அவர் சொன்னார். விவேகானந்தர் சொன்னது மட்டுமல்லாமல், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தென்னாட்டிலே இருக்கிற பண்பாட்டினை அடையாளம் காட்டி குறிப்பிட்டு தன்னுடைய மகளுக்கு எழுதிய கடிதத்தில் திராவிடப் பண்பாடு, கலாச்சாரம் சிறந்திருக்கிறது என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். எது திராவிடக் கலாச்சாரம் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அந்தப் பண்பாடு சிறப்பானது என்பதை விவேகானந்தர் சொன்னார். பண்டித ஜவஹர்லால் நேரு எழுதினார். அதேபோல் மகாத்மா காந்தி அவர்கள் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்தவுடனே அவர்கள் சொன்னது இது, நான் தென் ஆப்பிரிக்காவில் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டபோது எனக்கு ஆதரவாக இருந்தவர்கள் தமிழர்கள் தான் அதிகமாக இருந்தார்கள். அந்தத் தமிழர்கள் எனக்கு இவ்வளவு ஆதரவு காட்டியதைப் பார்த்து அவர்களுக்கு நன்றி சொல்வதற்காக அவர்களுடைய தமிழ் மொழியினை நான் படிக்க வேண்டுமென்று விரும்பினேன். அதிலும் அவர்களுடைய ஒப்பற்ற நூல் என்று சொல்லப்படுகிற திருக்குறளைப் படிக்க வேண்டுமென்று விரும்பினேன்; முயற்சித்தேன்; இன்னும் நிறைவேறவில்லை என்று சொல்லிவிட்டு, தென்னாட்டு மக்களாகிய தமிழர்களுடைய தமிழ் மொழி அகில இந்தியாவிலும் பரவக்கூடிய நிலைமை இருக்குமானால் இந்தியாவின் ஒற்றுமையை காப்பாற்ற முடியும் என்று சொன்னார் காந்தியடிகள். காங்கிரசில் சேர்வதற்கு முன்னால், தேசியத் தலைவராக அவரை நாடு முழுவதும் அறிந்துக் கொள்வதற்கு முன்னால், தென் ஆப்பிரிக்காவிலிருந்து தமிழர்களுடைய தொடர்போடு திரும்பி வருகிற நேரத்திலே அகில இந்தியாவிலே தமிழ் மொழி பரவுமானால் இந்தியாவின் ஒற்றுமைக்கு அது நல்லது என்று சொல்லிய அவரின் கருத்து இருக்கிறது. அந்த அடிப்படையில் தொடர்ந்து நான் பேச விரும்பவில்லை. ஆனால் அவர்கள் அப்படி சொன்னதற்கு எது காரணம் என்றால் நம்முடைய கலாச்சாரம் மற்ற கலாச்சாரங்களுக்கு தாழ்ந்ததல்ல. அந்தக் கலாச்சாரத்தைக் காப்பாற்ற நாம்தான் ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்க வேண்டுமே தவிர நம்முடைய மாநிலத்தில் நமக்கு வேண்டிய கல்வியை உருவாக்க வேண்டுமே தவிர, அந்தக் கல்வியைக்கூட மத்திய சர்க்கார் உருவாக்கி,நமக்கு பாடல் புகட்டுவது அல்லது பாலாடையில் புகட்டுவது என்று அவர்கள் ஆரம்பிப்பார்களானால் அது சரியல்ல என்பதை எடுத்துக் கூறி

மாநிலத்தின் கல்வித்அமைச்சர் அவர்கள் மத்திய அரசினிடத்தில்
வாதாட வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து தெரிவிக்க விரும்புவது, நான் முன்னாலே சொன்ன
கருத்தினுடைய அடிப்படையிலே தான் தொடர்கிறேன். இங்கு
தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் எல்லாம் மூன்று
ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னவை தான். கல்வி அமைச்சர்
அதற்காக ஒரு பட்டியல் போட்டு இந்த வெட்டுத் தீர்மானங்
கள் வெட்டாமல் அவற்றை நிறைவேற்ற வேண்டுமானால்
அதற்கு மட்டும் எவ்வளவு நிதி தேவையென்று பார்ப்பீர்களா
னால், எனக்குத் தெரிந்தது, குறைந்தது 25 கோடி ரூபாய்
இந்த ஆண்டு தந்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களுக்கு மட்டும்
தேவைப்படுகிறது. 25 கோடி ரூபாய் இருந்தால் அவற்றை
எல்லாம் நிறைவேற்றலாம். நான் மூன்று ஆண்டுகளுக்கு முன்
னாலே பேசியது நினைவிலே இருக்கிறது. கல்வித் திட்டத்தை
செம்மைப்படுத்த வேண்டுமானால் முதலில் பள்ளிக்கூடம், ஆரம்
பப்பள்ளி இவைகளை செம்மையாக, ஓரளவிற்கு செம்மையாக
ஒழுங்குபடுத்தி கட்டித்தர வேண்டும் என்று சொன்னேன். இப்
போது என்ன பேசப்படுகிறது? சுற்றுப்புறச் சூழலோடு தொடர்
புடையவர்களாக பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று பேசு
கிறார்கள். சுற்றுப் புறச் சூழலோடு தொடர்புடையவர்களாக
இருக்க வேண்டுமானால் சுவர் இருக்கக் கூடாது. கூரை இருக்கக்
கூடாது, சுற்றுப் புறச் சூழலில் இடையில் உட்கார்ந்திருக்க
வேண்டும். அது புளிய மரத்தடியாக இருக்க வேண்டும் என்று
பொருள் அல்ல. சுற்றுப் புறச் சூழலை அவன் மதிக்க கற்றுக்
கொள்ள வேண்டுமென்றால் இடையில் சுவர் வர வேண்டும்.
சுவர் வராவிட்டால் சுற்றுப் புறச் சூழல் அவனுக்கு இடலாகத்
தான் தெரியுமே தவிர அந்தச் சூழ்நிலையை அவன் உணர முடி
யாது.

(பிற்பகல் 1-20)

இங்கே சென்னையிலிருந்து கிராமத்திற்கு போகிற ஒருவன்
கிராமத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறான். கிராமத்தில்
இருக்கிறவன் அதைப் பார்க்கிற போதே வெறுப்பு ஏற்பட்டு,
சென்னை நகருக்கு வந்து பார்த்து மகிழ்ச்சியடைகிறான். இதற்கு
என்ன காரணம்? The atomosphere has created the psychology,
that is the basis. எந்த மனப்பான்மை அந்த நேரத்திலே அவனி
டத்திலே இருக்கிறதோ அதுதான் பயன்படும். எனவே நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால்
சொல்லுகிறபோது, கட்டிடங்கள் கட்டுவதற்காக— ஆரம்பப் பள்ளி
யாக இருந்தாலும் சரி, நடுநிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி,
உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, கல்லூரியாக இருந்





தாலும் சரி, வேறு எதுவாக இருந்தாலும்சரி—500 கோடி
ரூபாய்க்கு ஒரு திட்டம் போட்டு, இந்த 500 கோடி ரூபாயை
கடன் நிதியாகப் பெறுவதற்கு முயற்சி செய்து, ஐந்தாண்டு
காலத்தில் ஆண்டுக்கு 100 கோடி ரூபாய் என்று ஒதுக்கி,
கல்வி திட்டத்திலே கட்டிடங்களுக்கு மட்டும் இந்தத் தொகையை
ஒதுக்கி நீங்கள் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டேன்.
நான் கேட்டு, ஐந்தாண்டு காலம் ஆகியும் இதுவரை செலவிட்
டிருப்பது—இந்த விவரத்தை நான் நினைவிலிருந்தே பேசிவிட
லாம் எனறு கருதுகிறேன்—ஏறத்தாழ 22 கோடி ரூபாய் தான்.
அதுவும் நீங்கள் போட்டிருக்கிற கணக்கின்படி பார்த்தால் 1977
ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு உட்பட ஏறத்தாழ 23 கோடி
ரூபாய்தான். இந்த 23 கோடி ரூபாயில் ஏறத்தாழ 12 கோடி
ரூபாய் மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்காகச் செலவிடப்
பட்டுள்ளது. மிச்சம் இருக்கிற 10 அல்லது 11 கோடி
ரூபாய்தான் உயர்நிலைப் பள்ளிகளுக்கு, ஆரம்பப்பள்ளி
களுக்கு செலவிடப்பட்டுள்ளது, வேறு ஒன்றும் நிதி ஒதுக்க
வில்லை. இப்படிப் பார்த்தால் வருடத்திற்கு இரண்டு கோடி
ரூபாய்தான் கட்டிடங்களுக்கு வருடத்திற்கு 2 கோடி
ஒதுக்கிவிட்டு, அந்தப் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறோம். அத
னால் கட்டிடம் இல்லை என்று சொன்னால் அந்தப் பிள்ளை
களுக்கு கல்வியைப்பற்றி ஒரு மரியாதை வராது. ஆசிரியர்கள்
மீது குறை சொல்லிப் புண்ணியம் இல்லை. பாடப் புத்தகத்தின்
மீது குறை சொல்லிப் புண்ணியம் இல்லை. ஒரு அட்மாஸ் பியர்
வேண்டும். உட்கார்ந்து படிக்கிற இடத்தைப் பார்த்துதான்
படிக்கிற உணர்வு வரும். இல்லை என்றால் நாம் எல்லோரும்
ஆசிரமம் நடத்தத் தயாராக இருக்க வேண்டும். புளியமரத்தடி
யில், மாமரத்தடியில் நாம் இடுப்பு வேட்டி மட்டும் கட்டிக்
கொண்டு, காலையிலே ஆச்சாரமாகக் குளித்து விட்டு, முடிந்தால்
திருநீற்றுப் பட்டை போட்டுக் கொண்டு, பிள்ளைகளைச் சுற்றி
உட்கார வைத்துச் சொன்னால், ஒரு பக்தி உணர்வு 'கல்டிவேட்''
ஆனால், அந்த இடத்திலே வேண்டுமானால் நீங்கள் பாடம்
நடத்தலாம். பக்தி உணர்வு வர முடியாது இந்தக் காலத்தில்.
அப்படி வந்தால் அதிலிருந்து பகுத்தறிவு இல்லாத நிலைமைதான்
வளரும் என்ற நிலையில் அதிகமான தொகை ஒதுக்கி,
பள்ளிக் கட்டிடங்களை நல்ல முறையில் அமைக்க ஏற்பாடு
செய்ய வேண்டும்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களைப்
பார்த்தால் கூட கட்டிடம் இல்லை, வகுப்பறை இல்லை, பெஞ்ச்
நாற்காலி இல்லை. கீற்றுக் கொட்டகை தான் இருக்கிறது.
இடிந்து விழும் நிலையிலே இருக்கிறது, 5 ஆண்டுகளுக்கு முன்
னாலே நாங்கள் நிதியும் இடமும் கொடுத்தும் கூட இன்னும்
தஞ்சை மாவட்டம் நாகை வட்டம் சிக்கலில் உயர்நிலைப் பள்ளிக்கு
இன்னும் கட்டிடம் வராமல் இருக்கிறது. இன்னும் அனுமதி
வராமல் இருக்கிறது. தனியார் பள்ளிகளை அரசு மேற் கொள்ள

வேண்டும். தனியார் கல்லூரிக்கு நன்கொடை கொடுத்தாலும்
கூட அதை உடனடியாக அரசு ஏற்று, அதை அனுமதிக்கவில்லை
என்று இப்படி எத்தனையோ கருத்துக்கள் இங்கே பேசப்பட்
டிருக்கின்றன. அவற்றை எல்லாம் நான் விளக்க விரும்பவில்லை.
ஆனால் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.
கல்வி நாட்டிலே.வளருகிற போது ஏழைக்கும் பணக்காரனுக்கும்
உள்ள வேற்றுமையைக் குறைக்க அது கருவியாக வேண்டும்,
வேற்றுமையைக் குறைக்க வேண்டும் அதன் மூலம் சமத்துவப்
படுத்த வேண்டும். 'ஈக்விட்டி அண்ட் ஈக்குவாலிட்டி' என்ற
முறையில் செயல்பட வேண்டும்.

பள்ளிக்கூடத்திலே குழந்தைகளுக்கு உணவு அளிப்பது என்
பது குழந்தைகளுடைய.உடல் நிலையில் பார்க்கும்போது வர
வேற்கத்தக்கதுதான். அது சத்துணவா இல்லையா என்பது இருக்
கட்டும். .ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்,
இந்த ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையில் கல்வி பற்றிய
மானியக் கோரிக்கை அறிக்கையைத் தந்துவிட்டு, அடுத்த
நாள் நீங்கள் திருத்தம் கொடுத்து அனுப்பினீர்கள். அப்படித்
தரப்பட்ட திருத்தங்களிலே ஒரு திருத்தத்தைப் பார்த்தேன்.
அது என்னவென்றால் சத்துணவு என்று சொல்லப்படுகிற
உணவுக்காக பள்ளிப் பிள்ளைகளுக்கு எண்ணெய் வழங்குவது
ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு 5 கிராம் எண்ணெய்
என்று இருந்ததை 3 கிராம் என்று திருத்த வேண்டுமென்று
வந்திருக்கிறது. இந்த 5 கிராம் என்பது ஒரு இடத்தில்
தான் இருந்ததா என்றால் இல்லை. ஆங்கிலத்தில் 5 கிராம்தான்
இருந்தது. தமிழிலும் 5 கிராம் தான். இந்த ஆண்டு 5 கிராம்
என்பதை 3 கிராமாகத் திருத்த வேண்டுமென்று சொனனீர்கள்,
போன ஆண்டு எத்தனை கிராம் இருந்தது என்று பார்த்தேன்.
அப்போதும் 5 கிராம்தான் இருந்தது. அப்படி 5 கிராமாக.
இருந்ததை 3 கிராமாகக் குறைக்கச் சொன்னீர்களே,
அதற்கு என்ன காரணம் என்று யாராவது சொன்னீர்களா?
சொல்லவில்லை. ஆனால் நாடெல்லாம் சொல்லப்பட்டிருக்
கிறது. 5 கிராம் தருகிறோம்,. 5 கிராம் தருகிறோம் என்று.
அதை யார் மாற்றுவது? ஆகவே 5 கிராம் நீங்கள் கொடுக்
காமல் 3 கிராம் கொடுத்து நாங்கள் சத்துணவு போடுகிற
இடத்தில் அவர்கள் எண்ணெய் எல்லாம் எடுத்துக் கொண்டு
கொஞ்சம்தான் ஊற்றுகிறார்கள் என்று நம்மவர்களே குற்றம்
சொல்கின்ற நிலைமை இருக்கிறது. அதற்கு யார் பதில்
சொல்வது? இந்த 5 கிராம் 3 கிராம். ஆனதிலே கூட வேடிக்கை
இல்லை. அதற்கு முந்திய ஆண்டு பட்ஜெட்டை எடுத்துப்
பார்த்தால்—கல்வி அமைச்சர் அதைப் பார்க்க வேண்டும்—7
கிராம் என்று இருக்கிறது. மூன்றாவது ஆண்டு 7 கிராம். என்
கையிலே அந்த அறிக்கை இருக்கிறது. அதை எடுத்துப் பேசி
னால் நேரம் ஆகும். அதனால் விட்டு விடுகிறேன். மூன்றாவது



ஆண்டு 7 கிராம் எண்ணெய் என்று இருந்து, கடந்த ஆண்டு
5 கிராம். இந்த.ஆண்டு அச்சடிக்கிறபோது 5 கிராம், திருத்து
கிறபோது 3 கிராம்.; போய்ச் சேருகிற போது ஒன்றரை கிராம்.
இதை நான் சொல்வதற்குக் காரணம் ஊழல் இருக்கிறதோ
இல்லையோ .பொறுப்பான முறையில் நம்முடைய சத்துணவுத்
திட்டத்தை நடத்திக் காட்டுவதினால் நமக்கு ஏற்படக்கூடிய
குறை தவிர்க்க முடியாததா ?

இன்னும் சொல்லப் போனால் இந்தச் சத்துணவுத் திட்டத்
திற்கு ஏறத்தாழ 25 கோடி ரூபாய் கல்வி மானியத்திலே ஒதுக்கி
யிருக்கிறோம். மிச்சம் இருக்கிற தொகை எந்த மானியத்திலே
ஒதுக்கப்படுகிறது என்று கேட்டால் சிவில் சப்ளைஸ், உணவு
வழங்குகிற துறையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று .தெரிவித்
திருக்கிறார்கள். 25 கோடி எதற்கு என்று சொன்னால், அங்கே
பணியாற்றுகிறவர்களுக்கு, இன்னும் சொல்லப் போனால், அங்கே
தேவைப்படுகிற பாத்திரங்களுக்கு மற்ற வசதிகளுக்கு, சம்பளத்
திற்காக என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மிச்சம் இருக்கிற
செலவை யார் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றால் சிவில் சப்ளைஸ்
இலாக்காவில் அவர்கள் வழங்குகிற பொருள்களுக்காக ஏற்றுக்
கொள்கிறார்கள். அந்தளவில் அவர்கள் ஏற்றுக் கொண்டு இருப்
பதை, சிவில் சப்ளைஸ், 1984–85 திருத்திய மதிப்பீடு 116
கோடியே 49 இலட்சத்து. 47 ஆயிரம். இது திருத்திய
மதிப்பீடு, சிவில் சப்ளைஸ் இலாக்காவைப் பற்றி தரப்பட்டு
இருப்பது, அதே தொகை மேலும் திருத்திய மதிப்பீடாக
வருகிறது பெர்பாமன்ஸ் பட்ஜெட்டிலே, அது
எவ்வளவு வருகிறது என்று கேட்டால் 1984–85 இல்
114 கோடியே 6 இலட்சத்து 54 ஆயிரம் என்று வருகிறது,
ஒரே குறிப்பு. தொகை வேறுபடுகிறது. அதைப்போலவே
ரிவைஸ்டு எஸ்டிமேட் என்று சொல்வதில் 1984–85 இல் இந்த
பெர்பார்மன்ஸ் பட்ஜெட் என்று சொல்லப்படுவதிலே காணப்
படுகிற தொகை 107 கோடியே 86 இலட்சத்து, 87 ஆயிரம்.
அதே தொகை பட்ஜெட் எஸ்டிமேட்டில் காணப்படுவது
வேறுபடுகிறது. ஒவ்வொன்றுக்கும், 5 கோடி, 3 கோடி என்ற
வேற்றுமை. இது இரண்டும் இந்த ஆண்டுக்கான எஸ்டிமேட்டாக
இருந்தாலும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். 1985–86-க்குத்
தரவேண்டிய எஸ்டிமேட்டாக இருந்தாலும் ஒன்றாகத்தான்
இருக்க வேண்டும். விவரம் எல்லாம் இதிலே இருக்கிறது. நான்
அதற்குள்ளே போய் என்னுடைய .நேரத்தை அதிலே செலவிட
விரும்பவில்லை. Either you give the figures in the performance budgut
or in the regular budget, or in any other document, but the same
figures should appear in different places for the same items.
ஒவ்வொரு இடத்திலேயும் ஒவ்வொரு மாதிரியாக பேசுவதால்
ஏற்படக் கூடிய விளைவு என்ன என்றால் : எங்களைப் போன்

றவர்கள் கூர்ந்து படிக்க நேரிடுகிறவர்களுக்கு குழப்பம் ஏற்
படுகிறது. படிக்காமல் இருந்தால் நிம்மதிதான். அதுவும் நான்
பல ஆண்டுகளுக்கு முன்னாலே உணர்ந்த ஒரு உண்மைதான்.
இருந்தாலும் கூட படிக்க ஆரம்பித்தால் குழப்பம் ஏற்படுகிறது.
எனவே அப்படிப்பட்ட நிலைமையிலே இந்த புள்ளி விவரங்கள்
இருப்பதை நிதி இலாக்காவினர் சரிப்படுத்தலாம்.

அத்தோடு மற்றொன்று. கல்வி இலாக்காவிலே சொல்கிற
போது, இது சிவில் சப்ளைஸ் இலாக்காவினுடைய செலவிலே
சேர்ப்பது என்பதால் அப்படி 100 கோடி ரூபாய் நமக்குக்
கிடைக்கிறது என்று கல்வி இலாக்கா மகிழ்ச்சி அடையக் கூடும்.
ஆனால் சிவில் சப்ளைஸ் இலாக்காவிலே சொல்கிற போது, சரி
யாக 40 கோடி ரூபாய். எதற்கு ? அரிசி விலையேற்றத்தை ஈடு
கட்டுவதற்காக தரப்பட்ட தொகை 40 கோடி ரூபாய் என்று
ஒரு புள்ளி விவரம் இருக்கிறது. சரியாக 40 கோடி ரூபாய் என்று
எப்படி வரும்? ஒரு புள்ளி விவரம் என்ற கணக்கு இருந்தால்,
எவ்வளவு அரிசி கொடுத்தார்கள், அதிலே எவ்வளவு நஷ்டம்
வந்தது, அது என்ன 38 கோடியே 48 இட்சமா, அல்லது 41
கோடியே 32 இலட்சமா? 40 கோடி என்று கடந்த ஆண்டுக்கு
கணக்கு தீர்த்த ஆண்டுக்கும் 40 கோடி, வருகிற ஆண்டுக்கும்
40 கோடி. அதைப் போலவே நான் உங்களுக்கு நினைவுபடுத்து
வதற்காகச் சொல்கிறேன். நம்முடைய ஆசிரியர்களுக்குடைய
தேவை, மாணவர்களுடைய எண்ணிக்கை, அதற்கு ஏற்ப ஆசிரியர்
களை நிரப்புவதிலே கூட என்ன முறை வைத்திருக்கிறோம் தெரி
யுமா ? இந்த ஆண்டு இடைநிலை ஆசிரியர்கள் 500, நடுநிலை
பள்ளிக்கு 50, நடுநிலை பள்ளிக்கும், உயர்நிலைப் பள்ளிக்கும்
தமிழ் ஆசிரியர்கள் 75, உயர்நிலைப் பள்ளிகளுக்கு பி.எட். 150,
நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள பகுதி நேர கைத்
தொழில் ஆசிரியர்களில் 50 பேர்களுக்கு முழுநேரப்பணியிடங்கள்.
இப்படி எல்லாம 50 என்றுப் 500 என்றும் வந்தது எதனால்? இது
போதுமா ? ஏன் அப்படிக் கொடுத்தார்கள் என்று பார்த்தேன்
போன ஆண்டு, 1984—85-லே இந்த 500, ஆயிரமாக இருக்கிறது
50, 100 ஆக இருக்கிறது, 75, 150 ஆக இருக்கிறது, 100, 200 ஆக
இருக்கிறது, 50, 100 ஆக இருக்கிறது. அதனாலே கடந்த
ஆண்டு வழங்கியது போல சரியாக பாதி போடுவோம் என்று
போட்டுவிட்டார்கள் இந்த ஆண்டு. இது எப்படி இருக்கிறது.
என்றால், வீட்டிலே இருக்கிற தாய்மார்களில் கொஞ்சம்
வயதான தாய்மார்கள் இருந்தால், இன்றைக்கு 3 பேர்கள்
தான் சாப்பிட வருவார்கள், அம்மா, அதனாலே நேற்று
போட்டதிலே இன்றைக்குப் பாதி போட்டு சமை என்று சொல்வார்
களே, அது மாதிரி இருக்கிறதே தவிர தேவைக்கோ, அல்லது
நிலைமைக்கோ ஒத்ததாக இல்லை. ஒன்று 58 ஆக இருக்கலாம்,



அல்லது 128 ஆக இருக்கலாம். அப்படி இல்லை. போன ஆண்டு
எப்படி தாராளமாக 1,000, 500 என்று கொடுத்தார்கள், என்று
பார்த்தேன், ஓ, தேர்தல் வருகிற ஆண்டு, அதனாலே நிரப்ப
வேண்டும் முடிந்த அளவிற்கு நிரப்பலாம், வந்தால் பிறகு பார்த்
துக் கொள்ளலாம் என்று கருதி இருக்கலாம், அதிலே ஒன்றும்
தப்புஇல்லை. ஆனால் புள்ளிவிவரங்கள் இப்படி இருக்ககூடாது.
அதுமாதிரி அரசாங்கத்திலே நடைபெறுகிற தேர்வுகளைப்பற்றிப்
பேசுகிறபோது என்ன கூறியிருக்கிறார்கள் என்றால் தொழில் நுட்ப
தேர்வு தவிர மற்றவைகளில் எல்லாம் புள்ளிவிவரம்,625, 438,
629 என்று அது எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால்
தொழில் நுட்ப வணிக இயல் கடந்த ஆண்டு தேர்வு எழுதி
முடித்தவர்கள் 15 ஆயிரம், சரி இந்த ஆண்டு எழுதப் போகிற
வர்கள் எவ்வளவு தெரியுமா? 16 ஆயிரம் பேர்கள். புள்ளிவிவரம்
எப்போதாவது 15, ஆயிரம், 16 ஆயிரம் என்று வருமா? 14,878
பேர்களாக, 15,112 பேர்களாக இருப்பார்கள். அதைக் கணக்குப்
போட முடியாதவர்களாக இந்தத் துறையிலே இருக்கிறார்கள்.
போன ஆண்டு தேர்வு எழுதியது எப்போது? 84 செப்டம்பர்—
அக்டோபர் மாதங்களிலே எழுதிய தேர்விலே எத்தனை பேர்கள்
எழுதினார்கள் என்பது கூடவா இந்த இலாக்காவிற்குத் தெரி
யாது? ஆக, இப்படிப்பட்ட முறையிலே புள்ளி விவரம்
தருவதிலே ஏற்பட்ட தவறுகளை நீக்கவே நான் நினைவூட்ட
விரும்புகிறேன்.

அடுத்து மாணவர்களைச் சேர்ப்பதிலே நாம் மிக அதிகமாகச்
சேர்த்து இருக்கிறோம். அகில இந்திய புள்ளிவிவரத்தைப் பார்க்
கிற நேரத்திலே நம்முடைய பர்சன்டேஜ் அதிகம் என்பதிலே
எனக்கு ஒன்றும் சந்தேகம் இல்லை. நம்முடைய நாவலர்
அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த காலத்திலேகூட நம்முடைய
பர்சன்டேஜ்தான் அதிகம். அந்தப் பெருமை நாவலுருக்கு என்று
கூட சொல்ல முடியாது. காரணம் சி. சுப்ரமணியம் இருந்த
போதே நமக்குத்தான் அதிகம். அதற்கு என்ன காரணம்
என்றால், பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதன்
மூலமாகத்தான் நம்முடைய வீட்டுப் பெற்றோர்கள் கொஞ்ச
மாவது நிம்மதியாக இருக்க முடியும். அதனாலேதான் நீண்ட
நாட்களாக அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். என்னையும்
அனுப்பினார்கள். அதேமாதிரி எல்லோரையும் அனுப்பினார்கள்.
இது ஒரு நிலை. மற்றொன்று, வெளியிலே பிள்ளைகள் தங்கி
இருக்கக்கூட இடம் இல்லை. இது ஒரு காரணம். இப்போது
மூன்றாவது பகல்சோறு ; அது ஒரு துணைக் காரணம்.

ஃபீ வாங்கி கல்லூரிகளை நடத்துவதே தவறு என்று மத்திய
சர்க்கார் ஒரு பக்கம் சொல்லிக் கொண்டிருக்கையில், நம்முடைய
மாநிலத்தில் இது போன்ற கொஞ்சம் பயன்மிகுந்த, சமூகத்
திற்கு மிகவும் தேவையான கல்வி நிலையத்தை நடத்த தனி
பட்டவர்களுக்கு அனுமதிப்பது இல்லை. என்று சொல்லிக்
கொண்டு, தனிப்பட்டப்வர்களை அனுமதித்ததோடு, அவர்கள்
சந்தையில் வாங்கிய பொருளைப் போல அந்தப் பள்ளிகளை
கருதி, வருகிற பிள்ளைகளிடத்தில் வெளிப்படையாக நிதி
கேட்டுத்தான் இடம் அளித்தனர். என்னுடைய உறவின
ருடைய பையன் ஒருவனைக் கூட நான் ஒருகல்லூரிக்குப்
அனுப்பி பெயரைச் சொல்லிக் கேட்டபோது, எல்லோருக்கும்
10 ஆயிரம் ரூபாய், உனக்கு வேண்டுமானால் 7 ஆயிரத்திற்கு
இடம் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான்
உங்களைக் குற்றம் சொல்வதற்காக இதை சொல்லவில்லை.
நீங்கள் ஏன் இந்த அளவிற்கு அவர்களுக்கு உரிமை கொடுத்
அப்படிப்பட்ட கல்வி நிலையங்களை அனுமதித்தீர்கள்? அப்படி
யாவது அங்கீகாரம் வழங்கவேண்டிய நெருக்கடி ஏன் வந்தது?
இப்படிப்பட்ட இந்த கேப்பிடேஷன் ஃபீ-ஐ எப்படி ஒழிக்கப்
போகிறீர்கள்?

கேப்பிடேஷன் ஃபீ-முறையை ஒழிக்காத வரையில் பணம்
படைத்தவர்கள், அதிலும் வேறு தவறான வழிகளிலே பணம்
சேர்த்தவர்களுக்கு தான் அதில் இடம்பெறும் வாய்ப்பு இருக்குமே
தவிர ஏழைகளுக்கு உரிய வாய்ப்பு இருக்குமா? அப்படி
யானால் சமூகத்தைமாற்றி அமைக்கப் போகிறோம் என்று
சொல்லுகிறீர்களே, அந்த கருத்துக்கு எங்கே இடம்?
தனிப்பட்ட யாரையும் நாம் கண்டிக்க வேண்டிய அவசியம்
இல்லை. சமூகமே கெட்டுப் போய் இருக்கும்போது, நாடே
தரம் குறைந்து போய் இருக்கிறபோது, கல்வித் துறையே
சில சீரழிவுகளுக்கிடையே சிக்கிக் கொண்டிருக்கிற போது
வியாபாரத்திற்கும் கல்விக்கும் இடையே வேறுபாடே தெரியாத
போது, அப்படி ஒரு நிலை நாட்டிலே இருக்கும் படியான
பொதுவான சூழ்நிலை உருவாகியிருக்கிறபோது, இந்தப் புற்று
நோயை போக்குவதற்கு கல்வி அமைச்சர் ஏதாவது ஒரு வழியை
ஆராய்ந்து திட்டம் தீட்டி செயலாற்ற வேண்டும் என்று நான்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் பல கருத்துக்கள் இருந்தாலும் கூட ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன், ஆசிரியர்கள், முதுநிலை ஆசிரியர்கள், பட்ட
தாரி ஆசிரியர்கள் அவர்களுடைய போராட்டம். ஏற்கனவே
கல்வி அமைச்சர் அவர்கள் தந்த உறுதிமொழிகள் நிறைவேற
வில்லை என்று போராட்டம் நடக்கிறது. கடந்த ஆண்டு ஏப்ரல்
12 அல்லது வேறு ஏதோ ஒரு தேதி சொன்னார்கள். அந்தத்
தேதியிலே தரப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை





என்று அந்த ஆசிரியர்கள் என்னிடத்தில் குறைபட்டார்கள்,
என்னிடத்தில் அவர்களுடைய வேண்டுகோள்கள் என்னென்ன
என்ற விவரங்கள் அத்தனையும இருக்கின்றன. நான் உங்க
ளுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அது
முறையும் அல்ல. இன்னும் சொல்லப்போனால் நான் யாருக்காக
பேசுகிறேனோ அவர்கள் மீது கோபம் வருவதற்கு அது காரண
மாகிவிடுகின்ற அளவுக்கு நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்ப
வில்லை. தனிப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலை
ஆசிரியர்களுக்கு மட்டும் அல்ல குறை. கல்லூரி ஆசிரியர்களாக
இருப்வர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுத்தச்
சலுகை கொடுக்கவில்லை என்றும், உயர்நிலைப் பள்ளியில் அரசு
ஊழியர்களுக்குச் சமமாக பணியாற்றுகின்ற பல்வேறு ஊழியர்
களுக்கு, அலுவலர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படவில்லை
என்றும் பல்வேறு வேண்டுகோள்கள் அமைச்சர் அவர்களிடத்
திலே ஏற்கனவே தரப்பட்டிருக்கின்றன. என்னிடத்திலும்
தரப்பட்டு இருக்கின்றன. அதை நான் குறிப்பிடுகின்றபோது
ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

எழுத்தர் பணியாற்றுகின்றவர்களுக்குக் கூட நீங்கள் சொன்ன
உறுதிமொழியை ஏன் நிறைவேற்றக்கூடாது. ஆகவே உறுதிமொழி
தராமல் உள்ள பிரச்சனைகளை உடனே பரிசீலனை செய்யுங்கள்.
கடந்த ஆண்டு உறுதிமொழி கொடுத்தபிரச்சனைகலை தயவு
செய்து இந்த ஆண்டாவது நிறைவேற்றுங்கள். அப்படி நிறை
வேற்றினால் அதிகமாகச் செலவாகும் என்று நான் கருதவில்லை
இன்னும் சொல்லப்போனால், தனியார் பள்ளிக்கூடங்களை
அவர்கள் தான் நடத்துவது என்று நீங்கள் அனுமதிப்பதாக
இருந்தால் நிர்வாகத்திற்கு 4 சதவீதம் என்று தருகின்ற செலவுத்
தொகையை 8 சத விகிதம என்று ஆக்கிக்கொடுங்கள். அப்படி
இல்லையென்றால் அந்த பள்ளிக்கூடத்தையாவது எடுத்துக்
கொள்ளுங்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல
குழந்தைகளுக்காக நடத்தப்படுகின்ற கிண்டர் 'கார்டன் பள்ளி
களில் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை மாற்ற
வேண்டுமானால், ஒன்று நீங்கள் நல்ல தமிழிலே சொல்லிக்
கொடுக்கின்ற அப்படிப்பட்ட குழந்தை பள்ளிகளை நடத்
துங்கள். அந்த குழந்தை பள்ளிகளை நடத்துவதிலே
மக்களுக்கு நம்பிக்கை வரவேண்டுமானால், இருக்கின்ற பள்ளி
களை முதலிலே ஒழுங்காக நடத்துங்கள். இன்னும் சொல்லப்
போனால், கான்வெண்டில் உள்ள ஆசிரியர்கள் அற்புதமான
திறமை படைத்தவர்கள், கார்ப்பரேஷனில் உள்ள ஆசிரியர்கள்
திறமையற்றவர்கள் என்பதில்லை. அங்கே கொடுக்கின்ற வசதி
களை இங்கே கொடுத்துப் பாருங்கள் கார்ப்பரேஷன் ஆசிரியரே
தமிழில், ஆங்கிலத்தை விட நல்ல முறையில் சொல்லித்தர

செய்ய முடியும் என்பதை நிரூபித்துக் காட்ட முடியும். அந்த அளவுக்கு முடியும். ஆனால் அதற்கான எந்த வசதி இருக்கிறது? சட்டியும் இல்லை, அகப்பையும் இல்லை என்னும் நிலையில் கூட்டோ அல்லது குழம்போ எப்படி வைக்க முடியும்! ஆகவே கட்டிடங்களில் தொடங்கி அந்தப் பணியைச் செய்யுங்கள். ஒன்றைச் சொன்னால் நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

பெண்கள் பள்ளிக்கூடங்களில் கழிப்பறை கட்டுவதற்கு ரூ. 5 கோடி செலவில் 5 ஆண்டுகளிலே நிறைவேற்றியிருக்கிறீர்கள், இன்னும் ஒரு ஆண்டு பாக்கி, நூறு லட்சம் ரூபாய் மேலும் செலவிடுவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது அடிப்படையான திட்டம். அந்தக் கடமையை நிறைவேற்றியிருக்கிறீர்கள். வெறும் கழிப்பறைக்கு மட்டும் ரூ. 5 கோடி செலவே, 5 ஆண்டுகள் ஆகின்றன என்று சொன்னால் ஒழுங்காக பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமானால் எவ்வளவு நாட்கள் ஆகும்? எவ்வளவு நிதி தேவைப்படும்?

இதற்கிடையில் தம்முடைய முதலமைச்சர் சொன்ன காரணத்தால், போகிற வருகிற வழியெல்லாம் நெடுஞ்சாலைகளில்— உத்திரமேரூர் ரோட்டிடிலே, காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி போகின்ற வழியில் 8–வது மைலில் அல்லது 9–வது மைலில் ரோட்டிலே ஒரு சின்ன பள்ளிக்கூடம் மாதிரி ஒரு கட்டிடம் இருக்கிறது. சுத்தமாக இருக்கிறது. என்ன இங்கே கட்டியிருக்கிறார்கள்? என்னய்யா கட்டிடம் ஊர் இல்லையே என்றேன். டிரைவர் இது கழிப்பறை என்று சொன்னார். சரியென்று அடுத்த ஊரில் 4 பர்லாங் 8 பர்லாங் தள்ளி வீடுகள் இருக்கின்றன. அங்கே வந்து இறங்கி இரண்டு பேரைக் கூப்பிட்டுக் கேட்டேன். அங்கே ஒரு கழிப்பறை கட்டியிருக்கிறார்களே தெரியுமா என்று கேட்டேன். ஏதோ ஒரு கட்டிடம் கட்டினார்கள் என்றார்கள். யாராவது போறது உண்டா என்று கேட்டேன். இல்லை என்றார்கள். எதற்காக அப்படிக் கட்டுவது? ஆக அப்படி சாலை ஓரத்தில் எங்கேயாவது கண்காட்சிக்காக கட்டாமல் கழிப்பறை கட்டுவதையெல்லாம் நிறுத்தி, தயவுசெய்து அந்தப் பணம் பூராவையும் வேறு நல்ல பயனுள்ளவற்றில் செலவிடலாம். மதுரையில் கட்டப்பட்ட கழிப்பறைகளின் நிலைமை என்ன என்று எனக்குத் தெரியும். அதையெல்லாம் விளக்க வேண்டாம். தவறு ஏற்படுவது உண்டு; ஆனால் தொடரக்கூடாது. குற்றங்கள் ஏற்படுவது உண்டு ஆனால் அதனை ஆதரிக்கக் கூடாது. எனவே, அந்த முறையில் அந்த நிதியெல்லாம் சேர்த்து, கட்டிங்கள் கட்டுவதற்கான நிதிக்கும், ஆசிரியர்கள் குறைகளை போக்குவதற்கான முறைக்கும் வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தாங்கள் இவ்வளவு நேரம் பேச அனுமதி அளித்ததற்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (11—4—85) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

162. தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறு
வனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்
கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்.)

163. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறு
வனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்
கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

164. சோழன் பொறியியற் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான பத்தாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறு
வனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ்.)

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

எதுவுமில்லை.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2,
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5,
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Gompany, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta 11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

வெளியீடு 8-11-1985. Issued 8-11-1985

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLALIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1985 ஏப்ரல் 11, தொகுதி V-எண்-6

**Thursday the 11th April 1985- Volume V-No-6.**

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Department, FortSt. George, Madras-600 009**

விலை-ரூ.3.50 காசுகள்] Price Rs.3-50paise

## உள்ளடக்கம்

11-4-1985.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்களுக்கு—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 131—162 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் தேர்தல் .. | 162 |
| (ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.) .. | 173 |
| (இ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985 (ஆ.இ.) .. | 174 |
| (ஈ) அழகப்பா பல்கலைக்கழக சட்ட முன்வடிவு, 1985 (ஆ. இ) .. | 266 |
| (உ) ஏற்கனவே கொடுக்கப்பெற்றுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புகளுக்கு புதிய அறிவிப்பு கொடுத்தல். .. | 272 |
| 3. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் மாடுகள் கோமாரி நோயினால் தாக்கப் பெற்றுள்ளது. .. | 162—165 |
| (ஆ) இலங்கை இராணுவத்தினர் இராமேஸ்வரம் கடல் பகுதியில் இந்திய மீனவர்களுக்கு இழைக்கும் கொடுமைகள். .. | 166—173 |
| 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985. .. | 173 |
| (ஆ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985. .. | 174 |
| (இ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1985. .. | 215—260 |
| (ஈ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985. .. | |

(உ) அழகப்பா பல்கலைக் கழக சட்ட முன் வடிவு 1985. .. 266—272

5. வரவு—செலவுத் திட்டம் 1985–86 வரக்கெடுப்பு கோரிக்கை எண். 17—கல்வி (தொடர்ச்சி.)..

திரு. உ. சுப்பிரமணியன் .. 176—191
மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். .. 191—194

6. அரசினர் தீர்மானம்—
அவை ஒத்திவைக்கப் பெறுதல் .. 272—273

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 273

2836

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஏப்ரல் 11, வியாழக்கிழமை.

பங்குனி 29, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.''

கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும்; ஊராகும்; ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலம் கழிப்பது ஏன்?

### 1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தூத்துக்குடி அனல்மின் நிலையம்.

79—(* வினா எண். 14) திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் 4-2-1985 முதல் ஒரு பிரிவு மூடப்பட்டுவிட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அது மறுபடியும் உற்பத்தியைத் துவக்க எவ்வளவு காலம் பிடிக்கும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 3-வது பிரிவில் ஹைடிரஜன் வாயு கசிவு காரணமாக, மின் உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டது.

(இ) மே மாதம் மூன்றாவது வாரத்தில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1985 ஏப்ரல் 11

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த தூத்துக்குடி மின் உற்பத்தி நிலையம் புதிய இயந்திரங்களைக் கொண்டது. புதிய இயந்திரங்கள் இப்போது சீக்கிரமாகக் கெட்டு பல சந்தர்ப்பங்களிலே மின் உற்பத்தி நின்றுவிட்டது. இன்றைக்கு இருக்கிற நெருக்கடி கல்பாக்கம் மின் உற்பத்தி இல்லாததும் தூத்துக்குடி மின் நிலையம் கெட்டுப்போனதும்தான் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி கெட்டு விடாமல் இருக்கக்கூடிய முறையிலே புதிய முறையிலே அவைகளை இருந்த முறையிலே அப் கீப் பண்ணுவதற்குத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கல்பாக்கத்தைப் பொறுத்தவரையில் மின் உற்பத்தி இப்போது துவங்கி கிடைத்துக் கொண்டிருக்கிறது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் 3-வது இயந்திரத்தைப் பொறுத்தவரையில் வடிவமைப்பில் ஏற்பட்ட கோளாறு தான் காரணம். பெல் நிறுவனம் இதுபோன்று 13 செட்களை இந்தியா முழுவதும் தந்தார்கள். அதிலே எல்லாம் இப்படிப்பட்ட குறை இருக்கிறது. அதைச் சரி செய்வதில் நீண்டகாலமாகிறது, ஆகவே அவர்கள் அதைச் சரிசெய்தபின், மே மாதம் 3-வது வாரத்திலே உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, பெல் நிறுவனம் ஒரு பெயர் பெற்ற பிரக்யாதி பெற்ற நிறுவனம் என்று நாடு முழுவதும் சொல்லப்படுகிறது. அந்த நிறுவனத்தால் சப்ளை செய்யப்படுகிற அந்த ஜெனரேட்டர்ஸ், இயந்திரங்கள் 10, 13 இடங்களிலே ஒழுங்காக இல்லாமல் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் அந்த பெல் நிறுவனத்தினுடைய சாதனங்களை இனிமேல் வாங்கினால் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படும் என்றால் இதற்கு வேறு என்ன வழி என்பதை ஆலோசிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த பெல் நிறுவனம் ஒன்றுதான் இந்தியாவிலே இருக்கிற நிறுவனம். அதுதான் அனல் மின் நிலையங்களுக்கான இயந்திரங்களை உற்பத்தி செய்கிறது. சோவியத் யூனியன் தொழில்நுட்ப உதவி பெற்று உருவாக்குகிறார்கள், அதிலே டிபரன்ட் வெர்ஷன் என்ற முறையிலே கொஞ்சம் கொஞ்சமாக இம்ப்ரூவ் பண்ணி உற்பத்தி செய்துகொண்டு வருகிறார்கள். இப்போது அப்படிப்பட்ட கோளாறு வருவதில்லை. வந்த 3 யூனிட்டுகளிலே முதலிலே வந்ததிலே கொஞ்சம் இருந்தது, அதற்குப் பிறகு இரண்டாவது வந்ததிலே கொஞ்சம் பரவாயில்லை, இப்போது 3 வதிலே எதிர்பாராத விதமாக ஹைட்ரஜன் லீக்கேஜ் ஏற்பட்டது. மற்றபடி எந்தப் பிரச்சினையும் இல்லை. வளர்ந்து வருகின்ற நாடுகளிலே வரக்கூடிய சாதாரண பிரச்சினைதான் இது.



1981 ஏப்ரல் 11]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கடுமையான மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்திலே தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் பங்கு கணிசமாக இருக்கும். ஆகவே அந்த மின் உற்பத்தி நிலையத்திலே உற்பத்தியாகும் மின்சாரத்தின் அளவு என்ன? அதைப்போலவே கல்பாக்கம் நிலையத்தின் மூலமாக நமக்குக் கிடைக்கும் மின்சாரத்தின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு 400 மெகாவாட் தூத்துக்குடியிலிருந்தும் 200 மெகாவாட் கல்பாக்கம் நிலையத்திலிருந்தும் நமக்குக் கிடைக்கிறது. நாம் கல்பாக்கம் நிலையத்திலிருந்தும் நமக்குக் கிடைக்கிறது. நாம் போட்டகணக்கே 600 மெகாவாட் கிடைக்கும் என்ற அடிப்படையில் நாம் போட்டோம். ஏனென்றால் 'different versions' என்ற நிலை இருக்கிறது. அதுவும் கோடை காலத்திலே, எதிர்பாராதவிதமாக சிக்கலினாலே இப்படிப்பட்ட கஷ்டம் ஏற்பட்டிருந்த ஏற்பட்டது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, 630 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவேண்டுமென்று சொல்கிற அளவுக்கு அந்த 3 பிரிவுகளிலும் சாதாரணமாகவே எவ்வளவு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் கோளாறு ஏற்படுகிற வரையிலே 630 மெகாவாட் கிடைத்துக் கொண்டிருந்தது. இப்போது 400, 420 மெகாவாட் அளவிலே தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் மூன்றாவது இயந்திரம் பழுது பார்ப்பதற்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. எப். எம். இராசரத்தினம் : தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலே தற்போது எத்தனை பிரிவுகள் இயங்குகின்றன? குமரி மாவட்டத்திற்கு எவ்வளவு மின்சாரம் அதிலிருந்து வழங்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 3 பிரிவுகளில் இரண்டு பிரிவுகள் இயங்குகின்றன. இரண்டு பிரிவுகளில் உற்பத்தியாகிற மின்சாரம் தமிழகம் முழுவதும் கொடுக்கப்படுகிறது. குமரி மாவட்டம் தமிழகத்தின் உள்ளே தான் இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது வாயு கசிவு காரணமாக இப்படி ஏற்பட்டது என்று சொன்னார்கள். இந்த ஆண்டு முழுவதும் பலயிடங்களில் வாயு கசிவு மூலமாக போபாலில், எண்ணூரில், தூத்துக்குடியில் இப்படிப்பட்ட நிலைமைகள் நடைபெற்று இருக்கின்றன. இந்த வீக் பூர்ப், பூல் பூர்ப் ஆக்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் பாரத் ஹெவி எலக்ட்டிரிகல்ஸ் நிறுவனம் செய்து வருகிறது.

[1985 ஏப்ரல் 11

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தியினுடைய இடர்பாடுக்கு காரணம் கல்கத்தாவிலிருந்து தரம் இல்லாத நிலக்கரி வந்தது தான் என்று சொல்லப் படுகிறது, எனவே அதை தவிர்ப்பதற்கும், நாம் இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசை அனுமதி கேட்டும் முழுமையான அளவுக்கு இறக்குமதி செய்வதற்கு அவர்கள் அனுமதி அளிக்க வில்லை என்று தெரிகிறது. எனவே தேவையான அளவுக்கு நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கி றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு லட்சம் டன் நிலக்கரி இறக்குமதி செய்ய இந்திய அரசு அனுமதி வழங்கி 30 ஆயிரம் டன் ஏற்கனவே இறக்குமதி செய்து தூத்துக்குடிக்கு வந்து இருக்கிறது. உண்மையிலேயே ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து இருக்கிற நிலக்கரி நல்ல முறையில் இருக்கிறது. எந்தப் பிரச்சினையும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை பொறுத்த வரை இல்லை. அந்த அளவுக்கு இந்தியாவிலிருந்து கொடுக்கிற நிலக்கரியின் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தான் நாம் கேட்க வேண்டுமே தவிர வேறு அல்ல. னால் இன்னும் ஒரு லட்சம் டன் இப்போதுள்ள நிலக்கரி தட்டுப்பாட்டை போக்குவதற்கு இந்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசினை நாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அவர்கள் அனுமதிப் பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையம் மிகக் குறுகிய காலத்தில் மிக விரைவாகக் கட்டி முடிக்கப்பட்டதாலும் அதற்கு பின்னால் அதைப் பராமரிக்கின்ற பணி மிகவும் மோச மாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிற காரணத்தால் தான் அந்த கருவிகள் பழுதடைந்து இருக்கின்றன என்று சொல்லப் படுகிறது. ஆனால் அங்கே இருக்கிற அதிகாரிகள் தங்களுடைய அந்த அக்கவுண்டபிலிட்டியை மாற்றுவதற்கு ஏதோ கருவிகள் பழுதடைந்து விட்டது என்று பெல் மீது பழியைப் போடுகி றார்கள் என்றும், பெல்லில் இருந்து வருகின்ற அதிகாரிகள் உடனடியாக ரிப்பேர் செய்வதைவிட தமிழக அரசு அதிகாரிகளே செய்து தரலாம் என்றும் ஆனால் அவர்களுக்கு அதற்கு சரியான ஊக்கத்தைக் கொடுக்காமல் அங்கே இருக்கின்ற மெயின்டனன்ஸ் இன்ஜினியர்களுக்கு சரியான பாதுகாப்பு இல்லை என்ற கருத்து தூத்துக்குடி மெயின்டனன்ஸ் பிரிவில் பொதுவான கருத்து நிலவுவதை இந்த அரசு அறியுமா ? அந்த மெயின்டனன்ஸ் இன்ஜினியர்களுக்கு சரியான பாதுகாப்பு கொடுத்து சரியான விதிமுறைகளை இந்த அரசு ஏற்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.



1985 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்த வரை கோளாறுக்குக் காரணம் உண்மையில் நிலக்கரிதான். கடந்த ஆண்டு நல்ல முறையில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் உற்பத்தி செய்தது. காரணம் நாம் ஆட்களை வைத்து நிலக்கரியில் இருந்த ஏராளமான கற்களைப் பொறுக்கி வெளியே போட்ட பிறகு அந்த நிலக் கரியை அங்கே பயன்படுத்தினார்கள். அதன்பிறகு ஒழுங்காக இயங்கியது. இப்போது ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து இருக்கிற நிலக்கரியில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் போய்க்கொண்டு இருக்கிறது. ஆகவே அதிலே மெயின்டெனன்ஸ் இன்ஜினியரை குறை சொல்லுவதோ, பெல் நிறுவனத்தை குறை சொல்லுவதோ இது எல்லாம் ஓரளவுக்கு வேண்டுமானால் அதிலே உண்மை இருக்கலாமே தவிர முழு அளவில் இல்லை. நல்ல நிலக்கரி அந்த அனல் மின் நிலையத்திற்கு வந்தால் பிரச்சினை இராது என்பது நம் அனுபவம.

விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

80—(*வினா எண். 59)—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

முன்னுரிமை அடிப்படையில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு மின்கம்பித் தொடரிருந்து அளிக்கப்படும் தூரத்தை நீட்டிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: முன்னுரிமை அடிப் படையில் விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு மின் தொடரிலிருந்து அளிக்கப்படும் தூரத்தை நீட்டிக்க தமிழ்நாடு மின் வாரியத்திடம் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

திரு. மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடத்திலும், குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்குகிறது என்பதில் தமிழகம்தான் முதலிடத்தில் இருக்கிறது என்பது உண்மையா ? விவசாய பம்புசெட்டுகளுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்குவதை இந்திய பேரரசு எதிர்க்கிறது என்பது உண்மைய என அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான பம்புசெட் வழங்கியது நம் மாநிலம் தான். அதே நேரத்தில் குறைந்த கட்டணமும் நம்முடைய மாநிலத்தில் தான். ஆனால் இந்திய அரசைப் பொறுத்தவரை சென்ற முறை நான் சென்று இருந்தபோது இலவச மின்சார உதவி என்பது இவ்வளவு பேரிழப்புக்கு இடையில் வழங்க வேண்டுமா என்பதை மறுபரிசீலனை செய்ய

வேண்டும் என்றும், இருக்கின்ற வரியில் வேண்டுமானால் விலக்கு அளிக்கலாம், விற்கின்ற பொருளுக்கு விலை வாங்காமல் இருப்பது பொருளாதாரத்தைப்பாதிக்கும் என்கின்றவகையில் மத்திய அரசு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நமது அரசின் சார்பில் இது கொள்கை பற்றிய பிரச்சினை என்று சொல்லியிருக்கிறோம்.

(முற்பகல் 9-10)

திரு. மு. ஜான் வின்செண்ட் ; பேரவைத் தலைவரவர்களே, முன்னுரிமை அடிப்படையில் விவசாய பம்பு செட்டுகளுக்கு 50 அடி, 100 அடி தூரம் என்று இருந்ததைத் தற்சமயம் மின் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால் ஒத்தி வைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, மின் பற்றாக்குறைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. சென்ற ஆண்டு எவ்வளவு பம்பு செட்டுகளுக்குக் கொடுக் வேண்டுமென்று எண்ணினோமோ அவைகளுக்குக் கொடுத்துவிட்டோம். இந்த ஆண்டு எத்தகைய முறையில் அத்தகைய பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கலாம் என்ற அடிப்படையைத் தீர்மானிக்கின்றபொழுது, எந்தெந்த முறைகளைக் கையாள வேண்டும் என்பதைப் பற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, மின்சார பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுப்பதில், ஏற்கனவே இருக்கின்ற முறையின்படி, கம்பத்திற்கும் கிணற்றுக்கும் 100 அடி இடைவெளி இருந்தால் கொடுக்கலாம் என்று சில காலத்திற்கு முன் கொடுத்து வந்ததாக அறிகிறேன். இப்படி கம்பத்திற்கும் கிணற்றுக்கும் உள்ள இடைவெளி என்று இருப்பதால் சில கிணறுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, கம்பத்திற்கும் கிணற்றுக்கும் இவ்வளவு இடைவெளி என்று இருப்பதோடு, கம்பத்திற்கும் பம்பு செட்டுகள் இருக்கின்ற அறைக்கும் 100 அடி தூரம் இருந்தாலும் மின்சாரம் கொடுக்கப்படும் என்ற வகையில் செய்தால் இன்னும் சிலருக்குப் பயன் கிடைக்கும். எனவே, அம்மாதிரி அந்த விதியைத் தளர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, எத்தனை அடி தூரம் வைத்தாலும் அதிலேயும் 3 அடி 4 அடி என்று எப்பொழுதும் பிரச்னை இருக்கத்தான் இருக்கும். ஆனால் இப்பொழுது அந்த உத்தரவு நடைமுறையில் இல்லை. நாம் தேதி வாரியாக மின்சாரம் வழங்க வேண்டுமென்றுதான் உத்தரவிட்டிருக்கிறோம். சென்ற ஆண்டு மட்டும் கொஞ்சம் தளர்த்தி அவ்வாறு கொடுக்கலாம் என்று கூறப்பட்டது. மீண்டும் அத்தகைய தளர்த்தல் தேவையா என்பதுதான் இப்பொழுதுள்ள பிரச்னை.



திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதிய திட்டப்படி 100 அடிக்குள்ளாக இருக்கின்ற விவசாயக் கிணறுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட கிணறுகளில் தண்ணீர் வற்றிய பிறகு, அதே நிலத்தில் அதே நபருக்கு, அதே தூரத்தில் வேறு இடத்திற்கு மாற்றிக் கொடுப் பதை நிறுத்தி வைத்திருப்பதாக எஸ். இ. அவர்கள் கூறி சென்னையில் உள்ள தலைமைப் பொறியாளரின் அனுமதி பெற வேண்டுமென்று கூறியிருக்கிறார்களே, அந்த மாதிரி சொல்லப் படும் உத்தரவு இடப்பட்டிருக்கிறதா ? அப்படி உத்தரவு போடப்பட்டு இருந்தால், சாதாரண ஏழை விவசாயிகள் சென்னைக்கு வந்து அனுமதி பெறுவது என்பது சாத்தியமாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவர் அவர்களே அத்தகைய உத்தரவு எதுவும் இல்லை. குறிப்பிட்ட தகவல் இருக்குமேயானால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

திரு. தி. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செலவுத் தொகையைப் பொறுத்துத் தான் இப்படிப் பட்ட சிக்கல் ஏற்படுகிறது என்று கருதுகிறேன். எனவே, சம்பந்தப்பட்டவர்களே செலவுத் தொகையை ஏற்றுக் கொள்வ தாகத் தெரிவித்தால், தூரத்தைக் கவனிக்காமல் அப்படிப் பட்டவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; தலைவரவர்களே, இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம். ஏனென்றால், வசதி படைத்தவர்கள் வாங்கிக் கொள்வார்கள்; வசதியில்லாத வர்களுக்கு இதனால் கஷ்டம் ஏற்படலாம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டுக்கு முன் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு மட்டும் மின்னிணைப்பு கொடுக்க வேண்டும் என்ற மின்வாரிய உத்தரவின் காரணமாகக் கோவை மாவட்டத் தில் 1978-க்கு முன்னால் விண்ணப்பங்கள் போட்டு நிலுவையில் உள்ள விவசாயிகள் யாருமில்லை. எனவே, அங்கே புதிய மின் இணைப்பு கிடைப்பதில்லை. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து, குறைந்தது மாவட்டத்திற்கு இவ்வளவு என்று நிர்ண யித்து முன்னுரிமை அடிப்படையில் அரசு மின்னிணைப்பு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இவ்வாண்டு பம்பு செட்டுகளுக்குக் கொடுக்கின்றபொழுது எத்தகைய முறைகளைக் கையாளலாம் என்பதைப் பற்றி யோசனை செய்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட கருத்து ஆலோசனையில் கொள்ளப்படும்.

[1985 ஏப்ரல் 11

## சென்னை அரசு அச்சகம்

81—(*வினாஎண். 1517)—திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சா. துரைசாமி ; மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையில் உள்ள அரசு அச்சகத்தில் பாதிக்கும் மேற்பட்ட மிஷின்கள் ஓடாமல் பழுது அடைந்து உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

(இ) அரசு அச்சகத்தில் வேலை பார்க்கும் தொழிலாளிகள் எத்தனை பேர்?

(ஈ) இயந்திரங்கள் பழுது அடைந்துள்ளதால் வேலை வாய்ப்பு பாதிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன் : (அ) இல்லை

(ஆ) இது எழவில்லை

(இ) சென்னையில் உள்ள அரசு அச்சகங்களில் பணிபுரியும் பணியாளாகளின் மொத்த எண்ணிக்கை 4463

(ஈ) இல்லை,

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் உள்ள அரசு அச்சகத்தில் சுமார் 4,000 பேர் மூன்று ஷிப்டுகளில் வேலை செய்கிறார்கள். திறமையாக வேலை செய்யக் கூடிய ஆட்கள் இருந்தும், உயர்தர இயந்திரங்கள் இருந்தும், தமிழக அரசு லாட்டரி சீட்டுகளைத் தனியாரிடம் அச்சடிக்க ஏன் கொடுக்கப்படுகிறது? அதுமட்டுமல்லாமல், மதுரையில் மிக அழகான ஆப்செட் இயந்திரங்கள் இருக்கின்றன, எனவே அரசு பாடப் புத்தகங்களை அங்கே அச்சடிக்கக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, இரண்டும் நல்ல யோசனைகள். அரசு பரிசீலிக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, சென்னை அரசு அச்சகத்தில் சுமார் 54 இயந்திரங்கள் இருக்கின்றன ஆனால் 24 இயந்திரங்கள்தான் ஒழுங்காக வேலை செய்கின்றன. பாக்கியுள்ள 30 இயந்திரங்கள் பழுதடைந்து இருக்கின்றன. அந்த 30 இயந்திரங்கள் பழுது அடைந்திருப்பதால், அதற்கு வேண்டிய கருவிகளை வெளிநாடுகளிலிருந்து வங்க வேண்டியுள்ளது. இப்படி வெளிநாடுகளிலிருந்து வாங்க வேண்டும் என்று அரசுக்கு அதிகாரிகள் செயற்குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். இப்படி பொறுப்பு இல்லாமல் 30 இயந்திரங்களைக் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் வாங்கி அது



1985 ஏப்ரல் 11]

நிப்பேராகி இருக்கின்ற நிலைமையில் கிடக்கிறது. அதிகாரிகளின் அலட்சியப் போக்கு, மற்றும் நிர்வாகத் திறமையின்மை காரணமாகத்தான் இவ்வாறு 30 இயந்திரங்கள் இயங்காமல் இருக்கின்றன. எனவே மேற்படி உயர்மட்ட அதிகாரிகள் மீது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இந்த இலாகாவைச் சீர்திருத்தம் செய்ய உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, 91 இயந்திரங்கள் வாங்கப்பட்டன. அவற்றில் 60 இயந்திரங்கள் வேலை செய்கின்றன. 31 இயந்திரங்கள் வேலை செய்யவில்லை. இவற்றிலே பெருவாரியான இயந்திரங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகின்றன; 1935-ஆம் ஆண்டிலே வாங்கப்பட்ட இயந்திரங்கள் கூட இருக்கின்றன என்று தகவல் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக ரஷ்யாவிலே இருந்து பெற்ற இயந்திரங்களுக்கு உதிரி பாகங்கள் எங்கும் கிடைக்கவில்லை. ரஷ்யாவிலேயும் கிடைக்கவில்லை. அவற்றைச் செய்யச் சொல்லி வாங்கினாலும் அவை இயங்கச் செய்வதற்கு ஏற்றதாக இல்லை என்று சொல்கிறார்கள். இருந்தாலும் இவற்றை எல்லாம் சரிபார்த்து எந்தெந்த வகையில் தீவிரப் படுத்தலாம் என்பதைப் பற்றி அரசு உரிய நடவடிக்கை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அச்சகத்தில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு? தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் சார்பாக அச்சிடப் படுவதைப் பொறுத்த வரையில் சென்னையிலே உள்ள அரசு அச்சகத்தில் கொடுத்து அச்சடிக்காமல் வெளியிலே கொடுத்து அச்சடிக்கிற நிலைமை இருக்கின்றது. அவற்றை அரசு அச்சகத்திலே அச்சடித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு கேள்விகளுக்கும் ஏற்கெனவே நான் பதில் சொல்லியாகி விட்டது.

## புதிய வானொலி நிலையங்கள்

82—(*வினா எண். 8) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுககு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொடங்கப்பட உள்ள புதிய வானொலி நிலையங்கள் குறித்த தகவல் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) மதுரை வானொலி நிலையம் எப்போது ஒலி பரப்பினைத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) புதிய வானொலி நிலையங்கள் குறித்து அதிகார பூர்வமான தகவல் ஏதும் வரவில்லை.

(ஆ) மதுரையில் 1986 பிப்ரவரி—மார்ச் மாதத்தில் வானொலி நிலையம் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி புதிய வானொலி நிலையங்கள் குறித்த தகவல் வந்துள்ளதா என்பதுதான். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி அதிகார பூர்வமான தகவல் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதிகாரபூர்வமான தகவல் இல்லாவிட்டால் கூட நம்பகமாக, ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மக்களுக்கு பயன் அளிக்கக்கூடிய தகவல் வந்திருக்கிறதா? இருந்தால் அதைப்பற்றி தெரிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் வந்த அடிப்படையில் இங்கே செய்திகளைத் தருகிற உரிமை அனேகமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்டு. ஆனால் அரசின் தரப்பிலே சொல்கிறபோது வருகிற தகவல்களை எல்லாம் இந்த மன்றத்தில் அரசினுடைய சார்பிலே தெரிவிப்பது முறையாக இருக்காது. ஒன்று அரசுக்கு அதிகார பூர்வமாக வரவேண்டும்; அல்லது முறையாக நம்பிக்கை அளிக்கக் கூடிய வகையில் துறையிலே இருந்து வரவேண்டும். இரண்டும் இல்லாமல் நாங்களாகவே தேடி பெற்றுக்கொண்டிருக்கிற செய்தி விவாதிக்கப்படுகிற செய்தியாக இருக்கின்ற போது அரசு அதைப்பற்றித் தெரிவிப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அதனால்தான் அதிகாரபூர்வமாக வரவில்லை என்று சொல்லியிருக்கிறேன். அதிகாரபூர்வமற்ற முறையில் வந்திருக்கின்றது என்ற பொருள் அதற்குள்ளே அடங்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைக் கண்டுகொண்டு கேட்டதற்காக நன்றி.

எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவலிலிருந்து 7—வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் ஒலிபரப்பு வசதிகள் அதிகரிக்கப்படவேண்டும் என்கிற திட்டத்தை அளித்திருப்பதாகத் தெரிகிறது. தூத்துக்குடி, இராமநாதபுரம் பகுதிகளில் நூறு கிலோவாட் சக்தியுள்ள பல நோக்கு ஒலிபரப்பு நிலையங்கள், கொடைக்கானல், உதகமண்டலம், இராமேஸ்வரம், இராமநாதபுரம், சேலம் தர்மபுரி, புதுக்கோட்டை, வேலூர் ஆகிய இடங்களில் பல நோக்கு ஒலிபரப்பு நிலையங்கள் கோயம்புத்தூர். மதுரை, திருச்சி ஆகிய நிலையங்களின் மூலம் கூடுதல் சக்தியுள்ள பண்பலை ஒலிபரப்பு நிலையங்கள் ஆகிய மேற்குறிப்பிட்ட திட்டங்களைத் திட்டக் கமிஷனுக்கு அவர்கள் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. இதில்



திட்டக் கமிஷன் எதை ஒத்துக்கொள்ளும் எதை நிராகரிக்கும் என்பது பற்றி இறுதியாக அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு தான் தெரியும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்கள் நிறைந்த நகரமாக, தமிழ் வளர்ச்சி நகரமாக, தமிழகத்தில் இரண்டாவது நகரமாக இருக்கின்ற மதுரையிலே வானொலி நிலையம் இல்லை என்பது பெரிய குறையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 198 ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாத வாக்கில் வானொலி நிலையம் செயல்படத் தொடங்கும் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய சக்தி எந்த அளவுக்கு ஒலிபரப்புகின்ற சக்தியாக இருக்கும். 1986 பிப்ரவரி, மார்ச் மாதத்திலாவது இதைக் கண்டிப்பாகச் செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வானொலி நிலையங்கள் அமைக்கின்ற அந்தப் பணிகளைப் பொறுத்த வரை அவை முழுவதும் மத்திய அரசினுடைய அதிகார எல்லைக்குட்பட்ட நிகழ்ச்சிகள். நம்முடைய அரசைப் பொறுத்தவரை இதுபோன்ற தேவைகளை மத்திய அரசு தெரிவிக்கிற பொழுது அதற்காக இடம் ஒதுக்குவதிலோ அல்லது வேறு வசதிகளைச் செய்து தருவதிலோ கொஞ்சம்கூட தயக்கம் காட்டுவதே கிடையாது. முழு ஒத்துழைப்பையும் நாம் அளித்துக்கொண்டு வருகிறோம். அதைப் போல இந்த மதுரை வானொலி நிலையம் அமைப்பதற்கும் இடம் வேண்டுமென்று கேட்ட பொழுது உடனடியாக 17.09 ஏக்கர் நிலத்தை ரூ. 4,13,770-க்கு ஆர்ஜிதம் செய்து அவர்களிடத்திலே ஒப்படைத்தோம். அதற்குப் பிறகு அவர்கள் கட்டுமானப் பணிகளைத் தொடங்கி இருக்கிறார்கள். சொக்கிக்குளம் கிராமக் கண்மாய்ப் பகுதியில்தான் இந்தக் கிராம வானொலி நிலையம் அமைக்கப்படுகிறது. அதைப் போல விளாங்குடி பகுதியிலே இதற்கான டிரான்ஸ்மிட்டர் அமைக்கின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வானொலி நிலையம் அமைப்பதற்குத் அந்தத் திட்டச் செலவு ரூ. 22,26,078.98 என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பிப்ரவரி வரை கட்டுமானப்பணிகள் முடிப்பதற்கு ஆகும் என்று தெரிவித்து இருக்கிறார்கள். மிக விரைவிலே முடிக்கவேண்டுமென்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கே அமைக்கப்பட இருக்கிற நிலையத்தினுடைய சக்தி 10 கிலோ வாட் சக்தி.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் புதிதாக இயங்கி வரும் நாகர்கோவில் வானொலி நிலையத்தில் இப்பொழுது, மாலை 6 முதல் 9 வரை தான் ஒலிபரப்பப்படுகிறது. எனவே காலை

யிலிருந்து இரவு வரை-முழு நேரமும் இயங்கி குமரி மாவட்டத்திலே உள்ள மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒலிபரப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுக்க நமது அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற நிலையம் 1 கிலோவாட் சக்தி கொண்ட மாவட்ட அளவிலான நிலையமாக இயங்கி வருகிறது. அதை இன்னும் மிகுந்த சக்தியுள்ள நிலையமாக மாற்ற வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். நாகர்கோவிலில் மாத்திரமல்ல, தமிழகத்தினுடைய பல பகுதிகளிலே மாவட்டத் தலை நகரங்களை ஒட்டிப் பல்வேறு மக்களுக்கும் பயன்படுகின்ற வகையில் இந்த வானொலி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அவை சக்திமிக்க நிலையங்களாகவும் அமைக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்து இருக்கிறோம். முழு நேரமும் அல்லது எந்த, எந்த நேரங்கள் மக்களுக்குப் பயன்படுகின்ற நேரமாக இருக்கிறதோ அந்த நேரங்களிலே எல்லாம் ஒலி பரப்பு நிகழ்ச்சிகள் அமைக்கின்ற திட்டம் விரைவிலே செயல்படுத்தப்படும் என்று தெரிகிறது. இப்பொழுது புதிதாக தொடங்கி இருக்கிற காரணத்தாலே ஒரு குறிப்பிட்ட நேரத்திலே அங்கே நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. என்று அறிகிறேன்.

**பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்கல்**

83—(வினா எண். 6(9) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி பிளவக்கல் அணை சுற்றுலாப் பகுதியை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) காமராஜர் மாவட்டம் திருவில்லிப்புத்தூர் தொகுதியிலுள்ள பிளவக்கல் அணையை மாவட்ட உலாத்தலமாக மேம்பாடு செய்ய ரூ. 5.25 இலட்சம் மதிப்பீட்டில் திட்டங்கள் வகுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, பணிகள் எப்பொழுது முடிவடையும்? காமராஜர் மாவட்டத்திலே பிளவக்கல் சுற்றுலா பகுதியில் இப்பொழுது ஒரு டூரிஸ்ட் சென்டர் தான் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்தப் பிளவக்கல் அணைப்பகுதிக்கு வருகை தருகிறபொழுது அதைப் பெரிய அளவில் சுற்றுலா பகுதியாக ஆக்கலாம்



இயற்கை எழில் மிகவும் அதிகமாக இருக்கிறது. என்று சொன்னார்கள். அங்கே தேக்கடி மாதிரி யானைகள், மான், இன்னும் கருங்குரங்கு வரையாடு போன்றவைகள் எல்லாம் தண்ணீர் குடிப்பதையும் மலைமீது நடப்பதையும் பார்த்தால். மிகவும் இயற்கையாக, கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஆதலால் அதை மாநில அளவில் பெரிய டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா? அங்கு குழந்தைகள் விளையாடுவதற்கு பூங்காக்கள் அமைக்கவும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதி என்பது ஒரு மிகச் சிறந்த, இதுவரை கண்டுப் பிடிக்கப்படாத, அற்புதமான இயற்கைச் சூழல் நிறைந்த ஒரு பகுதி என்பதனாலேதான் அதை மாவட்ட சுற்றுலாத் தலம்என்கிற அளவுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப் போன்று குழந்தைகள் பூங்கா ரூ. 2 இலட்சத்துக்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மீன் காட்சியகம் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ரூ. 5.25 லட்சம் என்பது இப்பொழுது முதற்கட்ட பணிக்காக அரசு அனுமதித்திருக்கிற தொகை. மேலும் அதை மிகப் பெரிய அளவிலே மாநிலம் தழுவிய ஒரு புகழ் பெற்ற சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரை விரைவிலே முடிந்து விடும் என்று அரசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலாப் பகுதியாக மேம்படுத்துவதற்காக மதுரையில் இருக்கிற பி. ஆர். சி. கழகத்தில் ரூபாய் மூன்று இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால் சம்பந்தப்பட்ட பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஒரு லட்சம் ரூபாய் கூட இன்னும் இதுவரையில் செலவு செய்யாமல் இருக்கிறார்கள். ஆகவே இரண்டு லட்சம் ரூபாயை உடனே சரண்டர் செய்ய வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வற்புறுத்தப்படுகிறது. பொதுப் பணித் துறை அதிகாரிகள் பொறுப்பில்லாமல், வேலையை விரைவு படுத்தாமல் இருக்கிற காரணத்தால் நம்முடைய சுற்றுலாத் துறையில் இருக்கிற அதிகாரிகளின் மேற்பார்வையில் அந்தப் பணியை விரைவில் முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம் வீரப்பன்: தலைவர் அவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தருவதாக ஒப்புக் கொண்ட மூன்று லட்சம் ரூபாயில் ஒரு லட்சத்தை வழங்கி இருக்கிறார்கள். இரண்டு லட்சத்தை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அணைக்கட்டுப் பகுதி பொதுப் பணித்துறையின் பொறுப்பிலே இருக்கிற காரணத்தால் அங்கே நடைபெற வேண்டிய காரியங்கள் பொதுப்பணித் துறையின் சார்பிலேதான் நடைபெற வேண்டும். சுற்றுலாத் துறை திட்டங்களை வகுத்து அரசிடத்திலிருந்து பணத்தை வாங்கித் தருகி துறையே தவிர, திட்டங்களை நிறைவேற்றுகிற துறையாக சுற்றுலாத் துறை இல்லை. ஆனால் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் இந்தத் திட்டங்கள் சில இடங்களில் நடைபெறுகின்றன. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது பொதுப் பணித்துறையினுடைய பொறுப்பிலே இருக்கிற அவர்களுடைய இடமாக இருக்கிற காரணத்தால் அவர்கள் நிறைவேற்றுவது தான் பொருத்தமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப போல அங்கே தாமதம் இருக்குமானால் அந்தத் தாமதத்தைத் தவிர்க்கும் படிசம் பந்தப்பட்ட பொதுப் பணித்துறைக்கு சுற்றுலாத் துறை அறிவுறுத்தும். தேவையானால் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டு சென்று விரைவில் அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்,

### ஏரியோரங்களில் மரங்கள் நடுதல்

84— *(வினா எண். 1492) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏரிகளில் மரங்கள் நடவதால் குளம் மேடாகி நீர் கொள்ளளவு குறைவது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம், எனில் அதற்கு என்ன மாற்று நடவடிக்கை எடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, இந்த வினாவிற்கு அளிக்கப்பட்ட விடை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. ஏனென்றால் அதற்கான தகவல்களை என்னுடைய கையில் வைத்திருக்கிறேன். என்னுடைய தொகுதியில் சுரண்டையில் உள்ள இரட்டைக்குளம், பெரிய குளம் என்ற குளங்களில் ஒன்று 375 ஏக்கர்களும், மற்றொன்று 917.94 ஏக்கர்களும் பாசன வசதி அளிக்கக் கூடியவை. அந்த இரண்டு குளங்களிலும் மரங்கள் நட்டதன் காரணமாக மண்மேடு தட்டி இன்றைக்கு நீர் கொள்ளளவு குறைந்திருக்கிறது. மரங்



நடுவது என்பது வரவேற்கத்தக்கது ஆனாலும் கூட, தமிழகத்தில் பல குளங்களில் இப்படி மரங்கள் நட்டதனால் நீர் கொள்ளளவு குறைந்துள்ளது. எல்லா இடங்களிலும் இந்தப் பிரச்னை இருக்கிறது. ஆகவே இந்த மரங்களை நடுகிற போது தகுந்த இடைவெளிவிட்டு நடுவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்விக்கு அரசின் தரப்பிலிருந்து ஒரு தெளிவான பதிலை அளித்திருக்கிறேன். உறுப்பினருக்கு அது திருப்தியளிக்கவில்லை என்றால் அவருடைய மனநிலையைப் பொறுத்தது. அவர் கையிலே வைத்திருக்கிற தகவல் என்பது உண்மையை தெரிவிக்கிற தகவல் அல்லது அடிப்படையுள்ள தகவல் என்று நாம் நினைத்துக் கொள்ள முடியாது. குறிப்பாக இந்த ஏரிப் பகுதிகளில் சமுதாயகாடு வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு மிகப்பெரிய திட்டமாக, இந்தியா முழுவதும் போற்றப்படுகிற திட்டமாக தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிற இந்தத் திட்டத்தின் தொடர்பாக மரங்களை நடச்செல்கிற சமயத்தில் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் இதைத் தடுப்பது என்பதை வாடிக்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஏதாவது ஒரு காரணத்தை கண்டுபிடித்து சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு காரணம் தான், எல்லோரும் ஏற்றுக் கொள்கிற காரணமாக அமையுமென்று நம்பி இந்த மரங்கள் நடுவதாலே அங்கே மண் மேடிட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் ஆராய்ச்சிப்படி என்ன தரப்படுகிறது என்றால் இந்த மரங்கள் நடுவதால் தான் அங்கே மண் மேடு தட்டுவதில்லை என்று குறிப்பாக தந்திருக்கிறார்கள். அதே போல பல்வேறு நன்மைகளும், அந்த மரங்கள் வளர்ப்பதால், ஏரிகளில் வளர்ப்பதால் ஏற்படுகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் வேறு ஆபத்து இருக்கிறது என்று கருதி, கரையோரங்களில், மேட்டுப் பகுதிகளில், இந்த மரங்களை நட்டால் அந்த மேடு கரைந்து விடும். எனவே அதையொட்டி ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு மரங்கள் நடக்கூடாது என்கிற அந்தத் திட்டமும் இருக்கிறது. அதற்காக ஆணைகளும் இருக்கின்றன. அது தான் அடிப்படை உண்மையே தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அங்கே பாதிக்கப்பட்டதாகக் கருதிக் கொண்டு இந்த மரங்கள் வளர்ப்பதை தடை செய்யவேண்டுமென்றுகருதுகிறவர்கள் தந்திருக்கிற தகவல்கள் அவ்வளவு சரியான தகவலாக இருக்காது என்று கருதுகிறேன்.

(முற்பகல் 9–30)

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவர் அவர்களே, இந்த கருவேல மரங்கள் நடப்படுகிற குளத்துப் பகுதிகளில் மண் பாண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்திலிருந்து லோன் எடுத்து அங்கே மண் பாண்டங்களை உற்பத்தி செய் குளத்திலிருந்து மண் எடுக்கிறார்கள். ஆனால் கருவேல மரங்கள் நடுவது

காரணமாக அந்த மண்பாண்ட உற்பத்தியாளர்கள் பாதிக்கப் படுவதால் மண்பாண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு விதி விலக்கு அளித்து அந்தயிடத்தில் கருவேல மரங்கள் நடாமல் இருக்க அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மண்பாண்ட உற்பத்தியாளர்கள் மண்ணை ஒரு ஏரிப்பகுதியில் இருந்து எடுக்கவில்லை என்றால் இன்னொரு பகுதியிலிருந்து அதைத் தேடிக் கண்டுபிடித்து எடுத்துவிடலாம். ஆனால் மரங்களை நடுவது என்பது எங்கே வசதியிருக்கிறதோ, நீர்ப் பிடிப்பு இருக்கிறதோ அங்குதான் மரங்களை நடமுடியும். மனிதன் மண்ணை எங்கு வேண்டுமானாலும் போய் தேடிக் கண்டுபிடித்து விடலாம், ஆனால் மரங்களை கண்டயிடத்தில் நட்டு வளர்க்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற கஷ்டங்களை அரசு பரிசீலிக்கும், அதற்கேற்ற நடவடிக்கைகளும் எடுக்கும்.

திரு. டி ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது தவறான தகவல்களை அல்லது அந்த மரங்களை நடக்கூடாது என்று எண்ணுபவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் இந்தக் கருத்தை நான் சொன்னதாகச் சொன்னார்கள். அது அவ்வளவு சரியல்ல. ஏனென்றால் ஆளும் கட்சியிலிருந்து வந்த ஒரு தகவலின் அடிப்படையில் நா அந்தக்கருத்தைச் சொன்னேன். அது மட்டுமல்ல. எனக்கே நேரில் தெரிந்த விஷயம். மரங்களை நடக்கூடாது என்பது என் கருத்தும் அல்ல நான் கேள்வியிலேயே சொன்னேன், இதை நான் வரவேற்கிறேன் என்று. ஆனால் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தும்போது அந்தத் திட்டத்தில் நாம் எதிர்பார்க்காத சில விளைவுகள் மற்றும் சில இடைஞ்சல்கள் வருகின்றன. அப்படி வருகிற இடைஞ்சல்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் கடமை என்ற காரணத்தால் அந்தக் கேள்வியை நான் இங்கே கேட்டிருக் கிறேனே தவிர பழைய குளங்களில், எங்கள் ஊரிலேயேகூட ஒரு போர்ட் வைத்திருப்பார்கள். அதிலே, குளத்திலே இருந்து மண்ணை எடுத்துக்கொள்ளலாம் என்றிருக்கும். இனாமாக எடுத்துக் கொள்ளலாம் என்றிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியத்திலே பேசுவது மாதிரி கேட்க முடியாது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை தெரிந்துகொண்டேன். தெளிவாக அவருடைய கருத்தையும் புரிந்துகொண்டேன். அவர்களை புண்படுத்தவேண்டும் என்று நான் தெரிவிக்கவும் இல்லை, குற்றம் சுமத்தியும் சொல்லவில்லை. நான் சொன்னதை அவர்களே ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் தவறான தகவல் என்று. ஆகவே, அவர்களுக்கு கிடைத்த தகவலை——அது ஆளும் கட்சியிலிருந்து





கிடைத்த தகவல் என்று சொன்னார்கள். ஆளும்கட்சியோ எதிர்க்கட்சியோ வெஸ்டட் இன்டெரஸ்ட் என்று வந்துவிட்டால் அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அது மனித உணர்வு. ஆகவே ஆளும்கட்சியிலிருந்து தகவல் வந்தால் அது சரியாக இருக்கும், எதிர்க் கட்சியிலிருந்து வந்தால் சரியாக இருக்காது என்பதும் அல்ல, எதிர்க்கட்சிக்காரர் சொன்னால்தான் சரியாக இருக்கும் ஆளும் கட்சிக்காரர் சொன்னால் அது சரியாக இருக்காது என்பதும் இலக்கணம் அல்ல. அவரவர்கள் நிலைமை களுக்கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப, அவர்களுக்கு ஏற்படுகிற லாப நஷ்டத்திற்கேற்ப முடிவுகள் எடுக்கிறார்கள். ஆனால் இது சமுதாயப் பிரச்னை. நான் ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏரிகளில் மரங்கள் நடுவது உலகம் தழுவிய திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற திட்டம். என்னென்ன நன்மைகள் தனால் விளைகின்றன என்பதை தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கிற காரணத்தால அவர்கள் எழுப்பிய வினா மூலம் இந்த நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள பயன் உள்ளதாக இருக்கும் என்பதால் சொல்கிறேன்.

ஏரிகளில் மரங்கள் நடுவதால் குளம் மேடாகி நீர் கொள்ளளவு குறைந்து விடும் என்ற கூற்று முற்றிலும் தவறானது. அதற்கு மாறாக ஏரிகளில் மரங்கள் நடுவது நீர் கொள்ளளவு குறையாமல் இருக்க உதவுகிறது. காரணம், மரங்கள் நடுவதினால் குளப்படுகைகளில் நில ஆக்கிரமிப்பு செய்து பயிரிடுவது தடுக்கப்படுகிறது. குளப்படுகைகளில் உழுது பயிர்கள் நடுவதினால் மழைக்காலங்களில் மண் மழைத் தண்ணீருடன் அடித்துச்சென்று ஏரிகளின் உட்பகுதியில் படிந்து ஏரிகள் உட்பகுதி மேடாகி கொள்ளளவு குறையும். மரம் நடுவதல் இது தடுக்கப்படுகிறது. இதுதான் மாறுதல். குளப் படுகைகளில் பயிரிடுபவர்கள் பயிர் தண்ணீரில் மூழ்கி விடாமல் இருக்க ஏரிக் கரைகளை சில சமயம் உடைத்தும், இரவில் மதகுகளை திறந்துவிட்டும் ஏரிகளுக்கு நீர் கொண்டுவரும் கல்வாய்களை அடைத்தும், ஏரி குளங்களில் உள்ள நீரை விவசாயத்திற்கு உபயோகப்படாமல், வீணாகச் செய்கின்றனர். மரங்கள் நடுவதினால் இவற்றைத் தடுக்கலாம். மரங்கள் நடுவதினால் வெயிற்காலங்களில் தண்ணீர் ஆவியாகி குளங்களில் நீரளவு குறைவதும் தடுக்க இயலும். இது ஒரு முக்கியமான கருத்து. உலக ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கருத்து. மரங்களில் உள்ள இலைகள் நீரில் விழுந்து மக்கி சத்துள்ள தண்ணீர் ஏரிக்கு கீழுள்ள நிலங்களில் பாய்ந்து நல்ல மகசூலையும் விவசாயிகளுக்கு கொடுக்க வாய்ப்பிருக்கிறது. மரப் பயிரின் வேர்களும் இலைகளும் சேர்ந்து மண்ணில் கலப் பதன் மூலம் மண்ணின் ஈரச்சத்து, ஈரம் காக்கும் தன்மையை அதிகரிக்கிறது.

இவ்வளவு நன்மைகளையும் வைத்துத்தான் உலகம் தழுவிய ஆராய்ச்சியின் விளைவாக ஏரிப்பகுதிகளில் இந்த சமுதாயக் காடுகள் வளர்ப்புத் திட்டம் சிறந்தமுறையில் நடைபெற்று

வருகிறது. சில பாதிப்புகள் ஏற்படுகின்றன. அது அவர்களின் அன்றாடத் தேவையைப் பாதிக்கிறது. ஆனால் பொது நன்மையைக் கருதி சில தனியார் அவர்களுக்கு ஏற்படுகிற நஷ்டங்களை கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

### கொப்புடையம்மன் கோவில் திருமண மண்டபம்

85— (*வினா எண். 1502)—திரு. எஸ்.பி. துரைராசு: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி அருள்மிகு கொப்புடையம்மன் கோவில் சார்பாக 1966—ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு இதுநாள் வரை கட்டப்படாமல் உள்ள திருமண மண்டபத்தை கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) காரைக்குடி அருள்மிகு கொப்புடைய நாயகியம்மன் கோவில் சார்பாக 1966 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டப்படாது விடப்பட்டிருந்த திருமண மண்டபத்தை முழுமையாக கட்டி முடிப்பதற்காக 8-4-1985-ல் ரூ. 5,20,000க்கு திருத்திய மதிப்பீடு அறநிலையத்துறை ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை விரைவில் செய்து முடிப்பதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எஸ்.பி. துரைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் பணியாற்றும் ஓதுவார்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூறுக்கும் குறைவாகவே சம்பளம் கொடுக்கப்படுகிறது. இன்றைய விலைவாசிக்கு இது கட்டுப்படியாகாத ஒன்று. எனவே, அவர்கள் சம்பளத்தை உயர்த்துவதற்கு அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமண மண்டபத்தை பற்றி கேள்வி கேட்டார்கள். இந்தத் திருமண மண்டபத்திற்கு 66லே அடிக்கல் நாட்டப்பட்டு இருந்தாலும், 19 ஆண்டுகளுக்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே 5½ இலட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம் கட்டப்பட இருக்கிறது என்று சொன்னவுடனே, திருப்தியடைந்து, இதை வரவேற்று அமராமல், அடுத்த கேள்வியைக் கேட்டிருக்கிறார். இதற்குத் தனிக் கேள்வி கேட்டால், இன்னும் கொஞ்சம் விவரமாகவே தகவல் தர முடியும்.

திரு. எஸ். பி. துரைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5½ இலட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம் கட்டுவதற்கு ஆணையிட்டதற்கு செய்தி—அறநிலையத்





துறை அமைச்சர் அவர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, தொடர்ந்து பிற கோயில்களிலும் இப்படிப்பட்ட திருமண மண்டபங்களைக் கட்டி ஏழைகளுக்கு இலவசமாக திருமணம் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில், ஆலய திருப்பணிகளுக்கு முதலுரிமை கொடுக்கப்படுகிறது. இதைப் போன்ற திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் பொதுத் தேவைகளுக்கு பயன்படக்கூடிய கட்டிடங்கள் கட்டுவதற்கு இரண்டாவது முன்னுரிமை தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற காலத்திலிருந்து நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டங்கள் ஆகும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல் பல கட்டிடங்களுக்கு கல்நாட்டு விழா நடத்தப்பட்டு, அவைகள் முடிவு பெறாமல் இருக்கின்றன. அவற்றை பூர்த்திசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது அடிக்கல் நாட்டிய கற்களை அகற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படி எந்தவிதமான விவரமும் இல்லாமல், மொட்டையாக கேள்வி கேட்டால் பொட்டையாகத்தான் பதில் தரமுடியும். விவரம் அறிவித்தால், விவரமாக பதில் தரலாம்.

திருமதி பா வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணத்திற்கு தேதி வைத்துவிட்டு, திருமண மண்டபம் கிடைப்பதில்லை என்ற நிலையைப் போக்க தமிழகத்திலுள்ள முதல்தர கோவில்களில் நவீன வசதிகள் கொண்ட திருமண மண்டபங்கள் கட்ட அரசிடம் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்னாலேயே இதற்கு பதில் அளித்திருக்கிறேன். முதல்தர கோவில்கள் மாத்திரமல்ல. மற்ற கோயில்களில், அதுவும் குறிப்பாக, கிராமப் பகுதிகளில் இந்தத் தேவை இன்று அதிகரித்திருக்கிறது. ஆகவே, கிராமப் பகுதிகளில் நிதி வசதி இருக்கிறதா, இல்லையா என்று பாராமல், வேறு நிதிவசதி இருக்கிற ஆலயத்திருருந்து நிதி மாற்றம் செய்து அங்கே எல்லாம் திருமண மண்டபங்கள் உடனடியாக கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது இப்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

[1985 ஏப்ரல் 11

கோவை மாநகராட்சியில் நிதிபற்றாக்குறை.

86—(*வினா எண். 15)—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியில் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க பணமில்லாத நெருக்கடி ஏற்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அதைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) கோவை மாநகராட்சி ஊழியர்களுக்கு குறித்த தேதிகளில் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, குறித்த நாட்களில் சம்பளம் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்த நகரத்தில் இருக்கிறவன். அங்கே பல மாதங்கள் குறித்த நாட்களில் பணம் கொடுக்கப்படாமல், மறு நாள் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுப்பதற்கு பண வசதியில்லை என்று கலெக்டர் மூலமாக நடவடிக்கை எடுத்து, எங்கேயோ பணம் சம்பாதித்து கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஏன் இப்படி பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எனக்கு கோவை மாநகராட்சி கொடுத்திருக்கிற தகவல்படி, மாநகராட்சிக்கு உபரி நிதியிருக்கிறது. பற்றாக்குறை இல்லை. அப்படி ஏன் அங்கு நடந்தது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி கொடுப்பார்களானால், அதைப் பற்றிய முழு விவரங்களையும் சேகரித்து தருகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தமாதிரியான நிலை ஏற்படும்போது உடனுக்குடன் எழுதிக் கொடுக்கவோ, தந்தி மூலம் அறிவிக்கவோ நான் தயார். ஆனால், இப்படி வீழ்ச்சி ஏற்பட்டதற்கு, நிதி வசதி இருக்கிற கார்ப்பரேஷனில் இந்த மாதிரியான தவறு ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிய ஏதாவது விசாரணை மேற்கொள்வார்களா? அல்லது அமைச்சர் அவர்களே அந்த இடத்தை நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியிலிருந்து நிச்சயமாக விசாரிக்கச் சொல்கிறேன் என்ற உறுதியை அளிக்கிறேன்.



1985 ஏப்ரல் 11]

திரு. மு. இராமநாதன்: தலைவரவர்களே, உபரியாக இருக்கிற அளவுக்கு கோவை மாநகராட்சி நிதிநிலை இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தகவல் வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருந்து, சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு மின்சாரத் துறையிலிருந்து வாங்கிய டெபாசிட் தொகையிலிருந்து சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை வந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? உண்மையிலேயே சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை அறிந்து, இதைப் போன்ற நிலை வராமல் தடுப்பதற்கு அரசாங்கம் மாநகராட்சிக்கு நிதி ஆதாரத்தை கூடுதலாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று என்னிடம் விவரம் இல்லை. அவர்கள் எழுதிக் கொடுத்தால், அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருந்தால், அரசுக்குக் கொடுத்த தகவலுக்கும் அதற்கும் முரண்பாடு இருந்தால் நிச்சயமாக தவறான தகவல் கொடுத்தவர்கள் மீது விசாரிக்கப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: தலைவரவர்களே, கோவை மாநகராட்சியினுடைய தனி அதிகாரி சென்ற வாரம் 22 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தை அளித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே, கோவை மாநகராட்சியினுடைய வருமானம் என்ன? சம்பளத்திற்காக எவ்வளவு தொகை ஆண்டு ஒன்றுக்கு செலவிடப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கோவை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை அரசின் கைக்கு வந்து சேர வில்லை, என் பார்வைக்கு இன்னும் வரவில்லை. மொத்த வருமானம் எவ்வளவு என்ற தகவல் தற்போது இல்லை. ஆனால் ஊழியர்களுக்கான சம்பளம் சம்பந்தப்பட்ட செலவு பற்றிய விவரம் இருக்கிறது. ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குகின்ற வகையில் மொத்தச் செலவு 1983–84ஆம் ஆண்டில் 524.19 இலட்சம் ரூபாய்; 1984–85 ஆம் ஆண்டில் 568.82 இலட்சம் ரூபாய்; 1985–86 ஆம் ஆண்டில் 604.50 இலட்சம் ரூபாய்.

திருமங்கலம் குடிநீர்த் திட்டம்.

87—(*வினா எண். 10)—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் நகரத்துக்குச் சோழவந்தானிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது நிறைவுபெறும்?

(ஆ) அதற்கான மொத்த செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) 1985 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டு வரப்படும்.

(ஆ) இத் திட்டத்திற்கு ரூபாய் 86.00 இலட்சங்கள் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது, உட்காருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, அதிகாரப் பூர்வமான தகவல், ஒரு வாரத்திற்கு முன்னால் இதுபற்றி கவன ஈர்ப்பு வந்திருக்கிறது. திருமங்கலம் நகரத்திற்கு குடிநீர் வழங்குகிற திட்டம் 4–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாகத் தள்ளிப்போய் நம்முடைய முயற்சியின் காரணமாக இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்ட போதிலும் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. சோழவந்தான் ஒன்றி யத்தில் பம்புசெட் வைத்து, மின் இணைப்பு கொடுக்கப்பட்டு, திருமங்கலம் வரையில் குழாய்கள் புதைக்கப்பட்டு பல மாதங்கள் ஆகியும், கடந்த ஆறு மாதங்களாகத் தண்ணீர் வரும் வரும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமாக இருக்கிறது. இப்போது கடுமையான குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் இப்போது கோடை ஆரம்பமாகிவிட்டது. கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி, பரீட்சையில் காப்பி அடித்தும் ஃபெயில், விருந்துக்குப் போயும் பட்டினி என்ற நிலையில் திருமங்கலம் மக்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது வரும் டிசம்பர் மாதம் தண்ணீர் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போதுள்ள பைலட் ஸ்கீம்படி இந்த மாதத் திற்குள் தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவரவர்களே, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்பதற்கான காரணம் ஏற்கெனவே இருக்கிறது. ஆனால் காப்பி அடித்தும் ஃபெயில் என்பதை நல்ல உதாரணமாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. மார்ச் 84–ல் பெருவெள்ளம் எற்பட்டதால் தடை ஏற்பட்டிருக் கிறது. இப்போது அங்கே இரண்டு நீர் ஊற்று கிணறுகள் கட்டப் பட்டுள்ளன. எனவே 1985 டிசம்பர் மாதத்திற்குள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் தலைமையில் குடிநீர் வழங்கும் விழா நடைபெறும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதே பதிலைத்தான் சொல்கிறார்கள். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கட்டி முடிக்க இன்னும் பல மாதங்கள் ஆகும். அதற்கு முன்னால் பைலட் ஸ்கீம் என்று சொல்லபபடுகின்ற இந்த முன்னோடி திட்டத்தின் மூலமாக இன்றைக்கே, நாளைக்கே, தண்ணீர் வழங்கலாம்.





அதிகாரிகளுடைய மெத்தனத்தினாலேயும், அக்கறை இல்லாத காரணத்தாலேயும் இது நடக்கவில்லை. 6 மாத காலமாக இவ்வளவு லட்சரூபாய்க்கு வட்டி எவ்வளவு ஆகும். அந்த நகர மக்கள்தலையிலேதான் விழும். ஏன் தண்ணீர் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக இந்த வாரத்திலே கொடுக்கலாம், எளிதாக முடியும். எனவே இந்த முன்னோடித் திட்டத்தின் மூலமாக தண்ணீர் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய் வார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டு இருக்கிறது. அது உறுப்பினருடைய கவனத்தை ஈர்க்கவில்லையே என்றுதான் வருத்தப்படுகிறேன். வழியிலே இருக்கிற குழாய்களை ஆங்காங்கே அந்தப் பகுதியில் இருக்கிற கிராம மக்கள் அந்தக் குழாய்களை உடைத்து, தண்ணீரை சட்ட விரோதமாக அவர்கள் எடுத்துவிடுகிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சனை சமுதாயப் பிரச்சனை. அனைவரும் இருந்து தீர்க்க வேண்டிய பிரச்சனை. அந்த வகையிலேதான் இந்த தாமதம் ஏற்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சைதை தொகுதியில் கழிவுநீர் அகற்றல் மற்றும் குடிநீர் வழங்கல்.**

88—(*வினா எண். 301)—திரு. சா. துரைசாமி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சைதை, கோட்டூர் மற்றும் கோட்டூர்புரம், காந்தி நகர் மற்றும் ஸ்ரீராம் நகர், களி ஈக்காட்டுத்தாங்கல், குன்றம், பள்ளிப்பட்டு ஆகிய பகுதிகளில் கழிவு நீர் அகற்றுதல் மற்றும் வடிகால் வசதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு டாக்டர் சா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ) சைதை காந்திநகர் ஆகிய பகுதிகளில் கழிவு நீரகற்று வசதிகள் ஏற்கனவே அமைக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன. கோட்டூர் எனப்படும் கோட்டூர்புரம், ஸ்ரீராம் நகர் உள்ளடங்கிய பள்ளிப் பட்டு ஆகிய பகுதிகளுக்கு கழிவு நீரகற்றும் திட்டத்திற்கு அரசு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. களிக்குன்றம், ஈக்காட்டுத் தாங்கல் ஆகிய பகுதிகளுக்கு கழிவு நீர் அகற்றும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் மழைநீர் வடிகால் திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டு இருக்கிறது. சைதை பகுதியில் ஆஞ்சநேயர் கோயில் தெரு, கொத்தவால் சாவடி தெரு, மற்றும் கோட்டூர்புரம் பொன்னியம்மன் கோவில் தெரு, நாயுடு தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது.

[1985 ஏப்ரல் 11

கோட்டூர் எனப்படும் கோட்டூர்புரம், ஸ்ரீராம் நகர் உள்ளடங்கிய பள்ளிப்பட்டு ஆகிய பகுதிகளுக்கு கழிவு நீரகற்று திட்டத்திற்கான விரிவான ஆய்வுகள் செய்யப்பட்டு திட்டம் வரைவு மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

1985-86 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியிலுள்ள நிதி நிலைமைக்கு ஏற்ப மழைநீர் வடிகால் திட்டங்கள் மற்ற பகுதி களில் அமுல்படுத்தப்படும்.

89— (*வினா எண். 946) திரு. சா. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சைதை ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் காந்தி நகர் பகுதிகளில் குடிநீர்க்குழாய்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. சா. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1949 ஆம் ஆண்டு முதல் சென்னை மாநகராட்சியோடு இணைந்து இருக்கின்ற அந்தப் பகுதியில் இதுவரையில் கழிவு நீர் மற்றும் வடிகால், குடிநீர் வசதிகள் எதுவும் இல்லை. ஆகவே இந்த மனதில் கொண்டு, இன்றைக்கு கோட்டூர்புரம், களிகுன்றம், ஸ்ரீராம் நகர், பள்ளிப்பட்டு ஆகிய பகுதிகளில் திட்ட செயற் குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? இந்தப் பணி நடப்பு நிதியாண்டியல் நடக்குமா? இந்தப் பணி காலதாமதமாக ஆவதற்கு பம்பிங் ஸ்டேசன் அமைக்கின்ற அந்தப் பணிக்கு இடம் கிடைக்காத காரணத்தால், அந்தப் பணி தாமதமாகிறது என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது. இது உண்மையா? என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே. மேல் கொட்டடைப் பகுதிக்கு கழிவு நீர் அகற்றுதல், மற்றும் விசைக் குழாய்கள் பதிப்பதற்குமான திட்ட மதிப்பீடு ரூபாய் 42 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

ஈக்காடுதாங்கல் பகுதியில், ரெட்டி தெரு, பங்களா தெரு, பிள்ளையார் கோவில் தெரு, காந்தி தெரு ஆகிய இடங்களில் மழை நீர் வடிகால் திட்டம் ரூபாய் 10.16 லட்சத்தில் அமுல் படுத்தப்பட இருக்கிறது.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈக்காடுதாங்கல், மற்றும் காந்தி நகர் போன்ற பகுதிகளில் குடிநீர் குழாய்கள் அமைக்கின்ற பணி செயற்குறிப்பு



1985 ஏப்ரல் 11]

இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு சென்னை மாநகரம் எழில் மிக்க நகரமாக இருக்கிறது. கிராமங்களில் இப்போது தன்னிறைவுத் திட்டத்தின் வாயிலாக நாம் குடிநீர் வசதிகளைச் செய்து கொண்டு இருக்கிறோம். சென்னை மாநகராட்சியில் உள்ள இந்தப் பகுதியில் 5 ஆயிரம் மக்கள் வசிக்கின்றார்கள். இதுவரையில் அங்கே குடிநீர் வசதி பெறாமல் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே அப்படி இருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்காக அரசு கருணை கொண்டு, நடப்பு நிதி யாண்டிலாவது குடிநீர் குழாய் அமைத்து தருகின்ற பணியை மேற் கொள்ளவேண்டும் என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதியில் 14 ஆழ்துளைக் கிணறுகளும், 2 பம்புகளும் இருப்பதாக குறிப்பிலே கூறியிருக் கிறார்கள். நாம் குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்துவது என்பது நீர் ஆதாரத்தை அதிகப்படுத்தாமல், அதை வினியோகப் படுத்தினால், அதிலே பல சிக்கல்கள் நிச்சயமாக ஏற்படும். கிருஷ்ணா நதி நீர் திட்டம் வந்து, நாம் நகரத்தினுடைய குடிநீர் வினியோக அமைப்பை மாற்றி அமைக்கின்ற நேரத்தில்தான் இதை நிச்சயமாக கவனிக்க இயலும்.

பெரியார் மாவட்டத்திற்கு பவானி ஆற்றிலிருந்து
குடிநீர் வழங்கல்.

90— (*வினா எண். 1049) திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம் பவானி ஆற்றிலிருந்து பெருந் துறையூர், P. மேட்டுப்பாளையம், கவுந்தப்பாடி, சங்கபாளையம் பேரூராட்சி, ஊராட்சிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ஏற்கனவே ரூ. 76.42 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட இக்கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழியோர கிராமங்கள் பயன்பெறும்வண்ணம் திருத்தமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

91 (*வினா எண். 1050.) திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்பு மிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானி ஆற்றிலிருந்து கோபி வழியாக ஊத்துக்குளி வரையிலும் கூட்டு குடிநீர் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) பவானி ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு கோளப்பலூர், சிறுவள்ளூர், குன்னத்தூர், ஊத்துக்குளி, களிங்கையூர் ஆகிய இடங்களுக்கு ரூ. 383 இலட்ச மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் திருத்தமாகத் தயாரிக்கப்பெற்று வருகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் இருக்கிற பெருந்துறையூர், பி.மேட்டுப்பாளையம், கவுந்தப்பாடி, சலங்கபாளையம் ஆகிய பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எவ்வளவு காலத்திலே, அந்த ஆய்விலே எடுத்து முடிய இருக்கிறது. இந்த திட்டம் எப்போது துவங்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீடு தயாரிக்கப்பெற்று வருகிறது. அந்தப் பவானி ஆற்றோரத்திலே இருக்கிற எத்தனை கிராம மக்கள் இதனால் பயன் பெறுவார்கள் என்கிற வகையில் திருந்திய மதிப்பீடுகளை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். திருந்திய மதிப்பீடு வந்தவுடன், திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பவானி ஆற்றிலேயிருந்து சிறுவள்ளூர், குன்னத்தூர், களிங்கையூர், கவுந்தப்பாடி, கெட்டிச்சுவர், கோளப்பலூர், ஊத்துக்குளி ஆகிய இடங்களின் வழியாக நிறைவேற்ற இருக்கிற அந்தக் குடிநீர் திட்டத்திற்கு அரசு மதிப்பீடு தயாரிக்கப் பெறுகிறது என்று சொன்னார்கள். போன ஆண்டே மதிப்பீடுகள் தயாரிக்கப்பெற்று மிக விரைவிலே உலக வங்கியின் உதவியின் மூலமாக திட்டம் மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்னமும் ஆய்விலேதான் இருந்துக்கொண்டிருக்கிறது. இன்னும் மதிப்பீடுகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சற்று விரைவுபடுத்தி மிக விரைவாக திட்டத்தை அமல் படுத்தினால்தான் நல்லது ஏனென்றால் அந்தப் பகுதியில் ஆழ் குழாய்களை அமைத்தாலும் கூட ஊற்றுத் தண்ணீர் உடனடியாக வராத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இத்திட்டத்தை முன் உரிமை கொடுத்து அமல் நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

டாக்டர் அ. பொன்னுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்குளி, குன்னத்தூர் பகுதிகளில் நிலத்தடி நீர் நாளுக்குநாள் கீழே போய்க் கொண்டேயிருக்கிறது. குளோரைடு வாட்டர்





என்ற வகையில் குடிப்பதற்கு தண்ணீரே அரிதாகியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே அந்த திட்டத்தை ஐரோப்பா கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மதிப்பீட்டை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் அதற்குள்ள நிதி ஆதாரத்தை எப்படி பெறுவது என்பதையும் நாம் முடிவு செய்யலாம்.

மருங்காபுரி தொகுதியில் கிராமிய நூற்பாலை.

92—(* வினா எண். 1290) திரு. க. சோலைராசு: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதியில் கதர் வாரியத்தின் மூலம் ''கிராமிய நூற்பாலை'' தொடங்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மருங்காபுரி தொகுதியில், கிராமிய நூற்பாலை தொடங்க சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பது குறித்து தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் ஆராய்ந்து வருகிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய நூற்பு மையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் என்னென்ன, அந்த வகையிலே என்னென்ன தகுதிகளை அரசு எதிர்பார்க்கிறது என்றும், திருச்சி மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் இப்படிப்பட்ட கிராமிய நூற்பாலைகள் தொடங்கப்பட்டிருக்கிறது என்றும், அவைகளில் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக் கூறுகள் என்பதில், (1) அந்தப் பகுதியில் போதுமான நூற்பாளர்கள் இருக்கவேண்டும். (2) நூற்பாளர்கள் வருடம் முழுவதும் தொடர்ந்து வேலைக்கு வரவேண்டும். (3) போதுமான இட வசதியுடன் கூடிய கட்டிடமும் கிடைக்க வேண்டும். (4) கிராமத்திலிருந்து, வாரியத்திற்கு குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் காலி நிலமாவது தானமாக வழங்க முன்வரவேண்டும் அல்லது அரசுக்குச் சொந்தமான இடத்திலிருந்து ஒரு ஏக்கர் நிலம் இனாமாக நிலமாற்றம் செய்து தரவேண்டும்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் எத்தனை கிராமிய நூற்பாலைகள் இருக்கின்றன என்று கேட்டார்கள். திருச்சி மாவட்டத்தில் 45 கிராமீய நூற்பு ஆலைகள் இருக்கின்றன. அதிலே 1,350 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சோலைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாத்தியக் கூறுகளை சொல்கிற வகையிலே, ஆண்டு முழுவதும் வேலைக்கு வரவேண்டும் நூற்பாளர்கள் என்கிறார்கள். வறட்சி பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டு, தோட்ட வேலை கூட கிடைக்காத நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த மக்கள், ஆண்டு முழுவதும் வேலைக்கு வருவதற்கும், ஒரு ஏக்கர் நிலத்தை சொந்த நிலத்திலிருந்தே கொடுப்பதற்கும் கூட தயாராக இருக்கிறார்கள். எனவே எங்கள் கோரிக்கையை எழுத்து பூர்வமாக எழுதிக் கொடுத்தால், விரைவாக நடவடிக்கை எடுத்து, எங்களுடைய தொகுதியில் ஒரு கிராமிய நூற்பாலைச் சங்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை ஏற்று, அதற்கு ஏற்ப அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியுள்ள நகைக் கடன்கள்.

93(*வினா எண். 250) திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நடப்பு ஆண்டில் கூட்டுறவு சங்கத்தின் மூலம் நகைக் கடனாக வழங்கிய மொத்தத் தொகை என்ன?

(ஆ) தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (அ) நடப்பு நிதியாண்டால் 1984-85 ஆம் ஆண்டில் கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் 160 கோடி ரூபாய் அளவிற்கு நகை கடன் வழங்கிட வேண்டுமெனக் குறியளவு நிர்ணயிக்கப் பட்டது, 1-4-84 முதல் 28-2-85 வரை சுமார் 195·98 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவு நிறுவனங்களினால் நகை கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கூட்டுறவு சங்கங்களின் மூலம் நகைக் கடன்கள் தொடர்ந்து வழங்கப்படும்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து வழங்கப்படும் என்று சொல்லுகிறார்கள். ஒரு குறியீட்டை நிர்ணயம் செய்து



இவ்வளவு ரூபாய் என்று அதுவரையில் தான் கடன் வழங்கப் படுகிறது. நகைக் கடனைப் பொறுத்தவரையிலாவது குறியீடு இல்லாமல் தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க அரசு முன் வருமா என்பதோடு தஞ்சை, குடந்தை ஆகிய இடங்களிலுள்ள 2 சென்டிரல் பேங்குகளிலேயிருந்து எவ்வளவு நகைக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நகை கடன் வழங்குகின்ற நேரத்தில் அந்தந்த வங்கியின் தகுதியைப் பொறுத்துத்தான் அந்தக் குறியீட்டை நாங்கள் நிர்ணயிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த இரண்டு வங்கியில் எந்த அளவு பணம் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சரியாக தகவல் கொடுக்கப்படும்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, தொடர்ந்து வழங்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களுக்கு தகுதி வரையறை செய்தால் அனைத்து விவசாயிகளும் நகைக் கடன் பெறமுடியாத நிலை இருக்கிறது. எனவே அதனைத் தளர்த்தி தொடர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன் வழங்குவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்லிய கருத்தை கவனத்தில் கொண்டு நடைமுறையில் உள்ள சிக்கல்களையும் கவனத்தில் கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. பாலாஜி: தலைவர் அவர்களே, நகைக் கடன் என்பது திருப்பித் தரப்படுகின்ற கடன். ஆகவே அதற்கு குறியீட்டை நிர்ணயம் செய்யாமல், ஏழை விவசாயிகளாக இருந்தாலும், நகரத்தில் வாழ்கின்ற நடுத்தர மக்களாக இருந்தாலும் நகைகள் மீது கடன் தருவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஆதாரத்தை அரசு மூலமாக ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நகைக் கடனுடைய குறியீட்டை உயர்த்துகின்ற நேரத்தில், ஒவ்வொரு கூட்டுறவு வங்கிகளுக்கும் ஒதுக்கிய நேரத்தில், அந்த நகையை பத்திரப்படுத்துகின்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தான் நடைமுறைப்படுத்துகிறோம் என்பதை உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

திரு. பொ. அன்பழகன்: தலைவர் அவர்களே, நகை கடனில் நகையை பத்திரப்படுத்துவதற்கு எவ்வளவு சங்கங்களுக்கு பெட்டக வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் 1985-86—ல் எவ்வளவு சங்கங்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 1980-81லிருந்து 1984-8‌ வரைக்கும் பெட்டகங்கள் வழங்கிய சங்கங்களின் எண்ணிக்கை 520. அதற்கு அரசாங்கம் செலவழித்த பணம் ரூ. 28.95 இலட்சங்கள் என்பதையும், அதே போன்று 1985-86ல் 100 கூட்டுறவு நிறுவனங்களுக்கு ரூ. 15,000 வீதம் சுமார் ரூ. 15 இலட்சங்கள் செலவழிக்க இருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சென்ட்ரல் பாங்கு பணம் கொடுக் கின்றது. உறுப்பினர் பாலாஜி அவர்கள் சொன்னது போல் ஏழை விவசாயிகளுக்கும், நடுத்தர மக்களுக்கும் அந்தக் குறியீட்டை நிர்ணயம் செய்யாமல், திருப்பித்தரப்படுகின்ற அந்தக் கடனை, நகை எவ்வளவு வைத்தாலும் அதற்கு தகுந்தாற்போல் அவர்களுக்கு பணம் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கின்றேன். ஒரு கிராமத்தில் உள்ள சங்கங்களுக்கு கொடுக்கின்ற நேரத்தில் அந்த நகையை பத்திரப்படுத்தி, அதற்கு வேண்டிய கெப்பாசிட்டியைக் கருத்திலே கொண்டு கொடுக்கிறோம். நிறைய இடங்களில் தவறுகள் ஏற்பட்டு நகை களும் திருட்டு போகின்றன, பின்னால் அவை கவனிக்கப்படு கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களையெல்லாம் உரிய நேரத்தில் திருப்பி கொடுப் பவர்களுக்கு பரிசாக நகை கொடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதையும், அப்படி நகை கொடுக்க முடியாவிட்டால், நகை முகத்தோடு கடனாவது கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல் நகை கொடுக்க முடியாவிட்டாலும் கூட நிச்சயமாக புன்னகை கொடுப்போம். புன்னகையோடு வருகின்றவர்களை வரவேற்று நிச்சயமாக மறுபடியும் கடன் கொடுப்போம்.

திரு. ச. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தற்போது தங்கம் விற்கின்ற விலையில் ஒப்பிட்டுப் பார்க்கையிலே தங்கத்தை வைத்து வழங்கப்படுகின்ற கூட்டுறவுக் கடன் மிகவும் குறைவாக இருக்கிறது. ஸ்டேட் பாங்க் எந்த அளவிற்கு ஒரு பௌனுக்கு பணம் கொடுக்கிறார்களோ அதைவிட மிகக்குறைந்த அளவிலே, நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக வழங்கப்படுகின்ற கடன் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் தங்கம் விற்கின்ற விலையை





அனுசரித்து கொடுக்கப்படுகின்ற கடன் தொகையைக் கூட்டிக் கொடுக்கவும், வட்டியை குறைவாக கொடுப்பதற்கும் முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய கருத்துக்களையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொண்டு ரூ. 800 ஒரு பவுனுக்கு கொடுத்ததை இன்றைக்கு ரூ. 1,000 அளவிற்கு கொடுக்க உத்திரவு இட்டிருக் கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் ( ) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

## 2. அறிவிப்புகள்.

### (அ) அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக்குழு—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate of the Anna University) திரு. பி. எம். நரசிம்மன் பெயர் முறையாக முன்மொழியப் பெற்றுள்ளது. முறைப்படி முன்மொழியப் பெற்ற வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் திரு. பி. எம். நரசிம்மன் அவர்கள் அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate of the Anna Uuiversity) முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக் கிறேன்.

## 3. கவன ஈர்ப்புகள்

### (அ) தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில் மாடுகள் கோமாரி நோயினால் தாக்கப்பெற்றுள்ளது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் முழுவதும் மாடுகள் கோமாரி நோயினால் கடுமையாகத் தாக்கப்பட்டு மிகவும் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத் திற்குக் கொண்டுவருகிறேன்;

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[1985 ஏப்ரல் 11

அறிக்கை.

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் மதியம்பட்டி, கீரப்பட்டி, கோபிநாதம்பட்டி, எருமையம் பட்டி, மாம்பட்டி, மொப்பிரிபட்டி, பூதூர், கூத்தாண்டிபட்டி, கரியப்பிலைபட்டி, ஆகிய கிராமங்களில் 1985 ஜனவரி பிப்ரவரி, மார்ச் மாதங் களில் 250 மாடுகள் கோமாரி நோயினால் தாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு தாக்கப்பட்ட 250 மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. 2 கன்றுகள் இறந்துள்ளன. கோமாரி நோய் ஏற்பட்டதாகத் தகவல் கிடைத்ததும், 1,962 தடுப்பூசிகள் பாதிக்கப்பட்ட இடங்களில் போடப்பட்டுள்ளன.

2. தற்சமயம் மொப்பிரிப்பட்டி, பூதூர், கரியப்பிலைப் பட்டி கிராமங்களில் ஒரு சில கால்நடைகள் கோமாரி நோயி னால் பாதிக்கப்பட்டுள்ளன. மற்ற கிராமங்களில் நோய் தாக்குதல் ஏதுமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அரூர், புதிய கால்நடை மருத்தகம் கால்நடை உதவி மருத்துவரால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. கோமாரி நோய் அல்லது கால், வாய் நோய் என்று அழைக்கப்படும் நோய் சாதாரணமாக மாடுகள், பன்றி, செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு ஆகிய கால்நடை இனங்களை பாதிக்கும் ஒரு நோயாகும். இந்த நோய் ஒரு வைரஸ் கிருமியினால் ஏற்படுகின்றது. கோமாரி நோய் மிக அதிக அளவு கலப்பு இனக் கால்நடைகளில் ஏற்படுகிறது. இந்த நோயின் காரணம் ஒரு வைரஸ் கிருமியாக இருந்தாலும் அந்த கிருமியிலேயே பல இனங்கள் (strains) காணப்படுகின்றன. தற்சமயம் இதில் 65 இனங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

4. கோமாரி நோயின் முக்கிய அறிகுறிகள் நாக்கின் மேல் கொப்புளங்கள் ஏற்படுதல், உதடுகள், குளம்புகளின் இடைவெளி, மடி, காம்புகள் ஆகிய இடங்களிலும் கொப்புளங்கள் ஏற்படுதல் ஆகியவை, பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாயிலிருந்து எச்சில் வடிந்த வண்ணம் இருக்கும். இந்த கொப்புளங்கள் உடைந்து சிவந்த புண்களை மேற்கண்ட இடங்களில் ஏற்படுத்துகின்றன. கால்கள் பாதிக்கப்பட்ட கால்நடைகள் நொண்டும். நோயின் தொடக்கத்தில் அதிக அளவு காய்ச்சலும், பசியின்மையும் இருக்கும். வாயில் புண்கள் ஏற்படுவதால் கால்நடைகள் தீவனம் எடுக்காமலும், கால்களில் புண்கள் ஏற்படுவதால் அவற்றின் இயக்கமும் பாதிக்கப்படுகின்றன. இப்புண்கள் 4 அல்லது 5 நாட்களில் குணமடையத் தொடங்கும். ஆனால் கால்நடைகள் உடல் தேறிவர, 6 மாதங்களுக்கு மேல் ஆகும்;

5. கோமாரி நோய் கிருமிகள் பல இனங்கள் இருப்பதால், தடுப்பூசி மருந்து தயாரிப்பிலும் சில கடினங்கள் எழுகின்றன. நோயின் காரணமாக குறிப்பிட்ட இனக் கிருமியினைக் கண்டறிந்து அதற்கேற்ப தடுப்பூசியினைத் தயாரிக்க வேண்டும். தற்சமயம் குறைபாட்டினைப் போக்கவே முக்கியமான இனங்



களுக்கு எதிரான தடுப்பு ஊசி ஒரே ஊசியாக (polyvolant) தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனை நோய் பாதிக்காத, கால் நடைகளுக்குப் போடுவதன் மூலம் O,A,C, Asia I; ஆகிய இனங் களிடமிருந்து கால்நடைகள் பாதுகாப்பு பெறுகின்றன. இத்தடுப்பு ஊசி மருந்து வருடத்திற்கு இரு முறைகள் போடப்படவேண்டும். ஒரு முறை தடுப்பூசி போட்டப்பின் ஆறு மாதம் கழித்து, மீண்டும் தடுப்பூசிபோடப்பட வேண்டும். தடுப்பு சக்தி ஆறு மாதங்கள் வரையிலே தான் இருக்கும். இந்த தடுப்பூசி மருந்து நமது துறையினால் தற்சமயம் தயாரிக்கப்படுவதில்லை. இதனை தனியார் நிறுவனங்களான, ஹெச்ஸ்ட் (Hcechest) பெய்ப் (Baif) ஆகியவையும், இந்திய கால்நடை ஆராய்ச்சி நிலையமும் தயாரிக்கின்றன. இது ஒரு மாட்டிற்கு ரூபாய் 10/- என்ற விலையில் முன்பு விற்கப்பட்டது. தற்சமயம் ஒரு மாட்டிற்குத் தேவையான மருந்து ரூபாய் 3.64 என்ற விலைக்குக் கிடைக்கிறது

6. தமிழ்நாட்டிலுள்ள பசு மற்றும் எருமையினங்களுக்குத் தடுப்பூசி போட ரூ. 491.40 லட்சம் செலவாகும். நம் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கால்நடைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் ஆண்டிற்கு ரூ. 1,798.16 லட்சங்கள் செலவாகும்.

கோமாரி நோய் தடுப்பிற்கென தமிழகத்தில் மத்திய அரசு மேற்பார்வையில் ஓர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மிகச் சிறு விவசாயிகள், சிறு விவசாயிகள், விவசாயக் கூலிகள் ஆகியோரது நலனுக்காக, மத்திய அரசின் துணையுடன் அன்னாரது கால்நடைகளுக்குப் பாதிவிலையில் கோமாரி நோய் தடுப்பு ஊசிப் போடப்பட்டது. இது முதலில் கோவை, நீலகிரி பெரியார் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுப் பின் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டது இதில் மருந்தின் பாதி விலை கால்நடை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்டது. மற்ற பாதி விலையின் செலவை மத்திய, மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொண்டன. நோய்க்கண்ட இடங்களில் குறிப்பிட்ட கிருமியினத் தடுப்பூசி (மோனோவோலண்ட் வேக்ஸின்) இலவசமாகப் போடப்பட்டது. இதனுடைய செலவினையும் மத்திய, மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொண்டன.

7. 1984-85 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.12.78 லட்சத்திறகு தடுப்பூசி மருந்துகள் வாங்க அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 1981–82 மற்றும் 1983–84 ஆண்டுகளில் கீழ்க்கண்ட அளவு தடுப்பூசி மருந்து வாங்கப்பட்டு விவசாயிகட்கு இலவசமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.—

| ஆண்டு. | செலவிடபட்ட தொகை. | ஊசி மருந்து அளவு (டோசுகள்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1981–82 | ரூ. 17.35 லட்சம் | 2,52,500 |
| 1983-84 | ரூ. 24.00 லட்சம் | 6,38,280 |

[திரு.கே.ஏ.கிருஷ்ணசாமி] [1985 ஏப்ரல் 11

1984-85ல் வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் 1 இலட்சம் ரூபாய்க்கு, 26,500 டோசுகள் கோமாரி நோய் தடுப்பூசி மருந்து வாங்கி விவசாயிகளுக்கு இலவசமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

இது தவிர ரூ. 2,88,000 மதிப்பிற்கு கோமாரி நோய் தடுப்பூசி மருந்து வாங்கி தமிழகத்தில் நோய் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இலவசமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அரூர் வட்டம் மட்டுமல்ல தர்மபுரி மாவட்டம் முழுவதுமாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் தொத்து நோயாகப் பரவலாக தாக்கும் நிலை ஏற்பட்டு ஆரம்பத்திலே காலிலே வந்து சுமார் 1 வார காலமாக கால்நடை இலாகா வைச் சேர்ந்த அதிகாரிகளும் வைத்தியர்களும் சிகிச்சையளித்து அதற்குப் பிறகு வாயிலே அந்த நோய் வந்து அதற்குச் சிகிச்சை அளிக்கப்பட்டதற்குப் பிறகு அந்த மாடுகள் தேறு வதற்கு 5, 6 மாதங்கள் ஆகின்றன. தர்மபுரி மாவட்டத்திலே சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் ஏற்பட்ட பருவ மழை தவறியதால் ஏற்பட்ட நிலைமையின் காரணமாக கால்நடைகளுக்கு போதிய தீவனம் இல்லாமல் பெருவாரியான கால்நடைகள் கேரள மாநிலத்திற்கு கொண்டுபோகப்பட்டன. இப்போது விவசாயிகளுக்கு அங்கே கால்நடைகள் கிடைப்பதே அரிதாக இருக்கிறது. அந்த அளவுக்கு தட்டுப்பாடு இருக்கிற காரணத்தினால் அது ஏற்படாத அளவுக்கு தர்மபுரி மாவட்டத் திலே இன்ஷூரன்ஸ் செய்யக்கூடிய திட்டம் இருக்கிறது, அந்தத் திட்டம் அரசு கடன்பெற்று பசுமாடு, எருமை மாடு, கறவை மாடுகள் வாங்குகிற மாடுகளுக்குத்தான் கட்டாய இன்ஷூரன்ஸ் திட்டம் அமுலாக்கப்படுகிறது. மற்றபடி விவசாயிகள் வாங்குகிற மாடுகளுக்கும் அதுபோன்ற கட்டாயத் திட்டத்தைத் கொண்டுவந்து அந்தத் திட்டத்தின் மூலமாகப் பாதுகாப்புக் கொடுத்து தமிழகத்திலே கால்நடைகளைப் பாது காக்குகின்ற அளவுக்கு விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு கால்நடைகள் கிடைக்கிற அளவுக்கு கட்டாயத் திட்டத்தை அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வு பரிசீலனை செய்து ஆவன செய்யப்படும்.

(ஆ) இலங்கை இராணுவத்தினர் இராமேஸ்வரம் கடல் பகுதியில் இந்திய மீனவர்களுக்கு இழைக்கும் கொடுமைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மா. சின்னராசு: டாக்டர் கே. பி. இராமலிங்கம், திருவாளர்கள் கடலூர் இ.வி. வேலு, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத் திற்கு அதைக் கொண்டுவருவார்.



1985 ஏப்ரல் 11]

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை இலங்கை இராணுவம் சுட்டுக் கொன்றதும், சிலரைக் காயப்படுத்தியும், சிலரை கைது செய்தும் இன்னமும் காவலில் வைத்துள்ளதாலும் மீனவர் களிடையே ஏற்பட்டுள்ளை நிலை குறித்த" அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கச்சத் தீவு இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே 11 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவு. அதனைச் சுற்றி கடல் ஆழமாக இருப்பதால் இறால் மீன்கள் அதிகம் உள்ளன. கச்சத்தீவு நீண்டகாலமாக இந்திய ஆளுகைக்குட்பட்டு இருந்தது. இராமேஸ்வர மீனவர்கள் அங்கு மீன்பிடி தொழில் செய்து வந்தனர்.

1970-74-ல் கச்சத்தீவை இலங்கை அரசு தனது என்று உரிமை கொண்டாட ஆரம்பித்தது. இதனால் மத்திய அரசும் இலங்கை அரசும் 1974 ஆம் ஆண்டு ஜூன் ஜூலை திங்களில் உயர்மட்டக் கூட்டம் ஒன்றை நடத்தி இருநாடுகளுக்கும் இடையே உள்ள கடல் எல்லையை மாற்றி அமைத்தது அதனால் இராமேஸ்வர மீனவர்கள மீன்பிடிக்கும் பகுதியின் பரப்பு குறைந்துவிட்டது.

இந்த ஒப்பந்தத்திற்குப் பின்பும் இராமேஸ்வர மீனவர்கள் கச்சத்தீவைச் சுற்றி தொடர்ந்து மீன்பிடிககச் செல்கின்றனர் என்ற குற்றச்சாட்டுகள் இலங்கையிலிருந்து அடிக்கடி வந்த வண்ணம் இருந்தன, அதனால் இந்திய எல்லைக்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்லக்கூடாது என்று தண்டோரா மூலமும் மீனவர்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. ஆனால் மீனவர்கள் தெரிந்தோ தெரியாமலோ அங்கு மீன்பிடிக்கச் செல்ல நேரிடுகிறது. இவ்வாறு 1983 வரை நமது மீனவககள் நமது எல்லையைக் கடக்கும்போது அதிக அளவில் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை. ஆனால், 1983-ல் இலங்கையில் நடந்த கலவரத்திற்குப் பிறகு நமது மீனவர்கள் இந்திய எல்லையைக் கடக்கும்போது அவர்களைக் கண்டிப்பதில் இலங்கை அரசும் தீவிரம் காட்டியது. இந்திய எல்லையைக் கடக்கும் மீனவர்களை கைது செய்வதோடு அவர்களது உடமை களையும் இறால் மற்றும் மீன்களையும் பறிமுதல் செய்தது. இதுபோன்ற சம்பவங்கள் நடந்ததாக அறியும்போதெல்லாம் மீன்வளத்துறை தமிழக அரசின் மூலமாக இலங்கையில் உளக தூதரகத்துடன் தொடர்பு கொண்டு மீனவர்கள் அவர்ளது

உடைமைகளுடன் மீட்க உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்து வந்தது. இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் இன்னல்கள் அடையாமல் இருக்க கூட்டங்கள் கூட்டியும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும் மீனவர்கள் இந்திய எல்லையைக் கடக்கக்கூடாது என்ற விபரம் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய வெளியுறவு அமைச்சர் அவர்களுடன் தொடர்புகொண்டு மீன்பிடிக்க தவறுதலாக இந்திய எல்லையைத் தாண்டும் மீனவர்கள் அவர்களது உடைமைகளுடன் பத்திரமாக இந்தியா திரும்புவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இதன்பேரில் இந்தியப் பிரதமரின் தனிப்பிரதிநிதி இலங்கை சென்று இலங்கை குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனா அவர்களுடன் இதுபற்றி பேசி கடலில் தவிப்புக்குள்ளாகும் மீனவர்களை மனிதாபிமானத்துடன் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும் இலங்கை அரசும் மீனவர்களை அவ்வாறு நடத்த உறுதி அளித்ததாகவும் மைய அரசு தெரிவித்தது.

இவ்வாறு இலங்கை அரசு உறுதிமொழி அளித்தும் 1983-ம் ஆண்டு டிசம்பா முதல் 1984-ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கும் நமது மீனவர்களின் 4 விசைபபடகுகளை படகு ஓட்டுபவர்களுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துவிட்டனர். இதற்கிடையில் இலங்கையில் உள்நாட்டு கலவரம் தீவிரமானது அதனால், இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்கள் வரக்கூடாது என்றும் அவ்வாறு மீறுபவர்கள் சுடப்படுவார்கள்எனவும் இந்திய தூதரகம் மூலமாக இலங்கை அரசு எச்சரிக்கை விடுத்தது. அதன் விளைவாக தமிழக அரசும் விசைப்படகுகள் இந்திய எல்லையை கடக்கக்கூடாது என மீனவர் சங்கங்கள் மூலமும் செய்தித்தாள் மூலமும் மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தது. ஆனால் இராமேஸ்வர மீனவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இலங்கை எல்லைக்குள் மீன் பிடித்ததாக 1984 அக்டோபர் முதல் இலங்கை இராணுவ படையினர் காட்டுமிராண்டித்தனமாக நமது மீனவர்களைத் தாக்கினர். நம் எல்லைக்குள் புகுந்து நம் மீனவர்களையும் அவர்கள் பிடித்து வைத்திருந்த பல ஆயிரம் மதிப்புள்ள இறால் மற்றும் மீன்களையுய் மீன்பிடி சாதனங்களையும் அபகரித்து சென்று உள்ளனர். மேலும் 1984 அக்டோபர் 10/11 தேதிகளில் 17 படகுகளையும் 94 மீனவர்களையும் கைது செய்து இலங்கைக்கு கொண்டு சென்றனர். அவர்களை விடுவிக்க இந்திய அரசு பெரும் முயற்சி எடுத்தது ஆனால் இலங்கை அரசு அப்போது ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் மீனவர்களை துன்புறுத்துவது நவம்பர் மாதத்தில் மேலும் அதிகரித்தது.

10–12–84 அன்று மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை கப்பற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தினர் அதில் திரு. முனியசாமி என்ற மீனவர் குண்டடிபட்டு உயிரிழந்தார். டிசம்பர் மாதத்தில் இலங்கை படை மீனவர்களை





தாக்குவது அன்றாட நிகழ்ச்சியானது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் உடனுக்குடன் தந்தி மூலம் மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதனால் மத்திய அரசு கடலோர கப்பற்படை ரோந்து பணியை இராமேஸ்வரம் பகுதியில் தீவிரப்படுத்தியது. மேலும் அவ்வப்போது கப்பற்படையைச் சேர்ந்த கப்பல் ஒன்றையும் பாதுகாப்பிற்காக அனுப்பியது. இச் சூழ்நிலையில் இலங்கைக் கடற்படையினர் நமது எல்லையில் புகுந்து நமது மீனவர்களைத் தாக்குவதாக செய்தி கிடைத்தது. 1985 ஜனவரி 7-ந் தேதி நமது எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த சூசைநாயகம், அல்போன்ஸ் என்ற 2 மீனவர்களை இலங்கை கப்பற்படையினர் சுட்டுக் கொன்றனர். அதனால் இராமேஸ்வரம் பகுதியில் கொந்தளிப்பு ஏற்பட்டது, இதனை முன்னாள் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் நமது இந்திய பிரதமருக்கு நேர்முகக் கடிதம் மூலம் எழுதி அவர் தம் கவனத்தை ஈர்த்தார். அதைத் தொடர்ந்து ரோந்துப்பணி தீவிரப்படுத்தப் பட்டது. 1985 ஆம் ஆண்டு ஜனவரி 11-ல் இலங்கை கடற்படை நமது எல்லைக்குள் புகுந்து நமது மீனவர்களை தாக்கியதை அடுத்து கடலோர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த நமது கடல் படையினர் அவர்களது படையைப் பிடித்து அதிலிருந்து 6 இலங்கை இராணுவ கடற்படை வீரர்களையும் கைது செய்தனர். தமிழக அரசின் தீவிர முயற்சியின் பயனாக இலங்கை கப்பற்படையால் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களையும் 17 படகுகளையும் விடுவித்தால் தம்மிடம் பிடிபட்ட இலங்கை கப்பற்படை வீரர்களை தாமும் விடுவிப்பதாக மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி 1985 ஜனவரி 29-ல் மேற்படி 17 மீனவர்களையும் 16 படகுகளையும் இலங்கை அரசு விடுவித்தது. 17-வது படகு பழுதுபட்டுவிட்டது என்றும் இலங்கை அரசு கூறியுள்ளது. அப்படகை எடுத்துவர ஏற்பாடுகள் நடைபெறுகிறது. இந்திய அரசும் இலங்கை கப்பற்படை வீரர்களையும் கப்பல்களையும் பரிமாற்ற அடிப்படையில் அன்றே விடுவித்தது, இந்நிலையில் 1985 பிப்ரவரி 13-ல் இலங்கை கப்பற்படையினர் அந்தோணி, ஆனந்தன் என்ற இந்திய மீனவர்கள் இருவரை சுட்டு வீழ்த்தினர். மேலும் பல மீனவர்கள் குண்டடிபட்டும். பலத்த காயத்துடனும் திரும்பி வந்தனர் அவர்களுக்கு தக்க சிகிச்சை அளிக்கப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்த 5 மீனவ குடும்பங்களுக்கு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2,000-ம் நமது இந்தியப் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2,500-ம் வழங்கப்பட்டது. பலத்த காயமுற்றவர்களுக்கு தலா ரூ 500-ம் நமது அரசு அளித்துள்ளது இத்துடன் அவர்களுக்கு வீதம் இலவச உணவுப் பொருட்கள் (10 கிலோ அரிசி, 5 லிட்டர் மண்ணெண்ணெய், இந்திய பருப்பு மற்றும் காய்கறிகள்) வழங்கப் பட்டன.

இவ்வாறு நடைபெற்ற கொடூரங்களை நமது அரசு இந்திய அரசின் கவனத்திற்கு அவ்வப்போது தந்தி மூலம் தெரிவித்துள்ளது. இந்திய அரசும் இலங்கை அரசுடன் இராஜரீதியில் பேச்சுவார்த்தை நடத்துகிறது. இந்திய அரசு

(திரு'எம்.ஆர். கோவேந்தன்) [1985 ஏப்ரல் 11

தேவைப்படும் பொழுதெல்லாம் இந்தியக் கப்பல்களை
இராமேஸ்வரம் பகுதியில் ரோந்துப் பணிக்கு அனுப்பு
கிறது. இராமேஸ்வரம் மீனவர்களின் வேண்டுகோளின்
பேரில் இந்திய கடலோர ரோந்துப்பணி படையினர் இரவு 8
மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை கச்சத்தீவு பகுதியில்
பாதுகாப்புப் பணி செய்ய வேண்டும் என்று நமது அரசு மத்திய
அரசுக்கு 'டெலக்ஸ்' செய்தி அனுப்பியுள்ளது. அதற்கான ஏற்
பாடுகள் விரைவில் செய்யப்படும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு நமது அரசும் இந்திய அரசும் எடுத்துக்கொண்ட
துரித முயற்சியினால் இலங்கை கடற்படையினரின் அட்டூழி
யங்கள் தற்போது குறைந்துவிட்டது. சமீபத்தில் பிற்படுத்தப்
பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இராமேஸ்வரம்
சென்றபோது அங்குள்ள மீனவர்கள் தஞ்சை, புதுக்கோட்டை
போன்ற மாவட்டங்களில் தாங்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கு
அமைச்சர் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொண்டார்கள். அதன்பேரில் சேதுபாவாசத்திரம், மல்லிப்
பட்டினம், ஜெகதாப்பட்டினம் கோட்டைப்பட்டினம் ஆகிய
பகுதிகளில் நிபந்தனையின்றி இராமேஸ்வரம் மீனவர்கள் மீன்
பிடிப்பதற்குத் தேவையான உதவி, வசதி; பாதுகாப்பு செய்துதர
வேண்டும் என்று தஞ்சை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்
தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இது சம்பந்த
மாக இராமேஸ்வரம் மீனவர்கள், மீனளத்துறையின் உதவி
இயக்குநர் (இராமநாதபுரம்) அவர்களை அணுகினால் அவர்
வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாக செய்வார். மேலும் இந்த
மீனவர்களுக்கு இராமநாதபுரத்தில் மூக்கையூரில், இடம்
அமைத்துக் கொடுக்கலாம் என்ற கருத்துருவை இந்த அரசு
ஆராய்ந்துவருகின்றது. இந்த நடவடிக்கைகளினால் இப்போது
இராமேஸ்வரம் பகுதியில் பதட்ட நிலை இல்லை அவர்கள்
நமது எல்லைக்குள் மீன்பிடிக்கத் தகுந்த பாதுகாப்பு உள்ளது.

திரு மா. சின்னராசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பற்றி எரியும் இலங்கை தமிழர் பிரச்சினையில் நமது
மீனவர்கள் தொழில் செய்கின்ற உரிமை பறிக்கப்பட்டு இருக்
கிறது என்ற வகையில் நமது அரசு அந்த துன்பப்பட்ட மீன
வர்களுக்கு கொடுக்கப்படுகிற மத்திய அரசு மூலம் கொடுக்கப்
படுகிற உதவி 2,500 ரூபாய் மிகவும் சொற்பமானது
என்பதை மத்திய அரசுக்கு தெரிவித்து குறைந்த அளவு
25,000 ரூபாய் ஆவது அவர்களுக்கு கிடைக்க வகை
செய்யவேண்டும் என்பதையும், மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சொன்ன பதிலில் கச்சத் தீவு பகுதியில் நம்முடைய
எல்லையை கடந்து சென்ற மீனவர்கள் தான் கொடுமைக்கு
ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது போன்ற பதில் இருக்
கிறது. அது துறையின் மூலமாக கொடுக்கப்பட்டு இருந்தாலும்
அது சரியான ஒரு விளக்கம் அல்ல என்பதை நான் மாண்புமிகு
அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்
கச்சத்தீவு ஒப்பந்தம் செய்யப்பட்ட நேரத்தில் 1974—ல் செய்யப்
பட்ட ஒப்பந்தம் பிரகாரம் நம்முடைய மீனவர்கள் கச்சத்தீவுக்கு



1985 ஏப்ரல் 11] (திரு. மா. சின்னராசு)

போகலாம். அங்கே வலையை காய வைக்கலாம், அங்கே
இளைப்பாறலாம் இவைகளுக்கு உரிமையிருக்கிறது. ஆகவே,
அந்த உரிமையை நாம் நிலை நாட்டுகிறோம். அந்த உரிமை
பறிக்கப்பட்டு இருக்கிறது என்பதை மத்திய அரசுக்கு நம்முடைய
அரசு எடுத்துச் சொல்லி தங்களுடைய உரிமையை பாதுகாப்
பதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம் ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கச்சத்தீவு ஒப்பந்தம் 1974-ல் ஏற்படுத்தப்
பட்டது. அதற்கு பிறகு மறுபடியும் 1976-ல் இரண்டாவது
முறையாக தொடர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டு இருக்கிறது
அந்தஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் நம் மீனவர்களும், யாத்
திரியர்களும் கச்சத்தீவுக்குச் செல்ல அனுமதி உண்டு. இதற்கு
இலங்கை அரசின் அனுமதி தேவையில்லை. மேலும் அங்கே மீன
வர்கள் வலையை உலரவைக்கலாம் அந்த தீவில் இருக்கிற கோவி
லுக்கு செல்லலாம், ஆனால் இந்தத் தீவை சுற்றிலுமுள்ள
பகுதிகளில் மீன் பிடிக்கக்கூடாது என்பதாக அந்த ஒப்பந்தம்
இருக்கிறது. ஆனல் நம்முடைய மீனவர்கள் தெரிந்தோ தெரியா
மலே , அந்தப்பகுதியில் மீன் பிடிக்கச் செல்வதால் வேண்டாத
எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆனல் 1983 ஆம்
ஆண்டுவரையில் இந்த ஒப்பந்தம் கடுமையாக கடைப்பிடிக்காமல்
இலங்கை இந்திய மீனவர்கள் தொடர்ந்து மீன் பிடித்து வந்
தார்கள். அப்போது எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை.1983
ஆம் ஆண்டுக்கு பின்னால் ஈழத் தமிழர்கள் பிரச்சினையை மைய
மாக வைத்துக்கொண்டு மீனவர்களை சுடுகிற சூழ்நிலை உரு
வாகியிருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர்
அவர்கள் இதே கூட்டத்தொடரில் சொன்னார்கள். இந்த
மன்றத்தில் உள்ள சர்வ கட்சியினரும் ஏகமனதாக ஒத்துழைத்
தால் அரசின் சார்பாக ஆளும் கட்சி தீர்மானம் கொண்டு வந்து
மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கும் என்று அவர்கள் அறி
வித்தார்கள். எல்லா எதிர்க்கட்சியை சேர்ந்தவர்களின் ஒப்பு
தலோடு இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மீண்டும்
கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு நாம் முயற்சி
செய்யலாம் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன், இப்போதுள்ள நடைமுறைப்படி நம்முடைய
மீனவர்கள் இறந்தால் நம்முடைய முதல்வர் நிவாரண நிதியி
லிருந்து 2,000 ரூபாயும் பிரதமர் நிதியிலிருந்து 2,500 ரூபாயும்
கொடுத்து வருகிறார்கள். மற்றும் அரிசி, மண்ணெண்ணெய்
வழங்கியும்உதவி செய்கிறோம். காயம் அடைந்தவர்களுக்கு 500
ரூபாய் என்று முதல்வர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு
வருகிறது. இலங்கை கடல் எல்லையில் தான் நமது மீனவர்கள்
தாக்கப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல, இலங்கை கடற்படை
யினர் நமது எல்லையில்தான் பெருமளவில் தகராறு செய்
கிறார்கள். அதை நாம் இப்போது தீவிரமாக கண்காணித்து
மத்திய அரசு மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. அதனால் தமிழக மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குவதோடு அவர்களுக்கு ரிவால்வர் துப்பாக்கிகள் அளித்து அதற்கு உரிமைகள் வழங்குவதோடு அவைகளை மலிவு விலையிலோ, இலவசமாகவோ ரிவால்வர் துப்பாக்கிகள் மீனவர்களுக்கு வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட யோசனை இதுவரையில் அரசின் பரிசீலனையில் இல்லை. மீனவர்கள் மீன் பிடிக்க போகிறபோது இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டு விடுகிறது. கச்சத்தீவுப் பகுதியில் மீன் இருக்கிறது அப்பகுதியை அவர்களுக்குக் கொடுத்து விட்டார்களே என்ற ஏக்கம் இராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் இருக்கிறது, புதுக்கோட்டை, தஞ்சாவூர் பகுதிகளில் சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம், ஜெகதாப்பட்டினம், கோட்டைப்பட்டினம் ஆகிய பகுதிகளில் மீன் பிடிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி உதவி செய்து கொடுக்கிறோம் என்று நான் சொன்னேன் என்றாலும் அவர்களுக்கு பக்கத்துப் பகுதியாக இருப்பதால்தான் இப்படிப்பட்ட நிலைமை வருகிறது. எனவே இதில் துப்பாக்கி ஏந்தி போராடுகிற சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டாம் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 10–10)

மீனவர்கள் இப்பிரச்சனைகளைக் கூர்ந்து பார்த்து, நிலைமைகளை உணர்ந்து அவர்கள் நடந்து கொள்வதன் மூலம்தான் நாம் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசின் சார்பாகக் கொடுக்கப்பட்ட அறிக்கையில், இந்திய எல்லைக்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்லக் கூடாது என்று தண்டோரா மூலமும் மீனவர்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டது. ஆனால் மீனவர்கள் தெரிந்தோ தெரியாமலோ அங்கு மீன்பிடிக்கச் செல்ல நேரிடுகிறது என்றும் 1983 வரை அவர்களுக்கு எந்தவிதமான இம்சையும் இல்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. இராமேஸ்வரம் தமிழ்நாட்டில் உள்ள ஒரு பகுதி; அங்குள்ளவர்களும் இந்தியர்கள்தான். அவர்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்றால், வம்புக்கு அவர்களைச் சண்டைக்கு இழுக்கிறார்கள் என்பதுதான் பொருள். ஆகவே, இலங்கைப் பிரச்னையையும், இந்த மீனவர்கள் பிரச்னையையும் ஒன்றாக ஆக்கி, இலங்கைப் பிரச்சினையில் நம்மை வலுச் சண்டைக்கு அழைக்கிறார்கள் என்பதை இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்



மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் ; தலைவரவர்களே, முழுக்க முழுக்க இது சம்பந்தமான பிரச்னைகளிலே நம்முடைய முதல்வர் அவர்கள் அடிக்கடி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், அடிக்கடி மத்திய அரசுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்களே இந்தியக் கடற்படையை ரோந்துக்கு அனுப்பி அந்த ரோந்துப்படை அந்தப் பகுதியிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, மீனவர்களுக்குப் போதிய பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு, மீனவர்கள் உள்ள பகுதிகளிலே அவர்களுடைய படகுகளைத் தங்கவைத்து மீன் பிடித்துக் கொள்வதற்கு கச்சத் தீவின் காரணமாக, இராமேஸ்வரத்தில் உள்ள படகுகளை மூக்கையூரில் தங்க வைத்து மீன் பிடிக்க வசதியாக, மூக்கையூரில் மீன்பிடி துறைமுகம் கட்டும் வேலை அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது. முப்பது கிலோ மீட்டர் தூரத்தில்தான் அடுத்த துறைமுகம் கட்ட வேண்டுமென்ற விதி தற்போது இருக்கிறது. வாலிநோக்கம் துறைமுகத்திற்கு எட்டு கிலோ மீட்டர் தூரத்திலே இந்த மூக்கையூர் இருப்பதால் விதியைத் தளர்த்தி அனுமதி அளிக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் கோரிக்கை அனுப்பியிருக்கிறோம். விரைவில் அனுமதி கிடைக்கும் என்று நாம் எதிர் பார்க்கிறோம்.

திரு இரா. தாமரைக்கனி; பேரவைத் தலைவரவர்களே, தேசிய மீனவர் சங்கத்தில் கூட்டம் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள், அதில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் ஒரு திருத்தம் செய்து கச்சத் தீவைச் சுற்றிலும் மீன் பிடிக்க வகை செய்வது; இத்தகைய மீனவர்கள் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க உரிமை மறுக்கப்படுவதால் அவர்களுக்கு புனர் வாழ்வுக்காக ஒருகோடிரூபாய் நஷ்டயீடு கொடுப்பது; மீன்துறை மற்றும் கூட்டுறவு மூலமாக வழங்கப்பட்டுள்ள தமிழக அரசு கடன்களை வஜா செய்வது போன்றவையும், இலங்கை இராணுவ வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு மத்திய அரசிடம் சுமார் ஐந்து கோடி ரூபாய் நிதி உதவி கோரி அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒருவருக்கு ஒரு கோடி ருபாய் கூடப் போதாது. ஆனால் நிதிநிலைமையை அனுசரித்து முடிந்தவரையில் உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பத்திலே கடன் வாங்கி இருந்தார்கள் என்றால் அவர்களுக்கு என்ன உதவி செய்யலாம் என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு வி. தங்கவேலு: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தண்டராம்பட்டு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நேற்று வரையிலே எ. வச்கிரவேலுவாக இருந்திருக்கிறார். ஆனால் இன்றைக்கு அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கெசட்டிலே யெல்லாம் பப்ளிகேஷன் போட்டு என்னிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அது எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். இதை நாம் ரேடியோவிலே சொல்லிக் கொண்டிருக்க முடியாது. எனவே, இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எதுவுமில்லை.

திரு கு. சுப்பராயன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: * * *

இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை. அவர்கள் கூறியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகைகளும் அவற்றை வெளியிடக் கூடாது.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு 1985 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1985—ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985,

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (இ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1985 (ஆ.இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:— தமிழ்நாடு 1985—ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

### (ஆ) கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்டமுன் வடிவு 1985.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 5. வரவு-செலவுத் திட்டம் 1985—86 வாக்கெடுப்பு கோரிக்கை எண் 17 கல்வி—(தொடர்ச்சி).

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1985—86-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்வி மானியத்தின் மீது நான் பேச முற்படும்போது தமிழக அரசின் வரலாற்றில் மிக அதிகமான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றிருக்கின்ற இந்தத் துறை ஏறக்குறைய ஐந்தில ஒரு பங்கைப் பெற்றிருக்கிறது. 468 கோடி ரூபாய்க்குச் சமீபமாக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்ற ஆவல் அரசுக்கும் மற்றவர்களுக்கும் உண்டு. ஆகவே ஆங்காங்கே உள்ள சில குறைபாடுகளை எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

இரண்டு தினங்களுக்கு முன்னால் ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசும்போது மிக அருமையான கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே மிகக் குறைவாக இருப்பது நாட்டுப்பற்று. அது அதிகமாக

ஏற்படவேண்டும். அந்த வகையில் கல்வி அபிவிருத்தி எல்லாம் இருக்கவேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார்கள். ஆகவே நாட்டுப்பற்று ஏற்படக்கூடிய வகையில் கல்வி திட்டங்களை அமைக்க வேண்டும் என்பதில் நாம் கவனம் கொள்ளவேண்டும். காலப்போக்கினை அனுசரித்து அவ்வப்போது எது தேவை என்பதை உணர்ந்து நம்முடைய திட்டங்களை மாற்றிக்கொள்வது தான் விவேகமாகும். இப்போது இந்த நவீன விஞ்ஞான யுகத்தில் நம்முடைய நாட்டுக்கு மிக அவசியம் சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி. இந்த சயின்ஸ் அன்ட் டெக்னாலஜிக்காக சென்ற ஆண்டிலே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஏனோ தெரியவில்லை இந்த ஆண்டு வெறும் பதினாயிரம் ரூபாயாக அது குறைந்திருக்கிறது. ஒருக்கால் அது அச்சுப்பிழையாகக் கூட இருக்கலாமோ என்ற சந்தேகம் எனக்கு வருகின்றது. இதனுடைய முக்கியத்துவத்தை அரசாங்கமும் உணருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணருகிறார்கள், அதிகாரிகளும் உணருகிறார்கள். ஆகவே மறுபரிசீலனை செய்து இந்தத் துறைக்கு அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும் நம்முடைய பாடத்திட்டங்களில் எலக்ட்ரானிக் கம்ப்யூட்டர் சயின்ஸ் போன்ற நவீன விஞ்ஞான அறிவை வளர்க்கக்கூடிய பாடமுறைகளை ஏற்படுத்த வேண்டும். "World's best computor scientists are from Tamil Nadu" என்ற பெருமை நமக்கு இருக்கின்றது. ஆனால் அவர்கள் எல்லாம் நம் நாட்டை விட்டு வெளிநாடுகளில் தங்கள் அறிவைப் பயன்படுத்தக்கூடிய நிலை இருக்கின்றது. அவர்களை இங்கேயே தங்க வைத்து அவர்களுடைய அறிவின் பலன் இந்த நாட்டுக்கு கிடைக்கக்கூடிய அளவுக்கு அந்த அவசியத்தை உணர்ந்து அதுபற்றி மத்திய அரசுக்கும் எடுத்துச் சொல்லி அவர்களை எல்லாம் சேர்த்துக் கொண்டு வரக்கூடிய நிலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கல்விக்கான மொத்தச் செலவில் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது ஆரம்பக் கல்விக்குத்தான். கிட்டத்தட்ட 468 கோடி ரூபாய் திட்டத்தில் 230 கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காகச் செலவழிக்கப்படுகிறது. ஆனால் அந்த அளவுக்குப் பலன் உண்டா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். பலன் இல்லை என்று நான் சொல்கிறேன். எனவே தயவுசெய்து யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது. நாடு முழுவதும் நர்சரி பள்ளிகள் அதாவது கான்வென்ட் பள்ளிகள் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கின்றன. ஏன்? உயர்மட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் தங்களுடைய குழந்தைகளை அங்கே அனுப்பிவிட்டு இங்கே சட்டமன்றத்திலும் மற்ற இடங்களிலும் பேசுகின்றபோது நர்சரிப் பள்ளிகளை ஒழிக்கவேண்டும் என்று சொல்கின்ற காட்சியைத்தான் காண்கிறோம். நர்சரியில் நல்ல தரமான கல்வி சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அந்த நர்சரிப் பள்ளிகளை ஒழித்துக்



கட்டுவதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அங்கே போதிக்கப் படுகின்ற அளவுக்குத் தரமான கல்வியை அரசுப் பள்ளிகளில் பயிலுகின்ற அத்தனை மாணவர்களுக்கும் ஏற்படுத்துகின்ற காரியத்தை ஏன் செய்யக்கூடாது என்பதுதான் கேள்வி. நாம் ஆரம்பக் கல்விக்காக 230 கோடி ரூபாய் செலவிடுகின்ற நிலையில் புதிய முறையில், புதிய நோக்கத்தோடு கல்வியமைச்சர் அவர்கள் கணித்து அதற்கான ஆவன செய்வார்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன்.

(முற்பகல் 10-20)

கல்வி முறை மாற வேண்டுமென்று நாம் சொல்லும்போது நம்முடைய நாட்டில் அந்தக் காலத்தில் வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆள வேண்டுமென்ற கருத்தோடு அதற்குத் துணையாக, தாங்கள் சுமார் 5,000 மைல்களுக்கு அப்பாலிருந்து நிர்வாகம் செய்வதற்குத் தங்களுக்குத் துணையாக, தாங்கள் சொல்கின்றபடி கேட்கின்ற வகையில் ஒரு அமைப்பு வேண்டுமென்ற காரணத்தால் அந்த அளவுக்கு அவர்கள் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தினார்கள். மெக்காலே கல்வி திட்டம் என்று சொல்வார்கள்; அந்தப் போல அமைப்பு இன்னும் பல இடங்களிலே தொடர்ந்து வருவது விரும்பத்தக்கது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டில் மிகப் பெரிய முன்னேற்றம் காண அனைவருக்கும் ஆர்வம் இருக்கிறது. ஆனால், அந்த முன்னேற்றம் ஏற்படுவதற்குக் கல்வி எவ்வளவு அவசியம் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அண்மையிலே நமது பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் கூட கல்வி திட்டத்திலே ஒரு மாற்றம் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கல்விமுறையை மாற்றி, காலத்திற்கேற்ப அமைப்பதற்கு பெரிய கல்வி அறிஞர்களும் சரி, அரசியல் வாதிகளும் சரி, அரசுத் துறையிலே உள்ளவர்களும் சரி, இந்த நாட்டுக்கு. இந்தக் காலத்திற்கு கூடி ஒரு புதிய முறையை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சியில் ஏற்ப ஒரு அமைப்பை அரசும் அமைச்சரும் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

இப்பொழுது உள்ள கல்வி கற்றுக் கொடுப்பதெல்லாம் ஜாப்-ஓரியன்டட் என்று, வேலைக்குப் போக வேண்டுமென்ற ஒரு குறிக்கோளோடு தான் இருக்கிறார்களே தவிர, நாட்டில் வேறு வகையில் தொழில் புரிந்து இந்த நாடு முன்னேற்றம் அடைவதற்கு நாமும் உதவியாக இருக்கமுடியும் என்ற வகையிலே எண்ணமே இல்லாத அளவுக்கு படித்தவர்கள் அத்தனைபேரும் ஏதாவது அரசு உத்தியோகத்திற்கு போக வேண்டுமென்ற ஒரு நிலையிருக்கிறது. அதை மாற்றியமைக்க எல்லா முயற்சிகளும் செய்யவேண்டும்.

தமிழ் பல்கலைக் கழகத்தில் இப்பொழுது ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வரவேற்கிறோம். அதை வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால், வெறும் ஆராய்ச்சி

களை மட்டும் நடத்திக் கொண்டிருந்தால் போதாது. தமிழ் நாட்டில் தமிழின் மூலமாகவே கற்றுக் கொடுக்கப்பட வேண்டும், தமிழ் மூலமாகவே எல்லா பாடங்களும் அமைய வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில் தமிழிலும் டெக்ஸ்ட்புக்ஸ் வரவேண்டும். அதற்கு இப்பொழு தமிழ்ப் பல்கலைக் கழகம முயற்சி செய்து, அந்த முயற்சியில் தன்னுடைய முழு நேரத்தையும், கவனத்தையும் செலுத்தி, புதிய பாட திட்டங்கள் உருவாக்குவதில் அவர்கள் முன்னேற்றம் காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன.

ஏற்கனவே கல்லூரிகளில் பி.யூ.சி. என்ற வகுப்பு இருந்தது. ஆனால் அது எடுக்கப்பட்டு இப்பொழுதுபிளஸ் டு என்று மேல் நிலைப் பள்ளிகளிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதனால் கல்லூரிகளிலே மாணவர் ஸ்டிரெந்தும் குறைந்திருக்கிறது. ஆனால் அங்குள்ள ஆசிரியர்கள் எண்ணிக்கை குறையவில்லை. மேல்நிலைப் பள்ளிகளில் அந்த வகுப்புகள் நடத்தப்படுவதற்குத் தேவைப்படுகிற அளவுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது என்றுசொல்லப்படுகிறது: அது உண்மையானால் அதைத் தவிர்த்து கூடுதலான ஆசிரியர்களை நியமிக்கும்படியான நிலைமையை உருவாக்க வேண்டும். மேலும் கல்லூரிகளிலே பி.யூ.சி. வகுப்பு இருந்த காலத்தில் தேவையான கட்டிடங்கள் சையன்ஸ் லேபரட்டரீஸ் இருந்தன. பல கல்லூரிகளிலே இவை இப்பொழுது உபயோகிக்கப்படாமல் மூடியே கிடக்கின்றன என்ற செய்தி கிடைத்திருக்கிறது. அதே நேரத்தில், மேல்நிலைப் பள்ளிகளில் போதுமான சையன்ஸ் லேபரட்டரீஸ் இல்லை, போதுமான அளவுக்குக் கருவிகள் இல்லையென்று சொல்லப்படுகிறது. அப்படி யானால அங்கே உபயோகமற்ற இடங்களில் அதை மாற்றி, மேல் நிலைப் பள்ளிகளுக்கு தேவைப்பட்ட இடங்களுக்கு, மாற்றிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மாணவர்கள் மத்தியிலே கட்டுப்பாடு ஏற்பட வேண்டும், ஒழுக்கம் ஏற்பட வேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறோம். ஒரு அதை ஓரளவுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற என்.சி.சி., என்.எஸ்.எஸ். போன்ற இனங்களை எல்லாம் மீண்டும் பல இடங்களிலே புகுத்த வேண்டும். அவசியமாக, கட்டாயமாக ஒரு ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு இராணுவக் கட்டுப்பாடு முறையில் சொல்லிக் கொடுக்கின்ற வகையிலே அத்தனை மாணவர்களுக்கும் என்.சி.சி.,என்.எஸ்.எஸ்., டிரெயினிங் போன்ற வற்றிலே ஈடுபடச் செய்வது அவசியம் என்று கருதுகிறேன்.

தமிழ் வளர்ச்சிப் பண்பாடு என்ற ஒரு தனித் துறை இருப்பதை நாம் வரவேற்கின்றோம். பண்பாட்டின் முக்கியத்துவம் அறிந்த பிரதமர் மைய அரசில் அந்தத் துறையை தன் பொறுப்பில் வைத்திருப்பதும் பாராட்டுக்குரியது. அதைப்போல் தமிழர் களுடைய நாகரீகம் கலாச்சாரத்தைப் பற்றி பிற நாட்டார் அறிந் திருக்கிற அளவிலே, தமிழ்நாட்டிலே இருக்கிற மக்கள் முழுமையாக



அறிந்துகொள்ளவில்லை என்பது ஆச்சரியப்படத் தக்க விதத்திலே தான் இருக்கிறது. காரணம்,நம்முடைய பெருமையை நம்முடைய கலாச்சாரத்தினுடைய அருமையை இன்னும் விளக்கமாக எடுத்துச் சொல்லாத காரணத்தால்தான் இன்னும் பலருக்கு நம்முடைய இலக்கியத்திலே உள்ள உயர்வும், கோயில்களிலே உள்ள சிற்பங்களின் உயர்வும், கட்டிடக் கலையினுடைய உயர்வும், சித்திரம் போன்ற அங்குள்ள கலைகள், நாட்டியம், இசை போன்ற வற்றில் எல்லாம் நுணுக்கமாகப் புரிந்துகொள்கிற அளவுக்கு ரசிக்கக்கூடிய அளவுக்கு ஒரு இரசனையை ஏற்படுத்தவில்லை. ஆகவே நம்முடைய கலாச்சார பெருமைகளை, பண்பாடுகளை மக்களுக்கு உணர்த்துவதற்கு, மக்கள் புரிந்துகொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பொதுவாக கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது எந்த அளவிற்கு உண்மையென்று நான் நிச்சயமாக கூறமுடியா விட்டாலும், தற்போது அகில இந்திய அடிப்படையில் நடை பெறுகிற காம்படிட்டிவ் எக்சாமினேஷன்ஸ், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்,, ஐ.எப்.எஸ்., போன்ற பரிட்சைகளின் ரிசல்ட்டில் தேர்வு பெற்றவர்களின் பெயர்களைப் பார்ப்போமேயானால், அதிலே வருகிற தமிழ்ப் பெயர்கள் குறித்து விசாரித்து பார்த்தால், அவர்கள் எல்லோரும் டெல்லிப் பல்கலைக் கழகத்திலிருந்தும், பம்பாய் பல்கலைக் கழகத்திலிருந்தும், நாகபுரி பல்கலைக் கழகத்திலிருந்தும் படித்தவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். தமிழ்நாடு பல்கலைக் கழகத்திலிருந்து படித்து வந்தவர்கள் எண்ணிக்கை குறைவு என்பது உணரப்படுகிற காரணத்தால் அதைப் போக்க வேண்டும். அந்தக் காலத்தில் வெளிவருகிற ரிசல்ட்டைப் பார்த்தல் ஒருவரே மூன்று பரிட்சைகளிலும் முதலாவதாக தேறிய பல செய்திகளை நாம் அறிந்திருக்கிறோம். அந்த அளவிற்கு மிக உயர்ந்த நிலையில் இருந்த தமிழ் நாட்டின் கல்வியின் தரம் இன்றைக்கு குறைந்திருப்பது உண்மையாக இருக்குமானால் அந்த நிலையை மாற்றுவதற்கு இந்த அரசாங்கமும், அமைச்சர் அவர்களும் நிச்சயமாக பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு ஆசிரியர்களுக்கு பல குறைபாடுகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்த நியாயமான குறை பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அரசு முன்வரவேண்டும். மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தமிழ் நாட்டில் மொத்தம் 10 ஆயிரத்திற்கு மேல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களில் தனியார் பள்ளிகளில் இருப்பவர்கள் சுமார் 4 ஆயிரம் பேர்கள் என்றும், அரசு பள்ளிகளில் இருப்பவர்கள் சுமார் 6 ஆயிரம் பேர்கள் என்றும் சொல்லப்படுகிறது. இவர்களின் பணி ரெகுலரைஸ் அதாவது வரன்முறை செய்யப் படாத காரணத்தால் சலுகைகளை பெறமுடியாமல் இருக்கிறார்கள், இவர்களுக்கு 28-4-1981-ல் சர்வீஸ் ரூல்ஸ்

யென்று தான் கருத வேண்டியிருக்கிறது. ஆகவே இது மிகப்பெரிய தீமை. சமுதாயத்தினரை ஒரு மிகப்பெரிய கொடுமையான பழக்கத்திற்கு ஆட்படுத்துகிறோம். அதிலே யிருந்து அவர்களை விடுவிக்கவேண்டுமென்று ஒரு முனைப்போடு காரியங்களில் இறங்கிச் செய்ய வேண்டும். அப்படி ஏதாவது அகஸ்மாத்தாக நடந்துவிட்டால், அந்த சூப்பர்வைசர்களுக்கு ஆபத்து ஏற்படுமானால், அவர்களுக்கும் நாம் பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.

(முற்பகல் 10-30)

இன்னும் சொல்லப்போனால் 'ரிஸ்க் இன்ஷூரன்ஸ்' பண்ணிக் கொடுத்தால்கூட அவர்களுக்கு நலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

அடுத்து இந்தத் துறையிலே பல்வேறு முக்கியமான இயக்கங்கள் இருக்கின்றன. முக்கியமாக ஆவண காப்பகம் ஒன்று சென்னையில் இருக்கிறது. இந்தியாவிலேயே அது தனி அந்தஸ்து பெற்றது. 1909 ஆம் ஆண்டு அந்த ஆவண காப்பகம தொடங்கப்பட்டது. 300 வருஷங்களுக்கு மேற்பட்ட தஸ்தாவேஜ்கள் அங்கே வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அங்கே இருக்கிற தஸ்தாவேஜிகள் லண்டனிலுள்ள இந்திய ஹைகமிஷனர் ஆபீசில் எந்த அளவுக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்கு சற்றும் குறையாமல் இருக்கின்றன. அவை முக்கியமான தஸ்தாவேஜ்கள். பாதுகாக்கப்பட வேண்டியவை. அப்படிப்பட்ட ஒரு ஆவண காப்பகம் தற்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 1968 வரையில் 'டைரக்டர் ஆஃப் ஆர்க்கைவ்ஸ்' அல்லது 'கியூரேட்டர் ஆஃப் ரிக்கார்ட்ஸ்' என்ற பதவி இருந்தது. இப்போது அது ஐ.ஏ.எஸ். அதிகாரி, அதாவது கமிஷனர் என்ற பதவி மூலம் நிர்வகிக்கப்பட்டுவருகிறது. இந்த ஆவண காப்பகம் எந்த அளவுக்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதுபற்றி சமீபத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 8-ந்தேதி இந்துப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறது. தலைவரவர்களே, உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே ஸ்பெஷல் ரிப்போர்ட் என்று ஒரு முழுபக்கம் அளவுக்கு விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். Under the headings "Rich repository in disrepair", "Problems of preservation". "Gaining entry very difficult" "Schemes that failed to take off". என்று மிக விரிவான அடிப்படையில் அதனுடைய முக்கியத்துவம் பற்றி பல கட்டுரை வந்திருக்கின்றன. இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. 'லாமினேஷன் அன்ட் ஃப்யூமிகேஷன்' என்ற கருவி அமெரிக்காவிலிருந்து சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவில் வரவழைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன காரணத்தாலோ அது இன்னும் பயன்படுத்தப்படவில்லை. அதற்கான காரணம் விளங்கவில்லை. அதனுடைய உபயோகத்திற்காக வெளிநாட்டிலிருந்து 'டிஷ்யூ பேப்பர்ஸ்' வரவழைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திலிருந்து எந்த அளவுக்கு நல்ல நோக்கத்தோடு காரியம் செய்யப்படுகிறதோ அந்தக் காரியம் உண்மையிலேயே நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்பது

வேதனைக்குரியது. டிஷ்யூ பேப்பர்ஸ் கப்பலில் வந்து இறங்கி 4 மாதங்களுக்கு மேலாகிறது. இன்னும் தேடுவாரற்று 'கஸ்டம்ஸ் ஹவுசில்' கிடக்கிறது, என்றால் அதற்கு யார் பொறுப்பு? அந்தக் கமிஷனர் சரியாக செயல்படவில்லையா அல்லது கல்வி இலாகா காரியங்கள் செய்யவில்லையா என்று தெரியவில்லை. அதை கிளியர் பண்ணாமல் இருந்தாலும் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் 'டேமரேஜ்' கூடிக் கொண்டே இருக்கும். அதனால் ஏற்படும் நஷ்டம் எந்த அளவுக்கு வரும் என்பதைச் சிந்திக்க வேண்டும். கஸ்டம்ஸ் ஹவுசிலிருந்து அதை இன்னும் கிளியர் பண்ணாமல் இருப்பதற்கு என்ன காரணம்? நிர்வாகத்தில் கோளாறா அல்லது வேறு காரணமா? தேவை என்று கருதி வெளிநாட்டி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள் எடுத்துக்கொள்ளப் படவில்லை என்றால் அது அதிகாரிகளுடைய மெத்தனப் போக்கா அல்லது ஏதேனும் சட்டச் சிக்கலா என்று தெரியவில்லை; அதை விசாரிக்கவேண்டும்.

ஸ்பெஷல் பைண்டிங் மூலம் அந்த ஆவண காப்பகத்தில் இருக்கிற புத்தகங்கள் எல்லாம் பாதுகாக்கப்படாத காரணத்தால் அவை மேலும் கிழிந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் அங்கே இருந்தாலும், அங்கே நிர்வாகத்தில் இருக்கிற சில குறைபாடுகளையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 2-11-84-ல் இரண்டு அசிஸ்டன்ட் லைப்ரரியன்களும், 12 லைப்ரரி அசிஸ்டன்டுகளும் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஹைகோர்ட்டுக்குச் சென்று, ரிட் போட்டு, முறையீடு செய்து, அந்த உத்தரவுக்கு தற்காலிகமாக தடை பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் கோர்ட்டுக்குப் போனது பற்றி எதையும் குறிப்பிடாமல் மீண்டும் அவர்கள் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வேலை செய்கின்றவர்களுக்கு 'ஜாப் செக்யூரிட்டி' இருக்க வேண்டும். பணிப் பாதுகாப்பு இருந்தால்தான் அவர்கள் ஆர்வமாகவும், தீவிரமாகவும் தங்களுடைய பணியைச் செய்வார்கள், பணியில் ஈடுபட முடியும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் அங்கே லைப்ரரி சைன்ஸ் படித்த பட்டதாரிகள் இருக்கிறார்கள். ஆனால் ஏற்கெனவே இந்த இலாகாவில் எஸ். எஸ். எல். சி. படித்து, பதவியில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து வருவதினால் அந்த பட்டதாரிகள் புறக்கணிக்கப்படுகிறார்கள். அப்படியானால் லைப்ரரி சைன்ஸ் பட்டம் பெற்றவர்கள் நிலைமை என்ன? அவர்களுக்கு இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டால் வேறு வேலைக்கு செல்ல வாய்ப் பில்லாத நிலைமையில் இருக்கிறவர்களுடைய கதி என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சமீபத்தில் நம்முடைய அரசாங்கம் நியமித்த ஒரு இன்ஸ்பெக்ஷன் கமிட்டி 1984-ல் பல்வேறு குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. கடைசியாக ஒன்றைக் குறிப்பிட்டிருக்



கிறார்கள். "Failing to do this will ultimately deprive one and all of the chance of preserving the oldest and the important books and forming a good national archival library in future". என்று குறிப்பிட்டிருப்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். ஆகவே அந்த அளவிற்கு மிக அதிக அளவிலே சீர்கேடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் அதைச் சீர்திருத்த, முழு முயற்சியிலே ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நம்முடைய கல்வித் துறை செலவழிக்கின்ற பல்வேறு விதமான விளையாட்டுக்களில் நம்முடைய கால்பந்து விளை யாட்டு, அகில இந்திய அளவிலே ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கிறது. அந்தக் கால்பந்து விளையாட்டு—நம்முடைய மாநிலத்தில் அடுத்த ஆண்டு நேரு தங்கக் கோப்பை என்ற ஆட்டம் நடத்தப்படவேண்டும் என்று ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரையில் இந்த ஆட்டம் இந்தியாவிலே, ஒன்று கேரளாவிலும், அல்லது மேற்கு வங்காளத்திலும்தான் நடந்துகொண்டு வருகிறது. காரணம் என்ன என்று கேட்டால், அந்த அரசாங்கங்கள் அதற்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே தரமான விளையாட்டைப் பார்ப்பதன் மூலமாக தான் நாம் தரமான விளையாட்டு வீரர்களை உண்டாக்க முடியும். இங்கே உள்ள விளையாட்டு வீரர்கள் அதிகமான பணம் செலவழித்துச் சென்று பார்க்க முடியாத நிலையில் இருப்பதால், இங்கே அந்த விளையாட்டை விளையாடுவதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொடுத்தால், நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதற்கு முக்கியமாகத் தேவைப் படுவது 60 ஆயிரம் பேர்கள் உட்கார்ந்து பார்க்கின்ற அளவிற்கு மிக நவீன வசதிகளைக் கொண்ட ஒரு ஸ்டேடியத்தை உருவாக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட இந்தத் துறையிலே தங்களுடைய கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். இந்த புட்பால் அசோசியேஷனுக்கு உதவி செய்வதாக வாக்களித்து இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எனவே இதற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தனியார் நடத்துகின்ற இந்தக் கல்லூரிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், உள்ள நிர்வாகத்தினர் தங்களுடைய இஷ்டத்திற்கு காரியங்கள் செய்து கொண்டு போகிறார்கள் என்ற நிலை பரவலாக தமிழகத்தில் இருக்கிறது. என்னுடைய சிவகங்கையில் ஒரு தனியார் கல்லூரி யினுடைய நிர்வாகத்தைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர் களிடம் சில வருஷங்களுக்கு முன்னாலே நான் கொண்டு வந்தேன். அதற்குப்பிறகு, தமிழகத்திலே முதல் முறையாக தனியார் கல்லூரியை எடுத்து, அரசாங்கத்தின் மூலமாக நடத்தப்பட்டு வருவதுதான் இந்த சிவகங்கை துளசிங்கம் மன்னர் நினைவுக்

கல்லூரி என்பதாகும். அதற்கு அமைச்சர் அவர்கள் உதவியாக இருந்தார்கள், என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அந்தக் கல்லூரியை எடுத்த காரணத்தால் இப்போது நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டு வருவது நல்ல செய்தியாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற பல இடங்களில் நிர்வாகங்கள் சரியாக நடக்கவில்லை. எனவே அரசாங்கம் இதிலே தலையிட்டு, அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கேகூட அம்பத்தூரில் மேனாம்பட்டு என்ற பகுதியில் உள்ள இந்து சேவா சங்கம் உயர்நிலைப்பள்ளி இதுவரை நடந்து வந்திருக்கிறது. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, இந்த ஆண்டு, அந்த நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள், நாங்கள் பள்ளிக்கூடத்தை மூடிவிடப்போகிறோம், ஆகவே வேறு இடத்தில் உங்களுடைய பிள்ளைகளைச் சேர்க்க இடம் பார்த்துக்கொள்ளுங் கள் என்று நோட்டீஸ் கொடுத்துவிட்டார்கள், என்ற செய்தி வருகிறது. அப்படி மூடிவிட்டால், அந்தக் குழந்தைகளின் கதி என்னவாவது? இதை அரசாங்கம் பொறுப்பிலே எடுத்துக் கொண்டு நடத்துமா? அல்லது மாநகராட்சி ஏற்று நடத்த முன்வருமா என்பது எல்லாம் தெரியவில்லை. எனவே அந்தப் பகுதியில் உள்ள மக்கள் என்ன செய்வது என்று மிகவும் பயப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பயத்தைப் போக்குவதற்கு, உடனடியாக அரசாங்கம் தலையிட்டு, மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும், தொடர்ந்து அந்தப் பள்ளி நடப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு, மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க, அரசும், துறையும் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். கல்லூரி மாணவர்கள் விடுதியில் நடக்கின்ற விஷயங்கள், வெளியில் சொல்லக் கூசுகின்ற அளவிற்கு பல விஷயங்கள் நடைபெறுகின்றன. வேறு வகையில் இல்லை, சிவகங்கையில் உள்ள கல்லூரி விடுதியிலே சண்டை வருகிறது. அதுவும் சாதிச் சண்டை வருகிறது. ஏனென்றால் விடுதியிலே உணவு தரம் சரியாக இல்லை, சரியாக போடுவது இல்லை என்று சொன்னால் அதை நாம் ஏற்றுக் கொள்ளலாம். அது நியாயமான கோரிக்கையாகும். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, தொடர்ந்து பின்தங்கிய மாணவர்களுக்கும் ஷெட்யூல்ட் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் அங்கே நீண்டகாலமாக ஒரு போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது. மாணவர்கள் 3 ஆண்டுக்காலம் படித்துவிட்டு வெளியே போய்விடுவார்கள் என்று நினைக்கிறோம் நாம். ஆனால் புதியதாக வருகின்ற அந்த மாணவர்களுக்கு தொடர்ந்து இந்த சண்டையில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் இதை எழுதிவிட்டுப் போய்விடுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அது தொடர்ந்து நடைபெறுகிறது. ஆகவே இந்த அரசு தலை யிட்டு, இதற்கு மூலகாரணம் என்ன என்றும். இதற்கு யார் பொறுப்பு என்றும் தீர விசாரித்து அதற்குரியவர்கள் கடுமை யான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு அந்த மாணவர்களை எச்சரிக்கை செய்வதன் மூலமாக இந்த நாட்டில் நல்ல அமைதி



யான சூழ்நிலையை உருவாக்க முடியும். அப்போதுதான் அவர்கள் நல்ல பண்புள்ள குடிமக்களாக வரவும், தரமான பயிற்சியைப் பெறவும் முடியும். அரசாங்கம் இதற்காக கோடி கோடியாக பணத்தைச் செலவு செய்கிறது. அவர்கள் வெளியே வரும்போது, இனவெறியோ, மதவெறியோ இல்லாத அளவிற்கு அவர்களுக்கு இல்லாத அளவில்—அரசாங்கம் இதிலே அக்கறை செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40.)

டெக்னிக்கல் எஜுகேஷன் என்பது எவ்வளவு அவசியம் என்பதை நாங்கள் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பது அவசியம் இல்லை. இப்போது தமிழகத்திலே இது ஒரு சர்ச்சைக் குரிய விஷயமாக இருக்கிறது. சுய நிதி உதவியுடன் செயல்படும் பாலிடெக்னிக்குகளும், என்ஜினீயரிங் கல்லூரிகளும் தற்போது மிக அளவில் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று விவாதம் எழுந்திருக்கிறது, நான் அதன் உள்ளே போக விரும்பவில்லை. அப்படிச் செய்தது சரியா, தவறா, அவைகள் அதிகமா? குறைவா என்ற விவாதத்திற்குள்ளும் நான் போக விரும்ப வில்லை. ஆனால் இப்படி சுயநிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படும் கல்லூரிகளினாலும், பாலிடெக்னிக்குகளாலும் எங்கள் பகுதியில் பயன் அடைந்திருக்கிறோம், என்று சொல்வதில் எனக்கு தயக்கம் இல்லை.

ஏற்கெனவே எங்கள் பகுதியில் இரண்டு பாலிடெக்னிக்குகள் தான் இருந்தன, காரைக்குடியில் ஒன்று, செட்டிநாட்டில் இருக்கிற அண்ணாமலை பாலிடெக்னிக் இரண்டு. இந்த இரண்டு பாலி டெக்னிக்குகளை உருவாக்கி பல ஆண்டுகள் ஆகியும் கூட, எங்கள் கிராமத்தில் சாதாரண ஏழை மக்களின் பையன்களுக்கு, நல்ல முறையில் படித்து வருகிறவர்களுக்கு, அது நல்ல முறையில் பயன்படவில்லை. ஏன் என்று காரணம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. பல்வேறு காரணங்களால் அந்தப் பின்தங்கிய பகுதியில் உள்ள பையன்களுக்கு, அல்லது பெண் குழந்தைகளுக்கு அந்தப் பாலிடெக்னிக்குகளில் படிக்க ஆசைப்பட்டால் கூட அவர் களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இப்போது பல பாலிடெக் னிக்குகள் சுய நிதி உதவியுடன் அதிகமாக ஏற்பட்டதன் காரணமாக, அவர்கள் பணம் அதிகமாக வாங்குகிறார்கள் என்று சொன்னாலும்—அது கூட இப்போது ரேட்ஸ் குறைந்துவிட்டது. போட்டி அதிகமாகிவிட்ட காரணத்தால் தானாகவே ரேட்டும் குறைந்துவிட்டது, அதிலும் சிலர் எங்களைப் போன்ற அரசியல் வாதிகள் மற்றவர்கள் எடுத்துச் சொல்கிற நிலையைக் கேட்டு,— தகுதியான ஏழை மாணவர்களுக்கு, அவர்கள் தாங்களாகவே முன்வந்து எந்தவித பணமும் வாங்காமல் இடங்களைக் கொடுத் திருக்கிறார்கள் என்ற நிலைமையும் இருப்பதை சொல்வதிலே நான் தயக்கம் காட்ட விரும்பவில்லை, அங்கே தவறுகள் நடந்தால் அதைத் தடுப்பதற்கு அரசாங்கத்திற்கு இடமும் இருக் கிறது, வசதியும் இருக்கிறது. நேற்றுக்கூட விவாதத்தின்போது

பேசப்பட்டது; ஏற்கெனவே இருக்கிற அரசு தரப்பு கல்லூரி
களிலோ அல்லது தனியார் கல்லூரிகளிலோ நீங்கள் சொல்கிற
குறைபாடுகளே நடைபெறவில்லையா என்று கேட்டார்கள்.
வீட்டிலே கொசுவோ, மூட்டையோ அதிகமாக இருந்தால் அதைப்
பார்த்து ஒழிக்க முயற்சிக்க வேண்டுமே தவிர, வீட்டையே
அதற்காக எரிப்பதோ, அல்லது இடிப்பதோ விவேகம் ஆகாது
என்றுதான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிச் சொல்வதால் தவறு நடந்தால் அதிலே அரசாங்கம்
உடந்தையாக இருக்கவேண்டும் என்பது பொருள் அல்ல. நானும்
அதற்கு உடந்தையாக இருக்க விரும்புபவன் அல்ல. இதன்மூலம்
நன்மையும் விளைந்திருக்கிறது. ஆகவே, அதையும் கருத்தில்
கொண்டுதான், இந்த நிறுவனங்களை தொடர்ந்து செய்ய விட
வேண்டுமா அல்லது நிறுத்திவிட வேண்டுமா என்பதை சிந்தித்துப்
பார்க்க வேண்டும். அரசியல் காரணத்திற்காகவோ அல்லது
வேறு ஏதாவது காரணத்திற்காகவோ, அதிலிருந்து அரசாங்கம்
தன்னுடைய பொறுப்பை கழட்டிவிட முடியாது என்ற வகையிலே
தான் இதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இப்போது ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கைகளைச்
சொல்லி பல போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். சென்னை
யிலேகூட முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுடைய
கருத்துக்களை எடுத்து வைத்து போராடியிருக்கிறார்கள்.
நம்முடைய நாட்டிலே எப்பொழுது அசெம்பிளி நடக்கிறதோ
அப்பொழுதுதான் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து
வலியுறுத்தி ஏதாவது பரிகாரம் காணலாம் என்று அவ்வாறு
செய்கிறார்கள். ஆகவே வழக்கமாக நடைபெறும் ஒன்றுதான்
இது என்று மட்டும் கருதி அதை அப்படியே விட்டு விடக்கூடாது
என்று கேட்டுக் கொள்கிறேன். எந்தக் கூட்டணியிலே, அல்லது
எந்தச் சங்கத்திலே உள்ள ஆசிரியர்கள் தவறான காரியத்தில்
ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் மீது நீங்கள் சட்ட பூர்வமாக
உங்கள் இலாகாவின் மூலமாக நடவடிக்கை எடுப்பதிலே நாங்கள்
குறுக்கிடவில்லை. எல்லா ஆசிரியர்களும் சரியாக நடந்துக்
கொள்கிறார்கள் என்றோ அல்லது எல்லா ஆசிரியர்களும் மோச
மாக நடந்துக் கொள்கிறார்கள் என்ற முடிவுக்கோ நாம்
வருவதற்கு முடியாது. ஆனால் மிகப் பெரும்பான்மையான
ஆசிரியர்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான
உரிமைகள் மறுக்கப்படுகிறது என்று சொல்லும்போது, அவர்கள்
கோரிக்கைகள், மனுக்கள் என்று வைத்து கடைசியில் தான்
அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு போராட்டம்
போன்ற சில வழிகளில் ஈடுபடுகிறார்கள்.

ஆகவே அவர்கள் இன்றைக்கு அரசை எதிர்க்கிறார்கள்,
அமைச்சரை எதிர்க்கிறார்கள், அதிகாரிகளை எதிர்க்கிறார்கள்,
அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்று
அவர்களை பழிவாங்குகிற நடவடிக்கைகளில் தயவு செய்து
அரசாங்கமோ, அரசாங்க அதிகாரிகளோ ஈடுபடக் கூடாது



என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அந்தத் தொழில்
புனிதமான தொழில். The noblest profession in the whole world is
teaching—என்று சொல்வார்கள். அவர்கள் நல்ல மனச் சூழ்நிலை
யில் இருந்தால்தான் அவர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கிற
குழந்தைகள் நல்ல முறையில் படிக்கவும், பிற்காலத்தில் நல்ல
பண்புடன் விளங்கும் தலைமுறையினராகவும் அமைய முடியும்
என்ற கருத்தில் அவர்களுடைய அடிப்படைத் தேவை என்ற
வகையில், அத்தியாவசியமான சலுகைகளைக் கேட்டால், அதைக்
கொடுப்பதில் அரசு தயக்கம் காட்டக்கூடாது என்பதைக் கேட்டுக்
கொண்டு, அவர்களை பழி வாங்கக் கூடிய முறையில் ஏதாவது
நடவடிக்கை எடுத்திருந்தால் அவைகளையும் நீங்கள் வாபஸ் பெற
வேண்டும் அல்லது நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து பாடநூல் பைண்டிங் பொறுத்தவரையில் ஒரு
அசோசியேஷன் இருக்கிறது. சிறு சிறு பைண்டிங் தொழிலாளர்கள்
இவைகளைச் செய்கிறார்கள், அவர்கள் வைத்திருக்கிறார்கள்.
அவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த அந்த வேலை
கள், தற்போது மாற்றப்பட்டு, பெரிய அளவில் வேலை செய்யும்
சில தனியார்களிடம் ஒப்படைக்கப்படுவதாக அறிகிறேன். சிறு
தொழில் செய்கிற அந்த பைண்டிங் தொழிலாளர் இயக்கத்திற்கு
எந்த வகையில் செய்ய முடியுமோ, அந்த வகையில் எல்லாம்
உதவி செய்யும் வகையில், அவர்களுக்கு அரசாங்கம் துணை நிற்க
வேண்டும். 20 அம்சத் திட்டத்திலே இப்படி நலிந்த பிரிவினருக்கு
உதவி செய்கிற திட்டத்தின் அடிப்படையிலும் அவர்களுக்கு
சலுகைகளை வழங்க முயற்சி செய்யலாம். அந்தச் சலுகைகளை
பயன்படுத்தி அந்த சிறு தொழில் செய்பவர்களுக்கு உதவி செய்ய
அரசாங்கம் உதவியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

சத்துணவைப் பொறுத்த வரையில் அது ஒரு க்ஷேமநலத்
திட்டம். அதிலே உள்ள நன்மை தீமைகளை நண்பர்கள் பல
பேர்கள் சொல்லிவிட்டார்கள். அதனால் நான் ஒன்றும் சொல்ல
விரும்பவில்லை. அது நல்ல திட்டம் தான். அந்தச் சத்துணவுத்
திட்டத்தினுடைய அமைப்பாளர்களுக்கு உள்ள கஷ்டங்கள்
எவ்வளவு என்பதை உங்கள் கவனத்திற்கு எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன். அங்கு பல பெண்கள் தொலைவில் உள்ள சிறுசிறு
ஊர்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். அங்கு போக்குவரத்து
வசதி இல்லை அல்லது தங்கியிருந்து காரியம் செய்வதற்கு வசதி
இல்லாத நிலையில் கிராமப்புறத்தில் வேலை பார்க்கிறார்கள்
என்று சொல்கின்ற நேரத்தில், தங்களுடைய பணியை நிறை
வேற்றுகின்ற நேரத்தில், எவ்வளவு பெரிய அபாயத்திற்கு உட்படு
கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். 10 தினங்
களுக்கு முன்னால் பொன்முத்துராமலிங்கர் மாவட்டம்
திருப்பத்தூர் நகரத்திற்கு அருகில் சில்வார்பட்டி ஊராட்சிப்
பள்ளியில் வேலை பார்த்த திருமதி ஆர். சரோஜா என்ற
பெண்ணிற்கு நோய்வாய்ப்பட்ட கணவனும், 8 வயது குழந்தையும்

இருக்கிறார்கள். அவர்களை தவிக்க செய்துவிட்டு, அந்தப் பெண் கொலை செய்யட்பட்ட செய்தி பலருக்கும் தெரிந்திருக்கலாம். அவள் கொலை செய்யப்பட்ட செய்தி அவள் வீட்டினருக்கும் தெரியாது, 5 நாட்களுக்குப் பிறகு ஒரு மதகு பாலத்தில் ஒரு அழுகிய பிணம் கிடக்கின்றது. நாற்றம் எடுக்கின்றது என்று மாடு மேய்க்கும் சிறுவன் சொல்லி போலீசார் சென்று பார்த்த பிறகு தான் அந்தப் பிரேதம் கிடைத்திருக்கிறது. அந்தப் பெண்ணுடைய சுமார் 3 பௌன் நகையும் வேறு பல பொருட்களும் திருட்டு போய் இருக்கிறது. இதுவரை புலன் தெரியவில்லை.

நேற்றுத்தான் எனக்குத் தகவல் கிடைத்தது. கோடைக்கானலில் சந்தேகப்பட்ட பேர்வழியை கைது செய்து வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். இந்த நிகழ்ச்சிக்கு உட்பட்ட அந்தக் குடும்பம் சாதாரண கைத்தறி நெசவாளர் குடும்பத்திலே பிறந்த பெண், கணவன் நோய்வாய்பட்டிருப்பதால் இந்த வேலையில் கிடைக்கக்கூடிய சிறு ஊதியத்தின் மூலமாக நோய் வாய்ப்பட்ட கணவனை பராமரித்து, 8 வயது குழந்தையும் பராமரிக்கின்ற வகையில் இந்தப் பொறுப்பை ஏற்று அந்தப் பெண் பணியாற்றச் சென்றபோது கொலைசெய்யப்பட்டிருக்கிறார். அந்தக் குடும்பம் கஷ்டப்படுகிறது. கல்வி அமைச்சர் மூலமாக நான் நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அந்தக் குடும்பத்திற்கு நீங்கள் அவசியம் ஏதாவது உதவித்தொகை கொடுக்க வேண்டும் என்று. மேலும் இது சம்பந்தமாக இந்தத் தொழில் ஈடுபட்டுள்ள அமைப்பாளர்களும், அந்தப் பகுதியில் உள்ளவர்களும் சுமார் 600 பேர்கள் கூடி அனுதாபம் தெரிவிக்கின்ற வகையில் ஒரு மௌன ஊர்வலம் நடத்த இருக்கிறோம் என்று திருப்பத்தூர் காவல் நிலையத்திற்கு சென்று அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசியல் கட்சியையோ அல்லது அரசாங்கத்தையோ ஸ்தம்பிக்க வைக்கக்கூடிய வகையில் காரியங்களை ஏற்பாடு செய்திருந்தால் அதில் அனுமதி மறுத்தால் கூட நியாயம் இருக்கிறது. ஆனால், தங்களுடைய தொழிலில் ஈடுபட்டுள்ள ஒரு பெண் அநியாயமாக கொலை செய்யப்பட்டதை கண்டித்து அனுதாபம் தெரிவிக்க மௌன ஊர்வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே அவர்கள் கலெக்டரிடமும், எஸ்.பி.யிடமும் சென்று அனுமதி பெற்று ஊர்வலத்தை நடத்தியிருக்கிறார்கள். எனவே காவல் துறை இதில் ஒரு மனிதாபிமானத்தோடு நடந்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடற் பயிற்சி ஆசிரியர்களிடம் சில வேறுபாடுகள் இருப்பதாக அறிகின்றேன். கல்லூரி உடற் பயிற்சி ஆசிரியர்கள், எம். பி. எட். படித்தவர்கள் மற்றும் அதே தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு சமமான ஊதியம் வழங்கப்படுகிறது. இதே படிப்பை மேற்கொண்டு, இந்தப் பட்டம் பெற்றவர்கள், மேல்நிலை, உயர்நிலைப்பள்ளிகளில் சேவை செய்ய வருகின்ற போது அவர்களுக்கு, மற்ற ஆசிரியர்களுக்கு உள்ள ஊதிய



விகிதம் தான் அளிக்கப்படுகிறது. அதாவது அவர்களுக்கு ரூ. 675 என்றால், இவர்களுக்கு ரூ. 600 என்று அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வித்தியாசம் ஏன்? ஏன் இவர்களுக்கும் கூட்டிக்கொடுக்கவில்லை? இதனை பரிசீலனை செய்ய வேண்டும்.

பல மிடில் ஸ்கூல்களில், மைனாரிட்டி வகுப்பினர் தங்கள் மொழிக்கு ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் அப்துல் சமத் அவர்களும் இதைப்பற்றி சொன்னார்கள். அதைப்போல பல இடங்களில் உருது, தெலுங்கு, கன்னடம், மலையாளம் படிக்க வேண்டும் என்று சொல்கின்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அதனால் ஒரு பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. அந்த சின்னஞ்சிறு பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை மநிலம் முழுவதும் பார்த்தால் மிகக் குறைவாக இருக்கும். ஆகவே, அந்த மைனாரிட்டி வகுப்பினருக்கு, அவர்களுடைய குழந்தைகள் அவர்களுடைய தாய் மொழியில் படிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மறுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்ப் பண்டிதர்களை அப்-கிரேட் பண்ணுவதைப் போல், மைனாரிட்டி மொழிப்பண்டிதர்களை அப்-கிரேட் பண்ண வேண்டும். அடுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய பேராசிரியர் நேற்று இந்திப் பிரச்சனையைப் பற்றி விரிவாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள்.

(முற்பகல் 10-50)

நான் விவாதத்திற்குள் புக விரும்பவில்லை. இருந்தாலும் என்னுடைய கருத்தைச் சொல்லவேண்டியது என்னுடைய கடமை அரசியல் ரீதியிலே ஆதிக்கம் செலுத்துவதை நீங்கள் ஆட்சேபியுங்கள், எதிர்ப்புத் தெரிவியுங்கள். நாங்கள் அதிலே குறுக்கிடவில்லை, ஆனால் தன்னுடைய மகன் இந்தி படிக்க வேண்டுமென்று விரும்புகின்ற தகப்பனுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே படிக்க விரும்புகிறவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க நீங்கள் மறுக்கக் கூடாது. மொழி வெறி கூடாது மொழியைப் படிக்கின்ற ஆர்வத்தைத் தடுக்கக்கூடாது, அந்த வகையிலேதான் பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரையார் பற்றி உங்களுக்குத் தெரியும், அவரை எல்லோரும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். ஏனென்றால் அவர் அதிகமான மொழிகளைப் படித்த காரணத்தினால், சென்ற ஆண்டு நிதியமைச்சர் அவர்களும் பேரவை உறுப்பினர்களும் ரஷ்ய நாட்டிற்குச் சென்றபோது எங்கே 3 மொழிகள் கற்றுக் கொடுக்கப்படுவதாக நாம் அறிந்தோம். தேச மொழியாகிய ரஷ்ய மொழியையும் அவர்கள் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அந்த மாநில மொழியையும் இதைத் தவிர வேறு ஏதாவது ஒரு அந்நிய மொழியையும் அவர்கள் படிக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். சிற்சில இடங்களிலே 4, 5 மொழிகள் சொல்லிக்

கொடுக்கப்படுவதாக அறிகிறோம். அறிவை வளர்த்துக் கொள்வதற்காக' உலகத்தைப் புரிந்துகொள்வதற்காக, தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாட்டிலே உள்ளவர்கள் வாய்ப்புக்களைப் பெறவேண்டும், அந்த முறையிலே தமிழ் நாட்டிலே உள்ள இளைஞர்கள் வடநாட்டிற்குச் சென்றால் அங்கே சிறிதுகாலம் சிரமப்பட்டு இந்தியைக் கற்றுக்கொண்ட பிறகுதான் வாழ்க்கையை நடத்தவேண்டியிருக்கிறது. அது வரையிலே அவர்கள் கால் கைகளை ஆட்டி, கண் சமிக்ஞைகள் மூலமாகத்தான் காரியங்களைச் செய்யவேண்டுமே தவிர தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தமுடியவில்லை. ஆகவே விரும்புகிறவர்கள் அதைப் படிப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுப்பதாலே கட்சிக் கொள்கையை, உங்கள் அடிப்படை நோக்கத்தை அது மாற்றிவிடாது.

அடுத்து அரசு பாடப் புத்தகங்கள் ஏராளமாக வெளியிடப் படுகின்றன. 1, 2, 3 வகுப்புகளுக்கு இப்போதே புத்தகங்கள் கொடுப்பதாக நான் அறிகிறேன். ஆனால் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கான புத்தகங்கள் வகுப்புகளை ஆரம்பித்துப் பல மாதங்கள் ஆகிய பிறகுதான் கொடுக்கப்படுகிறது என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆகவே அதன் காரணத்தினால் பாடங்களை ஆசிரியர்கள் சரியாகச் சொல்லிக் கொடுக்கமுடிய த முழுவதுமாக சொல்லிக்கொடுக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆனால் வகுப்புகள் தொடங்கப்பட்டு 3 மாதங்கள் கழித்துத்தான் தரப்படுகிறது என்றால் குழந்தைகளிடம் எப்படி கல்வியின் தரம் இருக்க முடியும் என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும், பள்ளிகள் திறப்பதற்கு முன்பாகவே அவைகளைக் கொடுக்க வேண்டும்.

கல்லூரியிலே தமிழ்ப் படிக்கின்றவர்களுக்கு 300 ரூபாய் ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது, அதை நான் வரவேற்கிறேன். அதை ரொக்கமாகக் கொடுப்பதற்குப் பதிலாக ஏழை மாணவர் கள், வசதிக் குறைவான மாணவர்கள் ஏராளமாக இருக்கிறார் கள் என்பதால் அவர்களுக்கு வேண்டிய பாடப் புத்தகங்களைக் கொடுத்து அது குறைந்து இருந்தால் அதுபோக உள்ள தொகையை ரொக்கமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து ஓரியண்டல் ஸ்கூல்ஸ் என்ற முறையிலே நடை பெறுகின்றன. மற்ற மாநிலங்களிலே அவை அங்கீகரிக்கப்பட் டுள்ளன. ஆனால் நம்முடைய மாநிலத்திலே அங்கீகாரம் அவைகளுக்கு அளிக்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் திரு வேங்கடரமணன் அவர்களுடைய ஊரிலே தென்காசியிலே ஒரு பள்ளி ஏற்பட்டிருப்பதாக அறிகிறேன், பல்வேறு பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதற்கு எத்தனை பேர்கள் வந்தாலும் அவர்கள் நம்முடைய சட்டத்திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடத்துவார்களானால் ஏன் அனுமதி வழங்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.





நம்முடைய கல்வித் திட்டத்திலே மாக் பார்லிமெண்ட் என்பது நடந்து வந்தது. அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு ஒதுக்கப்படவில்லை. மாக் பார்லி மெண்ட் நடத்துவதன் மூலமாக அவர்கள் எல்லோரும் சட்ட மன்ற உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்து விடுவார்கள் என்பதல்ல. தேசத்திலே ஜனநாயக அமைப்பிலே பாராளுமன்றம், சட்டமன்றப் பேரவைகள், மேலவைகள் எப்படி செயல்படுகின்றன என்பதைப் புரிந்துக்கொள்வதற்கு அவர்களுக்கு வாயப்பு ஏற்படும். அதிலே படிக்கிறவர்கள் பலர் இந்த நிலையை அடைகிறபோது சிரமப்படாமல் இருப்பதற்கு பாராளுமன்றத்திலே எவை எவை எப்படி எப்படி நடக்கின்றன எப்படி எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று அறிந்துகொண்டு வரலாம். அல்லது எப்படி எப்படி நடந்து கொள்ளக்கூடாது என்பதை அறிந்துகொண்டாலும் அது உதவிகரமாக இருக்கும் என்பதைச் சொல்லி அதற்காக நிதி ஒதுக்க வேண்டுமென்றும் அதை அமல் செய்யவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள் கிறேன்.

நூல் நிலையங்களைப் பொறுத்தவரையில் அதற்கு சுமார் 4.16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் புத்தகங் கள் வாங்க 10 லட்ச ரூபாய்தான ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேறுபாடு குறையவேண்டும், எதனாலோ இந்த மாதிரியான தவறுகள் நடைபெறுகின்றன. எந்த நோக்கத்திற்காக மொத்த மாகப் பணம் ஒதுக்குகிறோமோ அந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் புத்தகங்கள் அதிகமாக வாங்க வேண்டும். அப்படிப் புத்தகங்கள் அதிகமாக வாங்காமல் அங்கு இருக்கின்ற அதிகாரிகளுக்குச் சம்பளமாகவும், கட்டிடங்களுக்காகவும், நிர்வாகச் செலவுகளுக்காகவும் ஒதுக்கப்படுகிறது. 4 கோடியே 16 லட்சம் ரூபாயில் ரூபாய் 10 லட்சம் மட்டும் தான் புத்தகங்கள் வாங்க ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மீதி 4 கோடி 6 லட்ச ரூபாய் நிர்வாகச்செலவு செய்தால் அந்த அளவுக்கு டிஸ்பேரிட்டி, வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆக இப்போது பல லோக்கல் லைப்ரரி அத்தாரிட் டிஸ் நடத்துகின்ற நூல் நிலையங்களில் பல்வேறு கஷ்டங்களைச் சொல்லுகிறார்கள். புதிய நூல்கள் தருவிக்கப்படவில்லை, தொடர்ந்து வந்து கொண்டு இருந்த பல பத்திரிகைகள் நிறுத்தப் பட்டு இருக்கின்றன என்று எல்லாம் சொல்கிறார்கள். ஆகவே. 4 கோடி 16 லட்சம் ரூபாய் ஒதுக்கியதில் இன்று கொஞ்சம் அதிகமாகப் பணம் புத்தகங்கள் வாங்க நாம் ஒதுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் புத்தக வெளியீட்டாளர்கள் பலவிதத்தில் கஷ்டப்படுகிறாரகள். ஏன் என்றால் தமிழ்நாட்டில் மேல்நாடுகளைப் போல் ஒரு புத்தகம் வெளிவந்தால் பல லட்சக்கணக்கான பிரதிகள் விற்கின்ற நிலைமை இன்னும் இங்கே வரவில்லை. அங்கே குறைந்த விலையில் புத்தகங்கள் வந்தாலும் அதிகவிலையில் புத்தகங்கள் வந்தாலும் அவைகள் எல்லாம் வெகு சீக்கிரத்தில் குறிப்பிட்ட காலத்தில் விற்று வெளியிட்டாளர்களுக்குப்பணம் வந்து விடுகிறது.

ஆனால் தமிழ்நாட்டில் அந்த அளவுக்கு புத்தகங்கள் விற்பது இல்லை. ஒருவர் வாங்குயதை 10 பேர் படிக்கும் சூழ்நிலை இங்கே அமைந்து இருக்கிறது. இதனால் இங்கே புத்தக வெளி யீட்டாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எழுத்தாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். புதிய புதிய எழுத்தாளர்கள் அவர் கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கும் பதிப்பாளர் கள் புத்தகங்களை வெளியிடுவதற்கும், அவைகளைத் தனியார்கள் வாங்கினாலும் அரசு துறையில் நூல் நிலையங்களுக்கு கட்டாய மாக அதிக எண்ணிக்கையில் வாங்கவேண்டும். அதற்கு அதிக மான பணம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இது போன்ற அதிகமான அளவு செலவு செய்கின்ற துறையில் அதிகமான யோசனைகளும்—சில தவறுகள் சுட்டிக் காட்ட வாய்ப்பு இருந்தாலும் கூட இந்த ஆண்டு இத்தோடு நிறுத்திக்கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டு கல்வி மானியத்தின் மீது ஒதுக்கப்பட்டுள்ள 469 கோடி ரூபாயான இந்த மானியத்திற்கும் அதோடு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்திற்காக உணவுப் பொருட்கள் மற்ற வகைகளுக்கு 90 லட்சம் ரூபாய் மானியத் தொகையும் சேர்த்து மொத்தம் 558 கோடி ரூபாய் அளவுக்கு நம்முடைய இந்த கல்வி செலவு ஆகிறது. இது மொத்தச் செலவில் 24 சதவீதத்திற்கு பக்கம் இருக்கும். இப்படிப்பட்ட ஒரு பெரிய மானியத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். இருக்கின்ற குறைபாடுகளையும் எடுத்துச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மானியத்தில் செலவு செய்கிறபோதுகூட ஆங்காங்கே குறைபாடுகள் இருக்கிறது என்பதை நாங்கள் உணருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொண்டு சென்ற ஆண்டுகளில் எடுத்துச்சொன்ன அப்படிப்பட்ட கருத்துக்களை எல்லாம் வைத்துத்தான் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொண்டு புதிய செலவுகளை ஏற்படுத்தி அந்தக் குறை பாடுகளைப் போக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை எடுத்துக் கொண்டு எதிர்காலத்தில் இந்த கல்வித் துறையில் பலவேறு நல்ல காரியங்களை செய்ய இருக்கி றோம் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய பல்வேறு பிரச்சினைகளிலே ஒன்று இப்போது சமீப காலத்தில் மத்திய அரசு கல்விக் கொள்கை பற்றி அறிவிப்புகளைச் செய்து வருவதும், 1986–87-ல்



அந்தப் புதிய கல்விக் கொள்கையானது அமலுக்கு வரும் என்று சொல்லிக்கொண்டு இருப்பதும் அவர்கள் சொல்லுகின்ற கல்விக் கொள்கையும் அவர்கள் எவ்வன நினைத்துக்கொண்டு இருக்கி றார்கள் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களைப் போல நாங்களும் பத்திரிகைகளிலே பார்த்துக்கொண்டு இருக்கிறோமே தவிர மாநில அரசுகளை இதுவரையில் கலந்துகொள்ளவில்லை என்கின்ற நிலையில் தான் சில அச்சங்கள் இங்கே தெரிவிக்கப் பட்டு இருக்கின்றன.

(முற்பகல் 11-00)

மதிப்பிற்குரிய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள், தான் பொறுப்பேற்ற மூன்று மாத காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங் களில் ஏறக்குறைய 12, 13 தடவைக்கு மேலாக கல்வியினுடைய முக்கியத்துவத்தைப்பற்றி வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இதற்கு முன்னாலே இருந்த பிரதமர் பண்டித நேரு அவர்களானாலும், லால்பகதூர் சாஸ்திரியானாலும், மொரார்ஜி தேசாயானாலும், திருமதி இந்திரா காந்தி அவர்களானாலும் அவர்கள் எல்லாம் தங்களுடைய பேச்சுக்களில் கல்விக்கு இவ்வளவு முக்கியத்துவம் தரவில்லை என்பதை முன்வைத்து மதிப்பிற்குரிய திரு. ராஜீவ் காந்தி அவர்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அந்த கல்வித் துறையில் நல்லதொரு கொள்கையை ஏற்படுத்தியிருக் கிறோம் என்று அறிவித்திருப்பது கல்வியில் அக்கறை கொண்ட எல்லோராலும் வரவேற்கக் கூடியதாகும். அதிலும் குறிப்பாகத் தொழில் கல்வி, வாழ்க்கைக் கல்வி, அனைவருக்கும் கல்வி என்ற நிலையில் அந்தத் திட்டங்கள் அமல்படுத்தப்படவேண்டும் என்றும் பெண்களுக்குக் கல்வி, நலிந்தவர்களுக்கு கல்வி என்ற முறையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் சொல்லியது நம் எல்லோராலும் வரவேற்கப்படக்கூடிய ஒன்று தான். அதிலும் குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு கடந்த ஏழாண்டுக் காலங்களில் எடுத்து வந்திருக்கிற நடவடிக்கைகளை எல்லாம் முன் வைத்து அப்போது பேசப்பட்ட எல்லா கருத்துக் களையும் முன் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தப்பட்ட கருத்துக்களை எல்லாம் வைத்துப் பார்க்கிறபோது அவைகளைத்தான் இன்றைக்கு மத்திய அரசின் சார்பில் பிரதமர் அவர்கள் வலி யுறுத்தி வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

பொதுப்படையாக வித்தியாசம் நமக்கு இருக்கவில்லை என்றாலும்கூட ஒரு அச்சத்தை நாம் இங்கே சொல்லியாக வேண்டும். கல்வியானது மாநிலப்பட்டியலிலிருந்து பொதுப்பட்டி யலுக்கு மாற்றப்பட்டபோதே நாம் எதிர்த்தோம், அது மாநிலப் பட்டியலில்தான் இருக்கவேண்டும். அந்த அதிகாரம் மாநில அரசுக்குத்தான் இருக்கவேண்டும். அந்தந்த மாநிலங்களில்

இருக்கின்ற மக்களுடைய கலை, அறிவாற்றல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் கல்வித்துறை கவனிக்கிறபோது அதற்கேற்ப திட்டங்களை நிறைவேற்றுகின்ற பொறுப்பு மாநில அரசுக்குத் தான் இருக்கவேண்டும். அவர்கள் வேண்டுமானால் நிதியுதவி செய்யலாம்; ஆலோசனைகள் வழங்கலாம். மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கூறியதுபோல் அதை மத்திய அரசு மட்டுமல்ல, யுனஸ்கோ நிறுவனம்கூடச் செய்யலாம். ஆனால் செயல்படுத்துவது என்ற நிலைக்கு வருகிறபோது மாநில அரசு தான் செய்ய வேண்டும் என்ற கருத்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், இந்த அரசும் வலியுறுத்த விரும்புவ தாகும். இதை நான் சொல்கிறபோது மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் என்கிற நிலையில் மட்டுமல்ல; மாநில அரசுக்கு உரிய அதிகாரம் என்ற வகையில் இந்தக் கல்வித் துறை அதிகாரத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

மத்திய அரசுக்கு எத்தனையோ பொறுப்புக்கள் இருக்கின்றன, பல்வேறு பொறுப்புக்களை ஏற்று நடத்தவேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அதற்கே நேரம் இல்லை. எனவே இத்தகைய பொறுப்புக்களை மாநில அரசுக்கு விட வேண்டும் என்று சொல்வதற்குப் பதிலாக இத்தகைய பொறுப்புக்களை ஏற்று நடத்துவதன் மூலமாக மத்திய அரசு புதிய பிரச்சினைகளை உருவாக்கிக்கொள்கிற ஆபத்து இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்வித் துறை என்பது சாதாரணமான ஒன்றல்ல. ஆகவே ஏதாவது ஒன்றை நாம் செய்வதன் மூலமாக ஒரு புதிய பிரச்சினை தோன்றுமேயானால் அந்தப் பிரச்சினையை சமாளிக்கத்தான் நேரம் இருக்குமே தவிர இந்த நாட்டின் குழந்தைகளுக்குக் கல்வி தருகின்ற திட்டத்தை நிறைவேற்ற நேரம் இருக்காது. ஆகவே மாநில அரசுகளுக்கு இந்த அதிகாரம் இருந்தே தீரவேண்டும்; இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

புதிய பொறுப்புக்கு வந்திருக்கின்ற பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களையும் மத்திய அரசைச் சார்ந்த புதிய கல்வி அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் மாநிலப் பட்டியலுக்கு இந்தக் கல்வியை நீங்கள் மாற்றுவதன் மூலமாக இந்தியாவிலே பிரச்சினைகளைக் குறைப்பதற்கு நீங்கள் வழி செய்கிறீர்கள்; இந்தியாவிலே கல்வி வளருவதற்கு நீங்கள் செய்கிறீர்கள்; இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழி செய்கிறீர்கள் என்பதைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு அச்சத்தையும் எடுத்துச் சொன்னார்கள். கல்வியை மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றியபோதே அந்த அச்சத்தை நாங்கள் வெளியே சொன்னோம். எல்லோரும் சொல்லிக்கொண்டுதான் வருகிறோம். இந்த அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்வதானது



இந்தியை நாடு முழுவதும் கட்டாயமாகத் திணிப்பதற்காக ஒரு அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்காகத்தான் இருக்கும் என்கிற அச்சம் வேறு எங்கும் இருக்கிறதோ இல்லையோ தமிழ்நாட்டில் அந்த அச்சம் நிச்சயமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த அடிப்படையிலேதான் நாம் அதைப் பார்க்கின்றோம். ஆகவே, ஒரு அதிகாரம் போய் விட்டதே என்பதால் மட்டுமல்ல, எடுத்துக் கொண்ட அதிகாரத்தை நீங்கள் தவறாக பயன்படுத்து வீர்களானால் புதிய பிரச்னை இங்கே உருவாகும், பல்வேறு மாநிலங்களிலே உருவாகக் கூடிய ஆபத்து இருக்கிறது என்பதை யும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் இந்தி பற்றி நாம் பேசுகிறபொழுது தமிழ் நாடு இருமொழிக் கொள்கையைக் கடைபிடித்து வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இதே சட்ட மன்றத்தில் நிறைவேற்றிய —ஏகமனதாக தீர்மானம் என்று நான் நம்புகிறேன். அன்றைய தினம் காங்கிரஸ் கட்சியினரும் இருந் தார்கள் —தீர்மானத்தின் மூலமாக அந்தக் கொள்கையை நாம் கடைபிடித்து வருகிறோம். தீர்மானத்தை நிறைவேற்றிய நேரத்திலேயும், இன்றைக்கும்கூட சிலபேர்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், இந்தியாவிலே தேசிய நீரோட்டத்தில் தமிழ்நாடு தனித்து விலகி நிற்கிறது என்கிற ஒரு கருத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தி படிக்காமல் இருக்கிறார்கள், இந்தி படிக்க வேண்டா மென்று சொல்கிறார்கள் என்றால், நாம் அரசியல் ரீதியாக அரசியல் உரிமையின் அடிப்படையில், அதைக் கூடாது என்று சொல்கிறோம் என்கிற அளவிலே இந்தப் பிரச்னை வருகிறது.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு இந்த இருமொழிக் கொள்கையை மற்ற மாநிலங்களும் ஏற்றுக்கொள்வதன் மூலம் தான் தேசிய ஒருமைப்பாடே கட்டிக்காக்கப்படும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலம் தேவை என்று சொல்லி, ஆங்கிலம் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று சொல்லி, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத் திலேயிருந்து, அதற்கு முன்னாலே இருந்து, இன்றைக்கு வரை நாம் கடைபிடித்து வருவதானது, தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தானே தவிர, தமிழ்நாடு தனித்து நிற்பதற்காக அல்ல. ஆகவே, ஆங்கிலம் கட்டாயம் படிப்பதானது இந்த நாட்டினுடைய நன்மையைக் கருதி, இந்தியா ஒன்றாக இருக்க வேண்டு மென்பதைக் கருதித்தான். ஆகவே, இந்த இரு மொழிக்கொள்கை என்பதை அந்த அடிப்படையிலேதான் நீங்கள் பார்க்க வேண்டும். நான் ஒன்றை இங்கே குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன், இதற்கு மாறாக மும்மொழிக் கொள்கையைக் கடைபிடிக் கிறார்கள். மும்மொழிக் கொள்கை என்பது எப்படி செயல் படுகிறது என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சில மாநிலங்களில் அந்த மாநில மொழி முதல் மொழி

யாகவும் இந்தி மொழி இரண்டாவது மொழியாகவும் மூன்றாவது மொழியாக ஆங்கிலம் அல்லது சிறுபான்மை மக்களுடைய மொழியும் இருக்கிறது. சிறுபான்மை மக்கள் தங்கள் மொழியைப் படிக்க வேண்டுமென்று கருதினால், ஆங்கிலத்தைக் கைவிட வேண்டும், அல்லது ஆங்கிலத்தைப் படித்தால் தங்களுடைய மொழியைக் கைவிட வேண்டும், இது இருக்கிற நிலைமை.

முதல் மொழியாக வட்டார மொழியை வைத்து, அதற்கு அதிகமான மார்க்குகளைத் தருவதன் மூலமாக, சிறுபான்மை மக்களைக் கொஞ்சம் அடக்குகின்ற முயற்சியும் சில மாநிலங்களிலேஇருந்து வருகிறது; இதையெல்லாம் வைத்துத்தான் இந்த இருமொழிக் கொள்கையை நாம் பார்க்க வேண்டும்.

இன்னொன்று நான் சமீபத்திலேகூட பத்திரிகையிலே பார்த்தேன், பொறுப்புள்ள ஒரு அரசியல் தலைவர் தன்னுடைய மாநிலத்தில் வேற்று மாநிலத்தவர் வருவதைத் தடுக்கவேண்டும். நான் விரும்பவில்லை என்பதாகப் பேசினார்கள். அவரும் பிரிவினை கோருகின்ற இயக்கத்தைச் சேர்ந்தவர் அல்ல, இந்திய முழுவதும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டவர்தான் அவரே அப்படிச் சொல்கின்ற அளவுக்கு இன்றைக்கு தேசிய ஒருமைப்பாடு உணர்வுகள் பங்கப்படுத்தப்பட்டு, சீர்குலைந்து நிற்கின்றன என்பதைத்தான் நான் இங்கே குறிப்பாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நானே தமிழ்நாட்டிலேயிருந்து கல்கத்தாவுக்குப் போய் இறங்குகிற நேரத்திலே நான் என்னுடைய நாட்டிலே இருப்பதாக நினைக்கின்றேனா' அல்லது வேற்று நாட்டிலே இருப்பதாக நினைக்கின்றேனா என்கிற கேள்விக்கான பதிலை வைத்துத்தான் இந்த நாட்டிலே தேசிய ஒருமைப்பாட்டினுடைய மதிப்பு கணக்கிடப்பட வேண்டும். நான் டெல்லிக்குப் போகிறபொழுது அங்கே வெளிநாட்டுக்குப் போவதைப்போல், அல்லது இலண்டனிலே இறங்கியதைப் போல நினைப்பேனேயானால் தேசிய ஒருமைப்பாடு இந்த நாட்டிலே இன்னும் உருவாக்கப்படவில்லை என்றுதான் பொருள். எந்த மாநிலமாக இருந்தாலும் அந்த மாநிலத்திலே வாழ்கின்ற ஒவ்வொருவரும் தங்களுடைய நாட்டில் வாழ்வதாக உணர்கின்ற அளவுக்கு அங்கே நிலைமை சீரமைக்கப்பட வேண்டும்.

நான் கர்நாடகத்திலே குடியமர்வேனேயானால், நான் தமிழன் என்ற நிலையிலேயும், நான் இந்தியன் என்று நானாக நினைத்து, நான் இந்தியாவிலே இருப்பதாகவும் என்னுடைய தாய்நாட்டிலே நான் இருப்பதாகவும் நான் உணர்ந்தாக வேண்டும். கர்நாடகத்தில் இருந்து தமிழ்நாட்டிற்கு ஒருவன் வந்து பிழைப்பானேயானால் அவன் கன்னடன், கன்னட மொழியைத் தான் பேசுகின்றவன் என்று நினைக்கின்ற அதேநேரத்தில், தான் இந்தியாவைச் சேர்ந்தவன், தன்னுடைய நாடு இந்தியா, சென்னையிலே இருக்கிற காரணத்தால், தன்னுடைய நாட்டிலே



இருப்பதாக அவன் உணர்ந்தாக வேண்டும். அந்தச் சூழ்நிலைகளை நாம் உருவாக்க வேண்டும் இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் மாற்றியமைக்கின்ற, சீர்குலைக்கின்ற வேலைகளை, கல்வித் துறையில் தப்பித்தவறி எடுக்கின்ற சில நடவடிக்கைகள் உண்டாக்கி விடுகின்றன என்பதைத்தான் கடந்த காலத்திலே நாம் பார்த்து வருகின்றோம். ஆனால், நம்முடைய இரு மொழிக் கொள்கை என்பது முதல் மொழி தமிழ், தமிழ் மட்டுமல்ல, கன்னடம் பேசுகின்றவனுக்குக் கன்னடம்; மலையாளம் பேசுகின்றவனுக்கு மலையாளம்; உருது பேசுகின்றவனுக்கு உருது என்கின்ற வகையில் தாய் மொழியை ஒரு முதல் மொழியாக வைப்பதன் மூலம் சிறுபான்மை மக்களுக்குச் சரிசமமான உரிமைகளைத் தந்திருக்கிற ஒரே மாநிலம் தமிழ் மாநிலம்தான். ஆகவே, இரு மொழிக் கொள்கை என்பது வெறும் இந்தியை எதிர்க்கின்ற ஒரே கொள்கை அல்ல.

(முற்பகல் 11—10)

இந்த நாட்டில் சிறுபான்மை மக்களுக்கு சமத்துவத்தைத் தருவதன் மூலமாக இந்திய ஒருமைப்பாட்டிற்கு அது ஆதரவு தருகிற நல்லதொரு மொழிக் கொள்கை என்பதைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏன் ரஷ்யாவில் ரஷ்ய மொழி படிக்கிறார்கள். வட்டார மொழி படிக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வது நாம் பார்த்ததுதான். அங்கேயும் போய் பார்த்து வந்திருக்கிறோம். ரஷ்யாவில் சுரண்டல் இல்லையென்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். சுரண்டலை ஒழித்த நாடு சோவியத் ரஷ்யா. ஆனால் இன்றைக்கு கலப்புப் பொருளாதாரம் என்ற ஒன்றை வைத்துக்கொண்டு, அந்த கலப்புப் பொருளாதாரத்தில் மொழியின் அடிப்படையிலோ, பிராந்தியத்தின் அடிப்படையிலோ, மாநில அடிப்படையிலோ சுரண்டக் கூடிய வாய்ப்புகளை நாம் வைத்துக்கொண்டு நாம் அங்கே ரஷ்ய மொழி இருப்பதைபோல இங்கே இந்தி மொழி என்று பேசிக்கொண்டு இருப்பது தமிழ் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கோ, சுதந்திரத்திற்கோ அல்லது அரசியல் உரிமைகளுக்கோ வழி வகுப்பதாகாது. அந்த அடிப்படையில்தான் இரு மொழிக் கொள்கை என்பது இந்த நாட்டினுடைய தேசிய ஒருமைப்பாட்டிற்கு சிறந்த கொள்கை என்பதை நான் அழுத்தந் திருத்தமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இன்னொன்று, மாணவர்கள் ஏன் மூன்று மொழி படிக்கலாமே, நான்கு மொழிகள் படிக்கலாமே என்றால் அவர்களுக்கு ஆயுள் குறைவு. ஆயுள் வரையறுக்கப்பட்டிருக்கிறது. காலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வகுப்பிற்கு ஒரு வருடம் என்று காலம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு புறத்திலே பார்த்தால் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிவு இரண்டு மடங்காக ஆகிக்கொண்டிருக்கிறது என்ற அளவில் அவ்வளவு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே பி. எஸ். ஸி, படிக்கிற மாணவர்கள் வெளிநாடுகளில் 12-வது படிக்கிற மாணவர்களுக்கு இருக்கிற விஞ்ஞான, கணித அளவுக்கு சமமாகப் பெறுகிறார்கள் என்று

வரைக்கும் இந்த ஏற்றத் தாழ்வு இருக்கிற வரைக்கும், எந்தக் காலத்திலாவது இந்தநாடு மற்ற நாடுகளுக்கு சமமாக அந்தஸ்த்தை பெறமுடியும் என்று கருதமுடியுமா? ஆகவே உலக அரங்கிலே இந்தியா குறிப்பாக தமிழ்நாடு மற்ற நாடுகளுக்கு சமமான அந்தஸ்த்தை பெறவேண்டுமென்று நினைக்கிற எவராக இருந்தாலும் கல்வித் துறையில் மற்ற நாட்டு மாணவர்கள் பெறுகிற அதே அளவிற்கு அறிவை, மொழி அறிவை அல்ல, விஞ்ஞான அறிவை, கணித அறிவை அவன் பெற்றாலொழிய அந்தச் சமத்துவத்தை நம்முடைய காலத்தில் அவன் பெற முடியாது. அப்படியென்றால் அதற்கு நாம் இடம் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு இடம் தரவேண்டுமென்று நினைக்கிற போது இங்கே நான்கு மொழிகள், ஐந்து மொழிகள் படிக்க வேண்டுமென்றால் அவன் மொழி அறிந்த பண்டிதனாக இருக்க முடியுமே தவிர, அறிஞனாக இந்த நாட்டிற்குப் பயன்படக் கூடிய அறிவு பெற்றவனாக நிச்சயம் இருக்க முடியாது. ஆகவே எந்த நாட்டிலும் இவ்வளவு அதிகமான மொழிகளைப் படிக்க வேண்டுமென்றுச் சொல்லி யாரும் வற்புறுத்துவது இல்லை. நான் போன பல நாடுகளிலும் இதைப் பார்த்திருக்கிறேன். சைனாவில் . சைனா மொழிதான் படிக்கிறார்கள். அதற்கடுத்து ஆங்கிலத்தைப் படிக்கிறார்கள். ஜப்பானில் ஜப்பான் மொழியைத்தான் படிக்கிறார்கள். அதற்கடுத்து ஆங்கிலத்தை சில பேர் படிக்கிறார்கள் சில பேர் வேறு ஒரு மொழியை படிக்கிறார்கள். இப்படித்தான் வளர்ந்த நாடுகளில் எல்லாம் இருக்கிறது. நான் சொல்கிறேன் அப்படி இருந்ததால்தான் அவர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அதிக மொழிகள் படிப்பது என்பது மாணவர்களுக்கு கூடுதல் பாரத்தை வைப்பது என்பது மட்டுமல்லாமல், அறிவு பெறுவதற்கான வாய்ப்பைக் குறைக்கிற முயற்சியாகவும் அது ஆகிவிடக்கூடும். இன்னொன்று நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? அதிக மொழிகள் படிக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதற்கு பிறகு தாய் மொழியை ஒன்றிலிருந்து பி.ஏ. வரையில் படிக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதை கட்டாயமாக படிக்க வேண்டும். தினசரி ஒரு பீரியட் இருக்க வேண்டும். ஏன் தாய் மொழி; நம்முடைய தமிழ்மொழி. ஆகவே நம்முடைய ஆர்வத்தை அதிலே காட்டுகிறோம் என்றால் அதற்காக செலவிடுகிற நேரத்தை வைத்து நாம் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறோம், அதிலேவருகிற ஆற்றலை குவாலிடேட்டிவை வைத்தல்ல. ஆகவே அதிகமான நேரத்தை மொழிக்காக செலவு செய்கிற நாடு இருக்கிறதென்றால் அது இந்த நாடாகத்தான் இருக்க முடியும். அதற்கடுத்து இன்னொரு தவறும் கல்வித் துறையில் நடைபெறுகிறது. அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். வேற்று மொழியின் மூலமாக நாம் அறிவை பெற முயன்று கொண்டிருக்கிறோம். ஆங்கிலத்தின் மூலமாக பிசிக்சை படிக்க முயல்கிறோம். ஆங்கிலத்தின் மூலமாக மேதமாட்டிக்சை படிக்க முயல்கிறோம், ஆங்கிலத்தின் மூலமாக கெமிஸ்ட்ரி, பையாலஜி, பாட்டனி, ஹிஸ்ட்டரி, ஜியாகிரபி, எக்கனாமிக்ஸ் என்று பல்வேறு பாடங்களை படிக்க முயற்சி



எடுக்கிறோம். கடைசியில் வருகிறபோது ஹிஸ்டரியும் இல்லை, ஜியாகரபியும் இல்லை, மேதமாட்டிக்ஸும் இல்லை, பிசிக்சும் இல்லை, கெமிஸ்ட்ரியும் இல்லை, ஆங்கிலம் மட்டும்தான் இருக்கிறது என்ற நிலையில்தான் ஆங்கிலம் பயிற்று மொழியாக இந்த நாட்டிலே ஒரு பெரிய கெடுதலை அறிவு பெறுவதிலே மறைமுகமாகச் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே நான் வலியுறுத்திக் கூறுவது. இந்த நாட்டிலே தமிழக அரசினுடைய இருமொழிக் கொள்கை தமிழ் நாட்டிற்கு மாத்திரம் இல்லை. இந்தியாவின் பல மாநிலங்களுக்கும், எல்லா மாநிலங்களுக்கும் சிறந்த கொள்கை. தேசிய ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பாற்றுவதற்கு நாம் இந்தக் கொள்கையை பின்பற்றுவோமானால் நிச்சயமாக மன மாச்சரியங்கள் நீங்கி, சந்தேகங்கள் நீங்கி, சுரண்டலுக்கான அடிப்படைகள் நீங்கி எல்லோருக்கும் பொதுவான ஒரு சூழ்நிலை இந்த நாட்டிலே ஏற்பட்டு இந்த நாட்டிலே நாம் எல்லோரும் இந்தியர்கள், இந்த நாடு நம்முடைய நாடு என்கிற உணர்விற்கு அது ஒரு அடிப்படையாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிற விளக்கத்தில் பெரும்பாலும் உடன்பாடு என்றாலும் ஒற்றுமை என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டிய இடத்தில் ஏதோ நினைவு தவறுதலாக ஒருமைப்பாடு என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமைப்பாடு என்பது ஒரேவிதமாக யூனிட்டரி பார்ம் என்ற முறையிலே கொண்டுவரப்படுமானால் அது ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல; யூனிட்டி மட்டும்தான் ஏற்றுக்கொள்ளப் படும், ஏற்றுக்கொள்ளத் தக்கது; ஒற்றுமை வரவேற்கத்தக்கது; ஒருமைப்பாடு ஏற்றுக்கொள்ள முடியாதது என்று சொன்னதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில்கொண்டால் நல்லது என்று கருதுகிறேன். ஏனென்றால் அது பின்னால் விளக்கம் கொடுப்பதற்கு ஏற்றதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, நான் சொல்லுகிற ஒருமைப்பாடு என்பது நாம் அனைவரும் இந்தியாவினுடைய குடிமக்கள். நாம் அனைவரும் இந்தியர்கள். தமிழன் என்று சொல்லுகிற அதேநேரத்தில் நான் இந்தியன் என்று நினைப்பதன் மூலம்தான் டெல்லிக்குப் போனாலும் நம்முடைய நாட்டிலே இருப்பதான உணர்வைப் பெற முடியும்; பம்பாய்க்குப் போனாலும் நம்முடைய நாட்டிலே இருப்பதாக நாம் உணரமுடியும்; கல்கத்தாவுக்குப் போனாலும் நம்முடைய நாட்டிலே இருப்பதாக நாம் உணர முடியும். அந்த அடிப்படையில்தான் இந்தியன் என்ற உணர்வு வரும். அந்த உணர்வைத்தான் தேசிய ஒருமைப்பாடு என்ற உணர்வாக நான் இங்கே சொல்கிறேன். எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது அல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது 'யூனிட்டி அன்ட் யூனிஃபார்மிட்டி'. அண்ணா அவர்கள் 'யூனிபார்

மிட்டி. என்பது நடக்காது; யூனிட்டி என்பது இயலும் என்று சொன்னார்கள். இப்போது யூனிட்டி என்பதற்கு என்ன தமிழ்ச் சொல். யூனிஃபார்மிட்டி என்பதற்கு என்ன தமிழ்ச் சொல் என்பதிலேதான் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் வேறுபாடு. யூனிட்டி என்பதை மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஒற்றுமை என்று குறிப்பிடுகிறார்கள்; கல்வி அமைச்சர் அவர்கள் ஒருமைப்பாடு என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே, பேராசிரியர் அவர்களே யூனிட்டிக்கும் யூனிஃபார்மிட்டிக்கும் நல்ல தமிழ்ச் சொல்லைச் சொல்லுவார்களானால் இந்தக் குழப்பம் தீர்ந்துவிடும்.

திரு. க. அன்பழகன்: துணைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழிலே பேசுகின்றபோது ஒருமைப்பாடு என்று சொல்லி, யூனிஃபார்மிட்டியை அவர்கள் வலியுறுத்துகிற போது ஒருமைப்பாடு என்று வலியுறுத்துகிறார்கள். ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று கருதி எல்லாவற்றையும் ஒரே மாதிரி என்றால் அது நடைபெறக் கூடியது அல்ல. ஆனால் ஒற்றுமை நடைபெறக் கூடியது. ஒற்றுமை நோக்கத்தோடு செயல்படுவது நடைபெறக் கூடியது என்று சொன்னதைத்தான் நான் நினைவூட்டினேன். அவர்கள் கூட சொல்லுகிறபோது ஒற்றுமை உணர்வாக இருக்கிற தமிழனையே இந்தியனாகவும், ஒரு தெலுங்கனை இந்தியனாகவும் ஒரு வங்காளியை இந்தியனாகவும் நினைப்பதற்கு இடம் கொடுக்கவேண்டும். அதில் பிரிவு வரக்கூடாது என்றுதான் சொன்னார்கள். ஆகவே தெலுங்கன் தெலுங்கன்தான்; தமிழன் தமிழன்தான். ஆனால் இரண்டு பேருக்கும் இடையிலே உள்ள ஒற்றுமை உயர்வாலே அது நிறைவேற வேண்டுமென்ற கருத்தை கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் சொல்லப்பட்டச் சொல்லை வைத்து மற்றவர்கள் அதை ஒருவேளை யூனிஃபார்மிட்டி என்று கருதி விடுவார்களோ என்பதற்காகத்தான் அதைச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. செ. அரகங்நாயகம்: துணைத் தலைவரவர்களே, நான் ஒருமைப்பாடு என்று சொன்னது இந்தியன் என்ற உணர்வை. நான் இந்தியாவைச் சேர்ந்தவன் என்ற உணர்வுதானே தவிர தெலுங்கனும் தமிழனும் கன்னடனும் எல்லோரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று சொல்லுகின்ற அந்த யூனிஃபார்மிட்டி அல்ல. ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று சொல்லுகிற அந்தக் கட்டாய கலாச்சாரத் திணிப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை அதை வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆனால் ஒன்று. தமிழன் என்று நினைக்காத நிலையில் இந்தியன் என்று நினைக்கவும் முடியாது. நான் தமிழன் என்று நினைக்கிற அந்த நேரத்தில்தான், இந்தியாவின் ஒரு பகுதியான தமிழ்நாட்டைச் சேர்ந்தவன் என்று சொல்லுகிற அந்த முறையிலேதான் நான் இந்தியன் ஆகிறேன். ஆகையால் தமிழன் இந்தியன் என்ற அடிப்படையில் இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்துசென்ற அந்த இருமொழிக் கொள்கையை



நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. வேறு வழியைத் தேடுவார்களானால் தேசிய ஒருமைப்பாடுதான் இந்த ஒற்றுமையை பாதிக்குமே தவிர, வேறு அல்ல என்பதை இந்த நேரத்தில் பொதுவான கருத்தாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே கல்வி பற்றி பல்வேறு கருத்துக்களைச் சொல்லும் போது இந்த அரசு முழுவதுமாக அதைப் பார்த்து, சில நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். முழுமையாக என்று சொல்லும் போது அங்கே இந்தத் துறையைத் தவிர மற்ற துறையிலேயும் நீங்கள் கருத்துச் சொல்கிறீர்கள். அதற்கு அப்பாற்பட்டும் பல கருத்துக்களைச் சொல்கிறோம். நாடு முன்னேறவில்லை, சமுதாயம் முன்னேறவில்லை, வறுமை போகவில்லை. ஏழ்மை போகவில்லை. பொருளாதார மாற்றம் ஏற்படவில்லை என்பதால் பல்வேறு கருத்துக்களைச் சொல்கிறோம். சுதந்திரம் அடைந்து 38 ஆண்டு காலம் ஆனதற்குப் பிறகும் நம்முடைய நாட்டில் இந்தப் பிரச்சனைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் உணருகிறோம். ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்ட பிறகும் இந்தப் பிரச்சனைகள் தீரவில்லை என்பதைப் பார்க் கிறோம். ஆம், பொருளாதார சம்பந்தமாக திட்டமிட்ட பொருளாதார செயல் முறைகளைப் பின்பற்றியும் கூட இந்த நாட்டில் இந்தப் பிரச்சனைகள் தீரவில்லை என்பதைப் பார்க் கிறோம். ஆனால் பிரச்சனைகள் தீருவது என்பது திட்டங் களுக்கும் பிரச்சனைகளுக்கும் இடையே அதைச் செயல்படுத்துகிற நபர்களை, நண்பர்களைப் பொறுத்துதான் வெற்றியும் தோல்வியும் அமைகிறது என்பதை குறிப்பாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

ஒரு பொறுப்புக்கு ஒருவரை நாம் நியமிக்கின்றபோது, அந்தப் பொறுப்பை நிறைவேற்றக் கூடிய தகுதியும், தரமும், திறமையும் பெற்றவராக இருந்தால்தான் அந்தப் பொறுப்பை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமே தவிர, அதற்கான பயிற்சியும் கூட பெறாத நிலையில், அதற்கான தகுதியைக் கூட பெறாத நிலையில் ஆங்காங்கே ஆட்களை நாம் நியமிப்பதன் மூலமாக திட்டம் போடுகின்ற ஆணை முடிவில் நிராசையாக மாறிவிடுகிறது. ஆகவே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருப்பதுதான் கல்வித்துறை என்று நாம் கருது கிறோம். ஆகவே பல்வேறு துறைகளினுடைய தோல்விக்கும் வெற்றிக்கும் கல்வித்துறையை செம்மையாக வைத்து, சமுதாய, அரசியல் பொருளாதார முன்னேற்றங்களுக்கு கல்வித்துறையை முன்னோடியாக வைத்து பார்க்கின்றபோது, அதற்குத் தக்கபடி கல்வித் துறையிலே மாற்றங்களையும் மாறுதல்களையும் கூடுதலான முயற்சிகளையும் நாம் எடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். அப்படி நாம் இவற்றைப் பார்க்கிறபோது, இந்த நாட்டிலே பிறந்து வளர்கின்ற குழந்தைகளுடைய அறிவு வளர்ச்சிக்கு, சரியான ஆதாரத்தை நாம் போட்டாகவேண்டும். அவர்களுடைய பலவகையான ஆற்றல் வளர்ச்சிக்கு நாம்

வாய்ப்புக்களைத் தந்தாகவேண்டும். அவர்கள் இந்தச் சமுதாயத்
திற்கு பயன்படுகின்ற அளவிற்கு அறிவு வளர்ச்சியோடு, ஆற்றல்
வளர்ச்சியோடு பயிற்சியும் தந்தாக வேண்டும். அதற்கு எல்லா
வற்றிற்கும் மேலாகத்தான் இந்தச் சமுதாயத்திற்குப் பயன்பட
வேண்டும் என்ற நாட்டுப் பற்று, அல்லது அதைத்தான் தேச
பக்தி என்று சொல்கிற அளவிற்கு நாம் அந்த உணர்வை அந்தக்
குழந்தைகளுக்கு வளர்த்தாக வேண்டும். நாம் இந்த நாட்டுக்குப்
பயன்பட வேண்டும் என்ற அளவிலே மட்டுமல்ல, இந்த நாட்டுக்
காக நம்முடைய உயிரைத் தர விருப்பம் உடையவர்களாக நான்
இருக்கிறேன், யாதும் செய்யக் கூடியவனாக இருக்கிறேன் என்ற
அளவிற்கு தியாக உள்ளம் உள்ளவர்களாகவும் அவர்களை நாம்
ஊட்டி வளர்க்க ,வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தக்
காரியங்கள் எல்லாம் பல்வேறு துறை சம்பந்தப்பட்டதாக இருந்
தாலும், பொதுவான சமுதாய அமைப்பு முறை சம்பந்தப்
பட்டதாக இருந்தாலும், அதைச் செய்கின்ற பொறுப்பைக்
கல்வித்துறை தான் ஏற்றுக்கொண்டு இருக்கிறது, ஏற்றுக்கொள்ள
வேண்டும். அங்கே நடைபெறுகிற எல்லாக் கோளாறுகளுக்கும்
கல்வித்துறை பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டிய அளவிலேதான்
இந்தியாவினுடைய எல்லா மாநிலங்களிலும் இது அமைந்து
இருக்கவேண்டும். அந்த அடிப்படையில்தான் நம்முடைய
குழந்தைகள் இந்த நாட்டுக்குப் பயன்பட அவர்களுக்கு பல்வேறு
காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறோம். கல்வித்
துறையில் என்னென்ன மாறுதல்களைக் கொண்டு வந்தால் இந்தச்
சமுதாயத்திற்கு நல்ல பயன் ஏற்படும் என்பதைக் கருதித்தான்
பல்வேறு திட்டங்களைக் கொண்டு வருகிறோம். உதாரணத்
திற்கு, ஓப்பன் ஸ்கூல், திறந்தவெளி பள்ளி என்று ஒரு திட்டம்,
இப்போது அமலுக்கு வர இருக்கிறது. இந்த ஆண்டு அமலுக்கு
வர இருக்கிறது. 8-வதுக்கு மேல் படித்தவுர்கள் அவர்கள் எங்கே
இருந்தாலும், இந்தத்திட்டத்திலே சேர்ந்து ஓர் ஆண்டு, ஜனவரி-
ஜனவரி என்று நினைக்கிறேன், ஓர் ஆண்டு படித்து, ஒரு
தேர்வை எழுதி அவர்கள் எஸ்.எஸ்.எல்.சிக்கு சமமான ஒரு
சான்றிதழ் பெறக்கூடிய வாய்ப்பை நாம் தருகிறோம். அவர்கள்,
வீட்டிலே இருக்கின்ற ஒரு மனைவி கூட இதிலே சேர்ந்துகொண்டு
பாடங்களைப் பெற்று படிக்கலாம். அவ்வப்போது நேர்முகமான
ஒரு வகுப்பு நடத்தப்படும், அதிலே அவர்கள் கலந்துகொண்டு
பயன் பெறலாம். அதன் மூலமாக தமிழகத்தில் பள்ளிக்கூடங்கள்
பரவாத இடங்களிலும், அல்லது எஸ்.எஸ்.எல்.சி. அளவிற்கு கல்வி
பெற முடியாத சூழ்நிலையில் இருக்கின்றவர்களுக்கும், இத்தகைய
ஒரு திட்டத்தின் மூலமாக ஒரு வாய்ப்பை நாம் தர இருக்கிறோம்.
பல பேர்கள் இதிலே வந்து சேர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக
ஸ்டேட் பேங்க்கில் உள்ள கடைநிலை ஊழியர்கள் தங்களுடைய
தகுதியை உயர்த்திக்கொள்வதற்காக அந்த நிர்வாகம் இந்தத்
திட்டத்தோடு சம்பந்தப்பட்டவர்களிடம் பேச்சு வார்த்தை
நடத்தி, 200 பேர்களைச் சேர்த்துக்கொள்ளவும், அவர்களுக்குப்
பயிற்சி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்,
அதைப்போலவே பல்வேறு பகுதிகளில் இருக்கிறவர்களுக்கும்
இந்த வாய்ப்பு கிடைக்கும். இதன் மூலம் அறிவு பெறுவதற்கும்,



பலரும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்குமான ஒரு நிலை
ஏற்படும் என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து, விஞ்ஞான அறிவு பற்றி இங்கே எடுத்துச்
சொன்னார்கள். சைன்ஸ் அன்ட் டெக்னாலஜி என்று தனித்
துறை அமைக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு ஒரு செயலாளரைக்
கூடப் போட்டு இருக்கிறோம். இது இப்போது என்னுடைய
பொறுப்பில் இல்லை. என்றாலும், தொழில் அமைச்சருடைய
பொறுப்பில் இருக்கிறது. இந்த டிமாண்டிலே வந்திருக்கிறது.
இந்த ஆண்டு 229 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டு
இருக்கிறது. விஞ்ஞான அறிவு பரவவேண்டும் என்பது மட்டுமல்ல.
பல்வேறு துறைகளிலும் இது பயன்படுத்தப்படவேண்டும்
என்பதுதான் மிக முக்கியமான ஒன்றாகும். குறிப்பாக மின்சாரத்
தைப் பற்றி இங்கே பேசிக்கொண்டு இருந்தோம். கேள்வி
நேரத்தில் பல்வேறு பிரச்சனைகள் கிளப்பப்பட்டன. ஆனால்
நேற்றைய தினம் இந்து பத்திரிகையில் சென்னை நகரிலே நடை
பெற்ற கூட்டத்தில் ஒரு செய்தி சொல்லியிருக்கிறார்கள்.
அமெரிக்காவில் இருக்கிற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் 30
மெகாவாட் மின்சாரத்தைத் தயாரிக்கின்ற சோலார் எலக்ட்ரி-
சிட்டி தயாரிக்கிற கருவிகள் விற்பனைக்குத் தயாராக வைத்திருப்
பதாகவும், ஆகவே இதை வாங்கி வைத்துக்கொண்டால் 30
மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ளலாம், 30
கோடியில் இருந்து, 60 கோடி ரூபாய் வரையில் இதற்குச்
செலவாகும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

இது விஞ்ஞான ரீதியாக வருகின்ற ஒரு கருத்து. இந்த
சைன்ஸ் அன்டு டெக்னாலஜி என்று சொல்லக்கூடிய துறை, இது
போன்ற புதிய விஞ்ஞானக் கருத்துக்கள் எந்தத் எந்த துறை
களுக்குப் பொருந்துவதாக இருக்கிறதோ அந்தந்த
துறைகளிலே அதைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லுகிற
ஒரு பொறுப்பைத்தான் இந்த சைன்ஸ் அன்டு டெக்னாலஜி துறை
எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையிலே மின்சாரம்
மட்டுமல்ல, விவசாயம், தொழில் போன்ற வேறு பல துறை
களிலும் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

நாம் இப்பொழுது ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு விஞ்ஞான
உண்மையை, விஞ்ஞானக் கருத்தை 10 ஆண்டு காலத்திற்குப்
பிறகு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்குமானால், நாம்
அந்த நாட்டை விட 10 ஆண்டுக்காலம் பின் தங்கிய நிலையில்
இருக்க வேண்டிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே அந்த
முறையில் நாம் இந்தத் துறையைப் பயன்படுத்த முயற்சி
எடுத்துக் கொண்டு வருகிறோம். இப்போது அது தனித் துறை
யாகவும் மாறியிருக்கிறது.

இன்னொன்று. விஞ்ஞான அறிவை பரப்புவது. நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிகப் பெரிய
கல்லாகவும், தடைக்கல்லாகவும் இருப்பது மூட நம்பிக்கைகள்
தான். மூட நம்பிக்கைகளை எதிர்ப்பது என்பது அதை
எதிர்த்துப் பேசுவது அன்று. அதை எதிர்த்துப் பேசுவது என்பது
ஒரு புறம் இருந்தாலும், அதற்கு மாறாக விஞ்ஞான அறிவைப்
பரப்புவதன் மூலமாகத்தான் மூட நம்பிக்கைகளில் இருந்து
மக்களை விடுவிக்க முடியும். அந்த உண்மையைத் தந்தை
பெரியார் அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவர் பேசிய பேச்சுக்
களிலேகூட முதல் பகுதி மூட நம்பிக்கைகளை எதிர்ப்பதாக
இருந்தாலும், இரண்டாவது பகுதி விஞ்ஞான ரீதியைப் பற்றி
பேசுவதாகத்தான் அமைந்திருக்கும். விஞ்ஞான ரீதியை நாம்
பயன்படுத்த வேண்டும். அப்படிப் பயன்படுத்தினால் 100 ஆண்டுக்
காலம். 125 ஆண்டுக்காலம் வரையில் நாம் இருக்கலாம்
என்பது போன்ற கருத்துக்களை எல்லாம் தந்தை பெரியார்
அவர்கள் தங்களுடைய பாணியிலே சொல்லிவந்தார்கள்.
ஆகவே மூடநம்பிக்கைகளை எதிர்ப்பது என்பது அதை எதிர்த்துப்
பேசுவதோ அல்லது அதிலே சிக்கி இருக்கின்றவர்களைக் கேலி
பேசுவதன் மூலமாகவோ, நாட்டில் நாம் உருவாக்க நினைக்கும்
அந்த விஞ்ஞான அறிவை, பகுத்தறிவை யாரிடம் பரப்ப முயற்சிக்
கிறோமோ, அவர்களுடைய மன மாச்சரியத்தைதான் நாம்
வளர்த்துக் கொள்கிறோமே தவிர, நாம் நினைக்கிற அந்தக்
காரியம் வெற்றி பெறுவதில்லை.

ஆனால் அதற்கு மாறாக விஞ்ஞான அறிவை ஆதரித்து,
விஞ்ஞான கருத்துக்களுக்கு ஆதரவு தந்தாக வேண்டும். அதிலே
முக்கியமானது விஞ்ஞான மையங்களும், விண்வெளி மன்றங்கள்
போன்ற பிளானடோ நிலையங்களும், இந்த மாநிலத்தில் பல்வேறு
பகுதிகளில் வரவேண்டும் என்பதுதான். நான் போய் பார்த்த
எந்த நாடாக இருந்தாலும், வளர்ந்த நாடுகளில் எந்த நகரமாக
இருந்தாலும் விஞ்ஞான மையங்கள் இல்லாமல் இல்லை.
விஞ்ஞான கேந்திரங்கள் இல்லாமல் இல்லை. பிளானடோரியம்
போன்ற விண்வெளி அரங்கங்கள் இல்லாமல் இல்லை. ஆகவே,
அந்த விஞ்ஞான கலாச்சாரத்தைப் பல்வேறு மையங்களின் மூல
மாகப் பரப்ப வேண்டும் என்று அந்த நாடுகளில் அவர்களைத்
தயார்படுத்திக் கொண்டிருப்பதன் காரணமாகத்தான் அங்கு
விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கிறார்கள்.

அதற்கு அடிப்படை வைப்பதை போலத்தான் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இரண்டு ஆண்டுக் காலத்
த்ற்கு முன்னதாக தந்தை பெரியார் அவர்கள் பெயரால் ஒரு
விஞ்ஞான மையத்தை சென்னை நகரில் ஏற்பாடு செய்வதற்கு
என்று நடவடிக்கை எடுத்தது. இன்றைக்கு அதற்கு நிலம்
எடுக்கப்பட்டு, பணமும் ஓதுக்கப்பட்டு; அங்கே கட்டிட
வேலைகள் ஆரம்பிக்கவுமான நிலையில் இருக்கிறது. விரைவில்
அது ஓராண்டுக் காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள்
அதைப் பார்க்கிற ஒரு நிலை வரும் என்று கருதுகிறேன்.





இன்னொன்று இதிலே கட்டப்பட இருக்கும் பிளான டோரியத்தை பிர்லா அறக் கட்டளையைச் சேர்ந்தவர்கள் 1½ கோடி ரூபாய் செலவு செய்து அவர்களே கட்டித் தருவதாக முன் வந்திருக்கிறார்கள். அப்படி பிளானடோரியம் கட்டப்படும். விஞ்ஞான மன்றமும் கட்டப்படும், மக்களுக்கு விஞ்ஞான அறிவைத் தருகிற மிகச் சிறந்த ஒரு இடம் இதுவரையில் இல்லாதிருந்த, ஒரு மையம் தமிழகத்தில் முதன் முறையாக சென்னை மாநகரத்தில் வர இருக்கிறது. அந்த அடிப்படையில் விஞ்ஞான அறிவைப் பெருக்குவதில் இந்த அரசு காரணம் காட்டவில்லை, தாமதமும் காட்டவில்லை. இங்கு வந்தவுடனேயே நாங்கள் பேசி, யோசிக்க ஆரம்பித்து, திட்டம் இட்டு இன்று 7 ஆண்டுகள் ஆனாலும், அந்த முயற்சிகள் வெற்றிகரமாக நடைமுறைக்கு வருகிற ஒரு நிலையை அடைந்திருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து. பண்பாட்டுத் துறையின் கீழ் கிராமிய கலைக்கு ஒரு ஊக்கம் தருவது, அதை வளர்ப்பது, அதைப் பாது காப்பது. அதை மக்கள் அனுபவிக்கிற ஒரு நிலையை ஏற்படுத்துவது என்று நம்முடைய தமிழ் பண்பாட்டுத் துறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்காக பணமும் ஓதுக்கியிருக்கிறோம். அதை நான் குறிப்பிடும்போது கிராமீயக் கலைகள் மீது தனிப்பட்ட காதல் அல்ல. ஆனால் கிராமீயக் கலைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இந்த நாட்டிலே கிராமத்திலே வாழ்கிற பாமரர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, அவர்களுடைய நலனுக்காக நாம் பாடுபடுகிறோம் என்று சொல்வது நம்பத்தகுந்தது அல்ல. அந்த மக்கள் விரும்புகிற கலைகளை, அந்த மக்களுக்குத் தெரிந்த கலைகளை அவர்கள் ரசிக்கின்ற ஒன்றை நாம் வளர்க்காத நிலையில் அவர்களோடு கலை வழியாக நாம் தொடர்பு கொள்ள முடியாது என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் போன்றவைகளை எல்லாம் ரசிக்கின்றவர்கள், ஆதரிக்கின்றவர்கள் இருக்கிறார்கள். இப்போது அரசு அதைப்பற்றி ஒரு சிறு முயற்சி செய்தால் போதும் என்ற அளவிலே தான் இருக்கிறதே தவிர வேறு அல்ல. சத்துணவுத் திட்டம் என்பது ஏழைக் குழந்தைகளுக்குத்தானே தவிர பணக்கார குழந்தைகளுக்கு அல்ல. சர்க்காருடைய ஆதரவு என்பது இன்றைக்கு இவைகளுக்கு இருப்பதை விட அதிகமாக அழிந்து வருகின்ற, செத்துக்கொண்டு இருக்கின்ற——இப்போது என்னிடத்தில் கூறப்பட்டு உள்ள நிலையை வைத்துப் பார்க்கின்ற போது— ஓரிருவர் செத்தால்கூட சில கலைகள் இன்றைக்கு கிடைக்காத நிலைமை தான் இருந்துகொண்டிருக்கிறது. சங்கரதாச சுவாமிகள், நாடகக் கலையில் மிகச் சிறந்த பெருமகனார் ஆவார்கள், அவர் எழுதிய நாடகங்கள் 50, 60 என்று சொல்கிறார்கள். அவர் அதிலே சில பாடல்களை எழுதியிருக்கிறார்கள். அந்தப் பாடல்களுக்கு இந்தப் பாட்டினுடைய மெட்டு என்று எழுதியிருக்கிறார்கள். ராகம் அல்ல, அந்தப் பாட்டினுடைய

மெட்டு தெரிந்தவர்கள் ஒன்று இரண்டு பேர்கள் இருப்பதாகச்
சொல்கிறார்கள். இப்போது அவர்களிடத்தில் பாட்டு கேட்டு
கேஸட்டிலே ரிக்கார்டு செய்து வைத்துக்கொண்டால் சங்கரதாஸ்
அவர்களின் நாடகம் முழு அளவில் பாதுகாக்கப்பட முடியும்,
இல்லையென்றால் அரைகுறையாகத்தான் இருக்கப் போகிறது.
அதேபோல் இன்னும் பழைய கலைகள் எவ்வளவோ இருக்கின்றன.
தெருக்கூத்துபோன்ற கிராமியக் கலைகள் அழிந்துகொண்டு
இருக்கின்றன. சீரழிந்து கொண்டிருக்கின்றன. அவைகளைத்
தவறாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை
யில் ஏழை பாமர தமிழனுடைய அந்தக் கலையை பாதுகாப்ப
தும், வளர்ப்பதும் என்ற முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது
என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
அந்த முயற்சி இந்த ஆண்டு தொடங்கப்படும். அதிலே இந்த
அரசுக்கு அக்கறை இருக்கிறது. அந்தக் கலைகளில் சம்பந்தப்
பட்டவர்களை வைத்து, அது அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்காக
வீடியோ கேஸட் போன்றவற்றில் பதிவு செய்கின்ற முயற்சி
யையும் உடனடியாக செய்ய வேண்டிய ஒன்றாகும். அதைச்
செய்யவில்லை என்றால் ஒருவர் இறந்தால் அவரோடு அந்தக்
கலை அழிந்துவிட்டது என்ற நிலைமையிலே நாடு இருக்கும்.
அந்த நிலையில் தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது. ஆக இந்தப்
பாதுகாக்கின்ற முயற்சியை, வளர்க்கின்ற முயற்சியை இந்த
அரசு எடுக்கிறது. அதற்காக நாம் சிறப்புத் திட்டங்களைப்
போட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு முதல்வருடைய வாழ்க்கைக்கல்விக்கான ஒரு புதிய
திட்டத்தைச் சென்ற ஆண்டு பரிட்சார்த்தமாகத் துவங்கினோம்.
பல இடங்களில், பல பள்ளிகளில் ஒரு மாவட்டத்திற்கு 30, 40
என்று அவர்களாகவே துவங்கி பெரும்பாலான பள்ளிகளில் அது
வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த வாழ்க்கை
கல்வி என்பது சிறு குழந்தைகளுக்குத் தொழில் சம்பந்தப்பட்ட
ஒரு அனுபவத்தை தருவது. அந்த அடிப்படையில் இந்த வாழ்க்கை
கல்வி வருகிறது. 'பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவாது' என்பது
படிப்பைப் பற்றி இந்த நாட்டில் இருந்து வருகின்ற ஒரு பழமொழி
பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவும் என்று செய்ய வேண்டும்
என்பதற்கான முயற்சிகளில் ஒன்று தான் இந்த வாழ்க்கைக்
கல்வி. இதை நான் சொல்கின்றபோது குறிப்பாக வாழ்க்கைக்
கல்வி என்பது புரொடக்ஷன் ஒரியன்டட்—எதையாவது ஒன்றைச்
செய்து பெறுகின்ற அனுபவத்தை செய்துமுடிக்கின்ற அனுபவத்தை
தருகின்றோம். ஏதோ ஒரு இயந்திரத்தில், ஏதாவது ஒரு தொழி
லில் ஒரு பகுதியைக் கற்றுக்கொள்வதில்லை. ஒரு பொருளை
முழுமையாகப் படைப்பதில், முழுமையாக ஒரு வாய்ப்பைப் பெறு
கின்ற வகையில் இந்த வாழ்க்கைக் கல்வியைத் தரவிரும்புகிறோம்.
பல பொருள்களைத் தயாரிக்கிறார்கள் இங்க் தயாரிக்கிறார்கள்.
பெயிண்டிங் தயாரிக்கிறார்கள். கட்டில் தயாரிக்கிறார்கள்.
எலெக்ட்ரிக்கல் அப்ளையன்சஸ் தயாரிக்கிறார்கள். அந்தந்த இடத்
திற்குத் தகுந்தவாறு அங்குள்ள ஆசிரியர்களுடைய சக்திக்கு தகுந்த
வாறு இப்போது செலவு இல்லாமல் பல்வேறு இடங்களில் இந்தக்
ாரியங்களைச் செய்து வருகிறார்கள். நான் சென்ற பள்ளிக்





கூடங்களில் அவைகளை விற்பனையும் செய்து பாங்கிலே
பணத்தைப் போட்டிருக்கிறார்கள் என்ற அளவிற்கு வந்திருப்ப
தால் நான் இது வெற்றிகரமாக நடக்கிறது என்று சொன்னேன்.
இந்த ஆண்டு அதிலே இன்னொரு முயற்சியும் நாம் மேற்கொள்
வோம். இந்தக் குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துகின்றோம்,
கல்வியோடு தொழிலைச் சொல்லித் தருவது என்பது, கல்வியோடு
குழந்தைகளைத் தொழிலில் ஈடுபடுத்துவது என்பதும், குழந்தை
களைத் தொழில் ரீதியாக சுரண்டுவது ஆகாது.

சோவியத் யூனியனிலே அரசியல் சட்டத்திலே அதை எழுதியும்
வைத்திருக்கிறார்கள். இதை ஏற்றுக்கொள்கிறார்கள். இதை
நாம் வைத்துக் கொள்ளலாம் என்ற முறையிலே அங்கேயும்
இதிலே தீவிர அக்கறை காட்டி பல்வேறு பள்ளிகளில் செய்து
வருகிறார்கள். மாஸ்கோவில், இந்தக் குழந்தைகள் தயாரித்த
சாமான்களை சோவியத்யூனியன் மற்ற நகரங்களுக்கும் சோஷலிச
நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்திருக்கிறார்கள் என்ற செய்தியை
நாம் பார்க்கிறோம்.

அதைப் போலவே, தமிழ்நாட்டிலே படிக்கின்ற எல்லா
குழந்தைகளுக்கும் தொழில் செய்வதற்கான அனுபவத்தைத் தரு
வதன் மூலமாக அது பிற்காலத்தில் அந்தக் குழந்தைகளுக்கு
உதவும் என்பது மட்டுமல்ல. தொழில் பற்றி ஒரு மரியாதையும்
——நான் படித்திருக்கிறேன். கடைக்குப் போகச் சொன்னால்
நான் போக மாட்டேன் என்ற அந்த மனப்பான்மை எழாத
வண்ணம் அதனை ஒழித்து—தொழில் செய்வதில் ஒரு
கௌரவத்தை உருவாக்குகின்ற வகையில் இந்தத் திட்டம் செயல்
படும். இது பல்வேறு இடங்களில் வந்திருக்கிறது. பகுதி நேர
வாழ்க்கைத் தொழில் கல்வி ஆசிரியர் பணியிடங்கள் 750
ஏற்படுத்தப்பட இருக்கின்றன. பகுதி நேர ஆசிரியர் என்பது
இப்போது நாம் எந்தத் தொழில் வேண்டுமானாலும் மாற்றிக்
கொள்கின்ற வகையில் இந்த ஆண்டு ஒன்று, அடுத்த ஆண்டு ஒன்று
என்று கூட வைத்துக்கொள்ளலாம், அதற்கேற்ப செய்ய இருக்
கிறோம். மைய அரசின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று நம்பு
கிறோம். உலக வங்கி உதவி கிடைக்கும் என்று நாங்கள் நம்பு
கிறோம். அந்த வகையில் இந்தக் கல்வித் திட்டம் வெற்றி
பெறக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

அதற்கு அடுத்து, இந்தக் காலக்கட்டத்தைச் சொல்ல
வேண்டுமானால் கம்யூட்டர் ஏஜ்என்று தான் சொல்ல
வேண்டும். கம்யூட்டர்கள் பல்வேறு துறைகளில் பயன்
பட்டுக்கொண்டு வருகின்றன. வெளிநாடுகளுக்குச் சென்
றால் அது இல்லாத இடமே கிடையாது. சாதாரண
மளிகைக் கடைக்குச் சென்றாலும்கூட சாமான்களுக்கான விலைப்
பட்டியலைப் போட்டு கேஷ் ரெசிட் கொடுக்கிற அளவுக்கு
அவ்வளவு துல்லியமாகவும் துரிதமாகவும் கம்பியூட்டர் செய்து
கொண்டு இருக்கிறது. ஏரோடிராமிலே பிளைட் வந்தவுடன்
இறங்குகிற நிலையிலே தவறு இல்லாமல் கீழே வந்து இறங்குகிற
முறையிலே அந்தத் துறையிலேயும் கம்பியூட்டர் பயன்படுகிறது.

சந்திர மண்டலத்திற்குப் போனால் திரும்ப முடியாது என்ற
நிலைமை இருந்தது. இன்றைக்குச் சந்திர மண்டலத்திற்குப்
போனால் நல்லமுறையிலே திரும்பி வருகிறார்கள் என்றால்
அதிலே பெரும் பகுதி வேலையை கம்பியூட்டர் தான் செய்து
கொண்டிருக்கிறது. இரத்தப் பரிசோதனை பத்து சோதனைகள்
செய்ய வேண்டுமென்றால் பத்து தடவைகள் இரத்தம் எடுத்து
பரிசோதனை செய்யவேண்டும். இப்போது அப்படியெல்லாம்
இல்லை, ஒரே தடவை இரத்தம் எடுத்து பத்து பரிசோதனை
களையும் நல்லமுறையிலே கொஞ்சம்கூட அதிகப்படியாகவோ
அல்லது குறைவாகவோ இல்லாமல் துல்லியமாகத் தரக்கூடிய
வேலையை கம்பியூட்டர் செய்து கொண்டிருக்கிறது. இப்படி
எல்லாத்துறைகளிலேயும் கம்ப்யூட்டர் செயல்பட்டுக் கொண்டிருக்
கிறது.

அமெரிக்காவிலே கடந்த 3, 4 ஆண்டுக் காலத்திலே புதிதாகக்
கிடைத்த வேலைவாய்ப்பில் 3 இல் 1 பங்கு இந்த கம்பியூட்டர்
சம்பந்தப்பட்ட வேலைகள் ஆகும் என்று தெரிகிறது. ஆகவே
கம்பியூட்டர் படித்தால் வேலையில்லாமல் போய்விடும் என்றோ
அல்லது கம்பியூட்டர் வந்துவிட்டால் வேலை இழப்பார்கள்
என்பதோ அல்ல. கம்பியூட்டர் வந்தால் அதிகப்படியான
வேலைகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பது
மற்றைய நாடுகளின் அனுபவங்கள் நமக்குக் காட்டுகின்றன,
நவீனமான விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்தவேண்டும்,
அறிவை வளர்க்க வேண்டும், அது சம்பந்தமான ஆற்றலை
வளர்க்கவேண்டுமென்ற அந்த அடிப்படையிலேதான் கம்பியூட்டர்
களுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து இருக்கிறோம். பல பள்ளி
களிலே கொண்டுவந்திருக்கிறார்கள். மத்திய அரசும் பி.பி.சி.
நிறுவனத்திடம் கம்பியூட்டர் கருவிகளை வாங்கி தமிழ்நாட்டிற்கு
10 தந்திருக்கிறார்கள். மேலும் தருவார்கள் என்று நம்புகிறேன்.
நாமும் சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். 11-வது
12—வது வகுப்புகளிலே 4 பாடங்கள் படித்துக் கொண்டிருக்கிற
நிலை, மேதமேடிக்ஸ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, பையாலஜி என்ற
நான்கு பாடங்களைப் படித்தால் அவர்கள் எஞ்சினியரிங் கல்லூரிக்
கும் விண்ணப்பிக்கலாம், மெடிக்கல் கல்லூரிக்கும் விண்ணப்பிக்க
லாம் என்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அப்படி 4
பாடங்கள் கொண்டுவந்த நேரத்திலே, இன்டர்மீடியட்டிலே 3
பாடங்கள் தான் இருந்தன, பி.யு.சி.யிலே 3 பாடங்கள் தான்
இருந்தன, இப்போது 4வது பாடத்தைச் சேர்த்து இருக்கிறார்கள்
என்ற குறைபாட்டைச் சொல்லி வந்தார்கள். இப்போது நாம்
என்ன முடிவு எடுத்து இருக்கிறோம் என்றால் 4 பாடங்களிலே
கம்பியூட்டர் பகுதியையும் ஒரு கோர்ஸாக வைத்துக்கொள்ளலாம்
என்ற அனுமதியைத் தந்திருக்கிறார்கள். சில பள்ளிகளிலே அதைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். சில பள்ளிகளிலே 2 ஆண்டுகளுக்கு
முன்பாகவே வொக்கேஷனல் கோர்ஸிலே ஒன்றாக கம்பியூட்டர்
கல்வியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி 9, 10, 11, 12
ஆகிய 4 வகுப்புகளிலே கம்பியூட்டர் சம்பந்தப்பட்ட கல்வியைத்
தர முன்வந்து இருக்கிறார்கள். கம்பியூட்டர் மூலமாகப் பல



பாடங்களைச் சொல்லித் தருகிற வாய்ப்பு அந்தப் பள்ளிகளுக்குக்
கிடைக்கிறது. ஆகவே இரண்டு வகையிலேயும் மாணவர்கள் பயன்
பெறுகிற முறையிலே நல்ல மாறுதலை நாம் இப்போது கொண்டு
வந்திருக்கிறோம். அது எல்லோருடைய ஆதரவின் பேரிலே
கூடுதலாகவேண்டும், எல்லாப் பள்ளிகளிலேயும் பரவவேண்டும்
என்று நான் விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பல கருத்துக்களை இங்கே
தெரிவித்தார்கள். முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்
திட்டத்தின்கீழ் பள்ளிகளில் 1 முதல் 10 வரை படிக்கிற 55
இலட்சம் குழந்தைகள் சத்துணவைப் பெற்றுவருகிறார்கள். இந்த
மாபெரும் திட்டத்தை அனைவரும் பாராட்டியுள்ளார்கள். அந்தப்
பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் தரப்படும்
எண்ணெய் அளவு 3 கிராம் என்று இருக்கிறது. இந்தத் திட்டம்
தொடங்கிய காலத்திலே முதலிலே ஒரு ஆண்டுக்காலம் எண்ணெய்
அளவு 7 கிராமாக இருந்தது. பின்னர் சில காலம் 5 கிராமா
இருந்தது உண்மைதான். 7 கிராம், 5 கிராம் என்று எண்ணெய்
தருவது குழந்தைகளின் அன்றாடத் தேவைக்கு அதிகமானது
என்று அனுபவத்திலே ஊட்டச்சத்து வல்லுநர்கள் கருத்து அடிப்
படையிலே கண்டறியப்பட்டது. இப்போது 15-9-1984-லிருந்து
எண்ணெய் அளவு 3 கிராமாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது
என்ற செய்தியை எனக்குத் தந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு செ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சத்துணவைப்பற்றி
சிறப்பான கருத்துக்களை அமைச்சர் அவர்கள் தெரிவித்துக்
கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்குக் கிராமங்களிலே இருக்கிற
பள்ளிகளிலே சத்துணவு வாங்கிக்கொண்டு பிள்ளைகள் வீட்டுக்குச்
சென்று விடுகிறார்களே அதைப்பற்றி அமைச்சர் அவர்களுடைய
கருத்து என்ன?

(முற்பகல் 11-40)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இப்படிப்புகார்களை தனித்தனியாக எழுதிக்
கொடுத்தால் அதை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்குச் சொல்லி,
அதிகாரிகளுக்குச் சொல்லி அந்தப் புகார்களைக் கவனிக்க
ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

அடுத்து, வரும் 1985-86 ஆம் ஆண்டிலிருந்து 1 முதல் 8
ஆம் வகுப்பு வரை பயிலும் தகுதியுள்ள ஏழைக் குழந்தைகளுக்குச்
சீருடையும், பாட நூல்களும் இலவசமாக வழங்கியிருப்பதை
மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்று இருக்கிறார்கள். 1 முதல்
8 வகுப்பு வரையில் சத்துணவுப் பெற்று வரும் குழந்தைகள்
அனைவரும் இந்தச்சலுகைகளைப் பெறுவார்கள்.

அடுத்து, கட்டிடங்களைப் பொறுத்தவரையில் ஆண்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆண்டுக்கு உறுப்பினர்கள் தங்களுடைய இங்கே மாண்புமிகு வருகிறார்கள். அது உண்மை தான். கருத்துக்களை தெரிவித்து பள்ளிக்கூடங்களை ஆரம்பித்ததிலே காட்டிய 36 ஆண்டுக் காலத்திலே தேவையான காரியங்கள் செய்வதிலே ஆர்வத்தை அதற்கு கட்டிடங்கள் கட்டவில்லை. நாம் காட்டவில்லை, அதற்கு ஏற்ப நாம் செய்யவில்லை. தேவையான கருவிகளையும்

மாண்புமிகு புரட்சித்தலைவா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகுதான் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக எல்லாதொடக்கப் பள்ளிகளுக்கும் குறைந்தது ஒரு கட்டிடமாவது நல்ல கட்டிடம் இருக்கவேண்டும் என்ற திட்டத்தை நாம் ஆரம்பித்து படுத்தி முடித்து இருக்கிறோம். இது எந்த மாநிலத்திலும் செயல் இல்லாத ஒன்று ஆகும். அதேபோல் மேல்நிலைப் பள்ளிகளுக்கு புதியதாக துவக்கப்படுகின்ற மேல்நிலைப் பள்ளிகளுக்கு 2 வகுப்பறைகளும் ஒரு பரிசோதனை சாலையும் இருக்க வேண்டும் என்ற திட்டத்தை நாம் ஏற்பாடு செய்து நூற்றுக் கணக்கான பள்ளிகளில் அவைகளைக் கட்டியிருக்கிறோம். அதைப் போலவே அவ்வப்போது பெரிய அளவில் அந்த முயற்சியை மேற்கொண்டு வருகிறோம் என்றாலும் அது போதவில்லை என்று சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த ஆண்டு முதல் தடவையாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதைத் தவிர வேறு துறைகளிலும் இதற்கான பணத்தை ஒதுக்கி யிருக்கிறோம், 1977-78 முதல் 1984-85 வரையிலான கால அளவில் அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்குக் கட்டிடங்கள் கட்டி 22 கோடிக்கு மேல் செலவழித்து இதில் 640 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஒவ்வொன்றிலும் ஒரு வகுப்பு அறை, ஒரு ஆய்வுக் கூடம் கட்டுவதற்குச் செலவழிக்கப்பட்ட தொகை 12 கோடியும் அடங்கும். 1985-86 ஆம் ஆண்டு கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கீடு 1 கோடி ரூபாய் ஆகும். இந்த ஆண்டு ஒரு கோடி. அடுத்த ஆண்டு அதிகப்படுத்த முயற்சியை எடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கினாலும் சரி, 3, 4 கோடி ரூபாய் ஒதுக்கக்கூடிய நிலைமை நமக்கு ஏற்பட்டாலும் 5 ஆண்டு, 10 ஆண்டு காலத்திலே கூட அந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற முடியாது. ஏற்கனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு முறை இங்கே பேசுகிறபோது 100 கோடி ரூபாய் அளவுக்கு 5 ஆண்டுக் காலத்தில் அதற்காக ஒதுக்குவதற்கு நிதி பெற ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும் அது தனிப்பட்ட கடன் நிதியாகக் கூட ஏற்பாடு செய்யப்படும்; அல்லது அதற்காக முயற்சிக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்த முயற்சி தொடர்கிறதா? வாய்ப்பு இருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடங்கள் கட்டுவதற்கு நான் அன்றைக்கு பேசிய அந்த நிலவரத்தின்படி 100 கோடி ரூபாய் தேவைப்படும். ஆண்டுக்கு 10 கோடி கிடைத்து இருந்தாலும் 10 ஆண்டு ஆகும் என்ற கருத்தை அன்றைக்கு நான் சொன்னேன். அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். எல்.ஐ.சி. நிறுவனம், ரிசர்வ் பேங்க், நிதி அமைச்சர், வேறு சிலஅமைச்சர்களை சந்தித்து நான் பேசினேன். பேசியதில் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் முதலீடு செய்வதற்கான பிரையாரட்டி இந்த கல்விக்கு இல்லை. இது ஒரு இன்வெஸ்ட்டு மெண்டு அல்ல என்ற கருத்தை அன்றைக்குச் சொன்னார்கள். நாங்கள் அதோடு விடவில்லை. நாங்கள் சொல்லுகிற கருத்துக்கள் எற்கப்படலாம் என்ற நிலைமை இன்றைக்குப் பிரதமர் அவர்களும், கல்வியை பற்றிப் பேசுவதன் மூலம் நாங்கள் கொஞ்சம் நம்பிக்கை பெற்று இருக்கிறோம்.

அது மட்டும் அல்ல, உலக வங்கி போன்ற உலக நிறுவனங்கள் எல்லாம் கல்விக்குச்செலவழிக்கின்ற பணம் இன்வெஸ்ட்டுமெண்டு தான் என்கின்ற கருத்தை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அந்தக் கருத்தை முன் வைத்து பிரதமர் அவர்களையும், நிதி மந்திரி அவர்களையும் அணுகி இதில் செலவு செய்கின்ற பணம் இன்வெஸ்ட்டுமெண்டுதான். இது ஒரு சிறந்த நேஷனல் இன்வெஸ்ட்டுமெண்டு என்ற அளவில் வற்புறுத்தி நாம் அதிலே அவற்றைப் பெறுவோமானால் ரிசர்வ் வங்கியின் சிபாரிசின் பேரில் எல்.ஐ.சி. மற்ற தேசியமயமாக்கப் பட்ட வங்கி போன்றவைகளிடமிருந்து நாம் குறைந்த அளவு வட்டியில் பணம் பெறமுடியும். அந்த முயற்சியை மீண்டும் நாம் தொடரலாம் என்ற கருத்தை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சின்ன ஆலோசனையைக் கல்வி அமைச்சர் அவர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். மத்திய அரசு ஒத்துக்கொள்ளுமானால் பொது மக்களிடமிருந்து கல்வி வளர்ச்சிக்கு, கட்டிடத்திற்கு சாதாரணமாக ரிசர்வ் வங்கி வழங்குகிற அந்த வட்டி அளவில் வட்டி வழங்கி ஆண்டுக்கு 10 கோடி, 20 கோடி ரூபாய் கடன் எழுப்புவதற்கு அரசு முன்வருமானால் பொதுமக்களும் அந்தக் கடன் நிதியைத் தங்களுக்குச் சமூக நலன் என்ற அடிப்படையிலும் தங்களுக்குக் கிடைக்கின்ற சிறு வட்டிக்கும் அந்தத் தொகையை செலுத்தக் கூடிய சூழ்நிலையை நாட்டில் உருவாக்க முடியும் என்று நான் கருதுகிறேன். அந்த ஆலோசனையையும் மத்திய அரசோடு எடுத்து அதை நிறைவேற்ற முயற்சிக்கலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளையும் நாம் ஆராய்ந்து அந்த அடிப்படையில் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆகவே

மத்திய அரசை அணுகி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மத்திய அரசினுடைய துணையோடு என்ன திட்டங்களைக் கொண்டுவர முடியும் என்று பார்த்து யோசித்து பொது மக்களிடத்தில் இருந்து கடனை எழுப்பினாலும் சரி, அல்லது வங்கிகளிலே தரத் தயாராக இருக்கிறார்கள்; எல்.ஐ.சியிலேயும் தரத் தயாராக இருக்கிறார்கள்—ஆனால் அவர்கள் தருவதற்கான வழிமுறைகள் இல்லை என்ற குறையைத்தான் என்னிடத்திலே சொன்னார்கள். கேபினட் மீட்டிங்கை வைத்து, கேபினட் அளவில் நாம் ஒரு முடிவு இதுபற்றி எடுக்கவேண்டும். அதை எடுத்து விடுவார்களானால் எப்படி வேண்டுமனாலும் பணத்தை பெற்று இந்தக் கட்டடங்கள் பிரச்சினையை நாம் தீர்த்துக் கொள்ளலாம்.

அடுத்து பயிற்சி மொழி என்று ஒன்று இன்றைக்கு மக்கள் மத்தியில் இருந்து வருகிற முக்கியமான பிரச்சினையாகும். இந்த ஆண்டு பாலிடெக்னிக்குகளில் படிக்கின்ற மாணவர்கள் பரீட்சை எழுதுகிறபோது விரும்பினால் தமிழில் பரீட்சை எழுதலாம் என்று அனுமதித்திருக்கிறோம். 10-வது படித்துவிட்டு பாலிடெக்னிக்குகளில் வந்து சேருகிற மாணவர்கள் ஆங்கிலத்தில் படிக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். அதைவிட தேர்வு எழுதுவதில் இன்னும் அதிகமாகச் சிரமப்படுகிறார்கள். அவர்கள் ஆங்கிலத்திலே படித்தாலும் அல்லது ஆங்கிலமும், தமிழும் கலந்து படித்தாலும் அவர்கள் விரும்புகிற தமிழில் ஆங்கில வார்த்தைகளைக் கலந்து எழுதினாலும் சரி அவர்கள் பரீட்சை எழுதலாம் என்கிற ஒரு அனுமதியை நாம் தந்திருக்கிறோம். அதோடு கூட இன்ஜினியரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுக்கான தமிழ் நூல்களை எழுதுவதில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து பல புத்தகங்களை இரண்டாண்டுக்கான புத்தகங்களை எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்னொன்று. சுயநிதி ஆதாரத்தோடு நடைபெறுகின்ற கல்வி நிறுவனங்களைப் பற்றியதாகும். முழுவதுமாக நான் அதைப்பற்றிச் சொல்லவில்லை என்றாலும் கூட நாம் பட்ட நிபந்தனைகளைப் போட்டிருக்கிறோம், எவ்வாறு, எந்த அடிப்படையில் கண்காணிக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் சுயநிதி ஆதாரத்தோடு இயங்கும் பள்ளிகளுக்கு அவ்வப்போது நேரில் சென்று அவைகளில் ஏற்படுத்தியுள்ள வசதிகளை ஆய்வு செய்கிறார்கள். பணத்தை எப்படி செலவு செய்கிறார்கள் என்பதை எல்லாம் நாம் பார்க்கிறோம். ஒவ்வொரு பொறியியல் கல்லூரியும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இத்தகைய அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்பு பல்கலைக் கழகங்களின் ஆய்வுக் குழு ஒன்றை அந்தப் புலங்களுக்கு அனுப்பி அவற்றிலே ஏற்படுத்தப்



பட்டிருக்கின்ற வசதிகளை ஆய்வு செய்து ஒவ்வொரு ஆண்டும் தற்காலிக ஒப்புதலை வழங்கவேண்டும். சுயநிதி ஆதாரத்தோடு இயங்குகின்ற தொழில் நுட்பப் பயிலகங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ள வசதிகளை ஆய்வு செய்யவும், மற்றும் அவர்களுக்குக் கூடுதல் பணிமனைகள் மற்றும் ஆய்வுக் கூடங்களை அமைத்துக் கொடுக்கவும், தகுந்த ஆலோசனைகளை வழங்கவும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களின் முதல்வர்கள் அடங்கிய இரு நபர்களைக் கொண்ட ஆய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. பொறியியல் கல்லூரிக்கான பரிசீலனைக் குழு அமைக்கப்படுகிறது. தொழில் நுட்பப் பயிலங்களுக்கான பரிசீலனைக் குழு தனியாக அமைக்கப்படுகிறது. தொழில் கல்விக்காக அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதிலே உள்ள வழிமுறைகள் பற்றி ஆராய்ந்து தக்க முடிவுகளை மேற்கொள்கிறார்கள்.

அதற்கடுத்து தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் பற்றி இங்கே அதிகமாகப் பேசப்படவில்லை என்றாலும் கூட அதனால் பல நன்மைகளை நாம் பெறுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரிகளின் தரம் உயர இந்த நாட்டிலே 36 ஆண்டுக் காலத்தில் உருப்படியாக ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம் என்றால் அது தன்னாட்சி உரிமையைத் தருவதுதான். அவர்களே பாடத் திட்டங்களை வகுத்துக் கொள்ளவும், புத்தகங்களை வைத்துக்கொள்ளவும், பயிற்சி முறைகளை வகுத்துக்கொள்ளவும் தேர்வுகளை நடத்தவும், தேர்வு முடிவுகளைப் போடுவதுமான அந்த உரிமைகளைத் தருவதன் மூலமாக அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்களின் ஈடுபாடு அதிலே ஏற்பட்டு இன்றைக்கு அந்தக் கல்வியின் தரம் உயர்ந்திருக்கின்றது. இப்படிப்பட்ட நிறுவனங்களில் படித்த மாணவர்களில் பலபேர் போட்டிப் பரீட்சைகளில் கலந்து கொண்டு நல்ல தேர்வினைப் பெற்றிருக்கிறார்கள். வெளி நாடுகளில் கூட பல்வேறு ஆராய்ச்சிகளைச் செய்வதற்கான பல்வேறு ஸ்காலர்ஷிப்களை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இப்படி தரம் உயர்ந்த மாணவர்களாக அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜாப் ஓரியன்டட் கோர்ஸ் என்ற பல்வேறு வகையான புதிய கோர்ஸ்களை எல்லாம் ஏற்பாடு செய்து அவர்கள் இந்தக் கல்லூரிகளில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அது மற்ற பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் நல்லதொரு வழிகாட்டியாக இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லி தன்னாட்சி உரிமை பெற்ற கல்லூரிகள் சிறப்பான முறையில் நடைபெறவேண்டும், அது மேலும் பல கல்லூரிகளுக்கு விரிவுபடுத்தப்படவேண்டும், தன்னாட்சி உரிமை பெற்று ஐந்தாறு ஆண்டுகள் ஆன கல்லூரிகள் டீம்ட் யூனிவர்சிட்டியாக மாறவேண்டும் என்பதுதான் பல்கலைக் கழகத்தினுடைய மானியக் குழுவினுடைய நோக்கமாகும். அப்படிப்பட்ட அளவுக்குத் தரம் உயர்ந்த நிலையில்

இன்றைக்கு சில கல்லூரிகள் வந்திருக்கின்றன என்பதையும் இந்தியாவிலேயே இருக்கின்ற 19 கல்லூரிகளில் 16 கல்லூரிகள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன என்பதையும் சொல்லி அந்தத் துறையில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

கடைசியாக, ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் சம்பந்த மாக சில முடிவுகளை நாம் எடுத்திருக்கிறோம். அண்மையில் ஆசிரியர் சங்கங்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகின்றன. அவற்றிலே சில கோரிக்கைகள் குறித்து அரசு எடுத்துள்ள முடிவைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஓய்வு பெறும்போது ரூ. 10,000 வழங்குவதற்கான தமிழ்நாடு சிறப்பு வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை திட்டத்தினை தனியார் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தும் ஆணை விரைவில் வெளியாகும்.

பணிக்காலத்தில் இறந்துவிடுவோர் குடும்பத்திற்கான உதவித் தொகை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தும் சலுகையை உள்ளாட்சி மன்றம் மற்றும் தனியார் பள்ளி நிறுவனப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தும் ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

அரசுப் பள்ளிகளில் 3-3-1973-க்குப் பிறகு தற்காலிகப் பணியில் சேர்ந்து பின்னர் தேர்வாணைக் குழுவால் தேர்ந் தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், மொழி ஆசிரியர்கள் மற்றும் உடற்பயிற்சி இயக்குநர்கள் ஆகியோர்களுடைய பணியை அவர்கள் பணிக்காலத்தில், பணி முறிவு இல்லாமல் இருப்பதற்கு உட்பட்டு அவர்கள் தற்காலிகப் பணியில் சேர்ந்த தேதி முதல் வரன்முறை செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் பணி செய்யும் உட் படுத்தப்பட்ட ஆசிரியர்களில் கணிதம் மற்றும் அறிவியல் பாட ஆசிரியர்களுக்கு ஏற்கனவே 10 மாத பட்ட மேற்படிப்புச் சான்றிதழ் வகுப்பு நடத்த அரசு ஆணையிட்டுள்ளது.

அதேபோன்ற சான்றிதழ் பயிற்சியை வரும் 1985-86 ஆம் ஆண்டில் பொருளாதாரம், மனையியல், நிலயியல் போன்ற பாட ஆசிரியர்களுக்கும் நடத்த அரசு முடிவு செய்து அதற் கான நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த அரசு ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை எப் பொழுதும் பரிவுடன் கவனித்து தக்க நடவடிக்கையை அவ்வப் போது எடுத்து வருவது ஆசிரியர் பெருமக்களுக்கு நன்கு தெரியும். அவர்கள் தங்கள் போராட்டங்களைக் கை விட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் காலம் தாழ்த்தாது சம்பளம் கொடுப்பதற்கான ஏற்பாடு— தனியார் பள்ளிகள் பலவற்றில் ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கடைசி வேலை நாளன்று சம்பளம் கொடுக்கப் படாமல் சிலபல இடங்களில் தாமதம் ஏற்படுகிறது. அதனைத் தவிர்ப்பதற்காக அரசு புதிய சம்பளப் பட்டுவாடா முறை ஒன்றை விரைவில் அமுல்படுத்த இருக்கிறது. அதன்படி உதவிக் கல்வி அதிகாரிகள், மாவட்டக் கல்வி அதிகாரிகள், மற்றும் பெண்கள் பள்ளி ஆய்வாளர்கள் ஆகியோர் பெயர்களில் தனி வைப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டு அவற்றின் மூலம் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் கடைசி வேலை நாளன்று சம்பளம் தர ஏற்பாடு செய்யப்படும்.

கல்லூரிக் கல்வி உடற்பயிற்சி இயக்குநர்கள் மற்றும் நூலகர்களுக்கு ரூ. 700-1,600 என்ற ஊதிய விகிதத்தைச் சில நிபந்தனைகளுக்குட்பட்ட ஊதியம் அளிப்பதற்கும் அவர்களுள் முழுக் கல்வித் தகுதி வாய்ந்தவர்களுக்கும் முழு கல்வித் தகுதி பெற்ற நாளிலிருந்து ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு நிலுவைத் தொகை வழங்கவும் ஆணைகள் வெளியிடப்படும். முழுத் தகுதி பெறாத நூலகர்கள் மற்றும் உடற்பயிற்சி இயக்குநர்களுக்கும், ரூ. 700-1600 என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கவும் ஆனால் இவர்கள் 1-4-1980-லிருந்து எட்டு ஆண்டுகளுக்குள் முழுக் கல்வித் தகுதிகள் பெற வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படும்.

பிற சலுகைகள்-தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் அரசு நிதியிலிருந்து வழங்க அரசு இசைந்து அதற்கான ஆணைகள் வெளியிடப்படும்.

ஓய்வு பெறும்போது ரூ. 10,000 வழங்கும் திட்டமும் தனி யார் கல்லூரிப் பணியாளர்களுக்கும் விரைவில் விரிவாக்கப்படும்.

பணிக் காலத்தில் இறந்து விடுவோருக்கான உதவித் தொகையை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தும் சலுகை தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கும் விரிவாக்கப் பட்டுள்ளது.

சென்னை அடையாறிலுள்ள தொழில்நுட்பவியல் நிறுவனங் களின் வளாகத்தில் தொழில்நுட்பவியல் மற்றும் பொறியியல் சார்ந்த புத்தகங்களைக் கொண்ட சிறப்பு நூலகம் ஒன்றைப்

பொது நூலகத்துறை ஏற்படுத்தி நடத்தவிருக்கிறது. இது தொழிற்கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்' அந்தத் தொழில் நுட்பவியல் நூலகம் அமைப்பதற்கான நிலத்தை ஒதுக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

அதற்கடுத்து, இந்த 10 (ஏ) (1) என்ற விதியின் கீழ் இன்றைக்கு பல்வேறு கல்வி, அரசு நிறுவனங்களில் ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இதை முக்கிய பிரச்சனையாக வைத்துதான் இன்றைக்கு ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தேர்வாணைக் குழுவிலே 1,800 பேர்கள் இன்றைக்கு ஆசிரியர்கள் கலந்து கொண்டதில் 800 பேர்கள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1,000 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தினால் 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் பணியாற்றிய அவர்கள் இன்றைக்கு அல்லல் படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை வைத்துதான் இன்றைக்குப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பிரச்னையும் அரசு நன்கு பரிசீலிக்கும்என்கிற உறுதியை இங்கே நான் தெரிவித்து, ஆசிரியர்களுடைய நலன்களில் இந்த அரசு பல்வேறு விதத்திலேயும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது எனபதைக் கூறி அத்தனை ஆசிரியர் சங்கங்களும் நல்ல ஒத்துழைப்பு தரவேண்டும், அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதில் நாம் ஒன்றுபட்ட முயற்சிகளை மேற்கொள்வோம் என்று கூறி, அவர்களை நான் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சொல்லப்பட்ட பல்வேறுபட்ட கருத்துக்களுக்கு நேருக்கு நேரான பதிலை நான் சொல்ல நேரம் போதவில்லை யென்றாலும் பொதுவான சில கருத்துக்களை, தெரிந்துகொள்ள வேண்டி, நான் சொல்ல வேண்டிய சில கருத்துக்களைச் சொன்னேன். பலவற்ற்றை நான் சொல்லவில்லை என்றாலும் கவனத் திலே எடுத்துக்கொண்டு அந்தக் கருத்துக்களை நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம் என்ற உறுதியினைத் தந்து நான் என்னுடைய பேச்சை முடிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருமனதாக இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தேர்வாணைக் குழு பிரச்னை பற்றி....

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தேர்வாணக் குழு பற்றிய அந்தப் பிரச்னையில் நாம் பரிசீலித்து நடவடிக்கை எடுப்போம். ஒரு பிரச்னையினால் இன்னொரு பிரச்னை ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன், ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இன்றைக்கு தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு வெட்டுத் கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மானியக் கோரிக் கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.



திருவாளர்கள் கி. கிருஷ்ணமூர்த்தி, கு. சுப்பராயன், வை பாலச்சந்திரன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

திருவாளர்கள் சு. பாலன், கு. ரமணி ஆகியவர்களுடை வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 4,67,99.53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

4. அரசினர் சட்ட முன்வடிவகள்—தொடர்ச்சி.

(இ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1985.

(ஈ) மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1985

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு மற்றும் மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவு ஆகிய இரண்டு சட்ட முன்வடிவு களையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் முன்மொழியலாம். இரண்டு சட்ட முன்வடிவுகள் மீதும் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். விவாதம் முடித்தவுடன் சட்ட முன்வடிவுகள் தனித்தனியாக பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானங்களை மொழி கிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 22/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு @(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு. எண். 23/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்

தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் நீண்டகாலமாக பதவியில் இல்லாமல் இருப்பதாலும், நகராட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டும் என்ற கருத்தை சட்டப்பேரவை மற்றும்

@1985 ம் ஆண்டு ஏப்ரல் 8–ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மேலவை உறுப்பினர்கள் வலியுறுத்தி வந்ததாலும், வருகிற செப்டம்பர் மாதம் 9 ஆம் தேதி நகராட்சி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய தேர்தல்களை ஒரே நாளில் நடத்தலாமென அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர் தேர்தல்களில் 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டோருக்கும், 15 விழுக்காடு பெண்களுக்கும் தனியிட ஒதுக்கீடுகள் செய்து 1984-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் தேதி நகராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டது. எனினும், இந்தத் தனியிட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடத்தவிருந்த தேர்தலை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதால், சென்னை உயர்நீதி மன்றம் ஏற்கனவே இது குறித்து டெல்லி உச்சநீதி மன்றத்தில் ஒரு மேல்முறையீடு நிலுவையில் உள்ளதால் அதன்மீது தீர்ப்பு தெரிந்த பின்னரே ஊராட்சி, நகராட்சி தேர்தல்களை நடத்துவது நல்லது என்று கருத்து தெரிவித்து உள்ளாட்சித் தேர்தல்களை ஏப்ரல் 28 ல் நடத்துவதற்கு தடை விதித்தது. எனவே, நகராட்சி தேர்தல்களை மேலே குறிப்பிட்டப்படி நடத்தமுடியாமல் போய் விட்டது.

இச்சூழ்நிலையில் நகராட்சி உறுப்பினர் மற்றும் தலைவர் தேர்தல்களில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டோருக்கும், 15 சதவீதம் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யும் முறையை ரத்து செய்துவிட்டு, ஏற்கனவே நடைமுறையிலிருந்து வந்த பழைய முறையான தாழ்த்தப்பட்டோர் மற்றும் பெண்களுக்கும் சேர்த்து நகராட்சி வார்டுகளில் மட்டும் 25 சதவீதத்திற்கு மிகாமல் ஒதுக்கீடு செய்யும் முறையைக் கொண்டு வந்து, உடனடியாக நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான வழிமுறைகளை அரசு ஆராய்ந்தது. அவ்வாறு, பழைய முறையைக் கொண்டுவர வேண்டுமென்றால் முதலில் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் செய்யப்பட்ட வார்டு பிரிவினைகள் மற்றும் தனியிட ஒதுக்கீடுகளை ரத்து செய்யவேண்டும், இவ்வாறு ரத்து செய்து 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் மீண்டும் வார்டுகளைப் பிரித்து, பழைய முறையில் 25 சதவீதத்திற்கு மிகாமல் வார்டுகளில் மட்டும் தனியிட ஒதுக்கீடு செய்து, வாக்காளர் பட்டியல்களை திருத்தியமைத்து தேர்தலை நடத்த வேண்டும். இவ்வாறு 98 நகராட்சிகளைக் கலந்து செய்வதற்கு குறைந்தபட்சம் ஒன்பது மாதங்களுக்கு மேல் ஆகும். வார்டு பிரிவினை செய்ய நான்கு மாதங்கள், வாக்காளர் பட்டியல் தயாரிக்க நான்கு மாதங்கள், தேர்தல் நடத்த ஒரு மாதம். நகராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று அரசு கருதியதால் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் ஏற்கனவே கொகப்பட்டுள்ள நகராட்சி வார்டுகளையும், 25 சதவீதத்திற்கு மிகாமல் வார்டுகளில் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டதையும்



உடனடியாக அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்று அரசு முடிவு செய்தது. இவ்வாறு பழைய முறையை பின்பற்ற வேண்டுமென்றால் தற்போதைய நகராட்சி சட்டபிரிவுகளில் இதற்கேற்ப மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதற்காக இச்சட்ட முன் வடிவில் வகை செய்யப்பட்டுள்ளது. நகராட்சி வாக்காளர் பட்டியல்கள் 1-1-1984 அன்று 18 வயது அடைந்தவர்களின் பெயர்களைச் சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளன. இப்போது 1-1-1985 அன்று 18 வயதடைந்தவர்களின் பெயர்களையும் 'சம்மரி ரிவிஷன்' முறையில் சேர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வார்டு பிரிவினை 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் இருந்தாலும், வாக்காளர்கள் பட்டியல்களில் 1982 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று 18 வயது எய்தியவர்களைக் கொண்டதாகத்தான் இருக்கும். ஆகவே, இந்த திருத்தத்தினால் 1-1-1985 அன்று 18 வயதடைந்த வாக்காளர்கள் எவரும் வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரும் என்ற ஐயத்திற்கே இடமில்லை.

(நண்பகல் 12.00)

நகராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் முன்னர் 3 ஆண்டுகளாக இருந்தது. தமிழ்நாடு சட்டம் 22/1971ன் கீழ் இவர்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. எனினும் ஒரு சட்டமன்றப் பேரவைக்கு 5 ஆண்டு காலம் என இருப்பதால் இக்கால அளவிற்குள் நகராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை அரசு பரிசீலித்து மேல் நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் நகராட்சி மன்ற உறுப்பினர் மற்றும் தலைவர்களின் பதவிக் காலத்தை நான்கு ஆண்டுகளாக மாற்றி அமைக்கலாமென அரசு முடிவு செய்தது. இதற்கு இச்சட்ட முன்வடிவில் வகை செய்யப்பட்டுள்ளது.

நகராட்சித் தேர்தல்கள் நடைபெற்று முடிந்தபின் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவதற்கான முடிவுகள் எடுக்கப்படும். எனவே இச்சட்ட முன்வடிவினை இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த சட்ட முன்வடிவு. தலைவரவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சித் தலைவர்களுக்கான பதவிகளில் 18 விழுக்காட்டிற்கு மிகாமலும், ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கான பதவிகளில் 18 விழுக்காட்டிற்கு மிகாமலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தை சேர்ந்தவர்களுக்காக தேர்தல்களில் தனி இட ஒதுக்கீடு செய்ய வகை செய்யப்பட்டது. இதைப் போன்றே மேற்கூறிய பதவிகளில் பதினைந்து விழுக்காட்டிற்கு மிகாமல், பெண்களுக்கும் தனி இட ஒதுக்கீடு செய்யவும் வகை செய்யப்பட்டது.

அரசு அதன்படியே தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர்கள் ஆகியோருக்காகவும், பெண்களுக்காகவும், ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிகளில் இடங்களை ஒதுக்கீடு செய்து 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 மற்றும் 23ஆம்

தேதிகளில் ஊராட்சிகளுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் களை நடத்துவதற்கு அறிவிப்பு பிறப்பித்தது. ஆனால் மேற் சொன்ன பதவிகளில் ஒதுக்கீட்டிற்கு எதிராக நீதிப் பேரவை மனுக்களை ஏற்றுக்கொள்கையில், சென்னை உயர்நீதி மன்றம், புது டில்லி உச்ச நீதிமன்றத்தின் முன்பு ஒதுக்கீட்டுக் கொள்கைக் கெதிராக உரிமையியல் மேல் முறையீடொன்று நடப்பிலிருக்கிறது என்ற வாதத்தின் பேரில் இம்மாநிலம் முழுவதிலும் மேற்சொன்ன தேர்தல்களை நடத்துவதற்கு தடையுத்தரவு வழங்கியுள்ளது.

தற்போது இம்மாநிலத்தில் உள்ள ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் நீண்ட நாட்களாக மற்றும் தெடுக்கப்பட்ட . உறுப்பினர்கள் இல்லாமல் தேர்ந் மேலும் புது தில்லி உச்ச நீதி மன்றத்தின் முன்பு இருக்கிறது. கின்ற உரிமையில் மேல்முறையீடு தீர்க்கப்படுவதற்கு நடப்பிலிருக் சில காலம் ஆகலாம். எனவே, இந்தச் சட்டப் பிரச்னைகளை இன்னமும் தீர்க்க ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிகளுக்கு தனி இட ஒதுக்கீடு இல்லாமலேயே ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியமன்றங்களுக்கும் தேர்தல் களை நடத்த அரசு தீர்மானித்துள்ளது. அதன் பொருட்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் ஊராட்சி தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பதவிகளுக்கு உள்ள தனி இட ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட பிரிவுகளை ரத்து செய்ய இச்சட்ட முன்வடிவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தனி இட ஒதுக்கீடு செய்யப்படுவதற்கான பிரிவுகளை ரத்து செய்வதால, ஊராட்சி ஒன்றிய மன்றங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களும், மற்றும் பெண்களும் தேர்தல் வாயிலாக இடம் பெறாமல் போவதற்கு வாய்ப்புள்ளது. மேலும் தற்போது அரசு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற பல ஏழ்மை ஒழிப்புத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்களில் நிறை வேற்ற திட்டமிட்டுள்ளது. மேலும் திட்டங்களை பரவலாக்குதல் (பிளான் டிசென்ட்ரலைசேஷன்) என்ற அடிப்படையில் மேற்கூறிய திட்டங்களை நல்ல முறையில் திட்டமிடும் பொறுப்பையும் ஒன்றி யங்களின் பால் ஒப்படைக்கப்படவுள்ளது. இந்தப் பணிகளை நல்ல முறையில் செயலாற்ற கிராம வளர்ச்சியில் மிகுந்த நாட்டம் கொண் டவர்களையும், கிராமத் தொழில் நுட்பவியல் (ரூரல் டெக்னாலஜி) வல்லுநர்களையும் புகுத்தி அத்தகையோரின் ஆலோசனையை ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் பெறும் என்ற நோக்கத்துடன் தேர்தல் மற்றும் ஒத்து தெரிவு செய்து கொள்வது (கோ-ஆப்ஷன்) என்ற முறைகளோடு, நியமன முறையை (நாமினேஷன்) சேர்க்கவும் அரசு கருதியுள்ளது. ஏனெனில், பொதுவாக இத் தகைய வல்லுநர்கள், தேர்தல், ஒத்துத் தெரிவு மூலம் உறுப்பினர் களாவதற்கு போதிய வாய்ப்பிராது. ஆகவே, நிச்சயமாக இத் தகையவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய மன்றத்திலும் இடம் பெற வேண்டும் என்ற நல்லதொரு நோக்கத்துடன், இதற்கான சட்ட முறைகளை சட்ட முன்வடிவில் சேர்க்கப்பட்டுள்ளன,



தற்போது ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்ற உறுப் பினர்கள் மற்றும் இம்மன்றங்களின் தலைவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக உள்ளது. பொதுவாக ஐந்து ஆண்டுகள் என்பது மிக நீண்ட காலமாகும். குறைந்த கால அளவுக்கு அவர் களது பதவிக்காலம் அமைந்தால், திட்டங்களை தமது பதவிக் காலத்திற்குள் விரைவாக முடிக்க வேண்டும் என்ற உணர்வு ஒவ்வொரு உறுப்பினர்களின் உள்ளத்திலும் ஏற்படும். பொது மக்களும் குறுகிய காலத்தில் நல்ல பலன்களை அடைய வாய்ப்பு உண்டு. எனவே ஐந்து ஆண்டுகள் இருந்த பதவி கால அளவை நான்கு ஆண்டுகளாக குறைக்க இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது.

எனவே இந்த சட்ட முன்வடிவினை இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன். நடைபெற இருக்கிற ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நகராட்சி தேர்தல்கள் அரசியல் கட்சி அடிப்படையில் நடைபெறாது. பல்வேறு அரசியல் கட்சிகள் இல்லாமல் தனித்துதான் நடை பெறும். சுயேட்சையாக தனித்துதான் நிற்க வேண்டி இருக்கும். காரணம் பேரறிஞர் அண்ணா அவர்களும் பெரியார் அவர்களும் அரசியல் கட்சிகள் ஊராட்சிகளிலே, நகராட்சிகளிலே, மாநக ராட்சிகளிலே புகத் தேவையில்லை என்ற கருத்தை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அதே கருத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் சார்பற்ற முறையில், அரசியல் கட்சிகள் இல்லாமல் இந்தத் தேர்தல்களை நடத்துவது என்று அரசு முடிவு செய்தி ருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொண்டு, அண்ணா வழியில் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த சட்ட முன் வடிவுகளை அவை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு, அமைச்சரிட மிருந்தும், அமைச்சர் மூலமாக இந்த அரசிடமிருந்தும் ஒரு விளக்கத்தை முதலிலே நான் பெற விரும்புகிறேன். அதாவது நீங்கள் முதலிலே கொண்டு வந்த சட்டத்தின்படி 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், 15 சதவீதம் பெண்களுக்கும் என்று ஒதுக்கிடு செய்தீர்களே இந்தக் கொள்கையை அரசு கைவிட்டு விட்டதா, அல்லது இந்தக் கொள்கையிலே அரசு நிலையாக இருக்கிறதா ?என்பதை முதலில் அமைச்சர் பெருமகனார் பதில் சொன்னால், நான் கொடுத்துள்ள, இந்த சீர்திருத்தங்களைப் பற்றி, இந்த அவையில் விளக்கம் சொல்லி, அதைப்பற்றி விளக்குவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே இதற்காக பதிலை அமைச்சர் அவர்களிடமிருந்து தலைவர் அவர்கள் பெற்றுத் தரும் படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசி முடித்தவுடன்
அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் இப்போது
தொடர்ந்து பேசுங்கள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கொண்டு வந்துள்ள சட்டத்திலே, ஏதோ உயர்நீதி
மன்றத்திலே தடைகள் இருந்ததனாலே, இந்தத் தேர்தல்கள்
நடத்தப்படவில்லை என்ற கருத்து வலியுறுத்தப்பட்டாலும்கூட,
உயர்நீதி மன்றத்திலே இந்தச் சட்டங்கள் அரசுக்குச் சாதகமாக
அதாவது இந்த ரிசர்வேஷன் பாலிசி செல்லும் என்று தீர்ப்பு
வழங்கப்பட்டது என்ற விவரம் சரியாக குறிப்பிடாவிட்டாலும்
கூட, இன்றைக்கு இந்த உயர்நீதி மன்றத்திலே இந்த சட்டங்கள்
ஏற்றுக் கொள்ளப்பட்டன. இன்றைக்கு உச்சநீதிமன்றத்திலே
இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் அப்பீல் செய்ததன
மாக மீண்டும் கொண்டுவரப்பட்ட, இந்த நோட்டிபிகேஷன்மீது
தான் அங்கே தடை இருக்கிறதே தவிர, ரிசர்வேஷன் பாலிசி
தவறு என்பதற்காகத் தடையில்லை. ஆனால், இன்றைக்குக்
கொண்டு வரப்பட்ட, இந்தச் சட்டங்களில் என்ன சொல்லப்பட்டு
இருக்கிறது என்று பார்த்தால், இந்த ரிசர்வேஷன் பாலிசி உள்ள
சட்டத்தை பஞ்சாயத்து ஆக்ட்லே பிரிவு 7-ன்படி உள்ள அத்தனை
பிரிவுகளும் அகற்றப்படுகின்றன. அதுபோன்ற முனிசிபாலிட்டி
ஆக்டிலே உள்ள பிரிவு 3-ன் மூலமாக இந்த ரிசர்வேஷன்
பாலிசியை அரசு கைவிட்டு விட்டது என்பது நமக்குத் தெரிய
வருகிறது. ஏற்கனவே கோர்ட்டின் மூலமாக நீங்கள் கொண்டு
வந்த சட்டம் சரியானது என்று ஏற்றுக் கொண்ட பிறகும் கூட
நீங்கள் இந்தச் சட்டத்தை இன்றைக்கு இந்தச் சட்டத்தினுடைய
பிரிவுகளில் இருந்து எடுத்தால் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கக்
கூடிய அந்த வழக்குகள் எல்லாம் இன்ப்ரக்சுவஸ் என்ற அடிப்
படையில், ஏன் என்றால், ஒரு சட்டம் சரியானதா, செல்லக்
கூடியதா, செல்லக் கூடியது இல்லையா என்ற பிரச்சனை எழும்
போது, அது சட்டத்திலே இந்தச் சட்ட வடிவு இருந்தால்தான்
இந்தச் சட்டத்தை கோர்ட் ஆராயும். எனக்கு முன்னாலே
இல்லாத ஒரு பிரச்சனை நாங்கள் ஆராய வேண்டிய அவசியம்
இல்லை என்று சொல்லி, நீதி மன்றத்திலே இந்தச் செக்ஷன்கள்
எடுக்கப்பட்டால், ஏற்கனவே இந்தச் சட்டம் வேண்டாம் என்று
சொல்பவர்களுக்கு "வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல்
கிடைத்தது போல" நீங்கள் இந்த செக்ஷன்களை இந்தச்
சட்டத்தினுடைய பிரிவுகளில் இருந்து எடுத்தால், இன்ப்ரக்சுவஸ்
என்று சொல்லி, உங்களுடைய வழக்குகள் தள்ளுபடி செய்யப்
படும். மீண்டும் ரிசர்வேஷனை கொண்டு வரவேண்டும் என்று
நீங்கள் விரும்பினால், மீண்டும் ஒருமுறை அமென்ட்மென்ட்
கொண்டு வந்து, மீண்டும் அது நீதிமன்றத்திலே விவாதிக்கப்பட்டு
மீண்டும், அது சுப்ரீம் கோர்ட்டிலே செல்ல வேண்டுமானால்
காலம் அதிகமாக நீட்டிக்கொண்டு இருக்கும். நீங்கள் இந்த
முனிசிப்பாலிடி ஆக்ட்டிலே It will not apply to this என்று சொல்லி
யிருக்கிறீர்கள். In Section 8 of the General Clauses Act-ல் effect of
the repealing என்று சொல்லும்போது, பிரிவு எப்-லே "affect any
litigation, legal proceedings, or remedy in respect of any such rights,





privileges, obligations, etc. அவைகள் இருக்கும் என்று சொல்லி
யிருக்கிறீர்கள். அப்படி இருந்தும் கூட நீங்கள் செக்ஷன் 8
அப்ளை ஆகாது என்று சொல்கிறபோது, உடனடியாக சுப்ரீம்
கோர்ட்டிலே இருக்கக்கூடிய அந்த வழக்குகள் இந்த அரசுக்கு
ஏற்கனவே சாதகமாகிவிட்டு, இன்னும் அரசுக்கு சாதகமாக ஆகக்
கூடிய வாய்ப்பு இருக்கின்ற ஒரு சட்டம் இன்றைக்கு தள்ளுபடி
செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே தான் உங்களுக்கு
உண்மையிலேயே ரிசர்வேஷன்பாலிசியிலே உண்மையான நோக்கம்
இருக்குமானால், கருத்து உடையவர்களாக இருந்தால், இந்த
செக்ஷனை இந்தச் சட்டத்திலேயிருந்து எடுத்தது தவறானது
என்ற காரணத்தாலே, நான் அமென்ட்மென்ட் கொண்டு வந்து
இருக்கிறேன். இந்த திருத்தத்தை தயவு செய்து நீங்கள்
அன்போடும் பரிவோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏன்
என்றால், நீண்ட நாட்களாக பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தப்
படவில்லை. இந்த ரிசர்வேஷனுக்காகத்தான் இந்த பஞ்சாயத்துத்
தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு வந்தனவே தவிர, இந்த ரிசர்
வேஷனை எடுத்துவிட்டால் அது மக்களுக்கு நீங்கள் செய்கின்ற
துரோகமாகும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பு
கிறேன். நான் சொன்ன இந்தக் கருத்துக்களை மனதிலே கொண்டு
இந்தச் சட்ட விதிமுறைகளை நீங்கள் சட்டத்திலே தக்கவைத்துக்
கொண்டு, ஆனால் அதே சமயத்தில் அதனுடைய ஆப்பரேசனை
மட்டும் சஸ்பென்சன் செய்தால் நான் கொடுத்திருக்கிற எக்ஸ்
பிளநேஷன்படி "For the removal of doubts it is hereby made known
that the suspension of the operation of the said sections should not be
construed as the repeal of the said sections" என்று நான் ஏற்கனவே
அதிலே ஒரு வாக்கியத்தைச் சேர்த்து இருக்கிறேன்.

(பிற்பகல் 12-10)

Next "The suspension referred to above can be raised only by an
Act of Legislature or by an Ordinance".

"Nothing done or no action taken under Tamil Nadu District
Municipalities (Amendment) Bill, 1985 (L. A. Bill No. 23 of 1985)
shall be held invalid or unlawful merely because of the suspension or
subsequent revival of sections 7-B, 7-C, 7-D, 7-E and 7-F of the
principal Act". இதே கருத்தை உடைய சட்டத்தைத்தான் நான்
முனிசிபாலிட்டி ஆக்ட்டிலும் பிரபோஸ் செய்திருந்தேன். அவ்வாறு
நீங்கள் இந்தச் சட்டத்தை திருத்துவதிலே இந்த சஸ்பென்ஷன்
செய்வதன் காரணமாக அது, அந்தச் சட்டப் பிரிவுகள், அந்தச்
சட்ட புஸ்தகத்திலேதான் இருக்கும். அதன் மூலமாக தேர்தலை
வைக்க வேண்டிய அவசியமே இல்லை. இப்போது கொண்டு
வந்திருக்கிற புதிய முறையிலேயே தேர்தலை நடத்தலாம்.
ஆனால் பிற்காலத்திலே சுப்ரீம் கோர்ட்டிலே போடப்பட்ட அந்த
வழக்கின் தீர்ப்பு நமக்கு சாதகமாக அமைந்து விடுமானால் அரசு
சொல்லியிருக்கிறபடி பெண்களுக்கென்றும், பிற்படுத்தப்பட்ட
வர்களுக்கென்றும், கொண்டு வந்திருக்கிற பலன்கள் அவர்களுக்கு
கிடைக்காது.

மேலும் இன்னொரு திருத்தத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். பஞ்சாயத்து ஆக்ட்டிலே 3-வது பிராவிசோவை அகற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம், சட்டத்திலே சொல்வார்கள் எக்ஸஸ் டெலிகேஷன் என்று. அதன்படி இப்போது இருக்கிற இந்த 3வது பிராவிசோவில் என்ன சொல்லியிருக்கிறது என்றால், "provided also that no person shall be nominated under this sub-section unless he has aptitude for rural development and possesses such other qualifications as may be prescribed." என்று மிகவும் வேகாக as vague as could be என்று சொல்வார்களே அப்படி ஒரு வேகாக (vague) இருக்கிறது.

ஏனென்றால் பஞ்சாயத்து தேர்தலிலே நிற்பவர்களுக்கு என்னென்ன உரிமைகள் உண்டு, என்னென்ன குவாலிபிகேஷன்கள் வேண்டும் என்று சட்டத்திலே ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மாறாக பொதுவாக அவர்களுக்கு நாமினேஷன் வைக்கப்படும் என்று சொன்னால், அவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள் என்றுதான் பொதுமக்கள் மத்தியிலே ஒரு அச்சத்தை விளைவிப்பதாக அது இருக்கிறது. ஆகவே சட்டத்தில் கண்டிப்பாக அந்தப் பிரிவு இருக்கக் கூடாது. அப்படி இருக்குமானால் அது ஜனநாயகப் படுகொலை என்று கூறி "Such other qualifications as may be prescribed" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, ஏற்கெனவே பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கும் முனிசிப்பாலிட்டி உறுப்பினர்களுக்கும் என்னென்ன குவாலிபிகேஷன் என்று ஏற்கெனவே உள்ள சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பதால், இந்தப் பிரிவு எக்ஸஸ் டெலிகேஷனாக இருக்கிற காரணத்தால் இதை எதிர்க்கிறேன். ஆகவே, நான் சொல்லியதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, திருத்தமாக எற்றுக் கொளள வேண்டும். அவ்வாறு செய்தால் தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பெண்களுக்கும் நீங்கள் என்னென்ன கடமைகளை செய்ய நினைக்கிறீர்களோ அதைச் செய்ய முடியும் என்று கூறி, அந்த திருத்தங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

*திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கொண்டு வரப்பட்டுள்ள ஊராட்சிகள் திருத்தச் சட்டத்தில் நான் பங்கு பெற்று, நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை சமர்ப்பிக்க விரும்புகிறேன். இன்றைக்கு கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் திருத்தச் சட்டம் என்பது ஏற்கெனவே 1981 ஆம் ஆண்டு தமிழகத்தினுடைய சட்டம் 55-ன் கீழ், தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மலை ஜாதி வகுப்பினர்களுக்கு, பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தார்கள்.





1981 வது ஆண்டு சட்டத்தின் தொடர்பாக 1983 ஆம் ஆண்டு அரசு அறிக்கை அல்லது நோட்டிபிகேஷன் மூலமாக எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது, எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது, எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் மலை ஜாதியினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கிற குறிப்புகளை தந்தார்கள். அப்படி வகைப்படுத்தப்பட்டு இன்னின்ன ஒன்றியங்கள் மலை ஜாதியினருக்கு இன்னின்ன ஒன்றியங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, இன்னின்ன ஒன்றியங்கள் பெண்களுக்கு என்று பாகுபாடு படுத்தப்பட்டதில் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அப்படி நீங்கள் பாகுபடுத்தியதில் அரசியல் நோக்கம் கலந்திருப்பதால் அந்தப் பாகுபாடு என்பது சரியான காரணங்களின் அடிப்படையில், அமையவில்லை. தகுந்த காரணத்தின் அடிப்படையில், இவைகள் பெண்களுக்கு ஒதுக்கவேண்டும், தகுந்த காரணத்தின் அடிப்படையில் இவைகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்கின்ற வகையில் ஒழுங்காக, சரியாக, ஜுடிசியஸாக ஒதுக்கப்படாமையாலும், அரசியல் செல்வாக்கு ஓங்கியிருந்த காரணத்தினாலும்பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். சென்னை உயர் நீதி மன்றம், டெல்லியில் உச்ச நீதி மன்றத்தில் ஒதுக்கீடு கொள்கை பற்றிய விவகாரம் இருப்பதால் இந்தத் தேர்தலை நடத்தக்கூடாது என்று தடை விதித்ததை காரணம் காட்டி இன்றைக்கு இந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்று இந்த மன்றத்தில் இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதிலே குறிப்பாக திருத்தத்திற்கு சொல்லப்படுகின்ற கருத்துக்கள் 'கோ-ஆப்ஷன்', நாமினேஷன். ஊராட்சி ஒன்றியத்தினுடைய குழுவில் கோ-ஆப்ஷன் பண்ணலாம். 12 ஊராட்சிகளைக் கொண்ட அந்த ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டுபேரை அவர்கள் நாமினேஷன் செய்யலாம், என்றும், இருவரை கோ-ஆப்ஷன் செய்யலாம் என்றும், 12 ஊராட்சிகளுக்கு மேலாக 20 ஊராட்சிகளுக்குள்ளாக இருக்குமானால், அதிலே மூவரைக்கோவாப்ஷன் முறையில் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் இருவரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நியமிக்கலாம் என்றும், 20 ஊராட்சிகளுக்கு மேலாக இருக்குமானால் பேரை அவர்கள் கோவாப்ஷன் முறையில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும், நான்கு பேரை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக நியமிக்கலாம் என்ற அடிப்படையில் இன்றைக்கு கோ-ஆப்ஷன், நாமினேஷனுக்கு வழிவகுத்து இருக்கிறீர்கள்.

கோ-ஆப்ஷன் பொறுத்தவரையில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நாமினேஷன் என்று வருகின்ற நேரத்திலேதான் சிக்கல் வருகிறது. நாமினேஷன் என்ற கருத்து எதற்காக இதில் சேர்க்கப்பட வேண்டும்? நீங்கள் உங்கள் சட்ட திருத்தத்தின் இறுதியில் அதற்கான காரணங்களை, நோக்கங்களை குறிப்பிட்டிருக்கிறீர்கள். நாமினேஷன், மாவட்ட ஆட்சித் தலைவரால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், பெண்களும் நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு என்ன காரணத்தைத்

தெரிவித்து இருக்கிறீர்கள்? நீங்கள் திருத்தச் சட்டத்தை கொண்டு
வருவதற்கான நோக்கம் பின்னால் சொல்லப்பட்டு இருப்பது,
இதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் எதற்காக நாமினேஷன்
செய்ய வேண்டும் என்பதை அதிலே நிச்சயமாக தெரிவிக்கவில்லை.
இதிலிருந்து நான் தெரிவிக்க விரும்புவது இந்த நாமினேஷன்
முறை என்பது உங்களுடைய அரசியல் செல்வாக்கை மறைமுக
மாக பயன்படுத்துவதற்காகத்தான் இந்த முறையை நீங்கள்
கொண்டு வந்திருக்கிறீர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்
என்பவர் ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர். ஆட்சிக் கட்சி என்ன
சொல்கிறதோ அதைச்செய்யக்கூடிய நிர்ப்பந்தத்திற்கு நிச்சயமாக
அவர் ஆளாக்கப்படுவார். எனவே மறைமுகமாக ஆட்சிக்
கட்சியினுடைய செல்வாக்கு ஊராட்சி ஒன்றியத்தில், நியமனத்
திலே நிச்சயமாகப் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவிக்க
விரும்புகிறேன். எடுத்துக்காட்டாக இந்த மன்றம் தெளிவோடு
விளங்க வேண்டும் என்பதற்காக ஒரு எடுத்துக்காட்டைத் தெரி
விக்க விரும்புகிறேன்.

12 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஒரு ஊராட்சி ஒன்றி
யத்தில் 6, 6 பேராக இரண்டு பகுதியினர் வந்துவிடுவதாக
வைத்துக்கொள்ளுங்கள். ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெரும்
தலைவர் இருக்கிறார். ஊராட்சி ஒன்றியத்தின் பெரும் தலைவர்
ஆட்சிக் கட்சிக்கு வேண்டியவராக இருப்பாரானால் மாவட்ட
ஆட்சித் தலைவராலே நியமிக்கப்படுகின்ற இருவரும் அவருக்குச்
சாதகமாக நியமிக்கப்படுவார். ஆகவே, அவர் ஆட்சிக் கட்சிக்கு
விரோதமாக இருந்தால் எதிர் அணியிலே உள்ள 6 பேரோடு
மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்கின்ற இருவரையும் சேர்த்தால்
அந்த ஊராட்சி ஒன்றியத்தில் குழப்பங்கள் உண்டாகுமே
அல்லாமல், இது ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவரின் தலைக்கு
மேல் கட்டிவிடப்பட்ட கூரிய வாளாக இருக்குமே அல்லாமல்,
நிச்சயமாக நல்ல சூழ்நிலையை உருவாக்கக்கூடிய நிலைமை,
இந்த நாமினேஷன் மூலமாக உருவாகாது என்பதைத் தெளிவாகக்
கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட
அமைப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நியமனத்தின்
அடிப்படையில்உறுப்பினர்களைச் சேர்ப்பதுஎன்பது பாண்டிச்சேரி
யில்நடைபெற்ற நிகழ்ச்சியைப் போலத்தான் இருக்கும். பாண்டிச்
சேரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களோடு இன்னும்
மூன்று பேரைச் சேர்ப்பதன் மூலம் அங்கே ஆளுகின்ற கட்சி வலு
பெறுவதற்கு வழி வகுத்தது இந்த முறை நிச்சயமாக ஒரு
ஜனநாயக முறையின் அடிப்படையில் அமைந்திடவில்லை.

இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதே குறிப்பில்
சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஊராட்சி மன்றத்தினுடைய
தலைவர் தன்னுடைய மனைவியையோ அல்லது அந்தப் பெண்ணே
ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தால் தன்னுடைய
கணவனையோ கோ-ஆப்ஷனிலே, நாமினேஷனிலே சேர்க்கக்
கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். பொதுவாக ஊராட்சி
மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களில் பெண்கள் வருவதில்லை.





கோ-ஆப்ஷனுக்கும் நாமினேஷனுக்கும் பெண்கள் முன்வருவ
தில்லை. அதற்காக அவர்கள் தங்களுடைய மனைவிமார்களை
சில நேரங்களில் சில கட்டங்களில் கோ-ஆப்ஷன் மூலமாகச்
சேர்த்துக் கொள்வது என்பது பழக்கம். எடுத்துக்காட்டாக
நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஊராட்சி
ஒன்றியத்தின் எல்லைக்குள்ளே உள்ள ஒரு பகுதியிலே பெண்
கோ-ஆப்ஷனாகச் சேர்த்துக் கொள்வதற்கு மறுப்பாரானால்
அதற்கு ஆல்டர்நேடிவ் ஆக மாற்றாக என்ன திட்டத்தை நீங்கள்
வைத்திருக்கிறீர்கள் ? என்ன வழியை பழைய சட்டத்திலே
செய்திருக்கிறீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.
அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் அதற்குத் தீர்வு
காணத்தக்க அளவுக்கு சட்டத்திலே இடம் இல்லை என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்,
ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் கட்சியின் சார்பாகப்
போட்டியிடப் போவதில்லை என்றும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி
என்ற பாகுபாடு வராது என்றும் நாமினேஷன் தாராளமாகப்
போடலாம் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும்
கூட ஜனநாயக நடைமுறைகளைப் பற்றி நான் சொல்லி
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்
தெரிந்துகொள்ளவேண்டியதில்லை என்று கருதுகிறேன். என்ன
தான் கட்சிமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு நடந்தாலும் தேர்த
லுக்குப் பிறகு தேர்ந்து எடுக்கப்பட்டவர் எந்தக் கட்சியைச்
சேர்ந்தவர் என்று பார்க்கிற நிலை வரும். அ. இ. அ. தி. மு. க.
கட்சியில் இருப்பார் அல்லது தி.மு.க.வில் இருப்பார், அல்லது
காங்கிரஸ் கட்சியில் இருப்பார். உங்கள் கட்சியைச் சேர்ந்த
வராக இருப்பாரானால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக
மறைமுகமாக ஆணை பிறப்பித்து அந்த ஊராட்சி ஒன்றியத்
தலைவர் சார்பாக இந்த இரண்டு பேரையும் நியமியுங்கள் என்று
தெரிவிக்கக்கூடிய அபாயம் அதிலே இருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன். எனவே ஜனநாயக அமைப்பிலே
நாமினேஷன் முறையைப் புகுத்துவது என்பது ஜனநாயகத்திற்கே
அடிக்கப்படும் சாவு மணியாகும் என்பதை நான் திட்டவட்டமாக
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தச் சட்டத்திருத்தத்திலே 5 ஆண்டு காலத்திற்குப்
பதிலாக இந்த ஊராட்சி மன்றங்களின் பொறுப்புகளுக்கு வருகிற
வர்கள் 4 ஆண்டு காலத்திற்குத்தான் பதவி வகிக்கலாம் என்று
அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். இதற்கு என்ன
காரணம்? நீங்கள் பட்ட எந்த அனுபவத்தின் காரணமாக இந்த
முடிவிற்கு வந்தீர்கள்? என்ன சட்ட நிர்பந்தம் ஏற்பட்டது?
அல்லது கடந்த கால அனுபவத்திலே அதனாலே மக்களுக்கு
ஏற்பட்ட சில கெடுதல்கள் அல்லது இடர்பாடுகள் என்ற

காரணத்தினாலே 5 ஆண்டுகள் என்பது 4 ஆண்டுக்காலம் என்று குறைத்திருக்கவேண்டும், ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதற்குச் சொல்லிய சமாதானம் 5 ஆண்டுக்காலம் ஆட்சி இருக்கிறது ஆகவே நான்கு ஆண்டு காலத்திலே ஊராட்சி மன்றங்களிலே என்ன என்ன பணிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிந்து ஸ்டாக் டேக்கிங் என்பதைப் போன்று அவர்கள் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கு ஆட்சிக்கு வழி இருக்கிறது, எனவே 5 ஆண்டுகளாக இருந்ததை நான்கு ஆண்டுகளாகக் குறைத்திருக்கிறோம் என்ற சமாதனத்தை சொன்னார்கள். இந்த நேரத்திலே நான் ஒரு விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த 4 ஆண்டுக் காலத்திலே ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் என்ன என்ன பணிகளை ஆற்றியிருக்கின்றன என்பதை அவர்கள் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் எப்படிப் பணியாற்றுகின்றன என்பதை கவனிப்பதற்கு வட்டார வளர்ச்சி அதிகாரிகள் இருக்கிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள், மாநில அளவிலே அதிகாரிகள் இருக்கிறார்கள்.கணக்குகள் சரியாக இருக்கின்றனவா என்று அலசிப் பார்ப்பதற்கு லோக்கல் பண்ட ஆடிட் இருக்கிறது, ஏ. ஜி. ஆடிட் இருக்கிறது.இவ்வளவும் இருக்கிறபோது எதற்காக 4 ஆண்டுகளுக்குப் பின்னாலே ஊராட்சி ஒன்றியங்களினுடைய பணிகள் முறையாக நடந்திருக்கின்றனவா என்பதைச் சரிப் பார்ப்பதற்காக நாங்கள் 5 ஆண்டுக்காலத்தை 4 ஆண்டுக் காலமாக குறைத்திருக்கிறோம் என்று சுற்றி வளைத்து (பீட்டிங் எபவ்ட் தி புஷ்) என்று சொல்வார்களே—சரியான காரணத்தைச் சொல்லாமல் இப்படிச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் 5 ஆண்டுக்காலம் ஆட்சியில் இருக்கப்போகிறீர்கள் 4 ஆண்டுக்காலத்திலே அந்த ஊராட்சி ஒன்றியங்களை முடித்து வைத்து தங்களுடைய கட்சி அரசியல் செல்வாக்கில் இருக்கிற காலத்திலேயே மீண்டும் தங்களுக்கு சாதகமானவர்களை ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகவும், ஊராட்சி மன்றத் தலைவர்களாகவும் ஆக்கிடவும் 5 ஆண்டுகளுக்குப் பின்னாலே ஆட்சி முடிந்த பின்னாலே ஊராட்சி ஒன்றியங்களிலே ஊராட்சிமன்றங்களிலே ஏற்கெனவே ஆட்சிக்குச் சாதகமானவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் மூலமாக தங்கள் ஆட்சிக்கு மீண்டும்செல்வாக்கு சேர்த்துக்கொள்ளலாம் என்ற அரசியல் உள்நோக்கம் காரணமாக 5 ஆண்டுக்காலத்தை 4 ஆண்டுக்காலமாக மாற்றியிருக்கிறீர்கள். எந்தவிதமான சட்ட நிர்பந்தமும் இல்லாதபோது எந்தவிதமான அனுபவத்தின் வயிலாகக் கிடைத்த அவசியமும் இல்லதபோது இப்படி 4 ஆண்டுகளாகக் குறைத்திருப்பது அரசியல் உள்நோக்கம் தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே மதுரை மாநகராட்சிக்கு நீங்கள் 6 ஆண்டு காலம் வைத்து இருக்கிறீர்கள். நான் கூட என்னுடைய திருத்தத்தில் தெரிவித்து இருக்கிறேன். ஏன் 6 ஆண்டு காலம் வைக்கக்கூடாது? மதுரை மாநகராட்சிக்கு 6 ஆண்டுக்காலம் வைத்துவிட்டு இந்த ஊராட்சி



ஒன்றியங்களுக்கு மட்டும் ஏன் 4 ஆண்டுக்காலம் என்று குறைக்க வேண்டும். எனவே அருள்கூர்ந்து இந்த திருத்தத்தைப் பொறுத்த வரையில் ஒன்று ஏற்கனவே இருந்த அடிப்படையில் 5 ஆண்டுக் காலம் ஆக்குங்கள் அல்லது 6 ஆண்டுக் காலம் என்று அதை ஆக்குங்கள். இல்லாவிட்டால் 4 ஆண்டுச் காலம் என்பது ஆட்சி கட்சி எப்படியாவது மீண்டும் ஊராட்சி ஒன்றியங்களுடைய பெரும் தலைவர்களாகவும், ஊராட்சி மன்றத்தினுடைய தலைவ ராகவும் தங்களுக்கு சாதகமானவர்கள் கட்சி என்ற அளவில் இல்லாவிட்டாலும் தங்களுக்கு சாதகமானவர்கள் மீண்டும் அந்த இருக்கையில் அமரவேண்டும் என்ற உள்நோக்கத்தின் அடிப் படையில் தான் இந்த சட்டத்திருத்தம் வந்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஓட்டு மொத்தமாக நாமினேஷன் என்ற முறை அகற்றப்பட்டு ஆக வேண்டும். 5 ஆண்டிலிருந்து 4 ஆண்டாக குறைக்கப்பட்டதை ஒன்று அதை 5 ஆண்டுகளாக மாற்றப்படவேண்டும் அல்லது 6 ஆண்டுகளாக அதை உயர்த்திட வேண்டும் என்ற அடிப்படையில் என்னுடைய இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர் களால் முன் வைத்து இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி ஆகியவற்றிற்கு தேர்தல் நடத்துவதற்கு முன் வைத்து இருக்கக்கூடிய இந்த சட்டத் திருத்தத்தில் இருக்கக் கூடிய முறைகளை நீக்கி இந்த சட்ட திருத்தங்கள் இப்போது முன் வைத்து இருப்பதால் ஏறத்தாழ 10 ஆண்டுக்காலமாக நடைபெறாமல் இருக்கக் கூடிய ஊராட்சி அமைப்புகளில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற ஒரு நல்ல நோக்கத்தோடு இந்த சட்டத் திருத்தம் சட்ட முன்வடிவாக வந்தாலும் அந்த நோக்கம் நிறைவேற்றக்கூடிய வகையில் அந்த திருத்தம் இருக்கவேண்டும் என்று மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்டு கட்சி சார்பில் என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். குறிப்பாக இந்த சட்ட முன்வடிவில் குறிப்பிட்டு இருப்பது இதற்கு முன்னால் இந்த அவையில் ஏற்றுக் கொண்டு அனைத்து அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு ஒரு சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு பெண்களுக்கு 15 சதவீதம், அரிசனர் அல்லது பழங்குடியினருக்கு 18 சதவீதம் இடம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்று நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டு இருந்த ஒன்று, சென்னை உயர்நீதி மன்றமும் அதை செல்லும் என்று ஏற்றுக்கொண்டு இருந்த ஒரு சட்டம் இப்போது உச்ச நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருக்கக் கூடிய நேரத்தில் அந்த பிரிவுகள் முழுவதும் இந்த சட்ட முன் வடிவிலிருந்து நீக்குவதன் விளைவாக எதிர்காலத்தில் அப்படிப் பட்ட ஒதுக்கீடுகள் இருக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிடும். இப்படி இந்த பிரிவுகள் முழுவதும் இதிலிருந்து நீக்கிவிடுவதன் மூலம் உச்ச நீதி மன்றத்தில் இருக்கக்கூடிய வழக்கு என்ற பிரச்சினை இல்லாமல் அந்த வழக்கு தானே செத்துப்போய்விடும்.

எனவே, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்ற பிரச்சினையே சொல்ல முடியாத நிலை இந்த திருத்தத்தின் மூலமாக ஏற்பட்டு விடும். எனவே அனைத்து அரசியல் கட்சி களும் ஏற்றுக்கொண்டு இந்த அவையும் ஏற்றுக்கொண்டு சட்டம் ஆக்கப்பட்ட பின்னால் உயர் நீதிமன்றத்தில் அது சரி என்று அங்கீகரிக்கப்பட்டு அந்த ஒரு சட்டம் எதிர்காலத்தில் பாதிப்புகள் ஏற்படாமல் செய்வதற்கு அந்த சட்டத்தின் பிரிவுகள் முழுவதும் நீக்குவதற்கு என்ற அந்த திருத்தத்தை மாற்றி அந்த சட்டப் பிரிவுகளை நிறுத்தி வைப்பது என்ற முறையில் திருத்தப்பட வேண்டும் என்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் மாண்புமிகு அமைச்சரவர்களையும், அரசையும் கேட்டுக் கொள்கிறேன் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் மூலமாக.

அடுத்து, இதிலே கொடுக்கப்பட்டு இருக்கிற இந்த ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், நகராட்சிகளில் இந்த பெண்களுக்கும், பழங்குடியினருக்கும் கொடுக்கக்கூடிய இந்த பிரதிநிதித்துவம் அந்த சட்டப்படி தேர்தல் நடத்தப்படும் வரையில் இந்த எண்ணிக்கை பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு நல்ல நோக்கத்தோடு திருத்தப்பட்டது என்பது சரியானது. அந்த எண்ணிக்கை அதில் இருக்கவேண்டும் என்பதும், அதில் தெரிந்து எடுக்கப்படுகிற வாய்ப்பு அற்ற நிலை ஏற்படுமானால் அந்த உறுப்பினர்களை சேர்க்கப்படவேண்டும் என்று இருப்பது என்று சொல்லியிருப்பது நல்ல நோக்கம்தான். ஆனால் அதற்கு கூறியிருக்கக்கூடிய வழிமுறை இந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் மீண்டும் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதற்கு எவ்வளவு அக்கறையோடு முயற்சி எடுத்து நான் ஒரு சட்ட முன் வடிவு கொண்டு வந்தாலும் இதன் மூலமாக மீண்டும் இந்த சட்டம் நீதிமன்றம் சென்று தேர்தல் நடைபெறமுடியாத ஒரு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு அபாயம் இதனுள் இருக்கிறது என்பதை பார்க்கும்போது அதை மாற்றி திருத்தவேண்டும் என்பது சரியாக இருக்கும் என்பதை என்னுடைய கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் மூன்றிலே இணைத்துக்கொள்ளக்கூடிய நிலைமையும் இருக்கின்றன; நியமிக்கக் கூடிய நிலைமையும் இருக்கிறது. எனவே நியமிக்கக் கூடிய அந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வழங்கியிருப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல; பொறுத்தமுடையதல்ல. அப்படிப்பட்ட முன்னுதாரணம் எதுவும் இல்லை; அது மரபும் அல்ல. எனவே இப்படி கொண்டு வந்திருப்பது எந்த வகையிலும் சரியானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



12 ஊராட்சிகளுக்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் இந்த 4 பேர் பழங்குடியினர், பெண்கள் இருக்கலாம். அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 8 பேர் இருக்கலாம். 20–க்கு மேற்பட்டால் 14 பேர்கள் இருக்கலாம். எனவே நியமிக்கப்படக்கூடியது என்ற நிலைமையை மாற்றி அந்த எண்ணிக்கை முழுவதையும் இணைத்துக்கொள்ளக்கூடிய வகையில் சட்டத்தைத் திருத்துவதுதான் சரியானதாக இருக்கும். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரம் சட்டமுன்வடிவிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஊராட்சிகளுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு, நகராட்சிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற காலவரம்பு 5 ஆண்டு என்பதிலிருந்து மாற்றப்பட்டு நான்காண்டுகளாகக் குறைக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற காரணம் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. அதிலே சொல்லப்பட்டிருக்கின்ற காரணம் இந்த ஆட்சிக்கு 5 ஆண்டுகள் இருக்கின்றன. எனவே அதற்குள்ளாக அந்த ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றிப் பரிசீலிக்கவேண்டும் என்றால் நான்காண்டு களாக வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். கூறப்பட்டிருக் கின்ற விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. காரணம் அமைச்சர் அவர்கள் சொல்வதிலிருந்து ஒரு அச்சம் எனக்கு ஏற்படுகிறது. ஐந்தாண்டுகள் இந்த ஆட்சி இருக்கும் என்று சொன்னால் அதற்குப் பிறகும்தான் தமிழகத்திலே ஆட்சி இருக்கும். அப்படி வருகின்ற ஆட்சியும் மக்களால் தேர்ந் தெடுக்கப்படக் கூடிய ஆட்சியாகத்தான் இருக்கும். எனவே தமிழகத்தில் ஐந்தாண்டுகள் இந்த ஆட்சிக்காலத்தோடு முடிந்து விடப்போவதில்லை. அதற்குப் பிறகு ஆட்சிகள் தொடரும். அந்த ஆட்சியும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஆட்சி களாகத்தான் இருக்கும். அந்த ஆட்சிகள் இந்த ஐந்தாண்டுகள் முடிந்ததற்குப் பிறகு ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றி யங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் செயல்பாட்டைப் பரிசீலித்துத் நிர்மாணிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே அமைச்சர் அவர்கள் கூறக்கூடிய விளக்கம் என்பது எந்த ஜனநாயக வழிமுறைகளிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை மேலும் முனிசிபாலிட்டிகளுக்கு முன்பு 3 ஆண்டுகள்தான் இருந்தது, பிறகு 5 ஆண்டுகளாக மாற்றப்பட்டது. ஆனால் ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் மூலச்சட்டத்திலேயே 5 ஆண்டுகள் என்று இருக்கிறது. அதேபோல் நகராட்சிகளுக்கும் அனுபவரீதியாகப் பார்த்து மூன்றாண்டுகள் போதுமானதல்ல என்று சொல்லி ஐந்தாண்டுகளாகத் திருத்தம் கொண்டுவரப் பட்டது. எனவே இப்போது அந்த ஐந்தாண்டுகள் என்பதை நான்காண்டுகள் என்று குறைப்பது எந்த வகையிலும் சரியான தல்ல. அதை ஐந்தாண்டுகள் என்று மாற்றவேண்டும்.

அதுமட்டுமல்ல. அதிலே ஒரு இடத்திலே சொல்லப்பட்டிருக்
கிறது. ஒரு ஆண்டுக்கு மேற்படாமல் கூட்டவோ குறைக்கவோ
இன்ஸ்பெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று
கூறப்பட்டிருக்கிறது. அந்த நான்காண்டுகள் என்பதை இன்ஸ்
பெக்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தின் மூலமாக
மூன்றாண்டு என்று குறைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்
பட்டிருக்கிறது. அது சரியல்ல. தேவைப்படுமேயானால் அங்கே
இருக்கக்கூடிய சூழ்நிலைக்கேற்ப மாற்றப்படவேண்டிய
அவசியம் ஏற்படுமேயானால் அதைக் கூட்டுவதற்கு அதிகாரம்
கொடுக்கலாமே தவிர அதைக் குறைப்பதற்காக அதிகாரம்
கொடுக்கக்கூடாது. அந்த முறையில் அந்தச் சட்டத்தின் பிரிவு
திருத்தப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியினை அளித்
தார்கள். 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட
வாக்களிக்கும் உரிமை பறிபோய்விடும் என்று அச்சப்பட
வேண்டியதில்லை என்று அவர்கள் சட்டமுன்வடிவிலே சொல்லா
விட்டாலும்கூட அவர்கள்விளக்கமளிக்கும்போது சொன்னார்கள்
1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி 18 வயதை
அடைந்தவர்களுக்கு எல்லாம் வாக்களிக்கக்கூடிய உரிமை பாது
காக்கப்படும் என்று சொன்னார்கள். அதேபோல் இன்னொரு
உறுதியினையும் அமைச்சர் அவர்கள் இதுகுறித்து இறுதியாக
விளக்கம் அளிக்கின்றபோது கொடுக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக 1970 ஆம் ஆண்டு நடந்த ஊராட்சி மன்றத்
தேர்தலில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலைப் பொறுத்த
வரையில் வாக்காளர்களே நேரடியாகத் தேர்ந்தெடுத்தார்கள்.
முன்னாலே கூறப்பட்ட சட்டத்திலும் அப்படித்தான் இருந்தது.
அப்படியே இப்போதும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்
தேர்தலிலும், நகராட்சி மன்றங்களில் தலைவர் தேர்தலிலும்
வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்
என்பதற்கும் ஒரு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். எப்படி 18
வயது அடைந்தவர்களுக்கு வாக்குரிமை பாதுகாக்கப்படும்
என்று சொன்னார்களோ, அதேபோன்று இதற்கும் ஒரு பாது
காப்பு கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
முன்னால் இருந்த சட்டத்தில் உள்ள அந்த வாய்ப்பைப் பறித்து
விடக்கூடாது. அது பாதுகாக்கப்படவேண்டும் என்ற முறையில்
இந்தச் சட்டம் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்ததாக, அமைச்சர் அவர்கள் அரசியல் கட்சிகள்
சின்னங்கள் கொடுக்காமல், இந்தத் தேர்தல் அரசியல்
கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நடக்கும் என்று விளக்கம் சொன்
னார்கள். ஆனால், நாம் அவ்வளவு பேரும் ஒரு யதார்த்த
உலகத்தில்தான் வாழ்கிறோம். முன்னாலே 1969 ஆம் ஆண்டு





நடந்த நகராட்சி மன்றத் தேர்தல்களில் அரசியல் கட்சிகளின்
சின்னங்கள் ஒதுக்கப்பட்டு, நகராட்சி மன்றத் தேர்தல்கள்
முழுவதும் அரசியல் கட்சிகளுடைய சார்பிலேதான் நடந்தன.
அப்படி இருந்ததை இன்று நீக்குவது என்பது பொருத்தமானது
அல்ல, சரியானது அல்ல.

அதோடு மட்டுமல்ல, இப்பொழுது நாம் யதார்த்த
உலகத்தில் நின்று பார்த்தோமானால் அரசியல் கட்சிகள்,
சின்னங்கள், தேர்தலில் இல்லாமல் இருக்கலாம், அரசியல்
கட்சிகள் இல்லாமல் இருக்காது. அரசியல் கட்சிகளுடைய
செல்வாக்கு இல்லாமல் இருக்காது; அரசியல் கட்சிகளுடைய
உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது நின்றுவிடக்
கூடிய நிகழ்ச்சியாக இருக்காது. இந்தத் தேர்தலிலே சின்னங்கள்
கொடுக்காமல் இருப்பதைப் பற்றி அரசியலுக்கு அப்பாற்பட்ட
முறையிலே இருக்கும் என்று பேசுவது நாம் ஒரு யதார்த்த
உலகத்திலே இல்லாமல் பேசுவதாக ஆகும் என்றுதான் ஆகிறது.
எனவே, முன்னாலேயிருந்து அரசியல் கட்சிகளுடைய சின்னங்கள்
நகராட்சிகள் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன; அதே போல்
ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர் தேர்தலுக்குக் கொடுக்கப்
படும் என்று அரசு கொள்கையாக முன்னாலே ஏற்றுக்கொண்டு
இருந்தது. இதற்கு முன்பு சட்ட சிக்கல்களும் சுப்ரீம் கோர்ட்
வழக்குகளும் இருக்கவில்லை. எனவே, அதை எடுப்பதற்கான
காரணங்கள் இல்லை; அந்த முறையிலே இந்தச் சட்டத் திருத்தங்
களை மாற்றி, அந்தச் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய முயற்சி
களை எடுக்கவேண்டுமென்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி தேர்தல்
களுக்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தச் சட்டத்தின்
மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்
களைச் சொல்ல விழைகிறேன். பஞ்சாயத்து தேர்தல் என்பது
1970 ஆம் ஆண்டு நடந்தது. இப்பொழுது 1985 ஆம் ஆண்டு
நடந்துகொண்டிருக்கிறது. ஆக 14 ஆண்டுகள் கடந்துவிட்டன.
முறைப்படி 1975 ஆம் ஆண்டு தேர்தல் நடந்திருக்கவேண்டும்.
அப்பொழுது ஒத்திவைக்கப்பட்டது; இப்பொழுது தொடர்ந்து
ஒத்திவைக்கப்பட்டதன் விளைவு இப்பொழுது கிராமங்களில்
மின்சாரம், குடிதண்ணீர், ரோடு இவை அனைத்தும் சீர்குலைந்த
நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் கிடையாது. தஞ்சாவூர் ஜில்லாவில் 1983
டிசம்பரில் பெய்த மழையாலும் வெள்ளத்தாலும் போட்ட
ரோடுகள் பூராவும் அடியோடு போய்விட்டன. இப்பொழுது
இரண்டு வருஷமாகப் போகிறது; அந்த ரோடுகளையெல்லாம்
செப்பனிட முடியவில்லை. ஆனால், பணம் ஒதுக்காமல் இல்லை.
பணம் யூனியனுக்கு வருகிறது. அந்தப் பணம் எல்லாம்
செலவழிக்கப்படுகிறது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி
நிதிகள் இல்லாத குறையால் பல்வேறு குறைகளுக்கும் பல்வேறு
நிர்வாக சீர்கேட்டுக்கும் தொடர்ந்து ஆளாகி வருகிறது. ஆகவே

இந்த நிலையைப் போக்கவேண்டுமென்றால், 1981-வது ஆண்டு இதே சட்டமன்றத்தில் ஏகமனதாக ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவிகிதமும் பெண்களுக்கு 15 சதவீதமும் தேர்தல் எண்ணிக்கை ஒதுக்கவேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டு, இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டு, தேர்தல் நிறுத்தப் பட்டிருக்கிறது. அதற்குப் பிறகுதான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பழையமுறையிலே எப்படியாவது தேர்தலை நடத்திவிடுகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் இப்பொழுது தேர்தலைக் கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது உள்ள விதி எல்லாம் முழுமையாக எடுத்துப் பார்ப்போமானால் எதிர் காலத்தில் இந்தப் பெண்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் இந்தச் சதவிகிதம் கிடைக்குமா என்று அந்தப் பகுதி மக்கள் மத்தியில் இப்பொழுது மேலும் சந்தேகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. ஆனால், ஒரு மாநிலத்தில் மட்டும் ஏற்படுத்தியிருப்பதால் இன்றைக்குச் சிக்கல் மேலும் உருவாகி இருக்கிறது. என்னுடைய வேண்டுகோள் இன்றைக்கு தமிழகத்தில் ஏற்பட்ட இந்த நிலைமைக்குப் பிறகாவது மத்தியிலே ஆளுகிற காங்கிரஸ் கட்சி, பாராளுமன்றத்தின் மூலம் எல்லா மாநிலங் களுக்கும் ஒரு அறிவுரையாகவோ, அல்லது சட்டத்தின் மூல மாகவோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் அந்தச் சதவீதத்தைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

(பிற்பகல் 12-40)

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: 'இட் இஸ் எ ஸ்டேட் சப்ஜக்ட்.

திரு. பொ. உத்திராபதி: ஏன் சொல்லலாமே, இதிலே சிக்கல் ஏற்பட ஒன்றும் வாய்ப்பில்லை. இதில் ஒன்றும் தவறில்லையே. நாம் கேட்கிறோம். ஆகவே எதிர்காலத்தில் எல்லா மாநிலங் களுக்கும் கொண்டுவரக்கூட நம்முடைய மாநில சர்க்கார் ஆலோசனை தரலாம் என்று நான் பணிவன்போடு சொல்ல விரும்புகிறேன். இந்தத் தேர்தல் 4 ஆண்டு என்பது நல்லது அல்ல. ஏனென்றால் அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு இந்தப் பஞ்சாயத்துத் தேர்தல் வரும் என்றால் அப்பொழுது நடத்தினால் என்ன? பொதுத் தேர்தலுக்குப் பிறகு தேர்தல் வரக்கூடாது என்று நினைக்கிறார்களோ என்னவோ தெரிய வில்லை. ஆகவே ஐந்து ஆண்டு என்பதுதான் ஜனநாயகத்தில் நல்ல அறிகுறியாக அமையும். ஆகவே ஐந்து ஆண்டு என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். பிறகு நியமன மெம்பரைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் அன்றைக்கும் சொன்னோம். இன்றைக்கும் சொன்னோம். இப்போது மாவட்ட ஆட்சித் தலை வருக்கு இந்தப் பொறுப்பை கொடுத்திருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் கூட சொன்னார்கள், சுயேச்சையாகப் போடலாம் என்று. ஆனால் அதைச் சொல்லலாமே தவிர, தேர்தல் என்று அறிவித்து விட்டால் எல்லோரும் கட்சி அடிப்படையில்தான் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வார்கள். ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவர் வந்தால் ஒரு கட்சி அடிப்படையில்தான் சொல்





வார்கள். ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு பிறகு இப்போது இருக்கிற சட்டத்திலே இரண்டு பெண் மெம்பர்களை, ஆதி திராவிட மெம்பர்களை நியமிக்கலாம் என்று இருக்கிறது. அதைப் பின்பற்றி எதிர்காலத்தில் இந்தப் பெண்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் ஒதுக்கிடுகிற எண்ணிக்கையை, ஊராட்சி ஒன்றியத்திற்கும், நகராட்சிக்கும் தேர்ந்தெடுத்த பிறகு எந்தக் கட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் அவர்களே நியமிக்கலாம் என்று திருத்தியமைத்துக்கொள்வதுதான் நல்லதாக இருக்கும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கையில் நியமன அதிகாரத்தை கொடுத்து மாவட்ட ஆட்சித் தலைவரை ஆளும் கட்சி அமைப்பாளராக்கும் ஒரு கெட்ட பெயர் ஆட்சியாளருக்கு வராமல் தடுக்க வேண்டுமென்றால் மீண்டும் இந்த நியமனம் மெம்பர் என்பதை தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பே உருவாக்கிக் கொள்ளலாம் என்று செய்வது தான் நல்லதாக இருக்குமென்று என்னுடைய கருத்தாகச் சொல்கிறேன்.

ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது செப்டம்பர் 15-ஆம் தேதி அண்ணா பிறந்த நாளன்று புதியவர்கள் பதவி பிரமாணம் என்று வெளியே அறிவித்திருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து அறிவிப்புகளைச் செய்வதால் மக்கள் மத்தியிலே குழப்பத்திற்கும், சந்தேகத்திற்கும் இடம் அளிக்கிறது. இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது ஒன்பது மாத காலம் ஆகுமென்று சொல்லி இருக்கிறார்கள். இனிமேல் எந்தக் காரணத்தைச் சொல்லியும் இந்தத் தேர்தலை ஒத்திவைக்காமல் இருக்க வேண்டும். எந்தக் கட்சியாவது வரட்டும். ஆட்சேபணை இல்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் உண்மையில் சட்டமன்ற வேலைகளையே செய்ய முடிவதில்லை. கிராமங்களுக்குப் போனால் குடிதண்ணீர் என்னவாயிற்று? ரோடு வசதி என்ன வாயிற்று? என்று எல்லோரும் கேட்கிற நிலைமை இருக்கிறது. இப்போதாவது இந்தத் தேர்தலை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக சொல்ல விரும்புவது, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது, திருத்துறைப்பூண்டி பேரூராட்சியாக இருந்ததை நகராட்சி என்ற அந்தஸ்து அறிவிக்கப்பட்டு, மக்கள் தொகையும் சரியாக இருந்து, அதற்கான வருமானமும் சரியாக இருந்து, சட்டபூர்வமாக அதைச் செய்தார்கள். ஆனால் அப்படி சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதேபோல ஐந்து பேரூராட்சி களை நகராட்சிகளாக அறிவித்திருக்கிறார்கள். புதியதாக அறிவிக்கச் சொல்லவில்லை. எற்கனவே அறிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இப்போது இருக்கிறார்கள். திருத்துறைப்பூண்டி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. பேரூராட்சிக்கு வருகிறவருமானத்தை வைத்துக் கொண்டு அங்கே வாழக்கூடிய மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியவில்லை. அது நகராட்சியாக மாறினால், அதன் அந்தஸ்து உயர்ந்து அங்கே

வாழக்கூடிய மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய முடியும்.
அதையும் இப்போது கணக்கில் எடுத்துக் கொண்டு செய்ய
வேண்டுமென்று கேட்டு. இந்தத் தேர்தலை இப்போதாவது
காலம் தவறாது நடத்த வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பு
தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ.எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே., இந்த உள்ளாட்சி சட்ட திருத்த மசோதாவில்
பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு ஜனதா கட்சி சார்பாக
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளாட்சித் தேர்தலானது
சென்ற முறை முதல்வர் அவர்கள் அறிவிக்கும்போது பழைய
முறைப்படி நடைபெறும் என்று சொன்னார்கள். பழைய
முறைப்படி என்று சொன்னால், ஏற்கெனவே நகராட்சிகளிலும்
ஊராட்சிகளிலும் ஒதுக்கீடு முறை இருக்கிறது. பெண்களுக்கும்
தாழ்த்தப்பட்டவர்களுக்கும் என்று இரட்டை வார்டுகள் எல்லாம்
நகராட்சிகளில் இருப்பது நாம் அறிந்ததே. அதே முறைப்படி
அந்தத் தேர்தலை நடத்தினால் இன்னும் ஒரு ரிட்டோ,
வழக்கோ வழக்கு மன்றங்களில் தாக்கல் ஆகாமல் இருப்பதற்கு
வாய்ப்பாக இருக்குமென்று கருதுகிறேன். இப்போது நீங்கள்
சொல்லி இருக்கிற சட்டத்திலே ஐந்து ஆண்டுகள் என்று இருந்த
பதவிக்காலத்தை 4 ஆண்டுகளாகக் குறைத்திருக்கிறீர்கள். அதற்கு
எந்தவிதமான காரணமும் அதிலே குறிப்பிடப்படவில்லை.
ஏற்கெனவே இருந்த அந்த 5 ஆண்டுகள் சட்டமன்றத்திற்கு
இருப்பதைப் போல அதற்கும் இருப்பதைத்தான் நான் ஆதரிக்
கிறேன் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.
அடுத்து, உறுப்பினர்களை கோ-ஆப்ட் செய்வதில் எங்களுக்கு
கருத்து வேறுபாடு இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்
உறுப்பினர்களை நியமனம் செய்வது என்பது ஏற்கக்கூடியதாக
இல்லை. ஏனென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்
தினுடைய ஊழியர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே.
அரசாங்கத்தினுடைய ஊழியர் ஆளும் கட்சி சொல்வதைத்தான்
செய்ய முடியும், செய்வார். அந்தக் காரணத்தினால் மாவட்ட
ஆட்சித் தலைவர் உறுப்பினர்களை நியமனம் செய்வது என்று
இந்தப் பிரிவை நீக்கி. இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்ற
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது இங்கே
அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஜனதா கட்சியின் சார்பாக
ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்
உறுப்பினர்களை நியமனம் செய்வதை நீக்கிவிட்டு, இந்தச்
சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று
கேட்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்
கொள்கிறேன்.

திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு இல்லாமல்
நடக்கவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தல் சம்பந்தப்பட்ட சட்ட



முன்வடிவினை எதிர்த்து ஆரம்ப நிலையிலேயே எங்கள்
கட்சியின் சார்பாக ஏற்கெனவே கருத்துக்களைச் சொல்லியிருக்
கிறோம். அதே கருத்தை வலியுறுத்தி என்னுடைய சில
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1983 ஆம் ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்களுக்கும் இட
ஒதுக்கீடு வழங்குகிற முறையிலே திருத்தம் செய்து, இந்தத்
தேர்தல்களை நடத்த வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள்.
அப்போது தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்
தார்கள். யாரோ ஒரு சிலர் வழக்கு மன்றத்திற்குப் போனார்கள்
என்பதற்காக, அதுவும் தங்களுடைய தொகுதியை தாழ்த்தப்
பட்டவர்களுக்கு ஒதுக்கக்கூடாது என்பதற்காகத்தான்
கோர்ட்டுக்குப் போனார்களே தவிர ஒட்டு மொத்தமாக
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கூடாது என்று போக
வில்லை, கோர்ட்டிலே அப்படிச் சொல்லவில்லை. ஒரே ஒருவர்
தான் இந்தக் கொள்கை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குப்
போனார். மற்றவர்கள் எல்லாம் தங்களுக்கு ஒதுக்கப்பட
வேண்டிய தொகுதியை தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பெண்
களுக்கும் ஒதுக்கக்கூடாது என்று சொல்லி ஸ்டே வாங்கினார்கள்.
ஒரே ஒருவர்தான் இந்த அரசின் பாலிசிக்கு ஸ்டே வாங்கினார்.
அந்த ஒருவருக்காக ஒரு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின்
எண்ணங்களை புறக்கணிக்கக் கூடாது. அவர்களுடைய
எண்ணங்களைப் புறக்கணித்துவிட்டு இந்தத் தேர்தலை நடத்தக்
கூடாது என்பது எங்களுடைய கருத்து.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய இந்த
அரசின் நல்ல எண்ணத்தை நாங்கள் சந்தேகிக்கவில்லை.
ஏனென்றால் இந்தியாவிலேயே முதல் முறையாக தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு 18 சதவீதம் தந்தாக வேண்டுமென்ற சட்டத்தைக்
கொண்டு வந்தது இந்த அரசு தான். நாங்கள் இந்த அரசை
ஆதரிப்பதற்கு மேலும் சில காரணங்கள் உண்டு. இதற்கு
முன்னால் எத்தனையோ தாழ்த்தப்பட்டவர்கள் ஐ.ஏ.எஸ்.
அதிகாரிகளாக வரலாம். அமைச்சராக வரலாம், மற்ற
பதவிகளுக்கும் வரலாம். ஆனால் சமூக அந்தஸ்து உயரக்கூடிய
மணியக்காரராக வரமுடியாது. அந்த நிலையை மாற்றி 15
சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தந்தது மாண்புமிகு
புரட்சித் தலைவர் அரசுதான். ஆகவே, இந்த அரசின் நல்ல
எண்ணத்தை நாங்கள் சந்தேகிக்கவில்லை. யாரோ ஒருவர்தான்
அரசாங்கத்தின் பாலிசிக்கு ஸ்டே வாங்கியிருக்கிறார். அதை
வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாக தாழ்த்தப்பட்ட
மக்களை புறக்கணிக்கக்கூடாது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்வதை இங்கே
இருக்கின்ற எந்த அரசியல் கட்சியும் எதிர்க்கவில்லை. தாழ்த்தப்
பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்து நிறைவேற்றிய சட்டத்
திற்குப் பதிலாக இப்போது இட ஒதுக்கீடு இல்லாமல்

கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத்திற்கும் இங்கே இருக்கிற எந்த
அரசியல் கட்சியும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.
பார்க்கும்போது எதிர்க்கட்சிகள் ஒரு மௌன நாடகம்
ஆடுகிறார்களோ என்று தோன்றுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு
உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்கள் பேசும்போது
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இட ஒதுக்கீடு செய்வதை
ஆதரிக்கிறதா எதிர்க்கிறதா என்று கேட்டார்கள். இதைப்
தேசிய காங்கிரஸ் கட்சியையும் திராவிட முன்னேற்றக்
கழகத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் மற்ற கட்சிகளையும்
நான் கேட்கிறேன். நீங்கள் இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிறீர்களா
எதிர்க்கிறீர்களா என்று. ஏனென்றால் இந்திய தேசிய காங்கிரஸ்
கட்சியைச் சேர்ந்த ஒரு அகில இந்திய பொதுச் செயலாளர்—
அவர் வழக்கறிஞரும்கூட—ஸ்டே வாங்கியிருக்கிறார். இதை
யாரும் மறந்துவிட முடியாது.

ஜாதி பேதமில்லை என்று பகுத்தறிவு வாதம் செய்கின்ற
திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளாட்சித் தேர்தலிலே தாழ்த்
தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிறார்களா
அல்லது எதிர்க்கிறார்களா என்று தெரியவில்லை. அதைப்
போன்று பொதுவுடைமை பேசுகின்ற கம்யூனிஸ்ட் கட்சி இதை
ஆதரிக்கிறதா எதிர்க்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்பு
கிறேன்.

இந்தத் திட்டத்தைக் கொண்டு வருதற்கு முன்னால்
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அனைத்துக் கட்சிகளின்
கூட்டத்தைக் கூட்டி, பலமுறை அவர்களுடைய ஆலோசனைகளைப்
பெற கூட்டத்தைக் கூட்டி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்
பெண்களுக்கும் இட ஒதுக்கீடு தரலாமா என்று கேட்டு, அதன்
பிறகுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.
இன்றைக்கு இந்தச் சட்டத்தை எதிர்த்து யாரோ ஒருவர் ஸ்டே
வாங்கினார் என்பதற்காக, சுயநலவாதிகளுக்கும் ஜாதி வெறியர்
களுக்கும் பணிந்து இந்த அரசு அந்தத் திட்டத்தை கைவிட்டு
விடக் கூடாது. எனவே இந்த அரசையும் மாண்புமிகு புரட்சித்
தலைவர் அவர்களையும் நான் கேட்டு கொள்வது மீண்டும்
அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.

(பிற்பகல் 12-50)

இந்தத் திட்டத்தைக் குறித்து ஆலோசிக்கப்பட வேண்டும்.
அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நல்ல முடிவு எடுத்து, மீண்டும்
தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கீடு செய்து,
தேர்தலை நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். தமிழகத்திலே 106 நகரசபைகள் இருக்கின்றன. இந்தத்
106 நகரசபைகளிலும், கடந்த வரலாற்றைப் புரட்டிப் பார்த்
தால், ஒரு நகரசபையிலும் கூட தாழ்த்தப்பட்டவர்கள்
தலைவராக வந்தது கிடையாது. அதேபோல் 378 பஞ்சாயத்து
யூனியன்கள் இருக்கின்றன. கடந்த வரலாற்றை நாம் புரட்டிப்
பார்த்தால், இரண்டு பேர்கள்தான். அதுவும் தஞ்சாவூர்
மாவட்டத்தில் இருந்திருக்கிறார்கள். அவர்களைத் தவிர, வேறு



யாரும் இந்திய சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால், ஒரு
யூனியனிலும் தாழ்த்தப்பட்டவர்கள் தலைவராக வந்தது
கிடையாது. இன்றைக்குப் புரட்சித் தலைவர் நல்ல நோக்கத்
தோடுதான், தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளாட்சித் துறையிலே
அதிகாரத்திற்கு வர வேண்டும் என்ற அளவிலேயும், அவர்களுக்கு
சம அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்ற அளவிலேயும் இந்தத்
திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 69 பஞ்சாயத்து யூனியன்
களிலும் தாழ்த்தப்பட்டவர்கள் தலைவராக வரக்கூடிய வாய்ப்பு
இருந்தது. அதைப்போலவே 20 பேர்கள் நகரசபைத் தலைவராக
வரக்கூடிய வாய்ப்பு இருந்தது. ஆகவே அந்த வாய்ப்பு வசதிகள்
இன்றைக்கு இல்லாத நிலைமைகள் ஏற்பட்டு இருக்கின்றன.
எனவே புரட்சித் தலைவர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்களின்
உணர்ச்சியைப் புறக்கணிக்காமல், தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த
உள்ளாட்சி அதிகாரத்திற்கு வரவேண்டும் என்ற நல்ல நோக்கத்
தோடு இந்த தேர்தல் நடத்தப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு ஒதுக்கீடு இல்லாமல் இந்த தேர்தல் நடத்தப்படக்
கூடாது. அதற்கான வகையில் சட்டத்தை மாற்றிக்கொண்டு
வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. எம். தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, என்னை இரண்டாவது முறையாக, அனுதாப
அரசியலுக்கு பலியாகாமல், சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்த
என்னுடைய வேலூர் தொகுதி வாக்காளப் பொதுமக்களுக்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும்
சட்டமன்ற உறுப்பினராக வர எனக்கு வாய்ப்பு வழங்கிய
என்னுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1920 ஆம்
ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டத்தை மேலும் திருத்து
வதற்கான முறையில் இங்கே சட்டம் கொண்டு வரப்பட்டு
இருக்கிறது. நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்ற
கழகத்தின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன்.

இங்கே கொண்டுவரப்பட்ட சட்டம் நகராட்சி உறுப்பினர்கள்,
நகராட்சித் தலைவர்கள் ஆகியவர்களின் பதவிக் காலத்தை 5
ஆண்டுகளாக இருப்பது என்பதை 4 ஆண்டுக் காலமாக மாற்றி
அமைத்து இருப்பது என்பது வரவேற்கத் தகுந்தது அல்ல. சட்ட
மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிக்
காலம் 5 ஆண்டுகள் என்று இருப்பதைப் போல, நகராட்சித்
தலைவர்கள், நகராட்சி உறுப்பினர்கள், ஆகியவர்களின் பதவிக்
காலத்தையும், 5 ஆண்டுக் காலம் என்று இருக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத
நகராட்சிகளில் நகராட்சிகள் எல்லாம் நரகங்களாக காட்சி
அளித்துக்கொண்டு இருக்கின்றன. அவைகள் எல்லாம் தனி
காரணத்தால் இன்று

அதிகாரிகளுடைய தர்பார்களாக இருந்து கொண்டு மக்களுக்கு விரோதமான காரியங்களை அவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் பஞ்சாயத்து, நகராட்சிகள் தேர்தலை தள்ளி வைக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தமிழ்நாடு மேல்சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதற்குக் காரணம் இதுபோன்ற நகராட்சிகளிலும், பஞ்சாயத்துக்களிலும் தேர்தல்கள் குறிப்பிட்ட காலங்களில் நடத்தப்படாமல் இருப்பதுதான்.

என்னுடைய தொகுதியைச் சார்ந்த வேலூர் நகராட்சியில் நடைபெறும் ஊழல்கள் லஞ்ச லாவண்யங்கள் கணக்கில் அடங்காது. இது குறித்து உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் சில முறையீடுகளைக் கொண்டு வர விரும்புகிறேன். வேலூர் நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் சுமார் 600-க்கும் அதிகமான கடைகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் 50 முதல் 100 ஆண்டுக் காலமாக பரம்பரை பரம்பரையாக அங்கே கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பில் சம்பந்தமாக மட்டும் பேசுங்கள். மற்றவற்றை மான்யம் வரும்போது விரிவாகப் பேசலாம்.

**திரு. வி. எம். தேவராஜ்:** எனவே வியாபாரிகளை காலி செய்யச் சொல்லி நகராட்சியிலிருந்து உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அது அவர்கள் மத்தியிலே பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. 100 ஆண்டுகளுக்கு மேலாக வியாபாரம் செய்து வருகின்ற அவர்களுக்கு எதிராக இது போன்ற உத்தரவுகளை நீங்கள் பிறப்பித்து இருப்பது நியாயமா? என்பதை நான் கேட்க விரும்புகிறேன். எனவே அவர்களுக்கு அந்த இடத்தை ஒதுக்கீடு செய்து அவர்கள் அங்கேயே வியாபாரம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். வேண்டுமானால் அரசாங்கம் அந்த வியாபாரிகளிடமிருந்து 5%, அல்லது 10% என்று வாடகையை உயர்த்தி வசூலிக்கலாம். அதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல வேலூர் நகராட்சிக்கு அதிகமான வருமானம் இருந்தாலும், கிட்டத்தட்ட 1 கோடியே 50 லட்சம் இருந்தாலும், அங்கே வசிக்கின்ற மக்களுக்கு எந்தவிதமான வசதிகளும் செய்து தரப்படவில்லை. அங்கே வேலை செய்கின்ற ஊழியர்களுக்கும் சம்பளம் ஒழுங்காகக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. அரசு ஊழியர்களுக்கு எப்படி 1 ஆம் தேதி சம்பளம் கிடைக்கிறதோ, அதைப் போல இவர்களுக்கும் சம்பளம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



குறிப்பாகச் சொன்னால், சாலை வசதிகள் அங்கே இல்லை. கக்கூஸ் வசதிகள், சரியாக இல்லை. கொசுத் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. வானத்தைத் தொடுகிற அளவிற்கு கம்பங்கள் இருந்தாலும், அதிலே விளக்குகள் இல்லை. இருந்தாலும் அவைகள் சரியாக எரிவது இல்லை.

அடுத்து என்னுடைய தொகுதியைச் சார்ந்த சாயிநாதபுரம், தொரப்பாடி, பாடவட்டம், சேம்பாக்கம், சத்துவாச்சாரி, போன்ற இடங்களில் எல்லாம் குடிநீர் வசதிகள் இல்லாமல் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதற்கு ஒரு நிவாரணம் செய்ய வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன். வேலூர் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக ஆக்க வேண்டும். அதை மாநகராட்சியாக்குவதற்கும் ஏற்கெனவே நகரசபையால் தீர்மானம் போடப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதைச் சற்று விரைவாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேலூர் நகரத்தில் உள்ள சேம்பாக்கம், தொரப்பாடி, சத்துவாச்சாரி பாடவட்டம், காட்பாடி ஆகிய அனைத்தையும் நகராட்சியாக ஆக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டாம்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்னாலே கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்ட முன்வடிவிற்கு சம்பந்தம் இல்லாதவகையில், இங்குள்ள கட்சிகள் எல்லாம் ஆதரித்திருந்த அந்த மசோதாவைப் பற்றி, நாங்கள் ஏதோ ஆதரிக்காதது போலவும், துரோகம் செய்தது போலவும் ஏறத்தாழ 10 நிமிடம் பேசினார்கள். நீங்களும் அனுமதித்தீர்கள். இது அதைப் போல புண்படுத்தக் கூடியது அல்ல. குற்றம் சொல்லக் கூடியது அல்ல. அரசாங்கத்தின் நிர்வாகத்திலே இருக்கக்கூடிய சில குறைகளை, அரசாங்க அதிகாரிகளின் முறைகேடுகளை இங்கே எடுத்துச் சொல்வது போலச் சொல்கிறார்கள். ஆகவே அதை நீக்குவது அவசியம் இல்லை. வேண்டுமானால் அதே வழியில் தொடர்ந்து பேச வேண்டாம் என்ற வகையில் சொல்லாமே தவிர, நீக்குகிற அளவுக்கு அது ஒன்றும் குறையோ, அல்லது குற்றமோ அல்ல. இடம் பெறக் கூடாததும் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் பெரிய குறிப்புகளை கையிலே வைத்திருக்கிறார். அனைத்தையும் சொல்வதனால் நேரம் ஆகும். அதுதான்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. வி. எம். தேவராஜ்: அவர் சில ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களை வைத்துக் கொண்டு வீடுகளை கட்டுபவர்களிடத்திலும், லாட்டரிச் சீட்டு விற்பவர்களிடத்திலும், மற்ற வியாபாரிகளிடத்திலும் பணத்தை வசூலிக்கிறார்கள். அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் அந்த ஆணையாருடைய உத்திரவைக் காட்டி, வாங்க வேண்டியதை வாங்கி கொடுக்க வேண்டியவரிடத்தில் கொடுத்து விடுகிறார்கள். இந்தக் குற்றச் சாட்டுகளை ஆதாரத்தோடுதான் நான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்தார்களானால் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். இதனால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் என்னிடம் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்த நகராட்சியின் முன்னாள் தலைவரை, அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியு . . வர் சேலம் பகுதியில் உள்ள இரண்டு தேசிய வங்கிகளின் முன்னாள் டிராக்டர்களைக் கொண்டு வந்து நிற்க வைத்து ரோடை தடை செய்கிறார். பொது மக்கள் போக்குவரத்திற்கு தடையாக இருக்கிறது. அங்கே வங்கிகளை வேறு எ வத்திருக்கிறார்கள். அந்த வங்கிகளுக்கு போகும் பெண்கள் அந்த இடத்தை தாண்டிக் கொண்டு செல்ல முடியவில்லை. இது குறித்து கானரா வங்கியும் பொதுமக்களும் நகராட்சிக்கு மனுக்களைக் கொடுத்தும் கூட அந்தத் தடைகள் அகற்றப்படவில்லை. அவர்கள் உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் பெயரையும் மற்றும் அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் பெயரையும் சொல்லிக் கொண்டு, அவர்களின் சிபாரிசு தங்களுக்கு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்களுடைய பெயரைச் சொல்லி பொது மக்களை நேரிடையாக மிரட்டுகிறார்கள். பலமுறை இது குறித்து மனுக் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. உடனடியான நடவடிக்கை தேவை. (மணியடிக்கப் பெற்றது).

கடைசியாக மிக முக்கியமான ஒன்றை இந்த சபையின் மூலமாக அமைச்சருடைய உடனடி பார்வைக்கு வைக்க விரும்புகிறேன். முன்னாள் அமைச்சர் திரு. எஸ். மாதவன் அவர்களால் 26-10-75-ல் அங்கே ஒரு திருமண மண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. அதிலே கட்டிட வேலைகளும் துவங்கப்பட்டு ரூ 40 ஆயிரம் வரையில் செலவிடப்பட்டும் விட்டது. அது இன்னும் முடிக்கப்படவில்லை. வெறும் கான்க்கிரீட் நிலையிலேயே இருக்கிறது. அதை துரிதமாக நிறைவேற்றிக் கொடுத்து அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படுகிற வகையில் திருமணக் கூடத்தை கட்டித் தருமாறு கேட்டு, விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

(பிற்பகல் 1-00)

திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்: தலைவர் அவர்களே, உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் முன் மொழிந்த திருத்தங்களை பொதுவில் நான் வரவேற்கிறேன். இத்தனை ஆண்டுகாலமாக நடைபெறவில்லையே என்று தமிழ்நாட்டு மக்கள்



மிகவும் ஏங்கி இருந்த ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஒன்றியங்களுடைய தேர்தல்களை நடத்துவதற்கு இந்த திருத்த மசோதா வகை செய்கிறது என்ற அளவிற்கு அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் மிகவும் நொந்துக் கொண்டார்கள். இந்த நாட்டினுடைய பழங்குடி மக்களுக்கும், பெண்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது, அவர்களும் நகராட்சிகளில், ஊராட்சிகளின் மன்றங்களுடைய தலைவராக வர இருந்த வாய்ப்பு, இதன் மூலமாக மறுக்கப்படுகிறது. அந்த நிலையைப் போக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தத்தை முன் மொழிந்து பேசும் போது அவருடைய எண்ணிக்கைக்கு ஏற்ப 25% பெண்களும், பழங்குடி மக்களும் முறையே இந்தச் சபைகளிலே இடம் பெறுகின்ற முறையில் கோ-ஆப்ட் செய்து கொள்ளக்கூடிய அதிகாரத்தை அதில் இணைத்து அவர்களுடைய பிரதிநிதித்துவம் பூரணம் அடையும் என்ற வகையில் உறுதியினைத் தந்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்களும் இந்தக் கருத்தை வரவேற்கிறோம். பழங்குடியினருக்குக் கொடுக்கப்பட்ட பிரதிநிதித்துவம் எந்த விதத்திலும் குறைக்க வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்கில்லை. தெளிவாகச் சொல்லப் போனால் 18% என்று பல ஆண்டுகளாக அந்த மக்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட தமிழகத்திலே அவர்கள் 1 கோடி பேர்கள் வாழ்கிறார்கள். ஏறக்குறைய 20%. இந்த 18% ஐ 20% ஆக அவர்களுக்கு அதிகரித்துக் கொடுக்க இந்த அரசு முன்வருமானால் அதை ஆதரிப்பதற்கு நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே, இந்த ஊராட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் அரசியல் கட்சி சார்பற்ற முறையிலே நடக்கும், இது தான் அண்ணா அவர்களுடைய எண்ணமாக இருந்திருக்கிறது, என்பதை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக் காட்டினார்கள். கிராமங்களிலே வாழக்கூடிய மக்கள் தேர்தல் காலத்திலே ஏற்படக்கூடிய இந்த பதட்ட நிலையிலிருந்து பாதுகாக்கப்படுபவர்களாக ஆக்கப்படுவதற்கு இந்த முறை கையாளப்படுமேயானால் அதை நான் முழு மனதாக ஆதரிக்க கடமைப்பட்டிருக்கிறேன், ஆதரிக்க விரும்புகிறேன், ஆனாலும் கூட என்னதான் அரசியல் கட்சி சார்பற்ற முறையிலே தேர்தல் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டாலும் கூட, தேர்தலிலே தேர்ந்தெடுக்கப்படக்கூடிய உறுப்பினர்கள் அரசியல் கட்சி சார்புடையவர்களாக இருப்பார்கள். தேர்தல் வேலை செய்யக்கூடியவர்கள் அரசியல் கட்சிச் சார்பாகத்தான் வேலை செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் காலத்திலே எந்த அரசியல் கட்சியினுடைய கொடியும் தூக்கப்படாமல் எந்த அரசியல் கட்சியினுடைய கோஷமும் எழுப்பப்படாமல் இந்த அரசு எச்சரிக்கையாக சில ஏற்பாடுகளை செய்ய இருக்கிறதா என்பதையும் இந்த அரசு தெளிவு படுத்த வேண்டும். அண்ணா அவர்களுடைய விழுமிய விருப்பம் கிராமங்களில் நடக்கக்கூடிய

தேர்தலில் அரசியல் சார்பு இருக்கக்கூடாது என்ற உண்மையை நான் ஏற்றுக்கொண்டாலும், அவர்களே முன் நின்று சென்னை மாநகரத்தின் தேர்தலை நடத்தியதை நாம் மறந்துவிட வில்லை. ஆகவே, மாநகராட்சி மன்றத்தினுடைய தேர்தல் களையாவது அரசியல் சார்பாக நடத்துவது அது ஒரு விதத்திலே கிட்டத்தட்ட மினி அசெம்பிலிகளாக, குட்டி அசெம்பிலிகளாக அது செயல்படக்கூடிய காரணத்தினால். எதிர்காலத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் செயல்படுகின்ற முறையிலே பயிற்சி அளிக்கக்கூடிய ஸ்தாபனமாக அது இருப்பதால், மாநகராட்சி மன்றங்களை அரசியல் சார்பிலே நடத்துவதற்கு அங்கீகரிப்பது பயன் உடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் சென்னை, கோவை, மதுரை மாநகராட்சி பற்றி தெளிவாகக் குறிப்பிட்டார்கள். திருநெல்வேலி மாநகராட்சி மன்றத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. காரணம் இன்னும் அது பூரணத்துவம் பெறவில்லை என்பதைத்தான் அது குறிப்பிட்டுக் காட்டுகிறது என்று நினைக்கிறேன். அப்படியானால் அது மாநகராட்சியாக உருக்கொள்ளக்கூடிய காலம் வரையில் ஒதுக்கி வைக்காமல், மேலப்பாளையத்திற்கும், நெல்லைக்கும், பாளையங் கோட்டைக்கும் நகராட்சித் தேர்தல் தாமதம் இல்லாமல் நடத்த வேண்டும்.

கடைசியாக, தேவைப்படி இணைக்கப்பட வேண்டிய பழங்குடி மக்கள், பெண்களுடைய பிரதிநிதிகளை, மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிக்க வேண்டும் என்பது நல்ல மரபாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இப்படி தேர்ந்தெடுக்கப்படக் கூடிய உறுப்பினர்களை தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு, மன்றமே இணைத்துக் கொள் வதற்கு, அந்த மன்றத்திற்கு இந்த அதிகாரம் வழங்கப்படு மானால் அது பொருத்தமாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டு அந்த நிலையை இந்த அமைச்சர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள் கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: நாங்கள் அமென்ட்மெண்ட் கொடுத் திருக்கிறோம். அதைப்பற்றி இப்பொழுதே நான் சொல்லி விட்டால் அமைச்சரவர்கள் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாலன் அவர்கள் சொன்னது, இரண்டு பேர் பேசுகிறார்கள் என்று. இரண்டு பேர் பேசிவிட்டார்கள். இப்பொழுது ஜெனரல்டிஸ்கஷன் நடந்திருக் கிறது. திருத்தம் வரும்பொழுது வேண்டுமானால் அதில்சேர்த்து கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எட்டாவது சட்டப் பேரவையினுடைய ஆய்வுக்கு என்று வைக்கப் பட்டிருக்கும் இந்த உள்ளாட்சித் தேர்தல்கள்



பற்றி கருத்துக்கள் தெரிவித்த உறுப்பினர்களுக்கு அரசு சார்பில் நான் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக வற்புறுத்தப் பட்டது, முக்கியமாக வலியுறுத்தப் பட்டது, இட ஒதுக்கீடு பற்றித்தான்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் பேசும்பொழுது சட்டப் பிரச்னையைப் பற்றிச் சொன்னார்கள். அந்த இட ஒதுக்கீட்டில் ஏன் சட்டத்தை ரத்து செய்கிறீர்கள். சட்டத்தை சஸ்பென்ட செய்து விட்டு தேர்தல் நடத்தலாமே என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிச் செய்ய முடியும். ஆனால் அப்படிச் செய்வதைவிட, சட்டத்தை ரத்து செய்து விட்டு எப்பொழுது வேண்டு மென்றாலும் அந்தச் சட்டத் திருத்ததைக் கொண்டு வந்துவிட முடியும்; கொண்டு வர முடியும் என்று சட்ட விதி இருக்கின்ற காரணத்தால் அதை சஸ்பெண்ட் செய்வதன் மூலம் ஒரு சந்தேகத்தைக் கிளப்பி, அதன் மூலம் வேறொரு நீதிமன்றத்திற்குப் போய் வேறொரு ஸ்டே வாங்கக் கூடாது என்பதற்காகவே, போடு கின்ற சட்டத்தில் மிகத் தெளிவாக, எந்தச் சிறு ஓட்டை கூட இல்லாமல் பாதுகாப்போடு போடவேண்டுமென்பதற்காகவும் தான் இந்தச் சட்டத்தை ரத்து செய்தோமே தவிர வேறு அல்ல.

மரியாதைக்குரிய தமிழரசன் அவர்களுடைய உணர்வுகளை நான் மதிக்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள், இந்திய உப கண்டத்திற்கே பல துறைகளில் வழிகாட்டி வரு கிறார்கள் என்றாலும், உள்ளாட்சித் தேர்தலிலே அவர்கள் காட்டியிருக்கின்ற வழிமுறையானாது அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. பாராட்டுதற்குரிய ஒன்றாகும். 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 15 சதவீதம் இட ஒதுக்கீடு பெண் களுக்கும் இருக்க வேண்டுமென்று ஒரு புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் பேசும்பொழுது, இந்தச் சட்டத்தை நாங்களெல்லாம் ஆதரித்தோம் என்று சொன்னார்கள். சட்ட மன்றத்தில் ஆதரித்திருக்கக் கூடும். மன்னித்துக் கொள்ள வேண்டும். வெளியிலே இந்தச் சட்டத்தைப் பற்றி என்னென்ன கிண்டல் செய்து கேலி செய்து பேசினார்கள் என்பது அந்தக் கட்சி ஏட்டிலேயே வந்திருக்கின்ற உண்மை, மறுக்க முடியாது, ஆதாரம் இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, சட்டத் தினுடைய குறிக்கோளை, சட்டத்தினுடைய நோக்கத்தை வரவேற்று திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டது. சட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலே இந்த அரசாங்கம் என்னென்ன விதமாக நடந்து கொண்டதோ அது வெளியிலே பேசப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மன்னிக்க வேண்டும்.
சட்டத்தைக் கேலி செய்து, கிண்டல் செய்தும் இருக்கிறார்கள்.
பரவாயில்லை. இப்பொழுது மாற்றிக் கொள்வார்களேயானால்
அவர்களுடைய மாற்றத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்
ஒரு கருத்து, தமிழரசன் அவர்கள் சொன்னதை எங்கே மறுத்
தார்கள்? தமிழரசன் அவர்கள் சொன்ன கருத்து என்ன
வென்றால், நான் சுற்றிச் சுற்றிச் இந்தச் சட்டமன்றத்தில்
பார்க்கிறேன், ரத்து செய்யப்பட்ட சட்டத்தை, ஏன் ரத்து செய்
தீர்கள், 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 18
சதவீதம் பெண்களுக்கும் என்று இருந்த சட்டத்தை ரத்து
செய்யாமலேயே தேர்தலை ஏன் நடத்தக்கூடாது என்று
ஒருவராவது கேட்பார்களா என்று பார்த்தேன், ஒருவர்கூடக்
கேட்கவில்லை என்றுதான் அவர் சொன்னார். ஏற்கனவே
சட்டத்தை ஆதரித்தோம் என்று சொன்னார்களே தவிர,
தமிழரசனுடைய உணர்வைப் பிரதிபலிக்கவில்லை என்பதைத்
நான் வலியுறுத்துகிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவரவர்களே,
தமிழரசன் அவர்கள் ஆளுங்கட்சியையும், அமைச்சரையும
சேர்த்துத்தான் கேட்டாரே தவிர அன்பழகனையோ அல்லது
எதிர்க்கட்சியையோ மட்டும் கேட்கவில்லை. (குறுக்கீடு) எதிர்க்
கட்சியைப்பற்றி அவர் பெயரைக் குறிப்பிட்டாலும்கூட, ஆளுங்
கட்சியே சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றபொழுது, ஆளுங்
கட்சியிலே அந்த உணர்வு இல்லை என்ற எண்ணத்திலேதான்
அந்த உறுப்பினர் கேட்டிருக்க வேண்டுமே தவிர, தனிப்பட்ட
முறையிலே எங்களைக் கேட்டதாக இருந்தால் அப்பொழுதே
தான் பதில் சொல்ல முடியும். ஏனென்றால் இந்தச் சட்டம்
எந்தச் சூழ்நிலையில் வருகிறது என்று புரிந்துகொள்ளாமல் நான்
ஒன்றும் அரசியலிலே இல்லை. அந்தச் சூழ்நிலை தெரிந்திருக்
கின்ற காரணத்தினால்தான் நான் அதைக் கேட்கவில்லையே
தவிர, சூழ்நிலை வேறு என்று அமைச்சர் சொல்வாரேயானால்,
ஆயிரம் கேள்விகள் கேட்க முடியும்.

(பிற்பகல் 1-10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சூழ்நிலை வேறு என்று
குறிப்பிடுகிறார்கள். உள்நோக்கோடு பேசுவதாகச் சொன்னார்
கள். உள்நோக்கம் அல்ல. ஆனால் இப்படிக்கொண்டு வந்திருக்
கிற ஒரு புரட்சிகரமான சட்டத்தை அனைத்துக் கட்சியினரும்
வரவேற்று இருப்பார்களானால் நீதிமன்றத்திற்குப் போகிறவர்
களுக்குக் கூட தைரியம் வந்து இருக்காது. சில சமூக
விரோதிகள்....

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கொள்கை ரீதியாக
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கவில்லை. எதிர்க்கட்சி
யினர் சேர்ந்து சொல்லித்தான் தேர்தல் நடத்துகிறீர்கள்.
ஆகவே ஸ்வீப்பிங்காகச் சொல்லிக்கொண்டு போவது சரியல்ல.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அனைத்துக் கட்சியினரும்
என்று ஸ்வீப்பிங்காக சொல்லிவிட்டேன் என்று வருத்தப்
படுகிறார்கள். ஆனால் நல்ல சட்டம் என்று ஒத்துக்கொள்ளக்
கூடியதை சில சமூக விரோதிகள் நீதிமன்றத்திற்குப் போய்
தடை வாங்கிவிட்டார்கள். நான் சமூக விரோதிகள் என்று
தான் குறிப்பிடுகிறேனே தவிர எந்த ஒரு அரசியல் கட்சியையும்
குறிப்பிட்டுச் சொல்லவில்லை. யாராக இருந்தாலும் அத்தகைய
சமூக விரோதிகளை நாம் ஆதரிக்கக் கூடாது. சரியாகவோ
தவறாகவோ, நீதிமன்றத் தீர்ப்பிலே நான் தலையிட விரும்ப
வில்லை, உச்சநீதிமன்றம் வரை சென்று தடை விதிக்கப்
பட்டுவிட்டது. சட்டம் கொண்டுவந்த முதலமைச்சருடைய
நோக்கத்தைப் பார்க்கவேண்டுமே தவிர அந்தச் சட்டம் அமல்
படுத்தப்படுகிறபோதுதான் அதைப்பற்றிப் பேசவேண்டுமே
தவிர சட்டம் கொண்டுவரப்படும்போதே உள்நோக்கம்
கற்பிப்பது தவறானதாகும். இந்த உயர்ந்த நோக்கத்தைக்
கொண்ட சட்டத்தை இந்த அரசாங்கம் கைவிட்டுவிடாது, கை
விட்டுவிடும் என்று யாரும் கருத வேண்டாம். சற்று
நேரத்திற்கு முன்புகூட நான் முதலமைச்சர் அவர்களிடம்
பேசினேன். வற்புறுத்திச் சொன்னார்கள், இந்த உயர்ந்த
கருத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக
அரசு கைவிட்டுவிடும் என்று யாரும் கருதத் தேவையில்லை.
நிச்சயம் கைவிடாது. ஆனால் தேர்தல் நடத்தியே தீர
வேண்டுமென்ற கட்டாயத்திற்கு நாம் வந்தாகிவிட்டது.
10,12 ஆண்டுக் காலமாகிவிட்டது, தேர்தல் நடத்தியே தீர
வேண்டுமென்று வந்தபோது உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பை
வாங்கித் தேர்தலை நடத்தவேண்டுமென்றால் இன்னும் பல
மாதங்கள், பல ஆண்டுகள் ஆகக்கூடும். அதைத் தவிர்ப்
பதற்கு வழியில்லாமல் மரியாதைக்குரிய அவை முன்னவர் நிதி
யமைச்சர் அவர்கள் பழைய முறையிலே தேர்தல் நடத்துவோம்
என்று அறிவித்தார்கள். பழைய முறைப்படி தேர்தல் என்ற
வுடன் இடையில் கொண்டுவரப்பட்ட சட்டத்திலே சில
திருத்தங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். எனவே இட
ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில் இந்த அரசு கொள்கையை
விட்டுவிடவில்லை என்பதை நான் திரு தமிழரசன் போன்றவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விட்டுவிடவில்லை
யென்றால் என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கலாம்.
பழைய முறைப்படி தேர்தல் நடத்தியே ஆகவேண்டுமென்ற
கட்டத்திற்கு நாம் வந்துவிட்டு பிறகு நடத்துவோம், அடுத்து
வருகிற தேர்தலை கொஞ்சம் பொறுமையாக இருந்து பாருங்கள்,
இடையிலே வருகிற சட்டத்திருத்தம் எப்படி இருக்கிறது
என்பதைப் பார்த்து பிறகு முடிவுகட்டுங்கள் என்பதை நான்
திரு. தமிழரசன் போன்ற உணர்வுகொண்டவர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கோஆப்ஷன் பற்றியும் நாமினேஷன் பற்றியும்
விவாதித்தார்கள். அதிலே சிறு குழப்பம் ஏற்பட்டுவிட்டதோ
என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்

களிலே உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது. 3 ஆதிதிராவிடர்கள், 3 பெண்கள் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அந்த அளவுக்கு இணைத்துக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே உள்ள பழைய சட்டத்திலே இருந்தது. அப்படி சேர்த்துக் கொண்டு வந்ததை இப்போது சேர்த்து இருக்கிறோமே தவிர வேறு அல்ல, ஜனநாயகப் படுகொலை என்று தி.மு.க. உறுப்பினர் திரு. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜனநாயகப் படுகொலை செய்வதற்கு இந்த ஆட்சி நிச்சயமாக ஒரு போதும் ஒப்புக் கொள்ளாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் நாமினேஷன் பற்றிச் சொல்கிறேன். உறுப்பினர்கள் பேசும்போது நான் உட்கார்ந்து கொண்டே இருந்தேன், நான் பேசி முடிக்கிற வரையில் முழுமையாக கேட்டுவிட்டு தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம் நாமினேஷனைப் பொறுத்தவரையிலே சிறு மாற்றங்களை நாம் செய்து இருக்கிறோம். ஜனநாயக முறையிலே சேர்த்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாமினேஷன் பற்றி பிறகு வருகிறேன். இப்போது கோ—ஆப்ஷன் பற்றி குறிப்பிடுகிறேன். கோ—ஆப்ஷனில் கூட ஒரு ஜனநாயக உணர்வோடு தான் சட்டம் கொண்டுவந்து இருக்கிறோமே தவிர வேறு அல்ல. உதாரணத்திற்கு சொல்லுகிறேன். 12 உறுப்பினர்களுக்கு மேற்படாத ஊராட்சி ஒன்றியங்களில் இருவர் இருவரை இணைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் கொண்டு வந்து இருக்கிறோம். ஏன் கொண்டு வந்தோம் என்று கேட்டால் பழைய சட்டப்படி மூன்று மூன்று பேரவை சேர்த்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. தமிழ் நாட்டில் ஒரு ஊராட்சி ஒன்றியம் பேரூர் ஊராட்சி ஒன்றியம் கோவை மாவட்டத்தை சேர்ந்த ஊராட்சி ஒன்றியம் அது. அதில் 4 உறுப்பினர்கள் தான். அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு உறுப்பினர்கள் 4 பேர் தான். 4 பேரூராட்சிகளைச் சேர்ந்த 4 உறுப்பினர்களைக் கொண்டது ஊராட்சி ஒன்றியம். பழைய சட்டத்திலேயே சொல்லுகிறேன். 4 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், கோ-ஆப்ஷன் மெம்பர் 6 பேர். ஆறும் நாலும் சேர்ந்து பத்து. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை விட இணைத்துக்கொள்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகிற ஜனநாயக படுகொலை அது. அதைக்கூட தவிர்க்க வேண்டும் என்று தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடத்தில் சொல்லி சட்டத்தை திருத்த இருக்கிறோமே தவிர ஜனநாயக படுகொலையை ஒரு நாளும் நாங்கள் ஒத்துக் கொள்ள மாட்டோம். இன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களை இணைப்பது ஜனநாயக படுகொலை என்று சொன்னார்கள். இதை எதிர்க்கட்சிக்காரர்கள் பேசியிருந்தால் கூட பரவாயில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த உறுப்பினர்கள் பேசியதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. (குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாக கேளுங்கள். ஏன் என்றால் அப்போது அனைவரும் ஒன்றாக இருந்த நேரத்தில் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். நான் அந்தக் கட்சியில் அமைச்சராக





இருந்த காலத்தில் சட்டம் இயற்றினோம், கூட்டுறவு சட்டம். அந்த கூட்டுறவுச் சட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் களைவிட நியமன உறுப்பினர்களை அதிகமாக்கி சட்டத்தை போட்டு ஜனநாயக படுகொலை அப்போது நடந்து இருக்கிறது என்பதை மறந்து விட்டார்கள். (குறுக்கீடு)

திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தின் பொருள் ஊராட்சி ஒன்றியத்தினுடைய சட்டங்கள். அதில் கோ—ஆப்ஷன், நாமினேஷன், நாமினேஷனில் ஜனநாயக படுகொலை நடந்த தாகச் சொன்னேன். கூட்டுறவு ஆக்டை கொண்டு வந்து இதில் உதாரணம் காட்டக்கூடாது. இந்தச் சட்டத்தில் உதாரணம் இருந்தால் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாக என் பேச்சைக் கேளுங்கள். நான் சொன்ன வாதத்தை மறுபடியும் சொல்லுகிறேன். அப்போது கொண்டு வந்த கூட்டுறவுச் சட்டத்திலே தேர்ந் தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாக ஆகி நியமன உறுப்பினர்கள் தான் தலைவராக வரக்கூடிய சட்டத்தை நிறைவேற்றினோம் என்பதை மறந்துவிடக்கூடாது. ஜனநாயக படுகொலை அப் போது செய்து இருக்கிறோம். ஆனால் இப்போது இருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் அந்த சட்டத்தையும் ரத்து செய்துவிட்டார்கள். அதைச் சொல்லவந்தேன், குறுக்கீடு காரணமாக மறந்து விட்டேன். இப்போது வேறு சட்டம் தான் வருகிறது. ஆகவே ஜனநாயக படுகொலை என்று சொல்லுவது வார்த்தை அலங்காரத்திற்காக சொல்லலாமே தவிர உதாரணம் என்று சொல்லக்கூடாது, அவர் ஒருகட்சியில் 6 பேர், 6 பேர் என்று சொன்னார்கள். கட்சி இல்லை என்று நாம் தேர்தல் வைக்கிறோம். கட்சி என்று அவர் சொல்லு கிறார். சரி பரவாயில்லை. தலைவரை இப்போது பொது மக்கள் நேரடியாக தேர்ந்து எடுக்கிறார்கள். நேரடியாக ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஊராட்சி மன்றத்திற்கும், நகராட்சிகளுக்கும் தலைவர்கள் தேர்தல் நேரடியாக நடக் கிறது. பொது மக்கள் வாக்கு அளிக்கிறார்கள். தலைவர் தேர்தல் மட்டும். அப்படி தேர்ந்தெடுக்கும்போது 6 பேர், 6 பேர் என்ற பிரச்சினை இல்லை. வாதத்திற்கு இருப்பதாக வைத்துக்கொண்டாலும், 6, 6 பேர் என்று இருக்கும்போது உடனே எங்களுக்கு பிடிக்காத தலைவர் வந்துவிட்டால் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கூப்பிட்டு 2 பேரை போடச் சொல்லி போட்டால் 8 பேர் ஆகி அந்த தலைவர் செல்வாக்கு இல்லாமல் செய்து விடுவோம் என்ற கருத்தைச் சொன்னார்கள். அதற்கு முன்பாக கோ-ஆப்ஷனே இருக்கிறது. 4 பேர் கோ— ஆப்ட் பண்ணுகிற உறுப்பினர்கள் தலைவருக்கு விரோதமாக வந்துவிட்டால் என்ன செய்வார்கள். (குறுக்கீடு) எப்படி முடியாது. திரு. பொன்முத்துராமலிங்கம் அவர்கள் சட்டத்தை

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஏப்ரல் 11

சரியாக படிக்காமல் பேசுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.
அவர் ஒரு வழக்கறிஞர் என்று கூட நான் கருதுகிறேன்.
கோ—ஆப்ட் பண்ணுவது என்பது தலைவருக்கு விரோதம் என்று
சொல்லுகிறார். அப்படி இல்லை. உறுப்பினர்களை சேர்த்துக்
கொள்ள வேண்டுமே தவிர தலைவருக்கு விரோதமாக அல்ல.
தன் இஷ்டப்படி தலைவரை சேர்த்துக்கொள்வது இல்லை.
சட்டத்தை சரியாக படித்து இருக்கவேண்டும்.

திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்
பட்டாலும் கூட உறுப்பினர்களின் விருப்பம் கலந்து இருந்தாலும்
கூட அங்கே அதிகமான எண்ணிக்கை பலத்தோடு கூடிய அந்த
ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவருடைய விருப்பம்தான்
நிறைவேற்றப்படும். அவருடைய விருப்பத்தின் அடிப்படையில்
தான் கோ—ஆப்ஷன் செய்யப்படும்.

(பிற்பகல் 1.20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அப்படி இருக்கும்போது தலைவருக்கு
எங்கே ஆபத்து வரப்போகிறது. கோ—ஆப்ஷன் 2, 2 என்று
சொல்லி, நாமினேஷன் ஒன்று, ஒன்று என்று சொல்லும்போது
இந்த ஒன்று, ஒன்று நாமினேஷன் மூலம் எப்படி அந்த
தலைவருக்கு ஆபத்து வந்துவிடும். அரசாங்கம் தங்கள் கட்சிக்
காரர்களை இங்கே கொண்டு போய் புகுத்தி செல்வாக்கை
வளர்க்கப் பார்க்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான்
கேட்கிறேன், ஒரு ஊராட்சி ஒன்றிய உறுப்பினரை கொண்டு
போய் சேர்த்துதான் அ.இ அ.தி.மு.க.வின் செல்வாக்கை
வளர்க்கப்போகிறோம். அப்படி சேர்த்துத்தானா இன்னொரு
கட்சியில் செல்வாக்கை இன்னும் தேய்க்கமுடியும் என்று
நினைக்கவேண்டும். தவறான வாதத்தை வைத்துக்கொண்டு
பேசக்கூடாது. நான்காண்டுகள் வைத்திருக்கிறீர்கள், ஐந்தாண்டு
களுக்கு வைத்திருக்கவேண்டும், இந்தப் பொதுத் தேர்தலுக்
குள்ளாக தேர்தலை வைத்துவிட்டால் உங்களுக்கு வேண்டியவர்
களைக் கொண்டு வந்து மீண்டும் தலைவராக ஆக்கி அவர்களை
வைத்துக்கொண்டு மீண்டும் நீங்கள் வரலாம் என்று கருதுகிறீர்கள்
என்று ஏதோ கொக்கு தலையிலே வெண்ணெய் வைப்பது
போன்ற ஒரு கற்பனையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
தான் கேட்கிறேன், அப்படி என்று சொன்னால், ஐந்து ஆண்டே
நீங்கள் சொல்வதுபோல சட்டத்தை வைத்துக் கொள்வதாக
வைத்துக்கொள்ளுங்கள். நாங்கள் நினைப்பவர்களைக் கொண்டு
வரக்கூடிய சக்தி எங்களுக்கு இருந்து, ஐந்தாண்டுகள் என்று
தேர்தலை வைத்துவிட்டால் இப்பொழுதே நாங்கள் நினைப்பவர்
களைக் கொண்டு வந்து வைத்துவிடுகிறோம், சரியாகப் போய்
விடுகிறது, நாங்கள் நினைப்பவர்களே இருந்துவிட்டுப
போகிறார்கள் ஆட்சியில். ஆகவே, அந்த வாதம் சரியல்ல.



1985 ஏப்ரல் 11] [திரு. ப. உ. சண்முகம்]

நான்காண்டுகள் என்று சொல்கின்றபொழுது எதிர்க்கட்சி
களுக்குக்கூட ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. நீங்கள் நினைக்கிறபடி
உங்கள் கட்சி செல்வாக்கு பெற்றிருந்தால் வரலாமே; ஒருவேளை
வரமாட்டோம் என்று நம்பிக்கையற்றுப் போன காரணத்தினாலே
இப்படிச் சொல்கிறார்களோ என்னவோ தெரியவில்லை எனக்கு.
எனவே, நான்காண்டுகள் என்று போடுவதற்கு அரசியல் நோக்கமே
இல்லை; அரசியல் நோக்கம் நிச்சயமாகக் கிடையாது.
நான்காண்டுகளாகக் குறைத்ததற்கு எந்த நோக்கமும் இல்லை.

சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தும்பொழுதே கூடச்
சொன்னேன்; இந்த எட்டாவது சட்டப்பேரவை உருவாக்குகின்ற
புதிய சட்டம் இது; இந்தச் சட்டத்தால் உருவாக்குகின்ற
ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் என்ன காரியங்கள்
செய்திருக்கின்றன என்பதைப் பற்றி நாமே ஆராய்வதற்
கான ஒரு வாய்ப்பு நமக்கு இருக்கும்; தேர்தல் அடுத்து
வரும்பொழுது வேண்டுமென்றால் புதிய திருத்தங்களைக்
கொண்டு வரலாம் என்றுகூட நான் சொன்னேன். எனவே,
நான்கு ஆண்டுகள் என்று சொன்னதற்கு அரசியல் நோக்கம்
எதுவும் கிடையாது என்பதை நான் மிகத் தெளிவோடு
தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்தாண்டுகள்தானே எல்லா
யிடங்களிலும் இருக்கின்றன, ஜனநாயகம் என்றெல்லாம் சொல்
கிறீர்களே, ஆறு ஆண்டுகள் என்று சொல்கின்ற மேல்சபையிலே
ஜனநாயகம் இல்லையா? எனவே, இதை ஆறு ஆண்டுகள் என்று
ஆக்க முடியுமா? முடியாது.

நான் இன்னொரு கருத்தைத் தெரிவித்துவிடுகிறேன், நிலச்
சீர்திருத்தச் சட்டம் கொண்டுவந்தபொழுது—சம்பந்தமில்லாமல்
பேசுகிறேன் என்று சொல்லிவிட வேண்டாம், உறுப்பினர்
பொன். முத்துராமலிங்கம் அவர்கள், சம்பந்தத்தோடுதான்
பேசுகிறேன், அவர்கள் ஏதோ அவசரப்படுகிறார்கள்—நிலச்
சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபொழுது பல பிரிவுகளை
நீதிமன்றத்திற்குக் கொண்டுபோய்—உச்ச நீதிமன்றத்திற்கு—ஸ்டே
வாங்கினார்கள். அப்பொழுது இருந்த இந்தியப் பிரதமர்
இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்தில் பேசி அவர்கள்
ஒத்துக்கொண்டு ஒரு கருத்தைக் கொண்டு வந்தார்கள். நிலச்
சீர்திருத்தச் சட்டத்தை அரசியல் சட்டத்தினுடைய பாது
காப்புக்குக் கொண்டு வந்து, எந்த நீதிமன்றமும் அதைக் கேட்கக்
கூடாது என்று சட்ட விதியையே கொண்டு வந்து விட்டோம்.
எனவே, நில உச்ச வரம்புச் சட்டத்தை எந்த நீதிமன்றமும் கேள்வி
கேட்க முடியாது என்று நான் நினைக்கிறேன்.

இட ஒதுக்கீடு 18 சதவீதம், 15 சதவீதம் இந்த
இரண்டையும் அரசியல் சட்டப்பாதுகாப்போடு சட்டம் நிறை
வேற்றப்பட வேண்டுமென்று இந்த அரசு நிச்சயம் வலியுறுத்தும்,
வற்புறுத்தும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.
நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கு அரசியல் சட்டம் பாதுகாப்பு

கொடுப்பதுபோல, அதுவும் சமூக நீதி, இதுவும் ஒரு சமூக நீதி. இந்த சமூக நீதிக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்தும், வலியுறுத்தும். எனவே, அதிலே பின்வாங்கி விடமாட்டோம் ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில். அதை நான் வற்புறுத்தி, தொடர்ச்சியாகச் சொல்லும்பொழுது தவறிவிட்ட காரணத்தால் இப்பொழுது நான் குறிப்பிட்டேன். எனவே, ஒதுக்கீட்டிலே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது.

மாவட்ட ஆட்சித் தலைவர் ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளராக ஆகி விடுவார் என்று கருதுவது, இதில் தானே அமைப்பாளராக இருக்கப்போகிறார்? முதலமைச்சரே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்; மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர்களா? ஆட்சியை நடத்துகின்ற ஒரு கட்சியைப் பார்த்து, அதாவது மூன்றாவது முறையும் வந்திருக்கின்ற ஒரு கட்சியைப் பார்த்து இப்படிப் பேசுவது கேலி செய்வதாக எண்ணிக்கொண்டு தங்களைத் தாங்களே கேலி செய்வதற்கு ஒப்பாகுமே தவிர, அது கொஞ்சமும் பொருத்தமற்ற வாதம் என்பதை நான் வற்புறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இந்தச் சட்டத் திருத்தத்தில், எப்படியாவது தேர்தலை நடத்தியே தீரவேண்டுமென்று இந்த அரசு கருதுகின்ற காரணத்தினால்தான் இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோமே தவிர வேறல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துகின்றபொழுது இதனை ஆட்சேபித்தார்கள். 18 வயது உடையவர்களுக்கெல்லாம் வாக்குரிமை வருமா என்று கேட்டார்கள். சட்டத்திலே இடம் செய்யப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னேன். இப்பொழுது அதனுடைய புரோகிராமை என்ன செய்யப் போகிறோம் என்பதற்கான புரோகிராமை நான் படித்து விடுகிறேன். அதுவும் உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏனென்று கேட்டால் உறுப்பினர்களும் கொஞ்சம் அக்கறை காட்டி, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு இப்பொழுதே முயற்சிக்கலாம். For summary revision தேதி வைக்கப்பட்டிருக்கிறது. நிறைய அவகாசம் கொடுத்துத்தான் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். 15-5-85 அன்று ஒரு Draft Roll வெளியிடப்படும். Preliminary publication of draft rolls 16 ஆம் தேதி வெளியிடப்படுகிறது. 17-5-85 முதல் 31-5-85 வரையில் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதும்; நீக்குவதும். அதை ஆட்சேபிப்பவர்கள் ஆட்சேபிக்கலாம்; சேர்த்துக் கொள்ளப்படக் கூடியவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். For settlememt of claims 15-6-85 அன்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே வாக்காளர்களாக இணைக்கப்படுகிறார்கள் என்ற விவரமும் அறிவிக்கப்படும்.



அதற்குப் பிறகு 16-6-1985-லிருந்து 15-7-1985 வரையில் வாக்காளர்கள் பெயர்கள் அச்சடிக்கப்படும். ஃபைனல் பப்ளிகேஷன் ஆஃப் ரோல்ஸ் வித் அமென்ட்மென்ட்ஸ் அதாவது மாற்றங்களோடு முழு வாக்காளர் பட்டியல் 25-7-1985 அன்று வெளியிடப்படும். தேர்தலைப் பற்றிய தேதி அறிவிப்பிற்கும் முதலமைச்சர் அவர்கள் அங்கீகரித்து விட்டார்கள். எனவே அதையும் இப்போது இந்த அவைக்கு அறிவித்து விடுகிறேன். தேர்தல் அறிவிப்பு இரண்டிற்குத்தான் அதாவது ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கு. மூன்று மாநகராட்சிகளுக்கு மட்டும் இல்லை. சென்னை, மதுரை, கோவை மட்டும் இல்லை.

மாண்புமிகு சமத் அவர்கள் கேட்டதுபோல் திருநெல்வேலி, நகராட்சியாகத் தேர்தல் நடத்தப்படும். அதேபோல திருச்சி, அதேபோல சேலம். அனைத்திற்கும் சேர்த்து ஒரே நாளில் தேர்தல் நடக்கும். ஒரே நாளில் அறிவிப்பு தருகிறேன். ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நகராட்சிகளுக்கும் ஒரே நாளில் தான் அறிவிக்கப்படுகிறது. தேர்தல் அறிக்கை 12-8-1985. வேட்பு மனு பெறுதல் 17, 19, 20 ஆகிய மூன்று நாட்களும், 18-ஆம் தேதி விடுமுறை. ஆதலால் 18 ஆம் தேதி கிடையாது. வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்தல் 21-8-1985. வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுதல் 24-8-85. வேட்பு மனுக்கள் இறுதிப் பட்டியல் வெளியிடுவது 24-8-1985. வாக்குப் பதிவு 9-9-1985. வாக்கு எண்ணிக்கை 10-9-1985. பதவி ஏற்பு அரசு அறிவிக்கும் தேதியில். இவ்வளவையும் தெரிவித்திருக்கிறேன். எனவே இந்த அரசு தேர்தலை நடத்தியாக வேண்டும் என்று உள்ளப்பூர்வமான முழு ஆசையோடுதான் இருக்கிறது. எனவே எப்படியும் கீழ்மட்டத்தில் இருக்கின்ற உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்தியே தீரவேண்டும் என்கிற அந்த முழு உண்மையான எண்ணத்தோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பதற்காகத்தான் இவ்வளவையும் படித்திருக்கிறேன். எனவே மாண்புமிகு உறுப்பினர்களிடம் நான் கேட்டுக்கொள்வது உங்களுக்கு இருக்கின்ற திறமையைக் காட்டி சட்டத்திலே எங்கே ஓட்டை இருக்கின்றது என்று தேட வேண்டாம். கூடியவரையில் எல்லாவற்றையும் அடைத்திருக்கிறோம். நான் அனைத்துக் கட்சியினரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அரசோடு ஒத்துழையுங்கள் தேர்தலை நடத்துவதற்கு. அரசோடு ஒத்துழையுங்கள் என்றுதான் கேட்கிறேனே தவிர கட்சியோடு ஒத்துழையுங்கள் என்று கேட்கவில்லை. எனவே என்னைப் பார்த்துச் சிரிப்பதற்கு வேண்டிய அவசியம் இல்லை. அரசோடு ஒத்துழையுங்கள் தேர்தலை நடத்துவதற்கு என்று கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றுக்குத் தேர்தலை நடத்தியே தீரவேண்டும் என்று நான் மீண்டும், மீண்டும் வற்புறுத்திக் கொண்டு

(திரு. ப. உ. சண்முகம்) [1985 ஏப்ரல் 11

இரண்டு சட்டங்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டப்பிரிவு ஆய்வுக்கு வரும்போது அதைப்பற்றி விவாதிக்கலாம் என்று கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவுகள் மீது விவாதம் முடிவுற்றது- சட்ட முன்வடிவுகள் தனித் தனியாக பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகிறது.

ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1985.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம்திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 3—சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 3, in sub-clause (2), delete item (ii) in the proposed new sub section (1 –A) (.):

In clause 3, in sub-clrase (2),dele e item (ii) in the proposed new sub-section (1-A) (b);

In clause 3, in sub-clause (2), delete item (ii) in the proposed new sub-section (I-A) (c);

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

Thiru T. R. VENKATARAMANAN:- Sir, I move the following amendment:

In clause 3, omit the Third proviso.

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.



1985 ஏப்ரல் 11]

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

Thiru J. HEMACHANDRAN: Sir, I move the following amendment:–

"In clause 4. for the expression "four years" substitute the expression "five years"

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு-4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 5 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

Thiru J. HEMACHANDRAN: Sir, I move the following amendment:-

In clause 5. for the expression "four years" substitute the expression "five years."

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

Thiru P. PONNURANGAM: Sir, I move the following amendment:-

In clause 5, for the expression "four years", substitute the expression "six years".

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றன.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 6-சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

Thiru J. HEMACHANRAN;- Sir. I move the following amendment:-

In clause 6, for the expression "four years", substitute the expression "five years".

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1.30)

பிரிவு 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 7 சட்டமுன்டிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கொண்டு வந்த திருத்தமானது ஒரு சட்டப் பிரச்னை குறித்தது, ஏற்கனவே இன்னொரு சட்டம் கொண்டு வருவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டாகள். நீங்கள் எத்தனை தடவை இந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் இதே பிரச்னை மீண்டும், மீண்டும் தலை தூக்கும், ஆகவே, நான் கொண்டு வந்த திருத்தமானது இந்தத் திருத்தத்திற்கு எதிர்ப்பான திருத்தம் அல்ல. அதைச் சரியான முறையிலே நீங்கள் பரிசீலிக்கவில்லையென்ற மன வருத்தத்துடன் நான் என்னுடைய திருத்தத்தை—ஆனால் காலப்போக்கில் என்னுடைய திருத்தம் கண்டிப்பாக நிற்கும் என்று சொல்லிக் கொண்டு வாபஸ் பெற்றுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 7 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு-8 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்''.

பிரிவு 8 இல், ''நான்கு ஆண்டுகள்'' என்ற சொற்களுக்கு பதிலாக ''ஆறு ஆண்டுகள்'' என்ற சொற்கள் அமைக்கப்பட வேண்டும்.

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.



திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, என் பெயரால் இருக்கக்கூடிய திருத்தத்தை வலியுறுத்தி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இட ஒதுக்கீடுக் கொள்கையைப் பொறுத்தமட்டில், திராவிட முன்னேற்றக் கழகம் பெண்களுக்கு விரோதமான கொள்கையில், ஆதிதிராவிடர்களுக்கு விரோதமான கொள்கையில் மலை ஜாதியினருக்கு விரோதமான கொள்கையில் இல்லை. இன்னும் சொல்லப்போனால். இதே மாமன்றத்தில் அவர் ஏற்கனவே இந்தச் சபையிலே இல்லாத காரணத்தினாலே, நான் அவரை அன்போடு கேட்டுக்கொள்கிறேன், இந்தச் சபை குறிப்பேடுகளை அவர் வாங்கிப் படித்துப் பார்க்கவேண்டும். அதிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இட ஒதுக்கீட்டை வரவேற்கிறது, என்று. இட ஒதுக்கீட்டிலே....

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிற திருத்தத்தை ஒட்டித்தான் பேசலாமே தவிர, அமைச்சருக்குப் பதில் சொல்லிப் பேசிக் கொண்டிருக்கிறார். அதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியும், கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தத்தின் அடிப்படையிலே பேசுவதற்கு முன்பாகக் கூட திருத்தம் கொடுப்பவர்கள் ஜெனரல் டிஸ்கஷனுக்குக் கூட அனுமதிக்கப் பட்டு, அந்தத் திருத்தத்தைப் பின்னாலே வலியுறுத்தி, ஒரே வரியிலே சொல்லி பிரச்னையை இங்கே முடித்திருக்கிறார்கள்.

ஏதோ அமைச்சர் அவர்கள் புதிதாகத் தெரிந்து வைத்துச் சொல்வதைப் போல அந்தத் திருத்தத்திலேதான் பேசவேண்டுமென்று சொல்வது ஒரு விவாதத்தை அவர் வரவேற்கத் தயாராக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நமக்கு இருக்கிற விதிகள்படி திருத்தங்கள் கொண்டு வந்திருந்தால், திருத்தத்தைப் பற்றி மட்டும்தான் நாம் விவாதிக்க வேண்டுமே தவிர, பொது விவாதமாக ஆக்கிக் கொண்டு, மீண்டும் பொது விவாதத்திற்குப் பதில் சொல்வது சரியாகாது.

திரு. அ. ரகுமான்கான்: அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தின் ஷரத்துக்களைப் பற்றிப் பேசும்பொழுது நானும் ஷரத்துக்களை பற்றி பேசுவதற்குச் சரியாக இருக்கும். ஆகவே, நான் அதுகுறித்து பேச விரும்பவில்லை. இட ஒதுக்கீட்டிற்கு நாங்கள் எதிரிகள் அல்ல. இட ஒதுக்கீடு பற்றிய முறை தவறாக ஆகிவிடக்கூடாது. அதில் முறைகேடு இருக்குமானால் அதைக் கண்டிக்கின்ற உரிமை

அது குறித்து குரல் கொடுக்கின்ற உரிமை பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்டு. ஆகவே, அது வேறு விவகாரம். நான் அதற்குள் போக விரும்பவில்லை.

இங்கே நான் கொடுத்திருக்கக்கூடிய முக்கியமான திருத்தம் 5 ஆண்டுகள் என்று இருப்பது, 4 ஆண்டுகளாக மாற்றப்பட வேண்டுமென்பது. அதுகுறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருகிறபொழுது இந்தநகராட்சிகளும், பஞ்சாயத்தும் பஞ்சாயத்து யூனியன்களும் எப்படிச் செயல்பட வேண்டுமென்பதைத் தெரிந்துகொள்வதற்குச் சட்டமன்றத்திற்கு ஒரு வாய்ப்பு இருக்க வேண்டும். ஆகையினாலே 4 ஆண்டுக்காலமாக, 5 ஆண்டுக்காலம் என்று இருந்ததை மாற்றியிருக்கிறோம் என்று ஒரு விளக்கம் கொடுத்தார்கள். ஆனால், அதே நேரத்திலே நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன், இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியதைப் போல, மதுரையிலே இருக்கக்கூடிய மாநக ராட்சிக்குப் பதவிக்காலம் 6 ஆண்டுக்காலம் என்று இருக்கும் போது, அங்கே இருக்கக்கூடிய அந்த நிலையை அல்லது அமைப்பை, இந்தச் சட்டமன்றம் பரிசீலிப்பதற்கு வாய்ப்பிருக்கிறதா? இந்தச் சட்டமன்றம் பரிசீலிப்பதற்கு வாய்ப்பு இல்லை. சென்னைக்கு மட்டும் அந்த வாய்ப்பிருக்கிறது. நான் ஏற்கனவே சொல்லியதைப் போல, சட்டமன்ற உறுப்பினருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 ஆண்டுக் காலம் இருக்கிறது. செனட்டிலே உறுப்பினராக 6 ஆண்டுக் காலம் இருக்கலாம், வைஸ் சான்சலராக இருப்பவர்களுக்கு 6 ஆண்டுக் காலம் பதவிக்காலம். அமைச்சர்களாக இருப்பவர்கள் கூட ஒரு குறிப்பிட்ட காலம் என்றில்லாமல் நீண்டகாலமாக இருப்பது கூட சௌகரியம் என்று கருதக்கூடிய நிலைமை இருக்கிறது.

தேர்தலில் மக்கள்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். மாநகராட்சி அதிகாரம் பெற்றிருக்கிறது. எனவே, அதை சூப்பர்வைஸ் பண்ணக்கூடிய பாடியாக, அமைப்பாக, இந்தச் சட்டசபை இருக்கக்கூடாது. ஆகவே, அந்த மாநகராட்சி அல்லது பஞ்சாயத்து யூனியன், நகராட்சி எல்லாம் எப்படி செயல் படுகிறது என்பதைத் தேர்ந்தெடுத்த மக்கள் பார்த்துக் கொள்வார்கள். இந்த சட்டசபை அதை கவனிக்கவேண்டிய அவசியம் கிடையாது. ஆகையினாலே நான் சொல்ல விரும்புவது 5 ஆண்டுகள் என்று இருக்கிற நிலைமையை மாற்றி 4 ஆண்டுகள் என்று கொண்டு வந்திருப்பது சரியல்ல. அது 5 ஆண்டுகளாக இருக்கவேண்டும். மதுரைக்கு ஒரு நீதி, மற்ற இடங்களுக்கு ஒரு நீதி என்று சொல்வது சரியல்ல என்ற கருத்தை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி, இந்த 4 ஆண்டுகள் என்று சொல்வதை, அரசியல் உள்நோக்கத்தோடு அமைச்சர் அவர்கள் ஒரு பக்கத்திலே விளக்கம் கொடுத்தாலும், நான் விளக்கவிரும்புகிறேன். கார் உள்ளவரை, கடல் உள்ளவரை ஒரு கட்சியே தொடர்ந்து ஆளுங்கட்சியாக இருந்துவிட முடியாது, அதுதான் வரலாறு. எனவே சட்டம் இயற்றுகிற





போது நாம்தேர்தலுக்கு அப்பால் தான் சிந்திக்க வேண்டும் யார் வேண்டுமானாலும் ஆளும் கட்சியாக வரலாம். யார் வேண்டுமானாலும் எதிர்கட்சியாக வரலாம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்திருப்பது ஒரே ஒரு திருத்தம் தான். இதுவரையில் திருத்தம் கொடுத்த யாரும் இவ்வளவு பேசவில்லை. நீங்கள் அதிகமாகவே பேசி இருக்கிறீர்கள் அமருங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: நான் மூன்று திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். யூனியனுக்கும் திருத்தம் கொடுத்திருக் கிறேன். நகராட்சிக்கும் திருத்தம் கொடுத்திருக்கிறேன். முறைப்படி ஒவ்வொரு திருத்தத்திற்கும் ஐந்து நிமிடம் பேசவேண்டுமென்றாலும் கூட, இப்போது மொத்தமாக எடுத்துக்கொண்ட காரணத்தால் 15 நிமிடங்கள் பேசுவதற்கு கூட சட்டப் பேரவையில் அதிகாரப்பூர்வமாக உரிமை உண்டு. இல்லையென்றால் ஒவ்வொரு முறையும் கூப்பிடுங்கள், ஒவ்வொரு முறையும் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையில் நான்கு வருடங்கள் என்பதை ஏற்றுக்கொண்டாகி விட்டது. திரும்பவும் நீங்கள் பேசுவது என்பது இன்ப்ரக்சுவஸ் ஆகும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போது மணி 1.36 ஆகிவிட்டது. இன்னொரு பில் வேறு இருக்கிறது. சாப்பாட்டு நேரம் வேறு ஆகிவிட்டது. ஆகவே சீக்கிரமாக முடித்து விட்டால் நலமாக இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த பில்லிலே நான் பேசவிருக்கிறேன். நீங்கள் விரைவில் சாப்பிட போய் விட முடியாது, இந்த சட்ட ஷரத்து உள்ளபடியே ஜனநாயகத் திற்கு விரோதமானது. நான்கு ஆண்டுகள் என்று கொண்டு வந்திருப்பது....

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: தலைவர் அவர்களே, சபையின் அலுவல் நேரத்தை நீட்டிக்க அனுமதி இன்னும் கோரப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாக்கெடுப்பு நடந்தபோதே நான் பார்த்தேன். அப்போதே 1.32 ஆகிவிட்டது. நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டு தான் நான் நடத்திக் கொண்டி ருக்கிறேன் என்பதால் அப்படியே விட்டு விட்டேன்.

திரு. அ. ரகுமான்கான்: எல்லா பிரச்னைகளையும் நான் ஏற்கனவே பேசியாகவிட்டது. ஆகவே நான் கடைசியாக கேட்டுக்கொள்வது, இதுபோன்று பல அறிவிப்புகள் சட்ட சபையில் சொல்லப்பட்டிருக்கின்றன. தயவு சய்து நிறை வேற்றுங்கள். ஏனென்றால் புதிய அமைச்சர், புதிய ஜோரோடு பேசுகிறார்.

[1985 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அமைச்சர் புதிய ஜோரோடு பேசுகிறார் என்று சொல்கிறார்கள். பரவாயில்லை. அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரைக்கு ஒரு நீதி, சென்னை மாநகராட்சிக்கு ஒரு நீதியா என்று கேட்டிருக்கிறார்கள். அப்படித் தான் வகுத்திருக்கிறோம், சென்னை மாநகராட்சிக்கு ஒரு நீதி, மதுரை மாநகராட்சிக்கு ஒரு நீதி என்று வகுத்தது எந்தக் காலம் என்பதை யோசிக்க வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: காரணம் நீங்கள் தான்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கு நான் காரணமில்லை. விவரமே தெரியாமல் பேசக்கூடாது. தெரியவில்லையென்றால் யாரையாவது கேட்டு பேச வேண்டும். தெரியவில்லையொன்றால், பேராசிரியர் அவர்களை கேட்க வேண்டும். இல்லை மதுரைக்கு மேயரை தேர்ந்தெடுக்கும் போது தொடர்ந்து இருக்கலாம் என்று சட்டத்தைப் போட்டு விட்டு, சென்னைக்கு மட்டும் ஆண்டிற்கு ஒரு மேயரை மாற்றி வைத்திருக்கிறோமே, சென்னைக்கு ஒரு நீதி. மதுரைக்கு ஒரு நீதியா? அப்போது எங்கே போயிற்று நீதி? எனவே நீதியைப்பற்றி நீங்கள் பேசக் கூடாது. நீங்கள் பேசியது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் பேசியதற்கு நான் பதில் சொல்லி இருக்கிறேன். நீங்கள் பேசுகிற வரையில் நான் உட்கார்ந்து தான் இருந்தேன். நீங்கள் அப்போது குறுக்கிடவில்லை. அதேபோல நான் பதில் சொல்கிற போது நீங்கள் குறுக்கிடக் கூடாது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ச்சியோடு கருத்துக்களை சொல்வதிலே எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. ஆனால் எங்கெங்கே என்னென்ன தவறு நடக்கிறதோ, அங்கெங்கே அவர் இருந்துவிட்டு இப்போது ஏற்கனவே நடந்துவிட்ட தவறுகளைப் பற்றி பேசுவது அவ்வளவு நியாயம் அல்ல.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, எங்கெங்கே என்னென்ன தவறு நடக்கிறதோ அப்போது அங்கெங்கே இருந்துவிட்டு நான் வேறு எங்கோ போய்விட்டதாக சொல்கிறார்கள். பரவாயில்லை. தவறு நடந்த இடத்திலே நான் இருந்தேன், இப்போது தவறு இல்லாத இடத்திற்கு வந்திருக்கிறேன் என்பதை ஒப்புக் கொண்டதற்காக பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் தனிப்பட்ட முறையிலே கூட அமைச்சர் அவர்களை சொல்லவில்லை. நான் எந்தக் கருத்திலே சொல்கிறேன் என்றால், அந்தத் தவறு நடக்கிறபோது அங்கே அமைச்சராக இருந்த காரணத்தால் அது நியாயமாகப்பட்டது. இப்போது இந்தத் தவறு நடக்கிறபோது இது நியாயமாகப்படுகிறது என்பதற்காகத் தான் சொல்கிறேன்.



1985 ஏப்ரல் 11] [திரு. க. அன்பழகன்]

ஆனால் இப்போது நான் கேட்பது, ஏற்கனவே நானே, அன்பழகனே தவறு செய்தாலும் கூட, இப்போது ஒரு கருத்து நியாயமாக தெரியுமானால் நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியது தானே? ஒப்புக்கொள்ள வேண்டிய நியாயமான கருத்திலே கட்சி வேறுபாடு என்ன? அல்லது அமைச்சர் அவர்களுக்காக தனிப்பட்ட உரிமை என்ன குறுக்கே நிற்கமுடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதில் ஒன்றும் கருத்து வேறுபாடு கிடையாது. இதில் கட்சி வேறுபாடு ஒன்றும் கிடையாது. 4 ஆண்டு என்று ஆக்கியதிலே பெரிய சட்டப் பிரச்சனை இல்லை, சட்ட சிக்கல் ஒன்றும் இல்லை. 5 ஆண்டு என்று இருந்ததை 4 ஆண்டு என்று ஆக்கியதால் ஊராட்சிக்கோ நகராட்சிக்கோ பெரிய சட்டப் பிரச்சனை ஒன்றும் இல்லை. இதனால் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் இலாப நஷ்டம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. எனவே இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவது ......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் தங்களிடம் ஒரு தீர்ப்பை எதிர்பார்க்கிறேன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய திருத்தத்தை முன்மொழிந்து பேசினார்கள். பின்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இப்போது வாக்கெடுப்பு நடைபெறும்போது மீண்டும் பேச முற்படுகிறார்கள். அப்படி பேசலாமா?

திரு அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நான் மூன்று திருத்தங்கள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தந்த சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படும்போது நீங்கள் பேசலாம். இப்போது முடியாது, உட்காருங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்: In clause 8 for the expression four years "substitute the expression" 'six years'.

The amendment was duly seconded.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 8 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 8 நிறைவேற்றப்பெற்றது.

[திரு. ப. உ. சண்முகம்] [1985 ஏப்ரல் 11

ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து அமல்படுத்துகிறோம். இந்தச் சட்டமேகூட சரியா தவறா என்று வாதிப்பதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கே உரிமை இருக்கட்டுமே என்றுதான், இதைப் பரிசீலிப்பதற்கு நன்கு ஆண்டுகளிலே தேர்தலை வைக்கலாம் என்றுதான் வைத்திருக்கிறோமே தவிர, வேறு நோக்கம் கிடையாது

மற்றுமொன்றை நான் தெரிவிக்கிறேன், எந்த இடத்திலும் தவறுகளைச் செய்துவிட்டு நான் தப்பித்துக் கொள்கிறவன் அல்ல; எந்தத் தவறையும் செய்து விட்டேன், என்னை மன்னித்துக் கொள் என்று கேட்டுக்கொள்பவனும் அல்ல; எந்தத் தவறுகளுக்காகவும் நான் நீதிமன்றத்திலே வழக்கை வாபஸ் வாங்கு என்று கேட்டுக் கொண்டவனும் அல்ல; இந்தச் சண்முகம் எல்லா இடத்திலும் நீதிமன்றத்திற்குச்சென்று நிரபராதி என்றுவந்திருக்கிறானே தவிர குற்றவாளி என்று எந்த இடத்திலும் வந்தது இல்லை என்பதை மட்டும் வற்புறுத்திக் கூறுகிறேன்.

திரு.க. அன்பழகன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கடைசியிலே சொன்ன பகுதிகள் நான் எழுப்பிய வாதத்தினுடைய விளைவு அல்லவா? நான் அப்படி எந்தப் பிரச்னையையும் எழுப்பவில்லை,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் எழுப்பியது அல்ல என்று சொன்னார்கள். அவர்தான் முதலிலே கிளப்பினார். அவர் கிளப்பியதால்தான் நான் பதில் சொன்னேன். தானே சொல்லிவிட்டு தானே இல்லை என்கிறார். (குறுக்கீடு) தப்பாகப் பேசவில்லை. சொன்னதைத் திரும்பப் பெறக்கூடாது. ஒன்று திரும்பப் பெற்றேன் என்று பகிரங்கமாக ஒத்துக் கொள்ளுங்கள்; பகிரங்கமாக நான் பதில் சொல்கிறேன். தவறு செய்த நேரத்திலேயெல்லாம், தவறு செய்த இடத்திலேயிருந்து விட்டு, தவறு செய்த இடத்திலேயிருந்து பேசுகிறேன் என்று சொன்னால் யாரைப் பார்த்து? இந்த சண்முகத்தைப் பார்த்தா? அவ்வளவு துணிச்சலா?

திரு க. அன்பழகன். மாண்புமிகு தலைவரவர்களே, யாரைப் பற்றியும் தனிப்பட்ட உணர்வோடு நான் சொன்னது அல்ல. ஏற்கனவே ஒரு அமைச்சரவையிலே திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையிலே தவறு நடந்தது என்ற கருத்தைக்கூறி அது கொள்கை முறையிலே தவறு, இது அவ்விதமான தவறு அல்ல, அன்று நடைமுறையிலே, கொள்கையிலே தவறு நடந்தது என்பதை அமைச்சர் சொன்ன காரணத்தால், அப்பொழுது அமைச்சராக இருந்தவர் என்ற ஞாபகம் வந்த காரணத்தால் தான் சொன்னேனே தவிர, அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்த போது அப்படியொரு கொள்கை வந்து இருக்குமானால் அந்தத் தவறுக்கு அனைவரும் சேர்ந்துதானே பொறுப்பு என்ற கருத்திலே சொல்லப்பட்டதே தவிர, இன்டிவிஜுவல் ப. உ. சண்முகம் அல்ல; கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிட்டி உள்ள அமைச்சரவையிலேயிருந்த ஒருவர் என்ற முறையில். அதற்கு இவ்வளவு ஆத்திரப்படுவதாக இருந்தால், நம்முடைய பழைய வரலாறு முழுவதுமே நமக்கு விரோதமாகத்தான் இருக்கும்.



1985 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பழைய வரலாற்றைக் கிளறுவதால் விரோதமாக இருக்கும் என்று நான் ஒன்றும் பயப்பட மாட்டேன். எந்த நேரத்திலும், எப்பொழுது வேண்டுமென்றாலும், எதை வேண்டுமானாலும் கிளறுவதற்கு இந்த சண்முகம் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் தெரிவிக்கிறேன். பேராசிரியர் அன்பழகன் அவர்கள் சொல்லக்கூடாத வார்த்தைகளை, தடிப்பான வார்த்தைகளைச் சொல்லி, அது ரிக்கார்டில் போய் இருக்கிறது. வேண்டுமென்றால் பார்த்துக்கொண்டு பிறகு, நாளை பதில் சொல்லட்டும்.

திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படி தனிப்பட்ட முறையில் ஒரு அமைச்சரைப் பற்றியோ அல்லது ப. உ. சவைப் பற்றியோ தடிப்பான வார்த்தைகள் ஏதாவது இருந்தால் தாங்கள் நீக்கும்படி தங்களை நானே கேட்டுக்கொள்கிறேன். வருத்திற் காகப் பேசுகிற கருத்தை, தனிப்பட்ட முறையிலே எடுத்துக் கொள்வது என்பது அமைச்சரவையிலே இருப்பவர்களுக்கு அவ்வளவு விரும்பத்தக்க ஒன்று அல்ல; எனக்கு அப்படிப்பழக்கமும் இல்லை. இரண்டாவது, நான் தவறு என்று சொன்னபோது கூட, நான் சொன்ன தவறுகள் அமைச்சர் சுட்டிக்காட்டிய கொள்கை அடிப்படையில், கூட்டுறவு சொசைட்டிகளில் நாமினேஷன் முறையில், அப்பொழுது இருந்த அமைச்சர் செய்துவிட்டதாக இந்த அமைச்சர் சுட்டிக்காட்டியதை அந்த அமைச்சரவையிலே அவரும் இருந்திருப்பார் என்ற நினைவிலே சொன்னேனே தவிர. ஒருவேளை அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்திலே அவர் அமைச்சராக இருந்தாரோ இல்லையோ, அதுகூட எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) அந்த அமைச்சரவையிலே இருந்தாரோ இல்லையோ? பண்ருட்டி இராமச்சந்திரன், நாவலர், நான் எல்லோரும் இருந்திருப்போம் என்று நினைத்துக்கொண்டு சொல்லிவிட்டேன். அப்படி இல்லை என்றால் அது வேறு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இருந்தோம் என்று சொல்லித்தான் சொன்னேன். அந்தச் சட்டமும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகப்போட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஒன்றுமே இல்லாதபடி செய்தார்கள். அந்தக் கூட்டத்தில்கூட இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயகத்திற்கு உகந்த சட்டம் அல்ல என்று திருத்திக்கொண்டிருக்கிறது என்று நான் சொன்னேன்.

(பிற்பகல் 1-50)

திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படி அமைச்சரவர்கள் சொன்னதற்காகப் பாராட்டுகிறேன்.

அதைவிட பெரிய குறை நடைபெறுகிறபோது, பார்த்துக் கொண்டு இருந்தவர், இதைப் பேசுவதற்கு அனுமதிக்காததற்காக வருந்துகிறேன். இதைவிட பெரிய குறை நடந்த போது, பார்த்துக்கொண்டு இருந்தோம். ஆகவே இதைப் பேசுவது ஒன்றும் பாவமான காரியம் அல்ல. எனவே இங்கே எடுத்துக்கொள்ளப்பட

[திரு. க. அன்பழகன்] [1985 ஏப்ரல் 11

வேண்டிய மிக முக்கியமானது இப்படிப்பட்ட முறையில் கலெக்டர் நாமினேஷன் செய்வதை இந்தக் காலக்கட்டத்தில், இனி எதிர்கால நன்மைக்காக ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அரசு இதை ஏற்றுக் கொள்ளுமானால் இந்தச் சட்டத்தை பூரணமாக வரவேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே வாதத்திற்கு வாதம் வைப்பதாக தயவுசெய்து நினைக்க வேண்டாம் நல்லவேளை பேராசிரியர் அவர்கள் பார்த்துக்கொண்டு இருந்தேன் என்று சொன்னார்கள். பங்கு கொண்டவன் அல்ல.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே நான் என்னுடைய வேண்டுகோளை தெரிவித்து விட்டேன். இந்த உணர்வு ஏறக் குறைய எதிர்க்கட்சிகளிலே உள்ள எல்லாவிதமான வெவ்வேறு விதமான கொள்கை உடைய கட்சிகளுடைய மொத்த உணர்வு, எனவேதான் நான் தங்கள் மூலமாக இந்தச் சட்டத்தை, நிறை வேற்றப்படக்கூடிய சட்டத்தை நாட்டிலே நடைமுறைப் படுத்துவதை, நான் வரவேற்றாலுங்கூட, கலெக்டர் நாமினேஷன் என்று பிரிவை எதிர்ப்பதற்காக, திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்புச் செய்கிறது என்பதை நான் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய் தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 22/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாவட்ட நகராட்சிகளின் (திருத்த) சட்டமுன்வடிவு 1985

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 23/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்றன.



1985 ஏப்ரல் 11]

பிரிவு 4

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி. "பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THIRU J. HEMACHANDRAN Sir, I move the amendmed standing in my name—

In clause 4, for the expression 'four years' substitute the expression 'five years'.

The amendment was duly seconded.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, முனிசிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே 5 வருட காலம்தான் அதனுடைய காலவதியாக இருந்தது என்பதுதான் எங்களுக்கு தெரிந்த அளவிலே உள்ளது. ஆனால் அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துக் களைப் பற்றி பேசக்கூடிய நேரத்திலே, 3 வருட காலம், ஆகவே எக்ஸ்டென்சன் பண்ணுவது பொறுத்த வரையில் ஒரு விளக் கத்தைக் கொடுத்தார்கள். 5 வருட காலம் என்று இருந்த முனிசிபாலிட்டியினுடைய பீரியடை, 4 வருட காலமாகக் குறைப்பதற்கு என்ன காரணம் என்று அவர்கள் சொல்லவில்லை. ஆகவே அந்தக் காரணத்தாலே ஏற்கனவே இருந்த அந்த பீரியடைக் குறைப்பதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வி யுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு 4 நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 5 முதல் 9 வரை மற்றும் அட்டவணை 1,2 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 23/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது

2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஈ) அழகப்பா பல்கலைக்கழக சட்ட முன்வடிவு 1985 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.24/1985), பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

2. அழகப்பா பல்கலைக் கழக சட்ட முன்வடிவு 1985

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985). ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்னை. அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தைப் போய் அப்படியே ஒரு நிமிடத்தில் போய் பாஸ் செய்து விட்டால் எப்படி. எங்களுடைய உரிமை தயவு செய்து அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகப்பா அவர்கள் செட்டிநாட்டு அரசருடைய குடும்பத்தினர் எப்படி கல்வித் துறைக்கு செய்தார்களோ, அல்லது பணியாற்றினார்களோ அதே போல சிறப்பாக பணியாற்றியிருக்கிறார்கள். அவருடைய சொத்துக்களையும் அறக்கட்டளைகளுக்குப் பெற்று, கல்விப் பணி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக தமிழகத்தைச் சார்ந்த அத்தனை பேர்களும் அந்தக் குடும்பத்திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இப்பொழுது இங்கே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்ற புதிய பல்கலைக் கழகம் உருவாக்கப்படுவதை எந்த காரணத்திற்காக எதிர்க்க வேண்டிய அவசியம் எங்கள் கட்சி மனப்பூர்வமாக திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. வரவேற்கிறது. ஆனால் அதிலே உள்ள முக்கியமான பிரச்னைகளை சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு இங்கே இருக்கக்கூடிய அழகப்பா பல்கலைக் கழகத்திலே, அங்கே இருக்கக்கூடிய உடல் பயிற்சிக் கல்லூரி, கலைக் கல்லூரி அதைப்போலவே மற்றக் கல்லூரிகள் எல்லாம் இணைக்கப்பெற்று. இன்றைக்கு பல்கலைக் கழகமாக புதிய பரிமாணம் பெற்றிருக்கிறது. அதிலே நிர்வாக அமைப்புகளாக,

@ 1985-ம் ஆண்டு ஏப்ரல் 8-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





Senate, Syndicate, Standing Commitee on Academic Affais, என்று 3 அமைப்புகள் இருக்கின்றன.

எல்லா பல்கலைக் கழகத்திற்கும் என்னென்ன சட்டப்பிரிவுகள் கொண்டுவரப்பட்டதோ அதைப்போலவேதான் இந்த அழகப்பா பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பல்கலைக் கழக நிர்வாக அமைப்புகள் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும்.

ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் அதிலே இடம் பெற வேண்டும். ஆனால், ஆளுநரின் மூலம் நாமினேஷன் செய்யப் படுகிற எண்ணிக்கை அதிகமாக அதில் இருக்கிறது. அதைப் போலவே இணைச் சேன்சிலர் என்று சொல்லக்கூடிய அமைச்சர் அரசாங்கத்தின் சார்பாக செய்யக்கூடிய நாமினேஷன் அதிலே அதிகமாக இருக்கிறது. எனவே நான் சொல்ல விரும்புவது இப்போது குறிப்பாக இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டத்தை உன்னிப்போடு பார்ப்பீர்களேயானால், இந்தப் பல்கலைக் கழகத்திற்குரிய செனட்டிற்கு தேர்தலே கிடையாது. ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் வருவதற்கு வாய்ப்பே இல்லை மாறாக பதவி வழியிலே வரக்கூடிய வேந்தர், இணை வேந்தர் துணை வேந்தர், கல்வி அரசுச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத்துறை அரசுச் செயலாளர், கல்லூரி கல்வி இயக்குநர் தொழில் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், பல்கலைக் கழக பட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறைத் தலைவர், ஆகிய இவர்கள் இடம் பெறுகிறார்களே தவிர, அதைப் போலவே சட்டமன்ற நியமன உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்களே தவிர, கவர்னரால் நியமிக்கப்படுபவர்கள் இடம் பெறுகிறார்களே தவிர, இணை வேந்தரால் நியமிக்கப்படுபவர் இடம் பெறுகிறார்களே தவிர, செனட்டிலே இன்றைக்கு தேர்தல் மூலமாக ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் வருவதற்கு இடமே கிடையாது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் பிரதிநிதிகள் கிடையாது. மாணவர்களின் பிரதிநிதிகள் கிடையாது. இந்த அமைப்புக்கு வெளியிலே இருக்கிற அமைப்பில் இருந்தும் எந்தவித பிரதிநிதித்துவமும் இல்லை என்றால் நான் கேட்க விரும்புகிறேன். இது ஜனநாயகமா? இப்பொழுது கூட நாங்கள் வெளிநடப்பு செய்வோம். பிரச்னைகளுக்கு வெளியே போவதாகக் கருதக்கூடாது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தவறுகளைத் திருத்திக் கொண்டு ஜனநாயக அணுகுமுறைக்காக பெரிதும் பாடுபட்டிருக்கிறோம் என்று சொன்னார்கள்.

அப்படிச் சொன்ன உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்கும் நம்முடைய கல்வி அமைச்சரின் கவனத்திற்கும் சொல்ல விரும்புகிறேன். செனட்டிலே நாமினேஷன் மட்டும் தான் இருக்கிறதே தவிர, ஆளுநரின் நியமனம் தான் இருக்கிறதே தவிர, கல்வி அமைச்சரின் நியமனம்தான் இருக்கிறதே தவிர, பதவி வழி நியமனம் தான் இருக்கிறதே தவிர ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளோ மாணவர்களுடைய பிரதிநிதி

சளோ இல்லை. இது ஒரு ஜனநாயக படுகொலைதான் என்று
திரும்ப திரும்ப நான் சொல்கிறேன். அமைச்சர் வேண்டுமானால்
எழுந்து பதில் சொல்லட்டும். இது ஜனநாயகப் படுகொலை
அல்லவா? இந்த ஜனநாயகப் படுகொலை திருத்தப்பட்டிருக்
கிறதா. திரும்ப திரும்பச் சொல்கிறேன். நிச்சயமாகச்
சொல்கிறேன். இது மிகப் பெரிய சர்வாதிகார போக்குக்கு
வழி வகுக்கக்கூடியதாகாதா? நிச்சயமாகச் சொல்கிறேன்
இந்த செனட்டிலே தேர்தலே கிடையாது. இதிலே அரசாங்க
மும் கவர்னரும் நியமனம் செய்யக்கூடிய ஆட்கள் தான் இடம்
பெறக்கூடிய வகையில் இந்த திருத்தங்கள் இணைக்கப்பட்
டுள்ளன.

(பிற்பகல் 2—00)

அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே, இந்தச் சபையிலே விவாதத்
திலே, செனட் உறுப்பினர் பதவிக் காலம், அதைப்போலவே,
அக்கடமிக் கௌன்சிலில் இருக்கக்கூடியவர்கள் பதவிக் காலம்
பற்றி சொல்லப்பட்டது. செனட்டில் இருக்கக்கூடியவர்களுடைய
பதவிக் காலம் ஆறு ஆண்டு காலத்திற்கு மேல் இருக்கக்கூடாது
என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். 1971லே
மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திற்கு, செனட்டிற்கு
தேர்தல் நடந்தது. ஓட்டுப் பெட்டி கூட சீல் வைக்கப்பட்டிருக்
கிறது. நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு செனேட்டிலே
பிரதிநிதிகள் இருக்கிறார்களா? மாறாக மதுரை பல்கலைக் கழக
அதிகாரிகளுடைய காட்டு தர்பார் இன்றைக்கு நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. இதற்குப் பெயர் தான் ஜனநாயகமா? நான்
திருப்பி கேட்க விரும்புகிறேன். ஆக இன்றைக்கு பல்கலைக்
கழகம் ஜனநாயகப்படுத்துகின்ற நிலை இல்லாமல் மத்திய
சர்க்காரின் ஏஜன்ட்டான கவர்னருடைய கரங்கள் வலுப்படுத்து
கின்ற விதத்திலே, அரசாங்கத்தின் ஏஜன்ட்டாக பல்கலைக்
கழகம் இயங்குகின்ற விதத்திலே நிலைமை இருக்கிறது. நான்
அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இன்னொன்
றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அழகப்பா கலைக்
கல்லூரியிலே நான் கேள்விப்படுகின்றேன். அந்தக் கல்லூரி
யினுடைய முதல்வரை ஒரு முக்கிய பொறுப்பிலே ஆக்குவதற்கு
இந்த அரசாங்கம் முயற்சிப்பதாகக் கேள்விப்படுகின்றேன்.
முதலமைச்சர் அவர்களுக்கு மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.
அமைச்சர் அவர்களுக்கும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது.
கல்விச் செயலாளர் அவர்களுக்கும் மனு கொடுக்கப்பட்டிருக்
கிறது. அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நான் பெயரைச்
சொல்ல விரும்பவில்லை. அழகப்பா கல்லூரியை இந்த பல்கலைக்
கழகத்திலே இணைக்கப்படுகின்ற காரணத்தினாலே ஒரு
விளக்கத்தை இங்கே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். அங்கு
எவ்வளவு பெரிய ஊழல் நடைபெறுகிறது தெரியுமா? இன்னும்
சொல்லப்போனால் ஒரே மாணவரை...... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,
கல்லூரிகளுடைய அந்த ஆராய்ச்சி பிரிவுகள், முதுகலை பட்ட
பிரிவுகள் தான் பல்கலைக் கழகத்திலே சேர்கிறதே தவிர பட்ட



வகுப்புகள் எல்லாம் தனியாக அரசு கல்லூரிகளாக ஆகின்றன.
இப்பொழுது அங்கு இருக்கும், பிறகு வேறு இடம் பார்த்து அந்த
அரசு கல்லூரிகளை கொண்டுவரப் போகிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான்
பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டவைகளைத்தான் விமர்சிக்
கிறேன். தனிப்பட்ட முறையில் யாரையும் விமரிசிக்கவில்லை.
எவ்வளவு பெரிய நிர்வாகச் சீர்கேடுகள், ஒழுக்கக் கேடுகள் அங்கு
நடக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு
வருவதற்காக எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.
அந்தப் பல்கலைக் கழகத்தில் ஒரே மாணவரை இரண்டு வேறு
பட்ட தேர்வுகளை எழுதச் சொல்லுகின்ற ஒரு தவறு நடை
பெற்று இருக்கிறது. பி.எஸ்.ஸி சுவாலஜி படித்த ஒருவர்
அவருடைய ரிஜிஸ்ட்டர் நம்பர் 516689. அதைப்போல, அதே
நபர் டிப்ளமா இன்பிஸினஸ் அட்மினிஸ்ட்ரேஷன் பரிட்சையும்
எழுதுகிறார். ஒரே நபர் இரண்டு பரிட்சைகளையும் ஒரே
நேரத்தில் எழுதுகின்ற கொடுமை நடைபெற்று இருக்கிறது. இது
டிசிப்ளினரி கமிட்டிக்கும், பல்கலைக் கழகத்திலே ரெஃபர்
செய்யப்பட்டு இருக்கிறது. அமைச்சருக்கும் சொல்லப்பட்டு
இருக்கிறது. இப்படிப்பட்ட நிர்வாகச் சீர்கேடு அழகப்பா
கல்லூரியிலே நடைபெற்று இருக்கிறது. அங்குள்ள மாணவர்கள்
மீது கல்லூரி முதல்வரே பொய் வழக்கு போடுகின்ற நிலைமை.
கல்லூரியிலே இருக்கக்கூடிய ஆசிரியர் அடிக்கப்பட்ட நிலை.
நந்தகோபால் என்ற ஆசிரியருடைய மனைவியினுடைய தங்கத்
தாலி பறிக்கப்பட்டு. போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்கப்
பட்டு, பத்திரிகைகளில் எல்லாம் கூட, உங்களுக்கு ஆதரவான
இதயம் போன்ற பத்திரிகைகளில் எல்லாம் அழகப்பா கல்லூரி
ஒரு போர்க்களம் ஆக்கப்பட்டிருக்கிறது என்ற அளவிற்கு
செய்திகள் தரப்பட்டிருக்கின்றன.

மாணவர்கள் நடத்தி வருகின்ற கூட்டுறவுச் சங்கம் அங்கே
சரியாக செயல்படவில்லை. இப்போது நீங்கள் பல்கலைக்கழக
திருத்தச் சட்டம் கொண்டு வருகிறீர்கள். இந்தச் சட்டத்திற்கு
அழகப்பா கல்லூரியை உட்படுத்துகிறீர்கள், உடற் பயிற்சிக்
கல்லூரியை உட்படுத்துகிறீர்கள், அப்படி ஏற்படுகின்றபோது
அங்கே ஒழுக்கக் கேடுகள் நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கக்கூடாது
என்பதற்காகத்தான் நான் இவைகளை தெரிவித்துக்கொள்
கிறேன்.

இன்னொன்றைத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று
கருதுகிறேன். நேரம் அதிகமாகிவிட்டதால், இன்றைக்கு பல
பல்கலைக்கழகங்களில் எவ்வளவு பெரிய ஊழல் இன்றைக்கு
ஏராளமாக இருந்தாலும் கூட நேரத்தின் அருமைக் கருதி,
நேரமின்மையாலும், சபைத் தலைவர் பேசுவதை சுருக்க
வேண்டும் என்று சொல்கின்ற காரணத்தினாலும் பல விவரங்
களைச் சொல்ல முடியாவிட்டாலும் கூட நான் அப்ராபிரியேஷன்
பில் போன்ற இன்னும் பல்வேறு மசோதாக்களில் பேச இருப்ப
தாலும், என்னால் ஒன்றைச் சொல்லாமல் இருக்க முடியாது.

நம்முடைய தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஒரு சுவையான சம்பவம். அங்கே சித்த வைத்தியத் துறை என்று ஒரு துறை இருக்கிறது. சித்த வைத்தியத் துறையிலே சிறப்பாக விழா கொண்டாடினார்கள். அது என்ன விழா என்று கேட்டால் அங்கே, சுவர்ணமுகி என்ற அம்மையாருடைய நாட்டியம். அதற்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தார்கள் என்று கேட்டால் ரூ. 7,000. சித்த வைத்திய ஆராய்ச்சி தமிழ் பல்கலைக் கழகத்திலே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக பல்கலைக் கழகத்திற்கு மானிய கமிஷன் தொகை ஒதுக்குகிறோம். சட்டம் கொண்டு வருகிறோம். ஆனால், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்காக சொல்கிறேன். இன்னொரு விஷயத்தை அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும், விளையாட்டுத் துறையில் டெபுடி டைரக்டர்கள் போஸ்ட்கள் சாங்ஷன்டு போஸ்ட்கள் இருக்கின்றன......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பில்லுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. பசியில் உட்கார்ந்து இருக்கிற உறுப்பினர்களை ரொம்பவும் அலட்சியப்படுத்துகிற மாதிரி இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, உங்களுடைய கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒன்று இதுபோன்று மசோதாக்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும், திரு. கு. ரமணி.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு விஷயத்தை சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். உறுப்பினர்கள் எல்லாம் பசியோடு தவித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே அனாவசியமாக காலத்தை இழுக்க நான் விரும்பவில்லை. சென்ற முறை அமைச்சர் அவர்கள் பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் இவைபற்றிய சட்டங்களை நிறைவேற்றுகின்ற சமயத்திலே நான் பேசியதற்குப் பதில்சொல்லும்போது சொன்னார்கள், இவைகளை ஜனநாயகமுறைப்படுத்துவதிலே இந்த அரசு கவனமாக இருக்கிறது என்று சொன்னார்கள், அப்படி சொல்வதை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன், வரவேற்கிறேன். ஆனால் அந்த முறை இதிலே இல்லை, அதிகப்படியான ஆசிரியர்கள் பிரதிநிதித்துவம் வரவேண்டும்.

ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும்,மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும். யுனிவர்சிடி, சிண்டிகேட், செனேட் போன்ற ஸ்தாபனங்களிலே வெறுமனே 1,2 பேர்கள் வருவதிலே, பிரயோசனம் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மெஜாரிட்டி உறுப்பினர்கள் வரவேண்டும். அந்தக் கருத்து இந்தச் சட்டத்திலே இல்லை. இரண்டே இரண்டு இந்த அவையிலிருந்து ஒருவரும் மேலவையிலிருந்து ஒருவரும் ஆக இரண்டே இரண்டு பேர்கள் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்த





ஸ்தாபனங்களிலே கிடையாது. ஆகவே முழுக்க முழுக்க நியமனம் பண்ணப்பட்ட மெம்பர்களும் உத்தியோகத்தின் காரணமாக வருகிற எக்ஸ் அபிஷியோ மெம்பர்ஸ் ஆகியவர்களைக் கொண்ட அமைப்பாகத்தான் இருக்கிறது.

அழகப்பா கல்லூரி விவகாரத்திலே நான் இப்போது புகவில்லை. அதையெல்லாம் அரசு கவனிக்கவேண்டும். இது ஒரு பெரிய பல்கலைக் கழகமாக அமையும்போது சென்ற காலத்திலே சுட்டிக் காட்டப்பட்ட தவறுகள் அங்கே நடைபெறக் கூடாது. அதற்கு உரிய பரிகாரம் ஒரே ஒரு பரிகாரம். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மெஜாரிட்டியாக அந்த ஸ்தாபனங்களிலே இருப்பது தான். அது இல்லாமல் இருப்பது ரொம்ப வருந்தத்தக்கது. அதற்குரிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும்.

இது திருப்தியளிக்கக்கூடியதல்ல, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை. எனவே இந்தச் சட்டத்தை நல்ல சட்டத்தை எல்லோரும் ஆதரிக்கக்கூடிய முறையிலே ஜனநாயக முறையான திருத்தங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

(பிற்பகல் 2-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தைத்தான் இங்கே மிகவும் வன்மையாக வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம் இல்லை என்பது. எல்லா எட்ஸ் ஆப் டிபார்ட்மென்ட்சும் அதிலே உறுப்பினர்களாக ஆவதற்கு நாம் வழிவகை செய்து இருக்கிறோம். எட்ஸ் ஆப் டிபார்ட்மென்ட்சுக்கு பிரதிநிதித்துவம் இருப்பதால் அங்கே ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம் இருக்கிறது. இன்னும் ஒன்று, இங்கே Unitary type of University மற்ற கல்லூரிகளை நாம் இத்தோடு இணைக்கவில்லை. இணைக்கின்ற சமயத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் தருகின்ற வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம். மற்ற பல்கலைக் கழகங்களில் எப்படி நாம் அவ்வப்போது சட்டங்களை கொண்டுவந்து கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக்கொண்டு இருக்கிறோம். அந்த வாய்ப்பு இந்த பல்கலைக் கழகத்திற்கும் இருக்கிறது. ஆகவே இப்படியே ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக சட்ட முன்வடிவு எண் 24/1985) (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 ஏப்ரல் 11

நம்முடைய தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஒரு
சுவையான சம்பவம். அங்கே சித்த வைத்தியத் துறை என்று
ஒரு துறை இருக்கிறது. சித்த வைத்தியத் துறையிலே சிறப்பாக
விழா கொண்டாடினார்கள். அது என்ன விழா என்று கேட்டால்
அங்கே, சுவர்ணமுகி என்ற அம்மையாருடைய நாட்டியம்.
அதற்கு எவ்வளவு ரூபாய் கொடுத்தார்கள் என்று கேட்டால்
ரூ. 7,000. சித்த வைத்திய ஆராய்ச்சி தமிழ் பல்கலைக்
கழகத்திலே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக
பல்கலைக் கழகத்திற்கு மானிய கமிஷன் தொகை ஒதுக்குகிறோம்.
சட்டம் கொண்டு வருகிறோம். ஆனால், இப்படிப்பட்ட
நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்காக
சொல்கிறேன். இன்னொரு விஷயத்தை அமைச்சர் அவர்களுக்குச்
சொல்ல விரும்புகிறேன். உங்களுக்குத் தெரியும், விளையாட்டுத்
துறையில் டெபுடி டைரக்டர்கள் போஸ்ட்கள் சாங்ஷன்டு
போஸ்ட்கள் இருக்கின்றன......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பில்லுக்கும் இதற்கும்
சம்பந்தம் இல்லை. பசியில் உட்கார்ந்து இருக்கிற உறுப்பினர்
களை ரொம்பவும் அலட்சியப்படுத்துகிற மாதிரி இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, உங்களுடைய
கோரிக்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒன்று
இதுபோன்று மசோதாக்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும், திரு. கு. ரமணி.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு
விஷயத்தை சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்
கிறேன். உறுப்பினர்கள் எல்லாம் பசியோடு தவித்துக் கொண்
டிருக்கிற இந்த நேரத்திலே அனாவசியமாக காலத்தை ஒதுக்க
நான் விரும்பவில்லை. சென்ற முறை அமைச்சர் அவர்கள்
பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம்
இவைபற்றிய சட்டங்களை நிறைவேற்றுகின்ற சமயத்திலே நான்
பேசியதற்குப் பதில்சொல்லும்போது சொன்னார்கள், இவை
களை ஜனநாயகமுறைப்படுத்துவதிலே இந்த அரசு கவனமாக
இருக்கிறது என்று சொன்னார்கள், அப்படி சொல்வதை நான்
சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன், வரவேற்கிறேன். ஆனால்
அந்த முறை இதிலே இல்லை, அதிகப்படியான ஆசிரியர்கள்
பிரதிநிதித்துவம் வரவேண்டும்.

ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும், மாணவர்களுக்குப்
பிரதிநிதித்துவம் வேண்டும். யுனிவர்சிடி, சிண்டிகேட், செனேட்.
போன்ற ஸ்தாபனங்களிலே வெறுமனே 1,2 பேர்கள் வருவதிலே
பிரயோசனம் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மெஜாரிட்டி
உறுப்பினர்கள் வரவேண்டும். அந்தக் கருத்து இந்தச்
சட்டத்திலே இல்லை. இரண்டே இரண்டு இந்த அவையிலிருந்து
ஒருவரும் மேலவையிலிருந்து ஒருவரும் ஆக இரண்டே இரண்டு
பேர்கள் தவிர வேறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்த



1985 ஏப்ரல் 11] [திரு. கு. ரமணி]

ஸ்தாபனங்களிலே கிடையாது. ஆகவே முழுக்க முழுக்க நியமனம்
பண்ணப்பட்ட மெம்பர்களும் உத்தியோகத்தின் காரணமாக
வருகிற எக்ஸ் அபிஷியோ மெம்பர்ஸ் ஆகியவர்களைக் கொண்ட
அமைப்பாகத்தான் இருக்கிறது.

அழகப்பா கல்லூரி விவகாரத்திலே நான் இப்போது புகவில்லை.
அதையெல்லாம் அரசு கவனிக்கவேண்டும். இது ஒரு பெரிய
பல்கலைக் கழகமாக அமையும்போது சென்ற காலத்திலே சுட்டிக்
காட்டப்பட்ட தவறுகள் அங்கே நடைபெறக் கூடாது. அதற்கு
உரிய பரிகாரம் ஒரே ஒரு பரிகாரம். தேர்ந்தெடுக்கப்பட்ட
உறுப்பினர்கள் மெஜாரிட்டியாக அந்த ஸ்தாபனங்களிலே இருப்பது
தான். அது இல்லாமல் இருப்பது ரொம்ப வருந்தத்தக்கது.
அதற்குரிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும்.
இது திருப்தியளிக்கக்கூடியதல்ல, ஆசிரியர்களுக்கும் மாணவர்
களுக்கும் திருப்தியளிக்கக்கூடியதாக இல்லை. எனவே இந்தச்
சட்டத்தை நல்ல சட்டத்தை எல்லோரும் ஆதரிக்கக்கூடிய
முறையிலே ஜனநாயக முறையான திருத்தங்களைக் கொண்டு
வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு
முடிக்கிறேன்.

(பிற்பகல் 2-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தைத்தான் இங்கே மிகவும்
வன்மையாக வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆசிரியர்களின்
பிரதிநிதித்துவம் இல்லை என்பது. எல்லா எட்ஸ் ஆப் டிபார்ட்
மென்ட்சும் அதிலே உறுப்பினர்களாக ஆவதற்கு நாம் வழிவகை
செய்து இருக்கிறோம். எட்ஸ் ஆப் டிபார்ட்மென்ட்சுக்கு பிரதி
நிதித்துவம் இருப்பதால் அங்கே ஆசிரியர்களின் பிரதிநிதித்துவம்
இருக்கிறது. இன்னும் ஒன்று, இங்கே Unitary type of University
மற்ற கல்லூரிகளை நாம் இத்தோடு இணைக்கவில்லை. இணைக்
கின்ற சமயத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம்
தருகின்ற வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம். மற்ற
பல்கலைக் கழகங்களில் எப்படி நாம் அவ்வப்போது சட்டங்களை
கொண்டுவந்து கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக்கொண்டு
இருக்கிறோம். அந்த வாய்ப்பு இந்த பல்கலைக் கழகத்திற்கும்
இருக்கிறது. ஆகவே இப்படியே ஏற்று நிறைவேற்றித் தருமாறு
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:
''1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக சட்ட முன்வடிவு
(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1985)
ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்
கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 6, வரை மற்றும் அட்டவணை ஆகியவை
பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.
பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி
கிறேன்:

''1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக சட்ட முன்
வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1985)
நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி.)

### (உ) ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிக்கை களுக்கு புதிய அறிவிப்புக் கொடுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.
மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து பல கவன ஈர்ப்பு தீர்மானங்
களுக்கு முன்னறிவிப்புகள் வந்துள்ளன. அவற்றில் அனுமதிக்கப்
பட்டு மாண்புமிகு அமைச்சர்களுக்கும், துறைகளுக்கும் அனுப்பி
யதற்கு பிறகு சிலவற்றிற்கு அறிக்கைகள் வரப்பெற்று பேரவையில்
அவை எடுத்துக் கொள்ளப் பெற்றன. ஒரு நாளைக்கு இரண்டுக்கு
மேற்பட்ட பொருட்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று
நம்முடைய விதிகளில் உள்ளதால் சில அறிவிப்புகளில் அறிக்கைகள்
வரப்பெற்றிருந்தாலும் பேரவையில் எடுத்துக்கொள்ளப் பெற
வில்லை. இத்துடன் பேரவைக் கூட்டம் முடிவதால் வரப்பெற்ற
அறிக்கைகளையும் சில அறிக்கைகள் வரின் அவற்றையும் சம்பந்தப்
பட்ட உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும். மற்ற
அறிக்கைகள் எல்லாம் காலம் கடந்தனவாக அவைகள் கருதப்படும்
அடுத்தக் கூட்டத்தொடருக்கு விதி முறைப்படி புதிய அறிவிப்பு
களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுக்க வேண்டும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய நிகழ்ச்சிநிரலில் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள்
முடிந்தன. அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பெற்ற முடிவுகளின்
படி பேரவை இன்று ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் ஜூன் திங்கள்
24ஆம் தேதி கூட வேண்டும். இதற்கான தீர்மானத்தை பேரவை
முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

### 6. அரசினர் தீர்மானம்

### அவை ஒத்திவைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று
1-4-1985 முடித்துக் கொள்ளலாம் என்றும், மறுபடியும்



பேரவை 24-6-1985 ஆம் நாள் அன்று காலை 10-00 மணிக்கு
கூட்டப்பெறலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானிக்கப்
பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்
கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''பேரவை விதி 25 (1)-ன் படி பேரவை மீண்டும் 24-6-1985
ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய
அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 24-6-1985 காலை 10-00
மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

### 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப் படிக்கான விதிகளும் ஆணைகளும்.

165. உரிமம்-அனுமதி வழங்குவதை தடைசெய்தல் அல்லது
முறைப்படுத்துவதற்கான விதிகளை வகுப்பது குறித்து ஊரக
வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 26-4-1984 ஆம் நாளிட்ட
664 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை
தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 35/1958) (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்
பெற்றது.)

166. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1983-84
ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாம் ஆண்டறிக்கை 1956-ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ்,
ஆங்கிலம்).

167. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின்
1982-33-ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டறிக்கை (1956-ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ்,
ஆங்கிலம்).

168. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்துக் கழகத்தின 1981-82-ஆம் ஆண்டிற்கான ஏழாம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (ஆங்கிலம்)

169. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் 1981—82-ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

— ஏதுமில்லை—

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATION.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tin Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Mad
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egm Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tir
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tir rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabhu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.